# பன்னிருமாத நினைவுகள்



ஆசிரியர்
நா. முத்தையா

# பன்னிருமாத நினைவுகள்

ஞானசுரபி, ஆத்மஜோதி
நா.முத்தையா

ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை
கனடா

| | | |
|---|---|---|
| முதற் பதிப்பு | 1978: | ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகம்<br>நாவலப்பிட்டி, இலங்கை. |
| மறுபதிப்பு | 1997: | கிரி. ஸாயீஸா<br>லங்கந்தால், சுவிற்சர்லாந்து. |
| மீள் பதிப்பு | 2000: | ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை<br>ஒன்ராறியோ, கனடா. |

| | | |
|---|---|---|
| Title | : | Pannirumatha Ninaivukal |
| Author | : | N. Muthaiya |
| Third Reprint | : | March 2000 |
| Printed by | : | Viveka Printers, Ontario, Canada. |
| Published by | : | Ontario Hindu Religious Society<br>Ontario, Canada. |



ஆத்மஜோதி ஆன்மீக வள்ளல் நா.முத்தையா

# பதிப்புரை

ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை ஞானசுரபி, ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களால் 1994ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பெற்றது.

ஆத்மஜோதி அவர்கள் கனடாவில் இருந்த காலங்களில் இங்கு வாழும் சைவ மக்களின் ஆன்மீக ஈடேற்றத்தின் பொருட்டுப் பலவிதமான சமயப் பணிகளில் ஈடுபட்டதையும் சமயத் தொண்டாற்றுவதற்கு மொன்றியலுக்குச் சென்ற இடத்தில் இறைவனடி சேர்ந்ததையும் யாவரும் அறிவர். மக்கள் நல்வாழ்வுக்கு இறை வழிபாடுதான் ஒரே வழி என்பதில் அசையாத நம்பிக்கைகொண்டு அதற்காக உழைத்த அருந்தொண்டர் அவர்.

அவரது வழியில் சைவ சமயத்தைக் கனடாவில் வளர்ப்பதற்கு இந்து சமயப் பேரவை மேற்கொண்டுவரும் பரந்த பணிகளில் நூல் வெளியீட்டுத் தொண்டும் ஒன்றாகும். இதுவரை வெளியிடப்பட்டுள்ள நூல்கள், ஒலிநாடாக்கள் பற்றிய பட்டியல் ஒன்று இந்நூலின் கடைசிப் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

அவற்றுட் பல ஆத்மஜோதி அவர்களால் எழுதப்பெற்றவை. இப்பொழுது அவரது 'பன்னிருமாத நினைவுகள்' என்னும் இந்த நூலையும் வெளியிடும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

இந்நூல் விரதங்களின் மகிமையையும் ஒவ்வொரு மாதமும் அனுட்டிக்கப்பட வேண்டிய விரதங்கள் பற்றிய விபரங்களையும் விளக்குகின்றது. சைவ சமய விரதங்கள் மட்டுமல்லாது பிற இந்து சமய விரதங்களும் விபரிக்கப்பட்டுள்ளன. அவற்றினூடாக இந்து சமயத்தைப்பற்றி நாம் அறியவேண்டிய இன்றியமையாத தத்துவங்கள் பலவும் மிக எளிமையாக விளக்கப்பட்டுள்ளன.

சமயத் தத்துவங்களை ஞானிகள் சொன்னார்கள் என்பதற்காக முழுமையாக நம்புவதற்கும், அவற்றை விளங்கிக்கொண்டு பின்பற்றுவதற்கும் நிறையவே வேறுபாடுகள் உள்ளன. விஞ்ஞான வளர்ச்சியும் கருத்துச் சுதந்திரமும் உள்ள மேலை நாடுகளில் எமது சமய தத்துவங்களை அறிவு விசாரணைகள் வழியாகவே அடுத்த சந்ததிக்கு எடுத்துச் செல்லவேண்டியுள்ளது.

சமய வளர்ச்சியில் வீட்டுச் சூழல் பெரும் பங்கு வகிப்பதால் பெற்றோர் பொறுப்பும் கடமையும் இவ்விடத்தில் முக்கியமாகின்றன. பெற்றோர்களுக்குச் சமயம் விளங்கினாலே பிள்ளைகளுக்கு விளங்கும். பிள்ளைகள் எமது சமயம்பற்றிக் கேட்கும் கேள்விகளுக்குப் பல பெற்றோர்கள் தகுந்த விளக்கங்களை அளிக்க முடியாதவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்களுக்கு இந்நூல் பெரிதும் உதவும். அவர்களது கரங்களில் இந்நூல் அவசியம் இருத்தல் வேண்டும்.

மேலும் தேவாரங்களைக்கூட எம்மவரிற் பலர் விளங்கி ஓதுவது குறைவு. காலம் இடம் பொருளுக்கு அமையப் பொருத்தமான தேவாரங்களைத்

தெரிவுசெய்து ஓதுவதும் அரிது. இந்நூலின் இறுதிப்பகுதியில் நாளாந்தம் நாம் ஓதத்தகுந்த பஞ்ச புராணங்களையும் வாழ்க்கை நடைமுறையிற் பயன்படத்தக்க பாசுரங்களையும் ஆத்மஜோதி அவர்கள் தொகுத்துத் தந்திருக்கிறார்கள், எமது ஈடேற்றம் குறித்துச் செய்திருக்கின்றார்கள். ஓதி ஊய்வடைவோமாக!

இந்நூல் முதன்முதலாக ஆத்மஜோதி அவர்களால் 1978ல் நாவலப்பிட்டியில் பதிக்கப்பெற்றது. மறுபதிப்பு அவரது சீடர்களால் 1997ல் சுவிற்சலாந்தில் வெளியிடப்பட்டது. அந்தப் பதிப்பில் திரு. N. ஜெயலோகராஜா அவர்கள் ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் 1994ஆம் ஆண்டு சுவிச்சலாந்துக்குச் சென்ற செய்தியைக் குறிப்பிட்டு, "அவர் எம்மிடம் 'பன்னிருமாத நினைவுகள் என்பது இறைவனை நினைத்துப் பன்னிரு மாதங்களும் அனுட்டிக்கப்படும் விரதங்களைப் பற்றியது. இறை வணக்கத்தில் விரதங்களும் முக்கியத்துவம் வாய்ந்தவை. விரதங்களின் பலன்கள் எழுத்தில் அடங்காதவை. இறைவனின் அருளை நாடும் நாங்கள் இறையன்புடன் முறைப்படி விரதங்களை அனுட்டித்து இறைவனின் அருளைப் பெறலாம். இறைவனடி சாரலாம்' எனக் கூறி, இந்தப் பன்னிருமாத நினைவுகள் என்ற புத்தகத்தை மறுபதிப்புச் செய்து இங்குள்ள சைவ மக்கள் எல்லோரும் வாசிக்க வசதி செய்ய வேண்டும் என்ற ஆவலை வெளிப்படையாக எங்களுக்குக் கூறினார். எனவே ஆத்மஜோதி முத்தையா சுவாமிகளின் வாக்கை இறைவாக்காகக் கருதி இந்தப் பன்னிருமாத நினைவுகள் என்ற புனிதமான புத்தகத்தை வெளியிடுகின்றோம்" என்று கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

கனடாவில் உள்ளவர்களுக்கும் இவ்வரிய நூல் கிடைக்க வேண்டும் என்னும் நோக்குடன் இந்து சமயப் பேரவை சுவிஸ் பதிப்பை அடியொற்றி இதனை மீள் பதிப்புச் செய்கின்றது. இதனை மறுபதிப்புச் செய்த ஜெயலோகராஜா குடும்பத்துக்கும் இதன் பிரதி ஒன்றைத் திரு. சிவ முத்துலிங்கம் அவர்களிடம் கையளித்து இங்கும் இதனை வெளியிடவேண்டும் என்று கேட்டுக்கொண்ட சைவப்பெரியார் ஆழ்கடலான் முருக வே. பரமநாதன் அவர்களுக்கும், அழகுற அச்சேற்றித் தந்த விவேகா அச்சகத்தினருக்கும் இந்து சமயப் பேரவையின் சார்பில் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

அன்பர்கள் இந்நூலால் ஆத்மஜோதி அவர்கள் கருதிய பயன்களை அடைய வேண்டும் என்று எல்லாம் வல்ல சிவபுரத்தரசை இறைஞ்சுகின்றேன்.

வி. கந்தவனம்
காப்பாளர்
ஒன்றாறியோ இந்து சமயப் பேரவை
கனடா.
01. 02. 2000

# முன்னுரை

விரதம் என்பது ஐம்புல ஆசைகளேயும் அடக்குவதற்காக உணவுகளே மட்டுப்படுத்தி எண்ணங்களேக் கட்டுப்படுத்துவது. அன்னசுரணே கூடினல் அட்சரசுரணே குறையும் என்பார்கள். சாப்பாட்டுப் பிரியனுக்குக் கல்வியில் மனம் இலயிக்காது என்பது பொருள். இவற்றுக்கெல்லாம் மூல காரணம் நா அடக்கமே. நா அடங்கினல் உடல் அடங்கும். உடல் சுகத்தை தியாகம் செய்யும் போது உள்ளமும் தானுக அடங்கி விடுகின்றது.

உள்ளத்திலே எத்தனேதான் அடக்கம் ஏற்பட்டாலும் பழைய வாசனேகள் இருந்தாற்போல் தலே தூக்கும். ஆகவே உள்ளத்திலே பழைய வாசனேகள் தலே தூக்காதவாறு எந்தக் கணப் பொழுதிலும் விழிப்பாக இருக்க வேண்டும்.

தனித்திரு: பசித்திரு: விழித்திரு: என்பவற்றிலே பெரியதொரு உண்மை அடங்கியுள்ளது. புலன் வழியிலே மனதை இழுத்துச் செல்லும் விஷயாதிகளிலிருந்து விலகித் தனிமையாக மனத்தை வைத்திருப்பதே தனித்திரு என்பதாகும். இறைவனே அடைய வேண்டுமென்று ஆர்வத்தோடு கணப்பொழுது தோறும் தீவிர நினேவோடு வைராக்கியத்தோடு இருப்பதே பசித்திரு என்பதாகும். புலன் வழிசெல்லும் தீயநினேவுகள், ஆசைகள் உள்ளத்தினுள்ளே கணப்பொழுதேனும் புகாதவாறு விழிப்போடிருத்தலே விழித்திரு என்பதாகும்.

அவரவருடைய முக்குணங்களின் தொழிற்பாட்டுக்கேற்ப எல்லோருக்கும் ஒவ்வொரு சமயங்களில் தீயநினேவுகள் ஏற்படுவதுண்டு. அவரவருடைய உள்ளப்பண்பாட்டுக்கேற்ப அவை தோன்றி மறைந்து விடுவதுண்டு. ஜீவன் முத்தர்களுக்கும் இவை தோன்றும். ஆனல் அவை நீர்கிழிய எய்த வடுப்போல் உடனே மறைந்து விடும். இதனேக் கைவல்ய நவநீத ஆசிரியர் அழகாகச் சொல்லுகின்ருர்.

**காமமாதிகள் வந்தாலுங் கணத்திற்போம் மனத்திற் பற்ருர்**
**தாமரையிலே போற் சகத்தொடுங்கூடி வாழ்வார்**
**பாமரரெனக் காணப்பிப்பார் பண்டிதத் திறமை காட்டார்**
**ஊமரு மாவார் உள்ளத்துவகையாஞ் ஜீவன்முத்தர்.**

இன்ன அறஞ் செய்வல் எனவும், இன்னபாவும் ஒழிவல் எனவும் தம் ஆற்றலுக்கேற்ப வரைந்து கொள்வன எனவும் கூறுவார். விரதம் என்றல் சங்கல்ப்பத்துடனும், உபவாசம் முதலிய நியமங்களுடனும் கூடச்செய்யும் சத்கார்மா என்றும் வரைவிலக்கணம் கூறுவர். இவை எல்லாம் ஒரே வட்டத்துக்குள் அமையும் வரைவிலக்கணங்களேதான்.

யாகம் செய்வதில் ஈடுபட்டவர்க்குச் சில விரதம் உண்டு. இவை தேவ விரதம் எனப்படும். நாம் ஆண்டுதோறும் அநுட்டிப்பது புராண விரதமாகும். பண்டிகை என்றல் அதிக நியமமின்றி உத்சவமாகச் செய்வதாம். விநாயக சதுர்த்தி போன்ற சில விரதங்களில் உத்சவமுமுண்டு. சங்கிராந்தி போன்ற சில பண்டிகைகளில் சூரிய பூஜை, தர்ப்பணம் முதலிய சில விரத நியமங்களுண்டு.

அவசியம் செய்தே ஆகவேண்டும் என்பது நித்ய விரதமாம். ஒரு பலனை நாடிச் செய்வது காம்ய விரதமாகும். சில காம்யமும் நித்தியமுமாகும். காமியம் என்றல் இத்தனை முறை இடைவிடாமல் செய்து உத்யாபநமும் செய்ய வேண்டும்.

விநாயக சதுர்த்தி, ரிஷிபஞ்சமி, ஸ்கந்தசஷ்டி, ரதசப்தமி, கோகுலாஷ்டமி, ஸ்ரீராமநவமி, விஜயதசமி, போன்ற பல திதியை நிமித்தமாகக் கொண்டுவரும். சில சுக்ரவாரம் போன்ற வாரவிரதங்களுமுண்டு. ராமகிருஷ்ணதி அவதார தினமும் விரத நிமித்தமாகும்.

மாதம் என்றல் அளவு என்று பொருள். சூரியன் மேடம் முதலிய ராசிகளில் புகுவதைக் கொண்டு மாதக்கணக்கிடுவது சௌரமாசம் எனப்படும். பௌர்ணமி முதல் அடுத்த பௌர்ணமி வரை அல்லது அமாவாசை முதல் அடுத்த அமாவாசை வரைகணக்கிடுவது சாந்திரமாசமாகும். உபநயனம், விவாகம் முதலியவகைகளுக்கு சௌரமாதம் சிறந்தது. பங்குனி மாத அமாவாசைக்கு அடுத்த நாளே யுகாதி என்னுந் தினத்தில் சாந்த்ரமான வருஷப்பிறப்பாகிவிடும்.

சித்திரை விஷு எனும் புண்ணியகாலம் சூரியன் மேடராசியில் புகும் நாழிகையாம். அது எப்போது என தர்ம சாஸ்திரப்படி பஞ்சாங்கத்திலிருக்கும் ஒவ்வொரு மாதமும் முதல் தேதி தான் தர்ப்பணக் காலமென நியாயமில்லை.

நித்திய விரதங்களில் சக்தியில்லாதவர் பழ ஆகாரம் ஏற்கலாம். அதுதான் பலகாரமானது. அதையும் அடிக்கடி சாப்பிடக்கூடாது. அதுவும் முடியாதவர் “ஏகபக்தம்” ஒரு பொழுது உண்ணலாம் என சில ரிஷிகள் அருள் புரிந்தனர். பௌர்ணமியிலும், அமாவாசையிலும் பெற்றோர் உள்ளவர் கூட பாநுவாரத்திலும் இரவில் சாப்பிடக்கூடாது என்பதும் நித்ய விரதமாகும். விரத

தினங்களில் சந்தனம், மாலே, பகல் நித்திரை, தாம்பூலம், சவரம், எண்ணெய், சிருங்காரம், வழி நடத்தல், கோபம், நிந்திப்பது, பொய் கூறுவது முதலியன கூடாது.

கார்த்திகை, சஷ்டி, சதுர்த்தி, பிரதோஷம், சனிக்கிழமை முதலிய நாட்களில் சுப்பிரமணியர், கணேசர், வெங்கடாசலபதி, சிவன் முதலிய இஷ்டதேவதைகளே நாடி, புத்திர பாக்கியம், ஆரோக்கியம் முதலியவைகளே வேண்டுபவர்.

பூஜை செய்து உபவாசம் இருப்பது காம்யமாகும். காம்யம் பூர்த்தியானுலும் ஆகாவிடினும் கூட ஜன்மம் உள்ளவரை அதை அனுஷ்டிப்பவர் சிலர். பிரதோஷ விரதம் நித்தியமும், காம்யமுமாம். நித்தியமான ஏகாதசி உட்பட இந்நாட்களில் பெற்றோர் சிரார்த்தம் செய்பவர் பித்ருசேஷ அன்னத்தைப் புசிக்கலாம். அதனல் விரதபங்கம் ஏற்படாது. தீட்டிலும் நித்திய விரதத்தை அனுஷ்டிக்க வேண்டும்

தீர்த்தம், கிழங்கு, நெய், பால், கஞ்சி வடிக்காத அவிசு, பிராம்மணுகை சிரார்த்தத்தில் வரிக்கப்படுதல், குருவின் உத்தரவு, மருந்து இவ்வெட்டும் விரதபங்கத்தை உண்டு பண்ணுது என்பது சாஸ்திர விதி.

சதிபதி இருவரும் சேர்ந்தே விரதங்களே அநுஷ்டிக்க வேண்டும். பதி உத்தரவளித்தால் பத்தினி விரதங்களேத் தனியாகவும் அநுஷ்டிக்கலாம். சுமங்கலிகளுக்காக ஏற்பட்டது வரலக்ஷ்மி பூசை.

மனிதன் அடிக்கடி இறைவனே மறந்துவிடும் சந்தர்ப்பங்களுண்டு. அதுவுமின்றி புலன்களுக்கும் உடலுணர்வுகளுக்கும் அடிமையாகிவிடும் சந்தர்ப்பங்களுமுண்டு. இவற்றையெல்லாங் கடந்து உலகில் உண்மைப்பொருள் ஒன்றே ஒன்று தான். அதுதான் ஆண்டவன்: அந்த ஆண்டவனே மறவாது வாழ்வதற்காகவும், புலனடக்கத்தை மேற்கொள்வதற்காகவும் பலவித விரத நியதிகளே ஏற்படுத்தினர் அவற்றை அநுஷ்டிக்கும் காலம், அநுஷ்டிக்கும் முறை, அவற்ருல் உண்டாகும் பயன் ஆகியவற்றை "**பன்னிரு மாத நினைவுகள்**" என்ற பெயரில் வெளியிடும் வாய்ப்புக்கிடைத்துள்ளது. அத்துடன் **மாத, வாரப்பதிகங்கள், ஏழுநாட்களுக்குமுரிய பஞ்சபுராணத்திரட்டு. இன்னின்ன பாடல்களேப் பாராயணம் செய்தால் இன்னின்ன பயன் கிடைக்குமென்ற தொகுப்புகளும் சேர்த்து வெளியிட வாய்ப்புக்கிட்டியுள்ளது.**

ஒவ்வொரு குடும்பத்திலும் நாளாந்த வழிபாட்டிற்காக இருக்க வேண்டிய முக்கிய நூல் என்றும், சிறியவர்கள் முதல் பெரியோர்கள் ஈறுக பாமரர்கள் முதல் பரமஞானிகள் ஈறுக யாவரும் படித்துப் பயன்பெற வேண்டிய நூல் என்றும் துணிந்து கூறலாம்.

மனிதனுக்கு இறைவன் இந்த உறுப்புக்களைக் கொடுத்ததன் பயனை பிரமோத்தரகாண்டம் பின்வருமாறு கூறுகின்றது

கண்ணுதலா லயநோக்கும் கண்களே கண்கள்
கறைக்கண்டன் கோவில்புகும் கால்களே கால்கள்
பெண்ணெரு பாகனைப் பணியும் தலைகளே தலைகள்
பிஞ்ஞகனைப் பூசிக்கும் கைகளே கைகள்
பண்ணவன்தன் சீர்பாடு நன்ருவே நன்ருப்
பரன்சரிதையே கேட்கப் படுஞ்செவியே செவிகள்
அண்ணல் பொலங்கழல் நினைக்கு நெஞ்சமே நெஞ்சம்
அவனடிக்கீழ் அடிமைபுகு மடிமையே அடிமை

நா.முத்தையா
(பங்குனி உத்தரத்திருநாள்)

ஆத்மஜோதி நிலயம்,
நாவலப்பிட்டி,
இலங்கை.
24.3.78

# மதிப்புரை

நாவலப்பிட்டி ஆத்மஜோதி நிலையத்தலைவர் நா.முத்தையா அவர்கள் இலங்கையில் சமய உலகில் மிகவும் பிரசித்தமானவர்கள். சமயப்பணிக்குத் தம் வாழ்நாளை அர்ப்பணித்தவர்கள். சொற்பெருக்காலும் தம் எழுத்து வளத்திறலும் சமயத்தொண்டாற்றிச் சீரிய முறையிற் சமயக் கருத்துக்களை பாமரமக்களிடையும் பரப்பிவருபவர். இவ்வருஞ்சாதனைகளால் அவர் செய்து வரும் தொண்டு கல்வி அறிவினைப் பெரிதும் வளர்க்க வாய்ப்பில்லாதவர்களாய் இருக்கும் பாமர மக்களுக்குப் பெரிதும் பயன்பட்டு வருவது கண்கூடு.

**"பன்னிரு மாத நினைவுகள்"** என்ற தலைப்பில் வெளிவரும் இந்நூல் பொதுமக்களுக்குச் சமயசம்பந்தமான கருத்துக்களை அறியத்தர வல்லது. சிதறுண்டு கிடக்கின்ற பல விபரங்களை தொகுத்து வரிசைப்படுத்தித் தரும் இந்நூல் சைவவாழ்வு வாழ்பவர்களுக்கு அரும் வழிகாட்டியாக அமையும் சிறந்த கைச்சுவடியாக விளங்குகிறது.

இந்நூலாசிரியரவர்கள் வருடந்தோறும் சித்திரை முதல் பங்குனி ஈறுக வரும் விஷேட சமய நிகழ்ச்சிகள் யாவற்றையும் தெரிந்தெடுத்து வரிசைப்படுத்தி அவற்றிற்கு அடிப்படையாக விளங்கும் புராண வரலாறு, அவை நிகழுதற்குரிய முறைகள் முதலியவற்றை விளக்கங்களுடன் விரித்து எழுதியுள்ளார்கள்.

இவ்வாறு எழுதப்படும் நூல்களுள் இது முன்னோடியாக அமையும் நூல். இது சைவ மக்களின் சமயவாழ்க்கைக்கு அரிய வழிகாட்டியாகத் திகழ்கின்றது.

நூல்களை வெளியிடுவதற்கு அனுகூலமான பொருளாதார நிலை சீராயமையாத இன்றைய சூழ்நிலையில் இந்நூலைப் பலவகைச் சிரமங்களை மேற்கொண்டு யாத்ததோடமையாது அதை அச்சேற்றி வெளிவிடும்பணியையும் தாமே மேற்கொண்டு சமயப்பணியைத் தீவிரமாக ஆற்றிவரும் திரு.முத்தையா அவர்களுக்கு சைவ உலகம் கடப்பாடுடையது.

இலங்கை பல்கலைக்கழகம்<br>யாழ்ப்பாண வளாகம்,<br>திருநெல்வேலி. யாழ்ப்பாணம்<br>1.3.78

கா.கைலாசநாத குருக்கள்<br>பேராசிரியர்

# அணிந்துரை

"மேலை வானவரும் அறியாததோர்
கோலமே எனையாட்கொண்ட கூத்தனே
ஞாலமே விசும்பே இவை வந்துபோம்
காலமே யுனை என்று கொல் காண்பதே"

– திருவாசகம்

தத்துவஞான உண்மைகள் ஒவ்வொன்றையும் நடைமுறை வாழ்க்கையில் பொருந்தக் கொண்டு இயலுஞ் சிறப்புச் சைவசமயத்துக்குண்டு. சிவபெருமானுக்குச் சொருபநிலை, தடஸ்தநிலை என இரண்டு நிலை தத்துவ ஞானத்திற் பேசப்படுகின்றது. அவர் குணங்களுங் குறிகளுங் கடந்து சச்சிதானந்த சொருபியாய் விளங்கும் நிலை சொருபநிலையாம். அவரே தம்மாற் படைக்கப்பட்ட தத்துவங்களாகிய நாத முதல் பிருதிவி ஈறுகவுள்ள ஒவ்வொன்றிலும் தொடர்புற்று அதுவதுவாய் நிற்கும் நிலை அவர்க்குத் தடஸ்த நிலையாம். இவ்விருநிலைகளும் வழிபடுவதற்குரியனவாம்.

சொருபநிலை வழிபாடு தத்துவங்கடந்த அதீத வழிபாடாகும். தடஸ்தநிலை வழிபாடு தத்துவ தாத்துவிகப் பொருள்களின் சார்பில் சிவனை வழிபடும் வழிபாடாகும்.

**"பூர்வீக மக்கள் சூரியனை, சந்திரனை, மலையை, ஆற்றை, தாவரத்தை, நாகபாம்பை வழிபட்டனர். அது மூட நம்பிக்கையாம்"** என்றிருப்போர் இக்காலத்தும் பலர். தத்துவ ஞானத்தின் **அரிவரிப் பாடங்கற்றவர்கள்கூட** இதனை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். சர்வ சிருஷ்டிகளிலும் சிவன் அதுவதுவாய் நிற்பதனல் எதை இடமாகக் கொண்டு வழிபடினும் அவ்வழிபாடு அவர்க்குரிய வழிபாடே என்பது சைவஞானத்தில் **எப்பவோ முடிந்த உண்மையாம்.**

நாத முதல் பிருதிவியீறுகிய தத்துவங்கள் 36 இலும் முதல் 5 சுத்த தத்துவங்கள். பின்னுள்ள 29ம் அசுத்த தத்துவங்கள். ஏனெனில் அவ்வைந்தும் சுத்த மாயப் படைப்புகளும் இவ்விருபத்தொன்பதும் அசுத்தமாயைப் படைப்புகளுமாதலின் இவ்விரு பகுதிகளுக்குமிடையே நிற்பன **காலம், நியதி** என்னும் இரு தத்துவங்கள். இவை அசுத்தமாயைப் படைக்காமல் சுத்த மாயப் படைப்புக்களாகிய சிவதத்துவங்களைச் சார்ந்து நிற்குந் தன்மையால் இவ்விரண்டுக்கும் விசேட மதிப்புண்டு.

இவற்றுள் **"காலம்"** என்ற தத்துவம் பின்வரும் அசுத்தத் தத்துவங்கள் அனைத்துக்கும் ஒருவகையில் ஆதாரமாய் நிற்கின்றது. அதாவது, அனைத்துக்கும் உண்மை ஆதாரமாயுள்ள சிவசக்தியின் செயலுக்குட்பட்ட ஒரு உப ஆதாரமாய் நிற்கின்றது. எப்பொருளின் தோற்றத்தையும் நாங்கள் இக்காலத்தை இடமாகக்கொண்டே கணிக்கின்றோம். நிலைப்பு இறுதிகளையுங் கூட அவ்வாறே கணிக்கிறோம். எச்செயலையும் **"காலத்தின் செயல் ஆகவே"** கருதுகிறோம். இவ்வகையில் பார்த்தால் தத்துவங்களில் மற்றெதற்குமில்லாத ஒரு முதன்மை இக்கால தத்துவத்துக்கு இருத்தல் புலனாகிறது. இது சுத்த தத்துவங்களாகிய சிவ தத்துவங்கள் ஐந்தையும் அடுத்து முதலிற்றோன்றுந் தன்மையால் மற்றவற்றிலும் கூடுதலான அளவு சிவ தத்துவத் தொடர்பு இதற்கிருத்தலும் வெளிப்படை.

இக்காலமானது வருஷம், மாசம், நக்ஷத்திரம், திதி, முகூர்த்தம் என்று இத்தகைய நிலைகளில் அமைகின்றது. இக் கூறுகளில் ஏதேனுமொன்றில் ஏதோவோர் கட்டத்தில் தெய்வீகஞ் சிறந்தொளிர்வதும் அத்தருணங்களை நடைமுறை வாழ்க்கை வழிபாட்டுத் தேவைகளுக்குத் தரமறிந்து பயன் படுத்துதலும் நம் சைவ சமயத்துப் பண்டைப் பெருமை வாய்ந்த பழக்க வழக்கங்களாயின.

**"கால ஓட்டத்தோடு கலந்தோட வேண்டும்"** என்ற விபரீத புத்தி காரணமாகவோ என்னவோ, இந்நூற்றுண்டில் இதனைக் கடைப்பிடிக்கும் வழக்கம் அருகி வருகின்றது. அவ்வக்காலக்கூறுகளில் அநுசரிக்கவேண்டிய ஆசார அநுட்டானவிதிகளிலுஞ் சிரத்தையீனங் காணப்படுகிறது. சாட்டுக்காகச் செய்வது, சம்பிரதாயத்துக்காகச்செய்வது என்ற போலி மனோபாவங்கள் இடையிடையே புகுந்து கொள்கின்றன.

இச்சூழ்நிலையில் **"பன்னிரு மாத நினைவுகள்"** என்ற நூல் வெளிவருதல் சந்தர்ப்பானுசாரமான ஒரு நன்முயற்சி என்று பாராட்ட வேண்டியிருக்கிறது. இந் நூலை எழுதியிருக்கும் ஆசிரியரின் தகுதிப்பாடு குறித்துணரப்பட வேண்டியது. மற்றும் மற்றும் அறிஞர்கள், பண்டிதர், கலாநிதி, புலவா போன்ற பெயர்களால் பிரகாசிப்பர். இவருக்கு அது ஒன்றும் வேண்டியிருக்கவில்லை. ஆத்மஜோதி ஒன்றே அவர் பெயர்ப்பிரகாசமாகும். பெயருக்கேற்ப அவர்பாற் பதிந்திருக்கும் ஆத்மீக கலாசார அடிச்சுவடுகள் நூல் முழுதும் நறுமணங் கமழ்கின்றன.

மாதந்தோறும் வரும் சமய கலாசார முக்கியத்துவம் பெற்ற நக்ஷத்திரங்கள், திதிகள் சம்பந்தமான அந்தரங்க உண்மைகள் பலவற்றை இந்நூல் பகிரங்கப்படுத்துகின்றது.

காஞ்சியில் சித்திரபுத்திரர்க்குத் தனிக்கோவிலிருத்தல், திருவிடை மருதூர்த் தைப்பூச விசேடம் போன்ற பல உண்மைகள் இன்னமும் நம் நாட்டிலேயே பலரறியாதவை. சொக்கப்பனே, சொக்கப்பானே, சொர்க்கப்பனே என்ற பெயர் விளக்கங்களும் அங்ஙனமே. இத்தகையவற்றைச் சூழ்ந்தெடுத்து விளக்கும் விசேடம் இந்நூற்குளதாகும்.

சொக்கப்பன் என்ற சொல் மன்மதன் பெயராகவும் வழங்குகிறது. இதன்படி, சொக்கப்பனே நிகழ்ச்சி "**மன்மத தகன**" அறிகுறியோ என்றும் சிந்தித்தற் கிடமுண்டு. தைப்பூசம் தில்லே நடராஜர் பதஞ்சலி, வியாக்கிரபாதர் முனிவர்களுக்கு முதல் நடனந் தரிசிப்பித்த தினமென்றும் அதனுல் அது விசேடத்துவம் பெற்றதென்றும் கோயிற்புராணம் தெரிவிக்கின்றது. அதனுல் அது சிவன் சம்பந்தமான விசேட தினமென்று தான் கருதவேண்டும். ஆனுல் தற்போது முருக தலங்களிலேயே இத்தின வழிபாடு விசேடம் பெறுகின்றது. முருகனேடு தைப்பூசங் கொண்ட தொடர்புக்கான ஆதாரம் இன்னும் அறியப்படவில்லே. இத்தகைய ஆய்வுகளேத் தூண்டுவதற்கும் இந்நூல் ஒரு சிறந்த சாதனமாகும்.

இன்னும் தமிழ்நாட்டுக் கலாச்சாரத்தையும். வடநாட்டுக் கலாச்சாரத்தையும் இணைக்கும் வகையில் இந்நூலிற் காணப்படும் வடமொழிப் புராண வரலாற்றுப் பகுதிகள் பாரத கலாசார ஒற்றுமைப் பண்பை விளக்கப் பெரிதும் உதவுவன.

மேலும் அகநானூற்றுக் கருத்துகளும் வழிபாடற் கருத்துகளும், தேவாரக்கருத்துகளும் இந்நூற் கருத்துக்களுக்கு அணேதுணையாய் அமையுந்தன்மை தமிழ்கலாச்சாரம் வேறு சைவகலாச்சாரம் வேறு என்னும் விதண்டாவாதம் வீண்வாதமென்ற தீர்ப்பைச் சொல்லாமலே சொல்லி விடுகின்றது.

அகத்தியர் பாடல் என ஆங்காங்கு பொறிக்கப்பட்டுள்ளவை ஒவ்வொன்றும் நூற்பொருள் நுகர்ச்சியிற் புதுச்சுவை தோன்ற நிற்கின்றன. எல்லா வகையிலும், சைவத் தமிழர் எனப்படுவார்க்குஞ் சரி, அகில இந்திய ரீதியில் இந்துக்கள் எனப்படுவார்க்குஞ் சரி, அவரவர் அவசியம் பெற்றுப்படிக்கவேண்டிய ஒரு அருமந்த நூல் இது எனலாம்.

சத்தி முற்றம்
ஏழாலே மேற்கு, சுன்னுகம் — மு.கந்தையா
15.3.78



# பொருளடக்கம்


1. சித்திரை மாத நினைவுகள் 17
2. வைகாசி 32
3. ஆனி 38
4. ஆடி 44
5. ஆவணி 52
6. புரட்டாதி 66
7. ஐப்பசி 72
8. கார்த்திகை 80
9. மார்கழி 99
10. தை 109
11. மாசி 118
12. பங்குனி 126
13. பொதுக்குறிப்பு 135
14. மாத வாரப்பதிப்பகம் 141
15. பஞ்ச புராணப்பாடல்கள் 145
16. வாழ்க்கையில் திருமுறைகள் 157

# சித்திரை மாத நினைவுகள்

முத்தமிழ்போல் முக்கடல்சூழ் குமரிமுனை வளரும்
உத்தமியே ஸ்ரீ சக்கரந்தனில் உதித்தவளே
எத்தருணத்திலும் எனைப்பிரியாமல் எனக்கிரங்கிச்
சித்திரைத் திங்களில் வந்தருள் செய்வாய் சிவக்கொழுந்தே.

_ அகத்தியர்

தமிழர் தம் ஆண்டுப் பிறப்பும் சித்திரை மாதப் பிறப்பும் இரண்டும் ஒன்றே தான். மாதத்தில் சித்திரை சிறந்ததாகவும், முதலாவதாகவும் அமைந்துள்ளது. இம்மாதத்தில் மல்லிகையும் முல்லையும் மலர்ந்து மணம் வீசி மாநிலத்தை மகிழ்விக்கின்றன. தேமாவும் தீம்பலாவும் அரும்பழங்களைப் பாருக்கு நல்கி மக்கள் நாவினுக்கு நல்ல சுவையினைக் கொடுப்பதும் இக்காலத்திலேதான். யக்ஞயாகம், உபநயன, விவாகம் முதலிய வைதிக காரியங்களைச் செய்யவும் சிறந்த காலம். வருஷ ஆரம்பம் நன்றாக இருந்தால் ஆண்டெல்லாம் நன்மை தரும் என்பது கொள்கை.

ஆறு பருவகாலங்களிற் சிறந்தது இளவேனிற்காலம். இளவேனிற் காலத்தில் முதல் மாதம் சித்திரை. ருதுக்களுக்குள் வசந்த ருதுவாக இருக்கிறேன் என்று கீதையில் கீதாசிரியர் கூறுகிறார். சித்திரை நட்சத்திரம் பூரணையோடு கூடியகாலம் ஆதலால் சித்திரை மாதம் என்னும் பெயரைப் பெற்றது. இது இராசிச் சக்கரத்திலுள்ள 12 இராசிகளுக்குள் ஆறுவதான கன்னி ராசியிலும் ஏழாவதான துலாராசியிலுமுள்ள நட்சத்திர மண்டலத்துக்குப் பெயர். அச்சுவினி முதலாக எண்ணும் வரிசையில் பதினன்காவது. அதாவது நடு நட்சத்திரம்.

சூரியன் மகரத்திற்குப் புகுந்து உத்திரத்தை நோக்குங்கால் அக்காலத்திற்கு **“மகரசங்கிராந்தி”**, **“உத்திராயணம்”** என்ற பெயர்கள் வழங்கி வருகின்றன.

மழை நீங்கிப் பகலவன் வெளிப்பட உலகம் பிணி பீடை நீங்கி தொழில் புரிய எத்தனிக்கிறது. நடராஜப்பெருமான் "தை "தை என்று நடனஞ்செய்வது சிருஷ்டித் தொழிலையே குறிக்கும். மகரத்தில் பரிதி பொருந்துதலானும் "தை" என்ற பெயர் மகரத்திற்கு ஆயிற்று. அன்றியும் செங்கதிரோன் தோற்றத்தால் உண்டாகும் உவகையை வெளியிடும் பொருட்டே வீடுவாசலனைத்தையும் துப்பரவு செய்யப்பட்டுத் தமிழகங்களில் சூரியனுக்குப் பொங்கல் இடப்பட்டு வருகின்றது. ஆதலால் "சிறப்பு" என்ற பொருளும் "தை" என்ற மொழிக்கு வாய்த்தது போலும்.

மழை நீங்கினும் வானம் மேகத்தினுல் மாசு படிந்திருப்பதனுல் மாசி (மாசு+இ) என்பது அடுத்த திங்களின் பெயராம். மார்கழி முதல் நான்கு மாதம் பனிக்காலம். அப்பனி கூறுபடும் மாதம் பங்குனியாம். (பங்கு+கூறு) படிந்த மாசும் பெய்த பனியும் நீங்கவே வானம் சித்திரம் போன்று வெயிலொளிக்க அழகுறும்.

அத்திங்களில் இருபெருஞ்சுடரும் களங்கமற்ற ஒளிதரும். இரவும் பகலும் செவ்விய வானம் திசை போன்றும், பரந்த கடல் பாவை போன்றும் விளங்கும். அப்பொருள் பற்றியே சித்திரை என்ற பெயரிடப்பட்டது போலும். இத்திங்களில் மக்கள், மாக்கள், கால்நடைகள், பூண்டுகள் தழைத்து இன்புறும். வேனிலதிகரிக்க, புல் பூண்டுகள் வாடி மயங்கும். அவை காச நோய் உற்றன போலக் காணப்படும். வை(வைக்கோல், புல்) காசம், இ – வைகாசி.

**விஷுகணி:** கேரளத்தவர் அன்று அதிகாலையில் எழுந்தவுடன் முதலில் நல்லதைக் காணவேண்டும் என்று கனிவர்க்கம், காய்கறிகள், புதுவஸ்திரம், ஆபரணம், நவரத்தினம் முதலியவைகளை முதள்நாள் இரவே ஓரிடத்தில் கொலுபோல் அழகாக அமைத்து, அதிகாலையில் தீபமேற்றி அதை தரிசிப்பார். காலைக்கர்மாக்களை முடித்து புதுவஸ்திரம் அணிந்து பெரியோரை நமஸ்கரிப்பர்.

**பஞ்சாங்கபடனம்**: வருஷமெனும் காலதேவதைக்கு 12மாசங்களும் முகம் கைகால் முதலிய அவயங்களாகும். நவநாயகர் என்ற பெயரால் ரவி முதலிய 9 கிரகங்கள் ராஜ்யபாரம் செலுத்துவர். அந்தந்தாண்டு திதி, வார, நக்ஷத்திர, யோக கரணமெனும் 5 அங்கங்களை விளக்குவது பஞ்சாங்கம். நன்மையை விருத்தி செய்வது திதி. ஆயுளை வாரம் வளர்க்கும். நக்ஷத்திரம் பாபத்தை அகற்றும். யோகம் ரோகத்தை நீக்கும். கரணம் ஜயத்தைத்தரும். ஆதலால் பிரதி தினம் அல்லது வருஷப்பிறப்பன்ருவது பஞ்சாங்க படனஞ் செய்ய வேண்டும். சூட்சுமமாக அவ்வாண்டு நமக்கு வரும் லாப நஷ்டங்களை அறியலாம். ராஜசபையிலும் சிற்சில ஆலயங்களிலும் இப்போதும் நித்தியம் பஞ்சாங்க படனம் நடப்பதைக் காணலாம்.

தென்னுட்டில் வருஷப் பிறப்பன்று, நவக்கிரக பூஜை பித்ரு தர்ப்பணம் காலை அல்லது மாலையில் பஞ்சாங்கபூஜை சோதிடம் அறிந்தவரைக்கொண்டு பஞ்சாங்க படனம், பானகபூஜை அக்காலத்திற் கேற்றபடி உஷ்ணத்தை அடக்கும் படியான வடை, பருப்பு, சுண்டல், பழங்கள், நீர், மோர், பானகம், விசிறி, பஞ்சாங்கம், தாம்பூலத்துடன் தக்ஷிணை அளிப்பதென தொன்று தொட்டு நடந்து வருகிறது.

அன்று வசந்தத்தில் மலரும் வேப்பம் பூவை பச்சடியாகச் செய்து பகல் விருந்தில் உண்பர். விருந்துக்கு அறுசுவை அவசியமாகும். உப்பு, புளிப்பு, காரம்,

தித்திப்பு, கசப்பு, துவர்ப்பு என்பன ஷட்ரசங்களாகும். நமது உடலில் இயற்கையாகவே இறைவன் இந்த ரசங்களை அமைத்துள்ளார். உடல்வாழ இவை மிக அவசியமானவை. இவை அளவுடனிருந்தால் தான் ஆரோக்கிய மளிக்கும். இதில் ஒன்று குறைந்தாலும் அதிகமானலும் நோயுண்டாகும். ஆதலால் இவற்றை நம்நாட்டு ஞானிகள் உணவில் கலந்துள்ளார்கள். சிறிது கசப்பும், இனிமையும் கலந்தது வேப்பம் பூ பச்சடி. இது கசப்பிலும் தித்திப்புண்டு. தித்திப்பிலும் கசப்புண்டு என்பதையும் இனிப்பும் கசப்பும் கலந்தது வாழ்க்கை என்றும் கசப்பை இனிப்பாக்கிக்கொள் என்பதையும் கற்பிக்கிறது. சித்திரை முதல் 4 மாதம் தண்ணீர் பந்தல் வைக்க வேண்டும். நித்தியம் ஒரு பாத்திரத்தை ஜலத்துடன் தானம் செய்ய வேண்டும்.

## சித்ரகுப்தன் கோயில்

நூற்றுக்கணக்கான கோயில்கள் அமைந்த காஞ்சி மாநகரில் சித்ரகுப்தனுக்கோர் தனியான சிறந்த ஆலயமுண்டு. சித்திரா பௌர்ணமியில் விசேஷமான சித்ரகுப்தன் பூஜையும் புறப்பாடும் உற்சவமும் நடக்கின்றது. இதே பௌர்ணமியில் இந்திரன் தன் குருவை அலட்சியம் செய்து பாவம் அகலுவதற்காக மதுரையில் ஹாலாஸ்யநாதனைப் பூஜித்தார். இப்பொழுதும் ஆண்டுதோறும் இங்கு வந்து இந்திரன் சித்திரா பௌர்ணமியில் பகவானை பூஜிப்பதாக ஐதீகம். அன்று விஷேட உற்சவமும் நடக்கும். அந்தப்புண்ணிய தினத்தில் அன்னதானம் செய்வது மிகச் சிறந்ததென அரசர்கள் இதற்கென பிரத்தியேகமாகப் பொருள் ஒதுக்கி சிலாசாசனம் செய்துள்ளார்கள். பற்பல ஆலயங்களில் சித்திரா பௌர்ணமி உற்சவம் இன்றும் நடைபெறுகிறது.

சித்ரகுப்தரது மகிமையை உணர்ந்து சந்தியாவந்தனத்திலும் வைச்வ தேவ பலியிலும் இவரது பெயரைச் சேர்த்திருக்கின்றனர். இவரது சரிதத்தை ஸ்திரீகள் தமிழில் பாட்டாகப்பாடி அன்றிரவு கண் விழிப்பர்.

**சித்ரகுப்தனது பிறப்பு:** தவம் செய்யும் பிரம்மாவின் உடலிலிருந்து ஒரு புருஷன் தோன்றினன். உடலுக்குக் காயம் என்று பெயரல்லவா? காயத்திலிருந்து வந்ததால் அவனுக்கு காயஸ்தன் என்றொரு பெயரும் உண்டு. அவரை பிராணிகளின் புண்ணிய பாவங்களைக் குறித்து யமனிடம் தரும்படியும் யமனது சபையிலே இருக்கும்படியும் கூறினர். யமனுக்கும் சித்ரகுப்தனுக்கும் சேர்த்து யமத்விதியையில் பூஜை செய்வதுண்டு. சித்ரகுப்த சந்ததியில் தோன்றியவர்கள் தான் காயஸ்தர் என்னும் கணக்கப்பிள்ளை வகுப்பார். அக்கினி நக்ஷத்திரம் எனும் கத்திரி ஆரம்பிப்பது இம்மாதத்தில் தான்.

**அக்ஷய திருதியை:** சுக்கில பட்சம் திருதியையில் கிருத யுகத்தில் பிரம்மா உலகைப் படைத்தார். அந்தப் புண்ணிய காலத்தில் கங்காஸ்நானம், பித்ருதர்ப்பணம், யவம், கோதுமை, உப்பு, சத்துமாவு, தத்போகதம், கரும்பு, பால், மோர், தயிர், கோ, பூமி, சுவர்ணம், பானகம், விசிறி, குடை, பாதுகை இவைகளைத் தானம் செய்தால் அழியாத பலன்களைத்தரும். ஆதலால்தான் பெயரே அக்ஷய திருதியை என ஏற்பட்டது. ரோகிணி நக்ஷத்திரத்துடனும் புதன் கிழமையுடனும் சேர்ந்தால் இன்னும் மிக விசேடமானது.

**கதை:** மகோதயம் என்ற நகரத்தில் ஒரு வைசியன் இருந்தான். சிறந்த குணமுள்ள தார்மீகனவன். அக்ஷயத்ருதியையின் பெருமையைக் கேட்டு ஒவ்வொரு வருஷமும் மேலே கூறியுள்ள சகல தானங்களையும் செய்து வந்தான். கங்காஸ்நானம் செய்து அங்கு பித்ருதர்ப்பணம், தானம் முதலியன செய்தான். மறுபிறப்பில் செல்வதி என்ற நாட்டில் அரசனாகப் பிறந்து பூர்வ புண்ணியத்தால் அக்ஷயமான செல்வத்தைப் பெற்றான். அப்பொழுதும் யாகாதிகளையும் தானங்களையும் செய்து வைகுண்டத்தில் அக்ஷயப்பமான ஆனந்தத்தை அடைந்து கொண்டிருக்கிறான்.

## பரசுராம ஜயந்தி

இந்தத் திருதியையில் தான் பரசுராமர் அவதரித்தார். தசாவதார ஜயந்திகளில் ராமகிருஷ்ண நரசிம்ம ஜயந்தி மாத்திரம் தான் விசேடமாகக் கொண்டாடப்படுகிறது.

## ஸ்ரீ சங்கர ஜயந்தி

சுக்கில பஞ்சமியில் கைலாசநாதன் ஆதி சங்கரராக அவதரித்து அவைதிகமதங்களை அகற்றி வைதிகமான சைவம், வைஷ்ணவம், சாக்தம், காணபத்தியம், சௌரம், கௌமாரம் என்ற 6 மதங்களைப் பிரதிஷ்டை செய்து, அத்வைதமதத்தை நிலைநாட்டி ஸ்ரீ காஞ்சியில் சித்தியடைந்தார். சிஷ்ய மடங்களாக 4 திக்குக்களில் மடங்களை ஏற்படுத்தினர். சுக்கில அஷ்டமியில் தேவி அவதரித்ததால் தேவி பூஜை செய்ய வேண்டும்.

தை முதல் ஆனி முடிய ஆறு மாதங்களும் தேவர்கட்குப் பகற்காலமாம். அப் பகல் முடிவிற்கு எல்லையாயுள்ள மாதம் ஆதலில் அது ஆனி என்ற பெயர் பெற்றது. (ஆனி = எல்லை) சூரியன் வட எல்லையை அடைந்து தெற்கு நோக்குங்காலம் தட்சணயணம் எனப்படும்.

சூரியன் திசை திரும்புங்கால் உலகம் ஆட்டமுறும். ஆட்ட முற்றுக் குலுங்கவும் காற்றுண்டாகின்றது. ஆடி என்பதற்குக் காற்று என்ற பொருளும்

உண்டு. சூடதிகரித்துக் காற்றுக்கிளம்பும். மேகங்கள், வெண்பசுக் கூட்டங்கள் (ஆவணி – ஆ, அணி) அணிவகுத்துச் சென்றுற் போன்றும் வரிசை, வரிசையாக ஒன்றுரேடொன்று சேர்ந்து ஒழுங்கு பட்ட கடைவீதி போன்றும், வானத்தில் தோன்றும். (ஆவணம் – கடைவீதி) வானத்தில் மேகங்கள் திரண்டு சூரிய ஒளியை மறைத்தலால் பிணி பீடைகள் தொடங்கும். இதுபற்றியே ஆவணி ஞாயிறு தோறும் தமிழகங்களில் சூரியனுக்கு வணக்கம் வழிபாடு செய்வதுண்டு.

அடுத்து வரும் திங்கள் புரட்டாசியாகும். வானில் வெயிலும் மாசும் புரண்டு புரண்டு மாறுபாடடைந்து அற்ப மழை பெருத நிமித்தம் புரட்டாசி எனப்படும். புரட்டு, புரண்டு, அசி (வான்) ஆக (அற்பம்) இ.

ஐப்பசி – ஐ+பசி அணுகிய தீ அல்லது பசி, சூரிய வெப்பம் குறைவதால் மக்களையுழற்றும் பசியும் அணுகுவதாகும். கார், மயங்கத் தொடங்கவே கார்த்திகை (கார், திகையாயிற்று) சூல் கொண்ட மேகங்கள் மயக்கமுறுவன போலும். மழை பொழிதலும் சூல் மயக்கந் தெளிகின்றது. மாரி கழிவதால் மார்கழி எனப்படும். இவ்வாறு பன்னிரு திங்களின் பெயர்களும் தமிழ்ச் சொற்களாகவே காணப்படுகின்றன.

நிறைமதி நாளெல்லாம் தமிழர்க்குத் தலையாய நாட்கள். உலகம் முழுவதுமே இதனை ஒப்புக் கொள்கின்றது. ஒவ்வொரு நிறைமதி நாளும் ஒவ்வொரு வகையில் விழாவாகக் கொண்டாடப்படுகின்றது. கார்த்திகையில் விளக்கீடா கவும், மார்கழியில் ஆதிரையாகவும், தையில் பூசமாகவும், மாசியில் மகமாகவும், பங்குனியில் உத்திரமாகவும் காட்சி தரும் விழா, சித்திரைத் திங்களில் சித்திரை நக்ஷத்திரம் சேர்ந்த நாளாகக் காட்சி தருகின்றது.

## சித்திரா பூரணை

சித்திரை மாதம் சித்திரை நக்ஷத்திரம் கூடிய பூரணையே சித்திரா பூரணையாகும். அன்று சித்திர குப்த விரதம் நோற்பார்கள். அந்த நாளில் பொங்கி வழியும் பால் நிலவைப்போல் மக்கள் உள்ளமும் மகிழ்ச்சியில் பொங்கித் திளைக்கும். அந்நாளில் பொங்கலிட்டுத் தெய்வங்களை மக்கள் வழிபட்டு விழாவாற்றி வந்தார்கள். ஏழைகளுக்குக் கஞ்சி காய்ச்சி ஊற்றுவார்கள். இதற்குச் சித்திரைக் கஞ்சி என்று பெயர். மாலையில் சித்திர குப்தருடைய கதையை ஒருவர் வாசிக்க மற்றவர்கள் எல்லோரும் பயபக்தியாய்க் கேட்டு அனுபவிப்பார்கள்.

பொன், வெள்ளி இவைகளாலான பதுமையில் சித்திரகுப்தனை இருத்தி நியமப்படி வழிபாடு செய்ய வேண்டும். அன்னம், வெல்லத்துடன் கலந்த எள், பால்

நெய் முதலியவை படைக்கும் பொருள்கள். வழிபாட்டின் முடிவில் பாயசம் நிறைந்த வெண்கலப் பாத்திரம் தானமாகப் கொடுப்பது வழக்கம். அன்று முழுவதும் உப்பில்லாத உணவுண்டு விரதம் இருத்தல் வேண்டும்.

மாதம் தோறும் பூரணை விரதம் அனுட்டிக்க முடியாதவர்கள் சித்திரா பூரணையாவது அனுட்டிக்க வேண்டும். இப் பூரணை விரதம் மற்றைய பூரணை விரதங்களை அனுட்டிப்பதன் பலனைக் கொடுக்க வல்லது. முதன்முறை விரதம் தொடங்கும்போது 5 அல்லது 9 கலசங்கள் வைத்து. அவைகளில் சித்திர குப்தனையும் மற்றும் எட்டுத் திக்குப் பாலகர்களையும் (அல்லது நான்கு திக்குப் பாலகர்களை) இருத்தி வழிபட்டுப் பிறகு தானம். ஓமம். பிராமண போஜனம் முதலியன செய்ய வேண்டும்.

அன்று எல்லாப் பலன்களையும் கொடுக்க வல்ல இந்திர வழிபாடு செய்தல் வழக்கம் என்று தேவி புராணம் கூறுகின்றது. மருக்கொழுந்தினல் இந்திரன் முதலிய தேவர்களை வழிபட வேண்டும். அத்திதி சனி. ஞாயிறு அல்லது வியாழன் அன்று வருமாயின் மிகவும் விசேஷமானது. யமனுடைய கணக்குப்பிள்ளையே சித்திர குப்தர் என்று அழைக்கப்படுவார். அவரவர் செய்த நன்மை தீமைகளை எழுதி வைத்துக் கடைசியில் உத்தரிக்கிற காலங்களிலே அக்கணக்கை வாசிப்பவர் சித்திர குப்தர் ஆவார்.

சித்திரகுப்தருக்கு காஞ்சிபுரத்தில் ஒரு ஆலயமும். திருவண்ணமலையில் ஒரு சந்நிதியும் உண்டு. வேறு எங்கும் கிடையாது. யமதேவன் தென் திசைக்கு அதிபதி. யமனுக்கு பதினன்கு பெயர்கள். இந்த யமனையும் வெல்ல வேண்டும் என்பதே அடியார்களின் அவா.

“கார்மாமிசை காலன் வரிற் கலபத்
தேர்மாமிசை வந்தெதிரப் படுவாய்”

என்பது அருணகிரியார் வேண்டுதல்.

எல்லாத் தருமங்களும் அன்பில் அடங்கும். அந்த அன்பே சிவம். அச் சிவமே காலகாலன். இந்தச் சிவத்தைப் பூசித்து மார்க்கண்டேயன் எமனை வென்ருன். சாவித்திரி மார்க்கண்டேய வரலாறுகள் யமனை வெல்ல இரண்டே மார்க்கம் உள்ளன என்பதை உணர்த்துகின்றன.

ஒன்று சாவித்திரி மார்க்கம் - இதனைக் காலவந்தனம் எனலாம். மற்ருென்று மார்க்கண்டேய மார்க்கம் - இதனைக் காலவஞ்சனம் என்கிருர்கள்.

காலத்துக்குட்பட்டுக் காலனை வெல்வது காலவந்தனம். காலத்தை கடவுளை வழிபட்டு காலத்தை வெல்வது காலவஞ்சனம். சாவித்திரி மார்க்கண்டேயர் விஷயங்களில் யமதருமன் தன் கால தருமத்திற்கு விலக்காக நடந்து கொண்டார். சத்தியவான் விஷயத்தில் சாவித்திரியின் அளவு கடந்த அன்பில் ஈடுபட்டுத் தன் அநுக்கிரக வாக்கைக் காக்கும் பொருட்டு வரமளித்தார். இது காலவந்தனத்துக்கு உவந்து அளித்த வரம்.

மார்க்கண்டேயனே காலனைச் சிந்தியாமல் சிவத்தைச் சிந்தித்து வந்தான். கால நியமப்படி அவனது முடிவு காலம் வந்தபோது காலந்தகன் தன் கடமையைச் செய்ய வந்தான். ஆனல் மார்க்கண்டேயன் ஆதியந்தம் இல்லாத சுயம் பிரகாச வெளியில் சிவ தரிசனத்தைக் கண்டு காலாதீதனை விளங்கினன். அதனல் யமனின் அதிகாரம் மார்க்கண்டேயன் விஷயத்தில் தோற்றது.

மிருத்யுவை வென்று அவரையே குருவாக் அடைந்தவர் நசிகேதஸ். இவர் யமன் அருளால் காலச்சக்கரத்தை வென்றவர். தஞ்சை மாவட்டத்தில் ஸ்ரீ வாஞ்சியம் என்ற இடத்தில் யமதேவனுக்கு சந்நிதி இருக்கிறது. யமதேவனும் சனிபகவானும் சூரிய திருக்குமாரர்கள் என்று புராணம் கூறுகின்றது. சித்திரா பூரணையிலன்று போடப்படும் கோலத்தில் தென்புற வாசலை மூடியது போல போடுவது வழக்கம்.

## இந்திர விழா

இந்திரனுக்குச் செய்யும் விழா இந்திர விழா எனப்படும். அகத்தியர் கட்டளைப்படி முசுகுந்தனல் தொடங்கப் பெற்றுச் சோழ மன்னர்கள் செய்து வந்தது. காவரிப்பூம்பட்டினத்தைத் தலைநகராகக் கொண்டு சோழர்கள் ஆண்டு வந்த போது, இதனைச் செய்யாமல் விட்டால் நகரம் கடலாற் கொள்ளப்படும் என்று ஆணை இருந்ததென்றும், நெடுமுடிக்கிள்ளியின் காலத்திற் செய்யாமல் விட்டதால் காவரிப்பூம்படடினம் கடலாற் கொள்ளப்பட்டது என்றும் மணிமேகலை கூறுகின்றது.

கார்த்திகையில் வீட்டுக்குள்ளேயே இருந்து விளக்கேற்றி வழிபட்டவர்கள், மார்கழியிலும், தையிலும் தண்ணிய தடம் படிந்து பொய்கையில் நீராடி மகிழ்ந்தவர்கள், மாசியிலும், பங்குனியிலும் வசந்தத்தையும் இளவேனிலையும் எதிர்நோக்கியிருந்தவர்கள், அப்பங்குனியில் மலரும் வசந்தம், வளமாரக் பூத்துக் குலுங்கும் சித்திரையில் மகிழாதிருப்பார்களோ? அவர்தம் மகிழ்ச்சி வீட்டோடு நில்லாது பரந்த நிலப்பரப்பினை நாடிச்செல்கின்றது. பரந்த மணல்வெளியும், சோலையும், கடற்கரையும் பிற ஆற்றுப்படுக்கைகளும் அவர் தம்

விழாவுக்கு ஏற்ற இடங்களாய் அமைகின்றன. காதலரும் பிறரும் களித்து மகிழும் இந்தச் சித்திரை நிறைநாள் விழாவை பழங்கால இலக்கியங்கள் பாராட்டிப் பேசுகின்றன. சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இந்திர விழா என்ற பெயரால் போற்றுகின்றன. இரண்டிலும் இவ்விழாவைப்பற்றி இரு கதைகள் உள்ளன.

காவிரிப்பூம்பட்டினம் கடற்கரையில் அமைந்திருந்தமையின் இந்திர விழா அழகிய காவிரிக் கடலோடு கலக்கும் அப்பரந்த வெளியிடத்தே நடைபெற்றது. இன்று இந்திர விழா நடைபெறவில்லையாயினும் அதன் சில அம்சங்கள் ஊர்கள்தோறும் கொண்டாடப்படுகிறது. கடலாடுதல், தெப்போற்சவம் ஆகியவை அவற்றின் அம்சங்களாக அமைந்தவையே.

வெள்ளம் பெருகும் ஆற்றங்கரையில் மக்கள் வேறுநிலையில் மகிழ்ந்துவாழ, வெள்ளம் வற்றிய ஆற்றில் மக்கள் நிறைமதிநாளில் கூடி "ஊறல்" அமைத்து விழாக்கொண்டாடி மகிழ்வர். காவிரியின் வற்றுத வெள்ளப் பெருக்கின் நலம் கண்டு சித்திரை நாளில் செய்த விழாவே இந்திர விழாவாகச் சிறந்தது என்று சொல்வது பொருத்தமானதாகும்.

சோழநாட்டை ஆண்ட மன்னருள் தலைசிறந்த ஒருவன் "தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன்" ஆவான். அவன் அகத்திய முனிவரின் ஆணைப்படி இந்திரனை வேண்டினன். இந்திரன் 28நாட்கள் இவ்விழாவில் கலந்து கொள்ளவேண்டும் என்பது அவன் விருப்பம். இந்திரனும் அவ்விருப்பத்திற்கு இணங்கினன். இந்திரனை முன்னிட்டுச்செய்த விழா ஆதலின் இந்திரவிழா எனப்பட்டது.

## சுக்கிரவார விரதம்

சுக்கிரவார விரதம் என்பது வெள்ளிக்கிழமையைக் குறிக்கும். தேவியைக் குறித்து வெள்ளி விரதம் அநுஷ்டிக்க விரும்புவோர் சித்திரை மாதத்து வளர்பிறையைத்தொடர்ந்து வரும் முதற் சுக்கிரவாரத்திலிருந்து பகலிலே ஒரு பொழுது உணவுண்டு அநுஷ்டிக்கும் விரதம் இது.

## பிரதோஷ விரதம்

பிரதோஷம் என்பது முற்பிறப்பில் செய்த குற்ற நீக்கமாகும். பிரதோஷ விரதம் சிவனுக்குரிய விரதங்களில் ஒன்று. மாதந்தோறும் உண்டாகின்ற சுக்கில பட்சம் என்னும் வளர்பிறை காலத்திலும், கிருஷ்ண பட்சம் எனப்படும் தேய்பிறைக்காலத்திலும் வரும் 13ஆம் நாளை பிரதோஷகாலம் என்பார்கள்.

தேவர்களும் அசுரர்களும் அமிர்தம் பெறுவதற்காக மந்திர மலையை மத்தாகவும், வாசுகிப்பாம்பை கயிருகவும் கொண்டு திருப்பாற்கடலை கடைந்தனர். இருபகுதியாரும் வேகமாகக் கடைந்த தாக்கத்தால் வேதனையுற்ற வாசுகி ஆலகாலம் என்னும் விஷத்தைக் கக்கியது. அந்தவிஷம் அருகில் நின்றவர்களை எரித்து தகித்துத் துன்புறுத்திய போது அங்கே நின்ற திருமாலின் நிறத்தையும் நீலமாக்கியது. விஷத்தின் வேதனை தாங்க முடியாது தேவர்கள் சிவனிடம் முறையிட்டபோது அவர் சுந்தரரை அனுப்பி விஷத்தை எடுத்து அடக்கியுண்டு தமது கண்டத்தில் நிறுத்தி "நீலகண்டரானர்".

இது மற்றவர் வாழத் தாம் நஞ்சுண்ட வரலாறு. இதை நினைவு படுத்தும் நாள் ஏகாதசி விரத நாளாகும். விஷத்தின் வேதனையை ஒழித்த பின் தேவர்களும் அசுரர்களும் தொடர்ந்து திருப்பாற்கடலை கடைந்து சகல செல்வங்களையும் பெற்றுத் தம்முள் பகிர்ந்து அங்கே எழுந்த அமுதத்தையும் உண்டு இறவா நிலை எய்தினர். அமுதம் தோன்றிய நாள் துவாதசி எனும் 12ஆம் நாளாகும். அது விடியற்காலை நேரமாய் இருந்தது. அமுதம் உண்ட தேவர்கள் ஆடிப்பாடி மகிழ்ச்சியில் 12ஆம் நாளை போக்கிய பின் 13ஆம் நாள் விடிந்தது.

தேவர்கள் தங்களுக்கு வாழ்வளித்து இறவாப்பெருமை தந்தருளிய சிவபெருமானுக்கு முன்னமேயே வணக்கம் செய்து வழிபட மறந்தனர். தங்கள் குற்றத்தை 13ஆம் நாளில் திரயோதசி தினத்தில் உணர்ந்தனர். கருணைக் கடலாகிய நீலகண்ட மகாதேவனிடம் சென்றனர். தங்கள் குற்றத்தை பொறுத்தருளி ஆட்கொள்ளுமாறு இரந்து பணிந்து உருகி நின்றனர்.

வழிபாட்டுக்கு இரங்கி அருளும் கருணாமூர்த்தியான சிவபெருமான் தேவர்கள் கண்டு களிக்குமாறு அம்பிகையோடு எழுந்தருளினர். சிவபெருமான் திருநடனஞ் செய்தருளியவேளை திரயோதசி எனும் 13ஆம்நாள் மாலைப் பொழுதாகும். அதுவும் ஏறக்குறைய 4.30 முதல் 6.00 மணி எனக் கணக்கிடக் கூடியதாகும். அவ்வேளை பாவத்தைப் போக்கிய வேளை. எனவே பிரதோஷம் எனப்படலாயிற்று. அது ரஜனி முகவேளை எனப்படுவது. இது மஞ்சள் வெய்யில் காயும் பொழுதாகும்.

தேவர்கள் இடபதேவரின் கொம்புகளுக்கிடையில் இறைவனின் திரு நடனத்தைக்கண்டு அருள்பெற்றுப் பாவம் நீங்கினர்கள். முற்பிறவிகளிலும், இளமையிலும் செய்த பாவங்களை நீக்கி அருளுமாறு இறைவனை பணிந்து பாவ மன்னிப்பும் பேருளும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்வதற்குப் பிரதோஷ வேளை மிகவும் மேலானதாகும். இவ்வுடம்பு வசதியாகவும் வாய்ப்பாகவும் இருக்கும் போதே நாம் வழிபாடு செய்து உய்வோமாக.

# பிரதோஷ விரதத்தின் பயன்

பிரதோஷ கால வழிபாடு பரார்த்தமாகவும் பயன்தருவது. நமக்காக அன்றி நம் குடும்பத்தார்க்கும் நம்மைச் சேர்ந்தவர்களுக்கும் அவ் வழிபாடு பயன்தருவது ஆகும். பிரதோஷ காலத்திலே நியமமாக மெய்யன்போடு சிவ தரிசனம் செய்து கொண்டுவரின் கடன், வறுமை, நோ, பயம், கிலேசம், அவமிருத்து, மரணவேதனை, பாவம் என்னும் இவைகள் நீங்கும்.

சிவபெருமானுக்கு உரிய விஷேச விரதமாகிய பிரதோஷத்தைப் பற்றி சகலாகம சங்கிரகம், உத்தரகாரணம், பிரம்மோத்தரகாண்டம், சிவதருமோத்திரம் முதலிய பெரிய நூல்களில் விபரமாகக் கூறப்பட்டுள்ளது. வரதுங்க ராம பாண்டிய மன்னன் தான் பாடிய பிரம்மோத்தரகாண்டத்தில் பிரதோஷ மகிமையை 123 செய்யுள்களில் விளக்கியுள்ளார்.

# பிரதோஷ விரதமுறை

பிரதோஷ விரதம் அநுஷ்டிப்போர் அன்று காலை நித்திரை விட்டு எழுந்து காலைக்கடன் கழித்து நீராடி தூய்மையாகச் சிவாலயத்திற்குச் சென்று வழிபட்டு அன்று நல்ல வழியில் அருள் நூல்களையும் தேவார திருவாசகங்களையும் ஓதிக்கொண்டிருத்தல் நன்று. அன்று மாலை சிவாலயத்திற்குச் சென்று சுவாமிக்கும், அம்பாளுக்கும் இயன்றவரையில் அபிஷேகம், அர்ச்சனை ஆகியன செய்வித்து அலங்காரம், நிவேதனம் ஆகியவற்றுக்கு தம்மாலானவரை உதவி உபகரித்து திருவிழாப்பொலிவு காணுதல் வேண்டும் மூன்று தரமாயினும், ஐந்து தரமாயினும், திருவீதியை வலம் வந்து வணங்குதல் வேண்டும்.

சுவாமிக்கு முன் எழுந்தருளியிருக்கும் இடப தேவருக்கு அறுகம்புல் மாலை உதவி சிவப்பு அரிசி நிவேதிக்கக் கொடுத்து நெய் விளக்கெரிக்கச் செய்தல் நன்று. ஆலயத்து மூலஸ்தானத்தில் எழுந்தருளியுள்ள சிவலிங்கப்பெருமானை பிரதோஷ தினத்தன்று இடப தேவரின் இரு கொம்புகளுக்கு இடையில் கண்டு வணங்குதல் முறையாகும். இறைவனை வணங்கிய பின் ஓரிடத்தில் இருந்து இயன்றவரை பஞ்சாட்சரத்தை உச்சரித்து தான தர்மம் செய்து வீட்டுக்கேகி உபவாசம் இருத்தல் உத்தமம். அஃது இயலாதவர்கள் பிரதோஷ காலம் கழிந்த பின் தமக்கு ஆகாரமாக ஏதேனும் சிறிதளவு உட்கொண்டு அடுத்த நாள் காலை பாரணை செய்து கொள்ளலாம்.

பிரதோஷ காலத்திலே போசனம், சயனம், ஸ்நானம், விஷ்ணு தரிசனம், எண்ணெய் தேய்த்தல், வாகனம் ஏறல், மந்திர ஜெபம், நூல் படித்தல் என்பன செய்யத்தகாதனவாம்.

# சனிப்பிரதோஷம்

சிவபெருமான் தேவர்களின் குற்றத்தை மன்னித்தருளி அவர்களுக்குத் தம் திருநடனத் திருக்காட்சி கொடுத்தருளியமை ஒரு சனிக்கிழமையோடு கூடிய பிரதோஷமாகையால் சனிப்பிரதோஷம் மிக மேலானது. எனவே தான் பிரதோஷ விரதம் அநுஷ்டிக்கத்தொடங்குவோர் ஒரு சனிப்பிரதோஷத்தில் ஆரம்பித்து ஒரு சனிப்பிரதோஷத்தில் நிறுத்திக் கொள்ளுதல் வழக்கமாய் இருக்கிறது. அத்தகைய சனிப்பிரதோஷமும் சித்திரை, வைகாசி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய மாதங்களில் வருவதாயின் மிக மிக நன்றாகும்.

# பிரதோஷ விரத அர்க்கியம்

பிரதோஷ விரத அர்க்கியத்தின்போது குருக்கள் ஐயா அவர்கள் "கிரீச கிரிசா காந்த" எனத்தொடங்கி ஓம் ஸ்ரீ சாம்ப சிவாய நம: இதம் அர்க்கியம் சமர்ப்பயாமி என்று கூறுவதன் கருத்து வருமாறு:

"கிரீசரே, பார்வதி நாயகரே, கங்கையை திருமுடியிலே தரித்தருளியவரே சுப்பிரமணியப்பெருமாகிய திருக்குமாரர் மேல் பிரீதியுடையவரே பரமேஸ்வரரே, அடியேனால் கொடுக்கப்பட்ட பிரதோஷ அர்க்கியத்தை ஏற்றருள்க, தேவ நாதரே சுகத்தைச் செய்தருள்பவரே, பகவானே விசிஷ்டமான பிரதோஷ காலத்திலே அடியேனால் கொடுக்கப்பட்ட அர்க்கியத்தை ஏற்றருள். அடியேன் பாவங்களை தீர்த்தருள்க. அடியேனால் விரும்பப்பட்ட வரங்களைத் தந்தருள்க. பரமேஸ்வரரே, அடியேன் தீமை தீரவும் விரும்பிய பலன்கள் சித்திக்கவும் அடியேனால் கொடுக்கப்பட்ட அர்க்கியத்தை ஏற்றருள்க. பார்வதி தேவி நாயகரே, மகாதேவரே, பிரபுவே, அடியேன் கடன், நோய், பகை, வறுமை என்னும் இவற்றாலே தகிர்க்கப்பட்டேன். தேவரீருக்குப் பிரதோஷ அர்க்கியம் கொடுக்கின்றேன். அடியேன் குறைகளை நீக்கியருளி இக சுகந் தந்தருளுவதோடு சாயுச்சிய பரசுகத்தையும் தந்தருளுவீராக."

பிரதோஷ விரதத்தின் போது சிவாலயத்தை வலம் வருவதற்குப் பதிலாக சோமசூக்தப் பிரதட்சணம் செய்தல் வேண்டும். சோமசூக்தப் பிரதட்சணமாவது முதலில் சிவலிங்கப்பெருமானையும் பின் இடபதேவரையும் வணங்கிக்கொண்டு பிரதட்சணமாய் சண்டேஸ்வரர் சந்நிதி வரை சென்று, அவரை வணங்கிய பின் வந்தவழியே மீண்டு, சிவலிங்கப்பெருமானையும் இடபதேவரையும் தரிசித்துக் கொண்டு வலம் வரும்போது அபிஷேக நீர்விழும் நிர்மாலியத் தொட்டியைக் கடக்காமல் திரும்பி வந்தவழியே மீண்டு சிவலிங்கப் பெருமானையும் இடபதேவரையும் வணங்குதல் முறை.

# ஏகாதசி விரதம்

மாதந்தோறும் வளர்பிறை காலம் என்னும் சுக்கில பட்சமும் தேய்பிறைக்காலம் என்னும் கிருஷ்ண பட்சமும் சம்பவிக்கின்றன. இவ்விரு காலத்திலும் வருகின்ற 11ஆம் நாளே ஏகாதசி என்பார்கள். இத்தினம் அடியார்களுக்கு மிக அருமையான நாள். அவர்கள் அன்று பகல் முழுவதும் ஒன்றும் உண்ணுமல் ஒன்றும் பருகாமல் உபவாசமாய் இருந்து ஸ்ரீமந் நாராயணனைத் தொழுது தோத்திரம் செய்து தியானித்து வணங்குவர். இரவு முழுவதும் அவரை நினைந்து தியானம் செய்து, அவர் புகழ் பாடிக் கழிப்பர். அடுத்தநாள் அதிகாலை நீராடி வழிபாடு செய்து சூரிய உதயத்தின் முன் பாரணை செய்வர்.

ஏகாதசி நாளில் சோறு உண்ணல் ஆகாது என்பதே விதி. உபவாசம் இருப்பது உத்தமம். உபவாசம் இருக்க இயலாதவர்கள் பால் பருகலாம். இரண்டொரு பழங்களை உண்ணலாம். ஏகாதசி விரதம் அநுஷ்டிப்பதால் உடம்புக்கு நல்ல உறுதியும் பயனும் உண்டாகின்றது. பிறவிதோறும் செய்து வந்த பாவங்கள் நீங்குவதோடு இனிவரும் பிறப்புக்களுக்கு நல்ல பயன் கிடைக்கின்றது. மேலான பதவியும் கிடைக்கின்றது. இவையெல்லாம் பெரியவர்களும், தர்மசாஸ்திரம் கண்டவர்களும் நமக்காகக் கூறியவை.

ஏகாதசி விரதத்தால் பாவங்கள் நீங்க மனம் தூய்மை அடைகிறது. படிப்படியாக பக்தி அதிகரிக்கிறது. கடவுளிடம் பற்று வளர்கிறது. மனத் தூய்மைக்கு ஏகாதசி மிகவும் நல்லதென்பர்.

விரதம் அநுஷ்டிப்பதால் மனம் கட்டுப்படுகிறது. பஞ்சமாபாதகங்கள் படிப்படியாக குறைகின்றன. அங்குமிங்கும் அலையும் மனம் ஆற அமர ஒடுங்குகிறது. நல்லவழியில் நம்மை நடத்தத் தயாராகின்றது. தூய்மையுள்ள சிந்தனைகள் தோன்ற இடமளிக்கின்றது. கடவுள் பக்தியைத் தூண்டுகின்றது. படிப்படியாக மனம் பரிசுத்தமடைந்து பக்குவப்படுகின்றது. தியானம் செய்ய வழி பிறக்கின்றது. விரதத்தால் உணர்ச்சிகள், ஆவேசங்கள் அடங்குகின்றன. இந்திரியங்கள் அமைவாக நடக்கின்றன. தவ வாழ்வு வாழ வழி பிறக்கின்றது. மனம் பொறி வழி போகாது தடுப்பதற்கான விரதங்கள் பல உள்ளன. அவற்றுள் சந்திராயணம், கார்த்திகை, ஏகாதசி, பிரதோஷம் என்பன மனச்சாந்தி அளிப்பன.

விரத காலங்களில் உபவாசம் இருப்பதால் முதலில் அடங்குவது நாக்கு. நாள் தோறும் அறுசுவை உண்டி உண்பதோடு வாயில் வந்தவாறு பேசித் தடிப் பேறி உள்ளது நாக்கு. எதனைக் காக்காவிட்டாலும் நாக்கை காத்தல் வேண்டும்.

அதனைக் காப்பதற்கு நாவடக்கமே சிறந்த வழி என்றும் கூறுவர். மனிதனின் கொடிய பகைவனை நாக்கு அடங்குவதற்கு உபவாசம் சிறந்தவழி என்பது பெரியவர்களின் அனுபவம்.

விரதத்தால் சுவாச உறுப்புக்கள், குருதி ஓட்ட உறுப்புக்கள், சமிபாட்டு உறுப்புக்கள், கழிவுகளை நீக்கும் உறுப்புக்கள் எல்லாம் வலுப்பெற்று கடமைகளைச் செய்கின்றன. உபவாசம் இருப்பதால் உடலில் குருதியில் உள்ள நச்சுத்தன்மைகள் அழிக்கப்பட்டு ஒதுக்கப்படுகின்றன. உபவாசம் இருத்தல் யோக மார்க்கத்திற்கு உதவியாகும். உபவாசத்தால் பஞ்சமாபாதகங்கள் அகலுவதோடு வைத்தியத்தால் நீங்காத கோளாறுகள் பல நீங்குகின்றன. உபவாசம் சரீர சுகத்திற்கு மாத்திரமன்றி, நல்லொழுக்கத்துக்கும், பிரமச்சரிய ஒழுக்கத்துக்கும் உறுதுணையாகும். உபவாசம் நித்திரையை மட்டுப்படுத்த உதவி செய்கிறது. அதிகமாக உண்பவனுக்கும் அதிகமாகத் தூங்குபவனுக்கும் யோகம் வெகுதூரம் என்கிறது பகவத்கீதை.

சந்திரனின் வளர்ச்சியும் தேய்வும் பூமியில் உள்ள உயிரினங்களைப் பாதிக்கின்றன. இத்தகைய பாதிப்பை ஆடு மாடுகளில் அறிகின்றோம். இங்ஙனமே சந்திரனின் வளர்ச்சியிலும் தேய்விலும் சில நாட்களில் எம் மனத்தில் சில தாக்கங்கள் உண்டாகின்றன. இத் தாக்கங்களிலொன்று மறைபொருளான ஒரு செல்வாக்காகும். அது சிலவேளைகளில் சந்திரனில் இருந்து சுரந்து நம்மீது படுவது. இத்தகைய நிகழ்ச்சி ஏகாதசி நாளில் உண்டாகின்றது. அன்று எங்கள் மனம் தூய்மையடையவும் மிகவும் உகந்த நாளாகும் எனவேதான் ஏகாதசி நாளில் உபவாசமும் தியானமும் எமக்கு ஏற்றனவாக விதிக்கப்பட்டுள்ளன. அதனை நாம் வாய்ப்பாகக் கொள்ளுதல் வேண்டும்.

தர்ம சாஸ்திரங்களும் புராணங்களும் ஏகாதசி விரதத்தைப் போற்றுகின்றன. அதனால் வைஷ்ணவர்களேயன்றிச் சைவர்களும் இவ்விரதத்தை அநுஷ்டித்து வருகின்றனர். 8 தொடக்கம் 80 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் எல்லோரும் இதனை அநுஷ்டித்தல் வேண்டும் என்பது விதி. ஏகாதசியில் உண்பது கெடுதியாகும். ஏகாதசி விரதம் மிக மேலானதென்று நாரத புராணமும், அக்கினி புராணமும் கூறுகின்றன. ஏகாதசி நாளில் முறைப்படி உபவாசம் இருப்பவர்க்கு ஒருநோயும் உண்டாகாது. ஏகாதசி விரதம் சிந்தாமணியைப்போல நாம் விரும்பியதைக் கொடுக்க வல்ல விரதம் என்பர்.

"லங்கணம் பரம ஔஷதம்" என்பது பழமொழி. அதாவது பட்டினி மேலான மருந்து என்பது பொருள். பொதுவாக எங்கும் எல்லோரும் அநுஷ்டிக்கும் ஏகாதசி விரதத்தை முறைப்படி கைக்கொள்ளுபவர்கள் தசமியன்று ஒருபொழுது

உண்டு ஏகாதசியில் சுத்தப் பட்டினியிருந்து துவாதசியில் காலை சூரிய உதயத்துக்கு முன் பாரணை செய்வார்கள். ஏகாதசியில் சிரார்த்தம் வந்தால் மாத்வர்கள் அன்று சாப்பிடக்கூடாது என்று விதி இருப்பதால் சிரார்த்தத்தை அடுத்த தினம் மாற்றி வைப்பது வழக்கம் என்ருல் அவர்கள் ஏகாதசியில் கொண்டுள்ள நம்பிக்கை பெரிதே. பெரும்பாலும் ஒரு வருடத்தில் 24முறை ஏகாதசி நாட்கள் உண்டாகின்றன. ஏகாதசி விரதத்தால் நற்பயன் பெற்றவர்களும் சாபம் நீங்கியவர்களும், துன்பம் நீங்கியவர்களும், நோய் நீங்கியவர்களும் பலர். லலித கந்தர்வன், வியாபாரி ஒருவன், பாண்டவருள் பீமன், குபேரனுடைய தோட்டக்காரன், மஹாஜித், அரிச்சந்திரன், இந்திரசேனன், சோபனன் என்னும் சக்கரவர்த்தி வைகானசன் என்னும் மன்னன், உலும்பகன் என்பான், ருக்குமாங்கதன் முதலானோர் பலவிதமாக நற்பயன் பெற்றுர்கள்.

தேவர்களும், அசுரர்களும் அமிர்தம் பெறுவதற்காக மந்திர மலையை மத்தாகவும், வாசுகிப்பாம்பை கயிருகவும் கொண்டு இருபுறம் நின்று திருப்பாற் கடலை கடைய ஆரம்பித்த நாள் ஏகாதசி என்பர். அத்தருணம் வாசுகியால் வெளிப்பட்ட ஆலகாலமெனும் கொடிய விஷத்தை வெளியே விடலாகாது என்று தாமே உண்டு தமது கண்டத்தில் நிறுத்தி "நீலகண்டரானர்". இது நிகழ்ந்த வேளை ஏகாதசி நாளின் மாலைப்பொழுது. சிவபெருமான் ஆலகால விஷத்தை அடக்கி அமுது கொண்ட பின்பு தேவர்கள் பாற்கடலிலிருந்து சகல செல்வங்களையும் பெற்றுத் தம்முள் பகிர்ந்து அங்கே எழுந்த அமுதத்தையும் உண்டு அழியா வரத்தைப் பெற்றனர்.

அம்பரீஷர் என்னும் சக்கரவர்த்தி அயோத்தியில் இருந்து அரசாண்ட காலத்தில் ஏகாதசி விரதத்தை பக்தி சிரத்தையோடு அநுஷ்டித்து வந்தார். ஏகாதசிக்கு அடுத்த நாள் துவாதசி அன்று பாரணை செய்வதற்கு ஆயத்தம் செய்த போது துர்வாச முனிவர் அவரிடம் வந்தார். துர்வாச முனிவர் கடுந்தவமும், கடும்கோபமும் உள்ளவர். விருந்தாளியாக எழுந்தருளியவரையும் பாரணை செய்ய வேண்டுமென்று அம்பரீஷர் கேட்டுக்கொண்டார். அதற்கிணங்க நீராடச்சென்ற முனிவர் வந்தனைகள் செய்து மீள்வதற்கு நேரமாகி விட்டது. விரத விதியின் வண்ணம் சூரியன் உதிக்கும் முன்னே பாரணை செய்தல் வேண்டும்.

இந்நிலையில் அம்பரீஷர் கலங்கியபோது அந்தணர் சிலர் அவரிடம் துளசி இதழையும் நீரையும் முதலில் உட்கொண்டு பாரணையை முடிக்குமாறு கூறினர். நெடுநேரம் கழித்து வந்த துர்வாச முனிவர் அம்பரீஷரை சபித்தார். அம்பரீஷர் இரந்து வேண்டியும் கோபம் தணியாத முனிவரை என்ன செய்வதென்று தவித்த அவர் மகா விஷ்ணுவைத் தொழுதார். அவரைக் காப்பதற்கு மகா விஷ்ணு தமது சக்கராயுதத்தை நோக்கினர். அடியார்களைக் காப்பதற்கு ஆயத்தமாக

இருக்கும் சக்கராயுதம் முனிவரைப் பின் தொடர்ந்தது. அதனை ஆற்றுத முனிவர் மும்மூர்த்திகளிடம் போனார். அடியார் பக்திநெறியில் தான் பிரதிகூலமாக போகமுடியாது என்று விஷ்ணுவே சொன்னார். ஒன்றும் செய்து கொள்ள முடியாத முனிவர் அம்பரீஷரிடம் சென்று தம்மை மன்னிக்கும்படி கேட்டார். அம்பரீஷர் சக்கராயுதத்தை தொழுது பூஜித்ததும் அது விஷ்ணுவிடம் சேர்ந்தது.

### சித்திரை மாதத்துக் குரு பூசைத் தினங்கள்

| | | |
|---|---|---|
| பரணி | - | சிறுத்தொண்ட நாயனார் |
| ரோகிணி | - | மங்கயற்கரசியார் |
| திருவாதிரை | - | விறன்மிண்ட நாயனார் |
| அத்தம் | - | உமாபதி சிவாச்சாரியார் |
| சித்திரை | - | இசைஞானியார் |
| சுவாதி | - | திருக்குறிப்புத்தொண்ட நாயனார் |
| சதயம் | - | திருநாவுக்கரசநாயனார் |

# வைகாசி மாத நினைவுகள்

**கைகால் நுடங்கியும் கண் பஞ்சடைந்தும் ஈ காகம் கொத்தி**
**மெய்தான் அழுகியும் மாள்வோரைக் கண்டு மிகவும் நொந்தேன்**
**உய்கேனே ஓவென்று உழலுகின்றேன் நீ உளமிரங்கி**
**வைகாசி எல்லாம் வருவாய் மதுரை மனோன்மணியே**

– அகத்தியர்

விசாக நட்சத்திரத்தில் பூரணை கூடிய மாசம் ஆதலால் வைகாசி எனப்பட்டது. முருகப் பெருமானுடைய நட்சத்திரம் விசாக நட்சத்திரம் ஆகையால் முருகப் பெருமான் விசாகன் என்று கூறப்படுகின்றார்.

இது பூட்டீஸ் ஹெர்குலீஸ் என்னும் நட்சத்திர கூட்டங்களுக்கு இடையில், சிறிது தெற்கிலுள்ள அழகான மண்டலம். ஐந்து நட்சத்திரங்கள் சேர்ந்து ஒரு கிண்ணம்போல் இருக்கும். இந்த மண்டலத்தில் முதல் மூன்று கால்கள் துலாத்திலும் கடைசிக்கால் விருச்சிகத்திலுமாக இருக்கின்றன. இந்த நட்சத்திரத்தின் அதிபன் குரு. விசாக நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு குரு திசையே தொடக்க திசையாகும்.

சித்திரையும், வைகாசியும் இளவேனிற்காலமாகும். இளவேனிற்காலமும் விழாக்களுக்கு இயைந்த காலமாகும். வேனில் என்றால் வெய்யிற் காலம் என்று பொருள். ஆனியும் ஆடியும் முதுவேனிற்காலமாகும். இமயத்தலங்களாகிய கேதார், பத்திரி என்ற இரு தலங்களும் ஐப்பசி மாதம் தொடக்கம் பனியினால் மூடப்பட்டு கோயில்களும் பூட்டப்பட்டு இருக்கின்றன. வேனிற்காலத்தில்தான் யாத்திரிகர் செல்லத்தொடங்குவர். அக் காலத்தில் கோயில்கள் திறந்து பூசை தொடங்குவர். இவ் வேனிற்காலத்திலே ஈழத்தில் மட்டுமன்றி தமிழகத்திலும் பல கோயில்கள் விழாக்கள் நடைபெறுகின்றன. காஞ்சியில் வைகாசி நிறைமதியில் நடக்கும் கருட சேவையும், திருச்செந்தூரில் நடக்கும் பெருவிழாவும் முக்கியமானவை. இவ் வைகாசி மாதத்திலே கோடையிலே பெரும்பாலும் வேட்டுவர் விழாக்கொண்டாடுவர். கிராமங்களிலே ஊர்த்தெய்வங்களுக்கு வழிபாடு நிகழும்.

காளி, துர்க்கை, கண்ணகைஅம்மன் போன்ற தெய்வங்களை இக்காலத்தில் வழிபடுவதை இன்றும் கிராமங்களுக்குச் செல்பவர்கள் காணலாம். பழங்கள் மிகச் செழிப்பாகக் கிடைக்கும் காலமும் இதுவே. இக்காலத்திலே தான் கிராம தேவதைகளின் பொங்கல் விழா நடைபெறும்.

தமிழகத்து கிராமக் கோயில்களில் இக் காலத்திலே தான் கூழ் ஊற்றும் விழாவும், கஞ்சியூற்றும் விழாவும் நடைபெறுகின்றன. இக்காலத்திலே தெருக் கூத்தும் நடைபெறுவதைக்காணலாம். கங்கை அம்மன் கூத்து என்ற ஒரு பழைய நாடகத்தை அவர்கள் ஆடி மகிழ்வார்கள். தெருக்கள் தோறும் கூத்தாடிகள் பெண் வேடம் புனைந்தும் வேறு வகை வேடங்கள் ஏற்றும் விளையாடும் காட்சி உளமுருக்கும் காட்சியாகும்.

இந்தக் கூத்தாடிகள் வீடுதோறும் சேகரிக்கும் தானியங்களை மாவாக்கி விசாக தினத்தன்று கூழ் காய்ச்சி ஊற்றுவார்கள். மற்றவர்வாழத் தாம் வாழ்தலே விழாவின் முக்கிய குறிக்கோளாகும். இக்குறிக்கோளை மையமாக வைத்துக் கொண்டே விழாக்கள் கொண்டாடுவர்.

அக்காலத்து ஊர்கள் சோலைகளால் சூழப்பட்டிருக்கும். இக்காலத்தில் மரங்கள் வெட்டப்படுவதனல் சோலைகளுமில்லை. மழை வீழ்ச்சியும் மிகக்குறைவு. இதனல் தான் அரசினர் மரங்களை உண்டாக்கச் செய்வதற்காக வன மகோற்சவம் கொண்டாடுவர். "கோடையில் இளைப்பாறிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர் தருவே, தரும் நிழலே" என்று ராமலிங்கசுவாமிகள் இக்குளிர் மரங்களையும் அவற்றல் பெறும் நிழலையும் தாமே இறைவனுடைய தன்மையாக ஏற்றந்தந்து பாடுகிறுர்.

கோடையில் மகிழ்ச்சி அளிப்பது குளிர் நிழல். அக்குளிர் தரும் சோலைகளுக்கிடையில்தான் கன்னி, கங்கை. காளி முதலிய தெய்வங்களின் கோயில்கள் இருக்கும். முருகன் தங்கியிருக்கும் கோயில்களில் எல்லாம் விசாகத் திருநாள் சிறப்பாக கொண்டாடப்படுகின்றது. விசாக நாளில் திருச்செந்தூர் செந்தில் முருகனுக்குப் பன்னீர் அபிஷேகம் செய்விப்பார்கள். நல்லவர்கள் நாடெங்கும் தண்ணீர்ப்பந்தல்கள் அமைப்பார்கள்.

வளமார்ந்த அரச வாழ்வையும் கண்ணிறைந்த மனைவியையும், மைந்தனையும் விட்டு மக்கள் வாழ்வைத் தன் வாழ்வாக ஏன் பிற உயிர்களின் வாழ்வே தன் வாழ்வாக வாழ்ந்து வழிகாட்டிய அண்ணல் புத்தர் விழா இவ்வேனில் விழாவே யாகும்.

புத்தபெருமான் பிறந்ததும், ஞானம் பெற்றதும், பரிநிர்வாணத்தசை அடைந்ததும் வைகாசி விசாக நட்சத்திரம் ஆகும். பௌத்த உலகத்திலே வைகாசி விசாகம் மிக விஷேடமாக கொண்டாடப்படுகிறது. பௌத்தர்கள் ஒளிவிளக்கேற்றி கொண்டாடும் தினம் இதுவே.

இப்புத்தபெருமானுடைய பொன்நாளை மணிமேகலை சிறக்க எடுத்துக் காட்டுகிறது. மணிபல்லவத் தீவில் எழுந்து நின்ற மணிமேகலையை தேற்றிய தீவதிலகை அவள் வரலாற்றையும் வந்த விதத்தையும், தன் வரலாற்றையும் கூறியதோடு ஆபுத்திரனைப் பற்றியும் அவனது வற்றாத அமுத சுரபியைப் பற்றியும் கூட எடுத்துக் காட்டினாள். காட்டி அந்தப் பாத்திரமும் அமுத சுரபி மணிமேகலையின் கையை வந்தடையும் என்றும் அந்த அடையும் சிறந்த நாள் வைகாசி விசாகம் நாளே என்றும் காட்டினாள். மேலும் அந்தப்புண்ணிய நாளே புத்தபிரானது புனிதநாள் என்றும் போதி ஞானம் பொருந்திய நாளென்றும் காட்டினாள். சீத்தலைச்சாத்தனார் தாம் பாடிய மணிமேகலை என்னும் காவியத்தில்

" இருது இளவேனில் எறி கதிர் இடபத்து
ஒருபதின் மேலும் ஒரு மூன்று சென்ற பின்
மீனத்து இடைநிலை மீனத்து அகவையின்
போதித் தலைவனோடு பொருந்தித் தோன்றும்
ஆபுத்திரன் கை அமுத சுரபி"

என்று கூறுகின்றார். இதில் இளவேனில் காலத்தைக் காட்டி இடபமாகிய வைகாசித் திங்களை காட்டி 13 நட்சத்திரங்களையும் கடந்த இடைப்பட்ட விசாக நட்சத்திரமும் நிறைமதியும் சேர்ந்த அந்த நல்ல நாளிலே அறம் உரைத்த போதித் தலைவனோடு அமுதசுரபியும் பொருந்தித்தோன்றும் எனக்காட்டுகிறார்.

மதுரையிலே பசுவினாலே வளர்க்கப்பட்டவன் என்பதால் ஆபுத்திரன் என்னும் பெயரைப் பெற்றான். சிந்தாதேவியிடமிருந்து அமுதசுரபி என்ற பாத்திரத்தைப் பெற்றான். அமுதசுரபி தினமும் எத்தனை பேருக்காயினும் உணவு சுரக்கும் வல்லமை உடையது. ஒருநாளைக்கு குறைந்தது ஒருவருக்காயினும் உணவு வழங்காமல் சாப்பிடாத நியமத்தை உடையவன் ஆபுத்திரனவான். ஆபுத்திரனுடைய தர்மச் செய்கையினால் இந்திரனுடைய இந்திர பதவிக்கே ஆபத்து வந்து விடும் போல் இருந்தது. மதுரையில் உள்ள எல்லோருடைய வறுமையையும் போக்கினான் இந்திரன். இதனால் ஆபுத்திரனுடைய உதவியை நாடினார் எவரும் இல்லை. உலகில் எங்கு வறியவர்கள் இருக்கிறார்கள் என்பதனை அறிந்து அவர்கள் வறுமையை நீக்கக் கருதி கப்பல் ஏறிப்புறப்பட்டான் ஆபுத்திரன். அவன் சென்ற கப்பல் மணிபல்லவத்தீவை அடைந்து இரண்டொருநாள் தங்கி நின்றது. கப்பலில் உள்ளார் ஊர்வளம் பார்க்கச் சென்றிருந்தனர். ஆபுத்திரனும் எல்லோரோடும் சென்றவன் கப்பலுக்குத் திரும்புவதற்கு காலம் தாழ்த்தி விட்டான். கப்பலில் உள்ளோர் ஆபுத்திரனைக் கவனியாது புறப்பட்டு விட்டனர். ஆபுத்திரன் வந்து பார்த்தான். கப்பல் புறப்பட்டு விட்டதை அறிந்தான். தீவு முழுவதும் சுற்றிப் பார்த்தான் சன நடமாட்டமே

இருக்கவில்லை. பொய்கை ஒன்றைக்கண்டு நீர் அருந்தி இருந்தான். நாட்கள் சில கழிந்தன. இறப்பதைத் தவிர வேறு வழியில்லை என்பதனை உணர்ந்து அமுத சுரபியை குளத்தில் எறிந்து உயிர் விட்டான்.

தன்னலங்கருதாத ஒருவரை இந்த அமுதசுரபி அடைய வேண்டும் என்று வேண்டிக்கொண்டான். ஆண்டுதோறும் வைகாசி விசாக நன்நாளிலே அமுதசுரபி குளத்திலே மிதந்து வரும். தகுந்தவர்கள் இல்லாமையினலே மறுபடியும் குளத்திலே மறைந்து விடும். தனது முற்பிறப்பு உணர வந்த மணிமேகலை மணி பல்லவத்தீவிலே வைகாசி விசாக நன்ளிலே அமுத சுரபியைப்பெற்று வறியோரின் இன்னலைத் தீர்த்தாள் என்பது மணிமேகலைக் காவியம் கூறும் செய்தி.

வைகாசி விசாகத் திருவிழாவை திருச்செந்தூரிலே மிகப் பிரமாதமாகக் கொண்டாடுவார்கள். கடற்கரைக்கும், மணற்பரப்பிற்கும், பால்போல் வீசும் நிலாவெளிக்கும் இருக்கும் அழகு எத்தனை நாள் அனுபவித்தாலும் தெவிட்டாது.

## இடப விரதம்

வைகாசி மாத வளர்பிறை அஷ்டமியில் அநுஷ்டிப்பது இடப வாகனருடராகிய சிவனுக்குரியது. உணவொன்றும் அருந்தாது இருப்பதும் இயலாவிட்டால் பகல் நீங்கிய பின் சுவாமி தரிசனம் செய்து கொண்டு இரவில் தீர்த்தம், நீர், பால் இளநீர் முதலிய ஒருவகையான நீராகாரத்தை உட்கொள்ளலாம்.

## சுக்கிர வாரம்

வைகாசி மாத வளர்பிறை வெள்ளி தொடக்கம் ஒவ்வொரு வெள்ளிக் - கிழமையும் அநுஷ்டிப்பது. பூரணஉபவாசம் உத்தமம். இல்லாவிட்டால் பாலாவது, பழமாவது நலம். விரத தினத்தன்று காலையில் எழுந்து காலைக் கடன்களை ஒழுங்காக முடித்துக் கொள்ளல் வேண்டும். பின் ஸ்நானம் செய்து, சுத்த வஸ்திரம் தரித்துக் கொண்டு தீட்சை பெற்றோர் அநுஷ்டானம் செய்து கொண்டு, ஆலய தரிசனம் செய்தல் வேண்டும். அன்று முழுவதும் திருமுறை ஓதுதல், புராணம் படித்தல், கேட்டல், சிவ தொண்டுகள் செய்தல், சமய பிரசங்கம் கேட்டல் முதலிய நற்காரியங்களாலே சிவப்பொழுதாய் போக்க வேண்டும். தாம்பூலம் அருந்துதல், சுருட்டுப்பிடித்தல் ஆகாது. விரதங்களை சங்கற்பித்துக் கொண்டு, ஆரம்பிக்க வேண்டும். குறித்த காலம் அளவும் கைக்கொள்ளல் நல்லது. இது விநாயகரைக் குறித்துச் செய்யும் வெள்ளிக்கிழமை விரதமாகும்.

# வைசாக ஸ்நானம்

ரிஷபரபி விஷ்ணுபதி புண்ணியகாலத்தில் தா்ப்பணம், ஸ்நானதானம் செய்ய வேண்டும். இதை சாந்த்ரமான ரீதியில் சித்திரை மாத அமாவாசைக்கு அடுத்த நாள் ஆரம்பித்து வைகாசி அமாவாசையுடன் முடிப்பவா் சிலா். வைகாசி மாத முதல் நாள் ஆரம்பித்து 30 நாள் செய்பவா் சிலா். வைகாசி மஹாத்மியம் என்பது ஸ்காந்தத்தில் 25 அத்தியாயம் வா்ணிக்கப்படுகிறது. லட்சுமியுடன் ஸ்ரீ நாராயணன் காலை எட்டு நாழிகை வரையில் சகல தீா்த்தங்களிலும் வந்திருப்பதாகவும் அப்போது ஸ்நானம் செய்வோருக்கு சகல பாக்கியங்களைத் தருவதாகவும் பல கதைகளுடன் கூறப்படுகின்றது. பெயரில்லாத தடாகங்களுக்கு விஷ்ணு தீா்த்தம் எனக்கூறி சங்கல்பம் செய்து கடைசி 3 நாளாவது வைசாக ஸ்நானம் செய்ய வேண்டும்.

**வைசாக தானம்**: புதிய வஸ்த்திரத்தில் தத்யோதநத்தைக்கட்டி ஜல பாத்திரத்துடன் 30நாளும் தானம் செய்ய வேண்டும். விசிறி, பானகம், நீா்மோா், பழங்கள், வஸ்திரங்கள், குடை, செருப்பு, பசு, பூமி, ஸ்வா்ணம் இம்மாதம் தானம் செய்ய வேண்டும். இச்சமயம் அதிக பலனைத்தரும் வில்வம் துளசி இவைகளுக்கு நீா் பாய்ச்சுவது, பசுவின் தினவைத்தீா்ப்பது ஆகியவை பல ஜன்ம பாவங்களை நீக்கும்.

**தசஹரா**: சுக்கில தசமியில் இவ் விரதமிருப்பவரது பத்து வகையான பாவங்களும் அகலும். ஆனல் இது இப்போது நமது அநுஷ்டானத்தில் இல்லை.

# நரஸிம்ம ஜெயந்தி விரதம்

சுக்கில சதுா்த்தசியில் ஹிரண்யனை சம்ஹாிக்க சாயங்காலத்தில் விஷ்ணு நரனகவும் சிம்ஹமாகவும் தோன்றினா். அன்று உபவாசமிருந்து மாலையில் பூசை செய்தால் விரைவில் பகவத் பிரசாதத்தைப் பெறலாம். இதை அனுஷ்டிப்பவா் மிகச் சிலரே. அன்று பானக பூஜை செய்வது வழக்கம். விசேடமுமாகும்.

பிரகலாதனுக்கு நரசிம்மனே "அவந்தி தேசத்தில் நீ பூா்வ பிறவியில் சுசா்மாவின் கடைசிப் புத்திரனகப் பிறந்தாய். பல பாவங்களைச் செய்து வேசியுடன் வாழ்ந்தாய். ஆனல் உங்களுக்குள் ஓயாமல் சதா சண்டை ஏற்பட்டது. நரசிம்மஜெயந்தி விரதம் கலகத்தை அகற்றுமெனக் கேட்டு இருவரும் இதைச் செய்தீா்கள். அதனல் தாசியும் சொா்க்கம் சென்றள் நீ இராட்சத குலத்திற் பிறந்தாய். ஆயினும் விரத புண்ணியத்தால் பக்தன் ஆனய்" என்றா்.

மிதுன ரவி இது ஷடசீதி எனப்படும். மாத சங்கிரமண புண்ணியகாலம். ஸ்நான தான பித்ரு தாப்பணம் செய்யவேண்டும். இம்மாதத்தில் நித்தியமான சதுர்த்தி, ஷஷ்டி, ஏகாதசி, பிரதோஷம், சிவராத்திரி இவைகளைத் தவிர விஷேடமானவை இல்லை.

### வைகாசி மாத திருத்தொண்டர் திருநாள்

| | | |
|---|---|---|
| பரணி | - | கழற்சிங்க நாயனுர் |
| பூசம் | - | நமிநந்தி அடிகள் நாயனுர் |
| பூசம் | - | சேக்கிழார் நாயனுர் |
| ஆயிலியம் | - | சோமாசிமாற நாயனுர் |
| மூலம் | - | திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் |
| மூலம் | - | முருக நாயனுர் |
| மூலம் | - | திருநீலநக்க நாயனுர் |
| மூலம் | - | திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனுர் |

# ஆனி மாத நினைவுகள்

ஊனில் உளத்தில் உணர்வில் உயிரில் உயிர்க்குயிராம்
வானில் மொழியில் கலந்து நின்றலும் மலர்க்கொடியே
ஞானிகள் தேடும் பரஞ்சுடரே உன்னைநான் பணிந்தேன்
ஆனி மாதத்தில் அருள் புரிவாய் ஜெகதாம்பிகையே.

- அகத்தியர்

## ஆனி உத்தரம்

ஆனிமாதம் முதுவேனிற்காலத்தில் உக்கிரமான காலமாகும். இந்தியாவில் இந்தக் காலத்தில் பாடசாலைகள் கோடைவிடுமுறைக்கென இரண்டு மாத விடுமுறை கொடுப்பார்கள். பங்குனி உத்தரம் சிவபெருமானுடைய திருமணத்தினல் விசேடமுற்றது போல, ஆனி உத்தரம் சிதம்பரம் நடராஜர் தரிசனத்தினல் விசேடமுற்றது.

உத்தரமென்பது சிம்ம கன்னி ராசிகளுள் உள்ள நட்சத்திரங்கள் உள்ள மண்டலம். இவ்விரண்டு நட்சத்திரங்களும் பூரத்திலுள்ள இரண்டு நட்சத்திரங்களும் சேர்ந்து கட்டில் கால்போல் அமையும்.

## குருபூர்ணிமை

நாம் கொண்டாடும் பண்டிகைகளில் குருவுக்காகவும் ஒன்றை நமது முன்னேர்கள் ஒதுக்கியுள்ளனர். அதுதான் குருபூர்ணிமை. ஆஷாட (ஆனி அல்லது ஆடி) மாதத்தில் வரும் இப்பூர்ணிமை வியாசபூர்ணிமை என்றும் கூறுவதுண்டு. வேதாந்த சூத்திரங்கள் இயற்றிய வியாச பகவானைக் குறித்து அன்று பூசை செய்யப்படுகின்றது. நம் நாட்டில் அனேகமாக இப்பூசையைச் சந்நியாசிகளே செய்துவருகின்றார்கள். வடஇந்தியாவில் ஒவ்வொருவரும் தங்கள் வித்தியாகுருவை வணங்கி அவர்களுக்குப் பாதகாணிக்கை செலுத்துகிறார்கள்.

குருபூர்ணிமை நாள் முதற்கொண்டுதான் சாதுர்மாதம் ஆரம்பமாகின்றது. இது முதல் மழைக்காலம் ஆரம்பமாவதால் சந்நியாசிகள் இந்நாலு மாதமும் ஒரேயிடத்தில் தங்கியிருக்க வேண்டும் என்பது நியதி. சந்நியாசிகள் கால் நடையாக யாத்திரை செய்யும் போது பூச்சி முதலிய ஜந்துக்கள் அவர்கள் காலில் பட்டு மரணமடையக்கூடும் என்பதற்காகவும். எவ்வித ஜீவஹிம்சை

யையும் தவிர்க்க நான்கு மாதங்களையும் நான்கு பட்சங்களாகக் கொண்டு சந்நியாசிகள் ஒரே ஊரில் ஆஷா பூர்ணிமையிலிருந்து தங்கி வருவது வழக்கமாக இருந்து வருகின்றது.

அன்னை தந்தை இவர்கள் முதல் தெய்வங்களாக மதிக்கப்பட வேண்டும் என்று நிர்ணயித்த நமது பெரியோர்கள், மூன்ருவதாகக் குருவையும் கடவுளாக வணங்கவேண்டும் என்று ஏற்படுத்தியிருக்கிருர்கள். அன்பை ஊட்டுபவள் தாய். உடலைப் போஷிப்பவன் தந்தை. அறிவை ஊட்டுபவர் குரு.

**தெளிவு குருவின் திருமேனி காண்டல்**
**தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்**
**தெளிவு குருவின் திருநாமம் செப்பல்**
**தெளிவு குருஉரு சிந்தித்தல் தானே.**

என்பது திருமூலர் வாக்கு. சாதுர்மாத விரதம் கிரஹஸ்தர்கள், சந்நியாசிகள் எல்லோரும் அனுஷ்டிக்க வேண்டிய விரதமாகும். இந்த நான்கு மாதங்களும் பகவான் யோக நித்திரை கொள்ளும் காலமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நான்கு மாதமுடிவில் அவர் விழித்துக் கொள்ளுகிருர். இதனல் இவ்விரதம் ஆரம்பிக்கும் தினமான ஏகாதசி "சயன ஏகாதசி" என்றும் முடிவடையும் துவாதசி "பிரபோத துவாதசி" என்றும் கூறப்படுகிறது.

சாதுர்மாதத்தில் முதல்மாதம் காய்கறிகளையும், இரண்டாவது மாதத்தில் தயிரையும், மூன்ருவது மாதம் பாலையும், நான்காவது மாதம் இருபாகங்கள் உள்ளவையான பருப்பு வகைகளையும் விலக்க வேண்டும்.

எந்த மந்திரங்களையும் ஏற்கனவே நமக்குத் தெரிந்திருந்தாற்கூட குரு ஒருவரிடமிருந்து உபதேசம் பெற்று, அம்மந்திரத்தை ஜெபிப்பதில்தான் பலனிருக்கின்றது. நித்தியானந்த ஸ்வரூப மோட்சத்திற்கு நேர் சாதனம் ஆத்ம ஞானம். அதாவது தன் உண்மைச் சொருபத்தை அறிதல். ஒரு குருவைச் சரணமடைந்து அவரது அனுக்கிரகத்தைப் பெற்றவனே தனது உண்மையை அறிகிருன். எவனெருவன் குருவினிடம் அத்தியந்த பக்தி செலுத்துகிருனே, அவனுக்கு குரு உபதேசிக்காத விடயங்கள்கூட நன்கு விளங்கிவிடுகின்றன. குருவிற்கு எல்லாக் காரியங்களையும் செய்து கொடுத்து அவரிடமிருந்து வித்தையைக் கிரகிக்க வேண்டும். இதைத்தான் குருகுல வாசமென்று சொல்வர். ஆதிசங்கரர் சிறுவயதிலேயே சகலமும் கற்றறிந்தார். இருந்தும் தனக்கென ஒரு குருவை நாடி நர்மதா தீரம் சென்று பகவத்பாதரெனும் குருவிடம் சிஷ்யனுக அமர்ந்து வித்தைகளைக் கற்றுர்.

குருவை வணங்குவதிலும் மூன்று தலைமுறைகளில் உள்ளவர்களையும் சேர்த்து வணங்கவேண்டுமென்பது ஒரு நியதி. குரு, பரமகுரு, பரமேஷ்டிகுரு என்று இவர்கள் அழைக்கப்படுவர். குரு பரம்பரையை அறிந்துகொண்டு வழிபட்டால் அவர்களுடைய அனுக்கிரகம் கிடைக்கும்.

சிவபெருமானே உலக குரு. தக்ஷிணாமூர்த்தியாக சின்முத்திரை காட்டும் சிலா ரூபத்தை சிவன் கோவில்களில் தெற்கு நோக்கியிருக்க கண்டிருக்கலாம். தக்ஷிணாமூர்த்தியைப் பார்த்தால் பால்ய வயதினராகக் காணப்படுகின்றார். ஆனால் இவர் சிஷ்யர்கள் நான்கு பேர்களும் வயதில் முதிர்ந்தவர்கள். குரு வயதானவராகவும் சிஷ்யர்கள் வாலிபர்களாகவுமே இருப்பதுண்டு. குரு பேசாமலேயே சின்முத்திரையைக் காட்டுவதன் மூலம் சிஷ்யர்களின் சகல சந்தேகங்களையும் போக்கிக் கொண்டிருக்கிறார்.

இந்தச் சின்முத்திரையால் எல்லா வேதங்களின் அர்த்தங்களும் தெரிவிக்கப்படுகின்றது. பரம்பொருளும் எமது அறிவும் ஒரே வஸ்து என்பதை அவர் சின்முத்திரையால் தெரிவிக்கின்றார். திருப்பெருந்துறையில் மாணிக்கவாசகருக்கு குருவாக விளங்கியவர் சிவபெருமான். அவரே சுவாமி மலையில் தன் குமாரனிடம் சிஷ்யனாக இருந்து உபதேசம் பெறுகின்றார்.

எல்லாச் சிவன் கோவில்களிலும் தியானத்திலுள்ள ஞான தக்ஷிணா மூர்த்தியை எல்லோரும் பார்த்திருக்கலாம். மேதா தக்ஷிணாமூர்த்திக்கென்றே மாயவரம் வள்ளலார் கோவிலில் தனிச் சந்நிதி உண்டு. சென்னைக்கருகிலுள்ள திரிசூலம் சென்னையிலுள்ள திருவட்டீஸ்வரன் பேட்டைக் கோவில்களில் தக்ஷிணா மூர்த்தியின் ரூபம் வேறுபட்டிருப்பதைக் காணலாம்.

பழனிக்கு வடக்கே மூன்று மைல் தூரத்தில் பெரியாவுடையார் கோயில் இருக்கிறது. இங்குள்ள தக்ஷிணாமூர்த்தி மிகவும் அழகு வாய்ந்தவர். வைத்த கண்ணை எடுக்காமல் பார்த்துக் கொண்டே இருக்கச் சொல்லும். மற்றும் யோக தக்ஷிணாமூர்த்தி, வீணா தக்ஷிணாமூர்த்தி உருவங்கள் அனேகமாக செப்பு விக்கிரகங்களாகவே இருக்கின்றன. எல்லாவித தக்ஷிணாமூர்த்தியையும் பார்க்க ஆசைப்படுபவர்கள் காஞ்சியிலுள்ள கைலாசநாதர் ஆலயத்திற்கே செல்லவேண்டும். மாமல்லபுரத்திலுள்ள கணேச ரதத்திலும், வெளிச் சுவரிலும் வீணாதக்ஷிணாமூர்த்தியைக் காணலாம். வியாசருடைய சிற்ப உருவத்தைப் பார்த்தால் அவர் ஒரு விரலைக் காட்டிக் கொண்டிருப்பதைக் காணலாம். காஞ்சீபுரத்திலுள்ள வரதராஜர் கோவிலில் தாயார் சந்நிதியில் வியாச பகவான் ஜடாமகுடத்துடன் இருக்கிறார். வியாசர் ஒரு விரலைக் காட்டுவதன் மூலம் இரண்டற்ற ஒரு பொருளைக் காட்டுகிறார். மத்வர் இரண்டு விரல்களைக் காட்டிக்

கொண்டிருப்பது துவைத தத்துவத்தைச் சுட்டிக் காட்டவே. தக்ஷிணமூர்த்தி இரண்டும் ஒன்றுதான் என்பதை இருவிரல்களை ஒன்ருகச் சேர்த்து சின்முத்திரையாகக் காட்டிக் கொண்டிருக்கிருர்.

கட்டைவிரல் சிவம். அதனுடைய உருவமே சிவலிங்க உருவமாக அமைந்தது. அவ்விரலில்லாவிட்டால் மற்றைய நான்கு விரல்களிருந்தும் எவ்வித பயனுமில்லை. அதுபோல் சிவபெருமானில்லாவிட்டால் உலகில் எவ்வித கருமமும் நடைபெறமுடியாது என்ற தத்துவத்தை இக்கட்டை விரல் உணர்த்திக் கொண்டிருக்கின்றது.

ஆட்காட்டி விரல் உயிர். அதனுடன் சேர்ந்திருக்கும் மற்றைய மூன்று விரல்களும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று மலங்களைக் குறிக்கும். உயிராகிய ஆட்காட்டி விரலோடு மற்றைய மூன்று விரல்களும் ஒன்று சேர்ந்திருப்பது போல உயிரோடு மூன்று மலங்களும் அநாதி தொட்டே சேர்ந்துள்ளன என்பது பொருள். ஆட்காட்டி விரல் வளைந்துவந்து கட்டைவிரலின் அடியில் தொட்டுக் கொண்டிருப்பதே சின்முத்திரை. அதாவது உயிர் மும்மலங்களையும் உதறியெறிந்து இறைவனுடைய பாதார விந்தங்களைச் சரணடைய வேண்டுமென்பதே சின்முத்திரையின்தத்துவம். இத்தத்துவத்தையே சிவபெருமானை தக்ஷிணமூர்த்தி ஜனகர் முதலான நால்வருக்கும் சின்முத்திரை மூலம் உரைக்காமல் உணர்த்தியருளினர்.

ஜனகர் முதலான நால்வரும் வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள், 64 கலைஞானங்கள் எல்லாமே நன்கு கற்றவர்கள். அவர்களை விடக் கற்றவர்கள் உலகினில் வேறு யாருமே இல்லை. அப்படிப்பட்டவர்களுக்குச் சந்தேகம் வந்தால் யாரால் தீர்க்க முடியும்? சிவபெருமான் ஒருவரால்தான் தீர்க்க முடியும். நாம் இவ்வளவு கற்றுள்ளோமே. இதன் பயன் என்ன? என்பது தான் அவர்களுக்கு ஏற்பட்ட சந்தேகம். நால்வரும் சேர்ந்து சிவபெருமானிடம் சென்றனர். சிவபெருமான் கல்லால விருட்சத்தின் கீழ் சின்முத்திரை பிடித்தவராக தெற்குப்பார்த்த முகத்தோடு வீற்றிருந்து அருளினர். ஆனபடியினுல்தான் தக்ஷிணமூர்த்தி என்று பெயர் பெற்ருர். தெட்சணம் என்ருல் தெற்கு என்பது பொருள்.

சீடர்கள் மிக விவேகிகள். தக்ஷிணமூர்த்தி வாய் திறவாமல் மௌனமாக இருந்து உரைக்காமல் உணர்த்தியருளினர். அவர்களும் அதனைப் புரிந்து கொண்டார்கள். "பண்டு நால்வருக்கறம் உரைத்தருளி" என்பது தேவாரம்.

கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா
றங்கமுதற் கற்ற கேள்வி
வல்லார்க ளுல்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமா யல்லதுமா யிருந்ததனை
யிருந்தபடி யிருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல்
நினைந்துபவத் தொடகை வெல்வாம்"

என்பது திருவிளையாடற் புராணம்

கிருஷ்ண பரமாத்மா இரு விடயங்களை நிறைவேற்ற இவ்வுலகில் திரு அவதாரஞ் செய்தார். ஒன்று துஷ்டநிக்கிரக சிஷ்ட பரிபாலனஞ் செய்தல். அடுத்தது கலியுகத்து மக்களுக்குப் பயன்படும்படியான கீதா உபதேசம் செய்தல். கண்ணன் அர்ச்சுனனுடைய பக்குவ நிலையறிந்தே போர்க்களத்தில் உபதேசம் செய்தார்.

கலியுகத்தில் வாழும் மக்களை நினைத்தே கீதை அர்ச்சுனனை முன்னிட்டு உபதேசிக்கப்பட்டது. "நான் ரிஷிகளில் வியாச மகரிஷியாக இருக்கிறேன்" என்பது கண்ணன் கீதையில் கூறிய செய்தி. ஆகவே வியாச பகவானுக்குச் செய்யும் பூஜை கண்ணனுக்குச் செய்ததாகின்றது.

குருபூர்ணிமை காமகோடி மடத்தில் மிக முக்கியமானதாகக் கருதப்படு கின்றது. இப்பூஜைக்கென்றே தனி மண்டபம் நிர்மாணிக்கப்பட்டு, அதில் அக்ஷதை பரப்பிய பீடத்தில் கிருஷ்ண விக்கிரகத்தை பிரதிஷ்டை செய்து அதைச் சுற்றிலும் தேவதைகளையும், ரிஷிகளையும், குரு பரம்பரையில் வந்த ஆசாரியர்களையும் ருத்திராட்சங்களிலோ, எலுமிச்சம்பழங்களிலோ ஆவாகனம் செய்து அவர்கள் யாவருக்கும் தனித்தனியே பூஜை நடைபெறும்.

குருபூர்ணிமையில் முக்கிய பூஜை வியாசரை உத்தேசித்தே செய்யப்படு கின்றது. துவாபரயுகத்தின் முடிவில், கலியுக ஆரம்பத்தில் சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன் வியாச மகரிஷி வேதத்தை நான்காக வகுத்தார். உத்தர மீமாம்சை, பதினெண் புராணங்கள், பாரதம் முதலியவைகளைச் செய்தவர் அவரே.

வேதம் முழுவதையும் அத்யாயனம் செய்வதென்பது முடியாத காரியம். ஒரு மனிதன் எவ்வளவு பாகத்தை அத்யாயனம் செய்து சிரேயஸ்ஸை உண்டாக்கிக்கொள்ள முடியுமோ அவ்வளவையும் ஒரு பிரிவாகப் பிரித்து வைத்தார் வியாசர். இம்மாதிரி 1180 பிரிவாக அவர் வேதத்தை வகுத்தார். அவைகளில் இப்போது எட்டுத்தான் இருப்பதாகத் தெரிகிறது.

**ஹரிஸயந ஏகாதசி:** பகவான் படுத்துக் கொள்ளும் ஏகாதசி இது. ஆவணி 25 பகவான் படுக்கையில் புரளுவது பரிவர்த்தன ஏகாதசி. ஐப்பசி 23 எழுந்திருக்கும் நாள் வ்யுந்தாந அல்லது ப்ரபோதினி ஏகாதசி எனப்படும். எல்லா ஏகாதசிகளும் புண்யத்தைத் தருவது என்றுலும் பகவான் படுப்பது, புரளுவது, எழுந்திருப்பது என்ற பகவான் ஞாபகத்துடன் அனுஷ்டிப்பது அதிக புண்ணியம் தரும்.

## சாதுர்மாஸ்ய விரதம்

| | | |
|---|---|---|
| ஆனி 30ம் திகதி | _ | சாதுர்மாஸ்ய சாகவிரதம் ஆரம்பம் |
| ஆடி 29ம் திகதி | _ | சாதுர்மாஸ்ய ததி விரதம் |
| ஆவணி 26ம் திகதி | _ | சாதுர்மாஸ்ய க்ஷீர விரதம் |
| புரட்டாதி 24ம் திகதி | _ | சாதுர்மாஸ்ய த்விதள விரதம் |

ஆனி மாதம் கறிகாய் கனிகளையும் சாப்பிடக்கூடாது. ஒருமாதம் தயிரையும், ஒருமாதம் பாலையும், ஒருமாதம் பருப்புவகைகளையும் உண்ணலாகாது. இவ்விரதத்தை ஒரு சில சந்நியாசிகளே அனுஷ்டிக்கின்றனர்.

## சாவித்திரி விரதம்

அசுவபதி மஹாராஜன் சாவித்திரி தேவியை ஆராதிக்க தேவி தன் அம்சத்தால் ஒரு பெண்ணைத் தந்தாள். அதற்கு சாவித்திரி என்று பெயர் வைத்தாள். அவள் பிறந்த தினம் பௌர்ணமி. "சத்யவான் ஒரு ஏழை. அற்ப ஆயுள் உள்ளவன்" என்று நாரதர் கூறியும் தன் மனதால் வரித்த சத்தியவானை மணந்தாள். அவனுக்கு மரணம் சமீபித்திருப்பதை அறிந்து, சாவித்திரி விரதம் செய்து யமனிடமிருந்து இழந்த தன் பதியையும், மாமானர் மாமியார் கண்களையும் ராஜ்ஜியத்தையும், பெற்றேருக்கு ஒரு புத்திர பாக்கியத்தையும் பெற்றுள். ஆதலால் அவ்விரதம் செய்வோர் சௌமாங்கல்யம், புத்திர பௌத்திர பாக்கியம், செல்வம் முதலியவைகளைப் பெறுவர்.

### ஆனி மாதத்தில் திருத்தொண்டர் திருநாள்

| | | |
|---|---|---|
| மகம் | - | மாணிக்கவாசக சுவாமிகள் |
| பூரம் | - | அமர்நீதி நாயனர் |
| ரேவதி | - | கலிக்காம நாயனர் |

# ஆடி மாத நினைவுகள்

வாடிவருந்தும் மனம் தண்மையாக மழைபொழிவாய்
கோடி மார்த்தாண்ட சமசோதி வீசும் குளிர் நிலவே
பாடி வந்தேன் இன்னும் பாடுகின்றேன் எங்கள் பாக்கியத்தால்
ஆடியில் ஆடி வருவாய் சிவன் கொஞ்சும் அஞ்சுகமே.

- அகத்தியர்

ஆடிமாதம் மங்களகரமான காரியங்களுக்கு ஒதுக்கப்பட்ட மாதமாகும். கல்யாணம் செய்து மாப்பிள்ளை வீட்டிலிருந்த பெண்ணை பெண் வீட்டார் ஆடி மாதம் முழுவதும் தம் வீட்டிற்கு அழைத்து வைத்திருந்து, ஆவணியில் திருப்பி அனுப்புகின்ற வழக்கம் சில சமூகத்தவரிடையே இன்றும் உண்டு. "ஆடிப் பிறப்பிற்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே" என்று குழந்தைகள் ஆடிப்பிறப்பை எதிர் நோக்கிக் கொண்டிருப்பார்கள். ஆடிப்பிறப்பில் அன்றைக்கு "கூடிப்பனங்கட்டிக் கூழும் குடிக்கலாம் கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே" என்று குழந்தைகள் பாடுவதன்படி ஆடிப்பிறப்பில் அன்றைக்கு இனிய கூழும், கொழுக்கட்டையும் முக்கிய உணவாகும். அன்றைய தினம் பிதிருக்கள் வருவதாகவும், அவர்களுக்கு விருப்பமான உணவு படைத்து, அவர்களை வரவேற்றலும் பலவீடுகளில் இன்றும் நடைபெற்று வருகின்றது.

# ஆடிப்பெருக்கு

ஆடித்திங்கள் முதன்முதலாக ஆறுகளில் நீர் பெருகிவருவதைக் களிப்புடன் வரவேற்று இந்துக்கள் கொண்டாடும் விழா. ஆடி 18ம் நாளில் கொண்டாடப்பபடுவதால், இதை ஆடி 18 அல்லது 18ம் பெருக்கு என்று கூறுவர். அன்று இனிய உணவுகள் தயாரித்துக் கொண்டு ஆண், பெண், குழந்தைகள் அனைவரும் சென்று, நீரிலும் கரையிலுமாக நின்றுகொண்டு உண்டுகளிப்பர். இது பழந்தமிழ் இலக்கியங்கள் கூறும் "புனலாடல்" என்ற விழாவுடனும், பண்டைய சமஸ்கிருத இலக்கியங்கள் கூறும் புதுநீர் வரவேற்கை என்ற விழாவுடனும் தொடர்புடையது என்று கூறலாம். வட இந்தியர்கள் கங்கையைத் தாய் என்று அழைப்பர். "கங்கா மாயிக்கு ஜே" என்று கூறியே எல்லாக் கருமங்களையும் ஆரம்பிப்பர். மாயி என்ற சொல்லுக்கு தாய் என்று பொருள்.

# ஆடிச் சுவாதி

சுவாதி என்பது இருபத்தேழினுள் மிகவும் சிறப்புடையதொன்றுகும். சுவாதி நாளில் பெய்யும் மழைத்துளி கடலில் சிப்பியின் வாயில் விழுந்தால் முத்தாக வடிவெடுக்கும் என்று பெரியோர்கள் கூறுவர். இத்தகைய சிறப்பு வாய்ந்த சுவாதி நட்சத்திரத்தில்தான் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமது நண்பராகிய சேரமான் பெருமானுடன் திருக்கையிலை சென்று சேர்ந்தனர் என்பது வரலாறு.

"சித்திரைச் சதயம் அப்பர்; சிறந்த வைகாசி மூலம்
அத்தரைப் பணி சம்பந்தர்; ஆனி மாமகத்திலந்த
முத்தமிழ் வாதவூரர் முதியநல்லாடிதன்னில்
சுத்தமாம் சுவாதி நாளில் சுந்தரர் கைலை சேர்ந்தார்."

என்பது உமாபதி சிவம் அருளிய பாடல்.

சுவாதி நட்சத்திரம் 15வது நட்சத்திரம். சூரியனைப் போல் 18000 மடங்கு பரிமாணமுடையது. ஆரஞ்சு நிறம் வாய்ந்தது. மிகவும் பிரகாசமுடையது. ஆதலில் இதனைச் "சோதி" என்றும் வழங்குவர். அதன் சிறப்பும் பெருமையையும் உணர்த்துவதற்கே "சுத்தமாம் சுவாதிநாள்" என்று உமாபதி சிவம் இதனைப் புகழ்ந்து போற்றிக் குறிப்பிட்டார். சோதிமயமான சுவாதி நாளில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சோதிமயமான திருக்கைலைக்கு சோதி வடிவம் பெற்றுச் சென்றமை பெரிதும் பொருத்தமுடையதாகத் திகழ்கின்றது.

சுவாதி நட்சத்திரம் செக்கனுக்கு 84 மைல்கள் வீதம் விரைகிறது. இது பூமியிலிருந்து 50 ஒளியாண்டு தூரத்தில் இருக்கிறது. இவ்வளவு தொலைவில் இருப்பதால், இது ஆண்டுக்கு 2 அங்குலம் நகர்வதாகக் கண்ணுக்குத் தோன்றுகிறது. சந்திரன் இந்த நட்சத்திரத்தினருகே இருக்கும் பொழுது கடலில் முத்துச் சிப்பியில் விழும் மழைத்துளி முத்தாக மாறுகிறது என்பது கவி மரபு.

திருவாங்கூர் அரசர்களில் சுவாதித் திருநாள் மஹாராஜா என்றொருவர் இருந்திருக்கிறர். சுவாதி நட்சத்திரத்தில் பிறந்தமையால் இப்பெயர் பெற்றார். இசையிலும், சம்ஸ்கிருதத்திலும் வேறுபல மொழிகளிலும் சிறந்த தேர்ச்சி பெற்றவர்.

சேரமான்பெருமாள் நாயனரும், பரவையாரும், சங்கிலியாரும் இதே சுவாதித்திருநாளில் திருக்கைலை சேர்ந்து சிவபெருமானை வணங்கி இன்புற்றிருந்தனர்.

# ஆடிக் கிருத்திகை

கார்த்திகை நட்சத்திரத்திற்குக் கிருத்திகை என்றும் பெயர் உண்டு. அச்சுவினி முதலாக எண்ணப்படும் நட்சத்திரங்களில் இது மூன்றுவதாகும். இந்தக் கூட்டத்தில் ஏழு பிரகாசமான நட்சத்திரங்கள் உள்ளன. அவை துடுப்புப்போல இருப்பதாகவும் சப்த ரிஷி மண்டலம் போலிருப்பதாகவும் கூறுவர். ஒரியன் மண்டலத்திற்கு சற்றே வடமேற்கில் அமையும் இந்த நட்சத்திரக் கூட்டத்தில் ஆயிரக்கணக்கான நட்சத்திரங்கள் இருப்பினும் சாதாரணமாகக் கண்ணுக்கு ஆறும் கூர்மையான கண்ணுக்கு ஏழும் புலனகும். இந்த கூட்டத்தில் மிகவும் பிரகாசமாக உள்ளது "ஆல்சையனி" என்பதாகும். அது நான்கு நட்சத்திரங்கள் சேர்ந்தது. கிருத்திகை கூட்டத்தில் பல நெபுலாக்களும் உள்ளன.

சாதாரணமாகக் கண்ணுக்குத் தெரியும் ஆறு நட்சத்திரங்களைப்பற்றி இந்து புராணக்கதை ஒன்று உண்டு. முருகவேளே சரவணப்பொய்கையில் பாலூட்டி வளர்த்தவர்களாகிய ரிஷி பத்தினிகளே அவர்கள். அதாவது வஷிட்டரைத் தவிர்ந்த மற்ற அறுவர்கள் பத்தினிகளே இந்த நட்சத்திரங்கள் என்பது அந்தக் கதை. கிரேக்கப் புராணங்களில் பலவிதமாகக் கதைகள் கூறப்பட்டுள்ளன. ஆட்லஸ் என்பவளுக்கும், பிளேயோனி என்பவனுக்கும் பிறந்த ஏழு புத்திரிகளுள் அறுவர் தேவர்களை மணந்தபோது ஒருத்தி மனிதனை மணந்ததால் மறைந்திருப்பதாக ஒரு கதை கூறுகின்றது.

கலியுகத்தில் கண்கண்ட கடவுளாக கலியுகத்தில் வேண்டுவார் வேண்டுவன வழங்கியருளும் வள்ளலாகத் திகழ்பவர் முருகப்பெருமான். கொடியோரை அழித்தலும், நல்லோரைப் பாதுகாத்தலுமே முருகப்பெருமானின் இயல்பான செயல்கள். அவற்றின்படி சூரபத்மன் முதலிய அசுரர்களை ஒறுக்கவும், தேவர்களைக் காத்தருளவும் கருணை கூர் முகங்கள் ஆறும், கரங்கள் பன்னிரண்டும் கொண்டு முருகப்பெருமான் ஆறு குழந்தைகளாகி விளையாடி உயிர்களை மகிழ்வித்தார். அதனல் திருமால் முதலிய தேவர்கள் எல்லையில்லா உவகை எய்தினர். கார்த்திகைப் பெண்களாகிய தெய்வ மாதர் அறுவரை அழைத்து இந்தக் குழந்தைகளுக்குப் பாலூட்டி வளர்த்து வாருங்கள் எனப் பணித்தனர். அதனபடியே கார்த்திகைப் பெண்கள் அறுவரும் ஆறு குழந்தைகளாக வடிவம் கொண்டிருந்த முருகப்பெருமானுக்கு பாலூட்டி வளர்த்து வந்தனர். கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பெற்ற முருகனுக்கு "கார்த்திகேயன்" என்றும் பெயர் உண்டு. அது மட்டுமன்றி கார்த்திகைநாளில் தன்னை வழிபடுவோருக்கு எல்லா நலன்களையும் அளித்தருளவும் இசைந்து கார்த்திகைப் பெண்களுக்கு முருகன் வரம் தந்தருளினர்.

முருகனுக்குரிய விரதநாட்கள் பல. அவற்றுள் கிழமைகளில் வெள்ளிக்கிழமையும், திதிகளில் சஷ்டி திதியும், நட்சத்திரத்தில் கிருத்திகை நட்சத்திரமும் மிகச் சிறப்புடையனவாகும்.

## கிருத்திகை விரதப் பயன்

1. கிருத்திகை நோன்பினை முறையாக 12 ஆண்டுகள் நோற்று நாரத முனிவர் சப்தரிஷிகள் எனப்போற்றப்படும் முனிவர்கள் எழுவருக்கும் மேலான நிலையையும், சிறப்பையும் பெற்றார்.

2. கிருத்திகை விரதத்தை நோற்று பிரம்மச்சாரியாகிய மறையவன் ஒருவன் மனுக்களுள் முதல்வனைப்பிறந்து உலகம் முழுவதையும் ஆளும் பேறு பெற்றான்.

3. அந்தணன் ஒருவன் கிருத்திகை விரதம் கடைப்பிடித்து தான் விரும்பிய நலன்களை எல்லாம் பெற்று திரிசங்கு சக்கரவர்த்தியாகப் பிறந்து பெரும் பேறுகள் எய்தினன்.

4. ஒரு அரசனும், ஒரு வேடனும் கிருத்திகை நாளில் முறையே வழிபாடாற்றி அந்திமான் என்றும் சந்திமான் என்றும் பெயருடையவர்களாகப் பிறந்து பேரரசர்களாகப் விளங்கி உலகை ஆளும் சிறப்பையும், மேன்மையையும் எய்தினர்.

5. கோரண் என்னும் அவுணர் கோனால் தன் நாடு முதலியன இழந்து துன்புற்ற பகீரதன் என்பவன் கானகத்திற்குச் சென்று சுகர் என்ற முனிபுங்கவரைச் சந்தித்துத் தன் குறைகள் எல்லாவற்றையும் முறையிட்டு அவர் உபதேசித்த படி கிருத்திகை விரதத்தை விருப்பத்துடன் கடைப்பிடித்து முருகனை வழி பட்டு அவரது அருளால் பகைவரை வென்று இழந்த நாடும் பிறவும் பெற்று இன்புற்றார்.

எல்லா மாதத்துக் கிருத்திகைகளும் சிறப்புடையனவே. ஆயினும் தட்சணயணம் தொடங்கும் ஆடி மாதத்தில் வரும் ஆடிக்கிருத்திகையும் உத்தராயணம் தொடங்கும் தை மாதத்தில் வரும் தைமாதக்கிருத்திகையும் தனிப்பெரும் சிறப்புடையனவாகும். இவ்விரண்டினுள்ளும் தட்சணயணம் தொடங்கும் ஆடி மாதத்தில் வரும் ஆடிக்கிருத்திகை தென் தமிழ் நாட்டு தனிப்பெரும் கடவுளாகிய முருகப்பெருமானுக்கு மிகச்சிறப்புடையதாகும்.

“இந்த நல் விரதந்தன்னை ஈண்டொரு மறையோன் நோற்று
முந்திய மனுவேயாகி முழுதுலகு அதனை ஆண்டான்
அந்தணன் ஒருவன் பின்னும் அவ்விரதத்தைப் போற்றி
சிந்தையில் நினைதாங்கெய்தித் திரிசங்கு ஆகியுற்றுன்
ஈங்கொரு மன்னன் வேடன் இருவரும் நோற்று வண்மை
தாங்கிய அந்திமான் நற்சந்திமான் என்று பேராய்
வீங்குநீர் உடுத்தபாரை மேலைநாட் புரந்தார் என்ப:
ஆங்கவர் பின்நாள் முக்தி அடைவது திண்ணம் அம்மா”

ஆதலின் இந்தப் புனித ஆடிக்கிருத்திகை நன்நாளில் நாம் அனைவரும் முருகனை அன்புடன் முறையே வழிபட்டு இம்மை மறுமை நலங்கள் எல்லாம் எய்தி இன்புறுவோமாக.

## ஆடிப்பூரம்

சிவபெருமானுக்கு திருவாதிரையும், திருமாலுக்கு திருவோணமும் போல அம்பிகைக்கு உரிய சிறப்புத் திருநாள் பூரமாகும். பூரத் திருநாளில் தான் அம்பிகை திரு அவதாரம் செய்தருளினுள் என்று பெரியோர்கள் கூறுவர்.

பூரம் அச்சுவினி முதலாக எண்ணப்படும் 27 நட்சத்திரக் கூட்டங்களிலே 11ஆம் கூட்டம். இது சிம்மராசியில் உள்ளது. சிங்கம் போல பாவிக்கும் ஒரு உருவிலே பின்காற்தொடையில் விளங்கும் டெல்ட்டாற் லியோனிஸ் பின்காலின் முழங்கால் அருகில் காணும் தீட்டா லியோனிஸ் ஆகிய இரண்டு நட்சத்திரங்களையும் பூரம் என்று காட்டுவார்கள்.

பூர நட்சத்திரத்தில் அம்பிகை அவதாரம் செய்தாள் என்பதை திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர் தாம் பாடிய கந்தர் அந்தாதி என்னும் நூலில் பின்வருமாறு கூறுகின்ருர்.

“திரிபுரத் தப்புப் புவிதரத் தோன்றி சிலை பிடிப்பத்
திரிபுரத் தப்புத் தலைபட நாண்டொடுஞ் சேவகன்
திரிபுரத் தப்புத்திர! மான் மருக திருக்கையம்போ
திரிபுரத் தப்புத் துறையா யுத எனச் செப்பு நெஞ்சே!”

திரிபுரத்து, அப்பு புவிதரத் தோன்றி, சிலை பிடிப்பத் திரிபுரத்து, அப்பு தலைபட நான் தொடும் சேவகன் கோத்திரி, புரத்து அப்புத்திரமால் மருக திருக்கை அம்போதி, ரிபு, ரத்தப்புத்துறை ஆயுத எனச் செப்பு நெஞ்சே!

பூரத்து என்னும் சொல் புரத்து எனக் குறுகி வந்தது. தோன்றி – தோன்றியவள்: உமாதேவியார். முதல் வரிசையில் அப்பு – கடல். இரண்டாம் வரியில் அம்பு – "அம்பு" என்பதன் கருத்து வலித்தல் விகாரம். அத்திரி – மலை கோ + அத்திரி என்பது கோத்திரி எனத்தொகுத்தல் விகாரம் பெற்றது. திருக்கை ஒருவகை மீனின் பெயர். அப்போதி – கடல். ரிபு – பகைவர்கள், அசுரர்கள்.

பூரநாளில் கடல்சூழ்ந்த பூவுலகத்தைப் படைத்துத் தருதற் பொருட்டு அவதரித்த உமாதேவி தன்னுடைய பாகமாகிய இடக்கரத்தால் மேருமலையாகிய வில்லை பிடித்துக்கொள்ளச்செய்து முப்புரத்தின் மேல் திருமாலாகிய அம்பை எய்தற் பொருட்டு தன்னுடைய பாகமாகிய வலக்கரத்தால் வாசுகியாகிய நாணைத் தொடுத்த சிவபெருமானின் திருச்செங்கோட்டு மலையை கோயிலாகக் கொண்ட மிக்க சிறப்புடைய மைந்தனே! திருமாலின் மருகனே! திருக்கை என்னும் மீனை உடைய கடலின் கண் அசுரராகிய பகைவர்களின் ரத்தத்தினையே புதிய உறையாகத் தோயும்படி செய்த வேலாயுதத்தை உடையவனே என்றெல்லாம் புகழ்ந்து சொல்லி நெஞ்சே! நீ என்றும் எங்கும் திரிந்து தல யாத்திரை புரிந்து உய்வாயாக என்பது இதன் பொருள். இப்பாடலின் முதல் வரியில் புரத்து அப்புப் புவி தரத்தோன்றி என்பதற்கு பூர நாளில் கடல்சூழ்ந்த உலகத்தைப் படைப்பதற்காகத் தோன்றியவன் என்று பொருள். பூரமென்பது ஒவ்வொரு மாதத்திலும் வருவதற்குரிய நட்சத்திரமாயினும் ஆடிப்பூரத்தில் வரும் நட்சத்திரமே சிறப்புடையதாகும்.

"ஆடிப்பட்டம் தேடி விதை" என்பது பழமொழி. ஆடி மாதத்தில் உழவர்கள் வயல்களில் உழுது விதை விதைத்து பயிர் செய்யும் முயற்சியை செய்யத் தொடங்குவர். "அவளால் வந்த ஆக்கம் இவ் வாழ்க்கை எல்லாம்" எனச் சிவஞான சித்தியார் கூறுவதற்கேற்ப உழவர்களின் உழவுத்தொழில் முயற்சி வெற்றி பெற்று அவர்கள் விதைத்த பயிர். செழித்தோங்கிப் பெரும்பயன் தருமாறு செய்தருள்பவள் அம்பிகையே ஆவாள். ஆதலின் ஆடிமாதத்துப் பூரம் மிகவும் சிறப்புடையதாக போற்றப்படுகின்றது. ஸ்ரீதேவி பூதேவிகளின் அம்சமாகக் கருதப்பெறும் ஆண்டாள் நாச்சியரும் ஆடிப்பூரத்திலே தோன்றி அருளினள் என்பது வரலாறு.

கடக ரவி: தக்ஷிணயன புண்ணிய காலம் சில மாதங்களில் வியாச பௌர்ணமி ஆடி மாதத்திலும் வருவதுண்டு. சாதுர்மாஸ்ய பூஜை குரு பௌர்ணமி என்றும் கூறப்படும். சந்நியாசிகள் மழைக்காலமான 4 மாதம் வெளியில் சஞ்சாரம் செய்யக்கூடாது. மழைக்காலத்தில் சஞ்சரிக்கும் பிராணிகளுக்கு ஹிம்சை ஏற்படக் கூடும். ஆதலால் ஒரே இடத்தில் இருந்து வியாச பூசை செய்து வேதாந்த விசாரம் செய்ய வேண்டும். விஸ்வருப யாத்திரை என்ற பௌர்ணமியில்

வெளியில் புறப்பட வேண்டும். வியாச பூசை அன்று ஒவ்வொரு குருவையும் சிஷ்ய மண்டலத்துடன் புது வஸ்த்திரத்தில் அரிசியைப் பரப்பி எலுமிச்சம்பழத்தை ஐந்து ஐந்தாக வைத்து அதில் ஒரு குரு நாலு சிஷ்யர் என குரு மண்டலத்தை ஆவாஹனம் செய்து பூஜிக்க வேண்டும். நாராயணன், பிரம்மா, வஷிட்டர், சக்தி, பராசார், வியாசர், சுகர், கௌடபாதர், கோவிந்தபாதர், சங்கரர் முதலியவர்களையும் விஷ்ணுவையும் பூஜிப்பர். கிரஹஸ்தர்கள் துறவிகளை ஒரேயிடத்தே இருந்து வேதாந்த விசாரம் செய்ய வேண்டவேண்டும். அதுவரை நாங்கள் ஆதரிக்கிறேமென பிரார்த்திக்க வேண்டும். பிச்சைகளுக்கும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

## நாக பஞ்சமி

பகவான் அனந்தன் என்ற நாகமாக இருந்து பூமியைக் காக்கின்றார். அவருக்கு சகாயமாக தக்ஷகன், வாசுகி, கார்க்கோடன் முதலிய சர்ப்பங்களும் பாதாளலோகத்தில் வசிக்கின்றன. காசியப்பருக்கு சத்ரு என்பவளிடம் உண்டானவர் நாகர். தாய் சொல்லைக் கேளாததால் தீயில் விழுந்து இறக்கும் படி தாயே சபித்தாள். அந்தச் சாபத்தால் பலசர்ப்பங்கள் தீயில் மாண்டன. அஸ்தீகர் ஜனமேஜயனது சர்ப்ப யாகத்தை நிறுத்தி சாபத்தை அகற்றினர். அது இந்தப் பஞ்சமியாம். அப்போது நாகங்களை நாம் பூசித்தால் நமக்கு ஷேமம் உண்டாகும். அன்று புற்றுக்கு பால் தெளித்து பூசை செய்து வாயநமளிக்க வேண்டும்

சர்ப்பதேவதை சந்ததி உண்டாவதற்கும் உண்டாகாமல் இருக்கும்படி செய்யவும் சக்தி வாய்ந்தது. ஆதலால் நித்திய சந்தியாவந்தனத்தில் பிரார்த்திக்கின்ற சர்ப்பப்பலி என்ற பூஜை 40 சம்சாரங்களில் ஒன்றாக அமைக்கப் பட்டுள்ளது. சிராவண பௌர்ணமியில் அதை ஆரம்பித்து தை பௌர்ணமியில் முடிக்க வேண்டும். புத்திரப் பாக்கியம் உண்டாக நாகப் பிரதிஷ்டை செய்யும்படி சாஸ்திர விதி. நாகப் பிரதிஷ்டை செய்து அதனல் பிறந்தவருக்கு நாகராஜன், நாகலட்சுமி என்று பெயரிடுவதைக் காணலாம்.

## வரலக்ஷ்மி விரதம்

சுமங்கலிகள் செய்ய வேண்டிய விரதம் இது. இத்தினத்தில்தான் மகாலக்ஷ்மி சாயங்காலத்தில் பாற்கடலில் தோன்றினள். அன்று உபவாசம் இருந்து திவ்விய அலங்கார மண்டபத்தில் கலசத்தில் லக்ஷமியை ஆவாஹனம் செய்து ஒன்பது முடியுள்ள நோன்புக்கயிற்றை தரிக்க வேண்டும். மகாலக்ஷ்மியே நேரில் வந்து இந்த விரதத்தை உபதேசித்தாள். இதை அநுஷ்டிக்காத ஒரு ராணி ஏழையானள். அநுஷ்டித்த ராஜகுமாரி சக்கரவர்த்தினி ஆனள் என்ற கதை முதலியவைகளை பத்மபுராணம் வர்ணிக்கிறது.

# ஹயக்கிரீவ அவதாரம்

சர்வ வித்தைகளுக்கு ஆதாரமான ஹயக்கிரீவன் அவதரித்த தினம் பௌர்ணமி ஆதலால் அன்று அத்தியயனம் செய்யக்கூடாத நாளாயினும் அத்தியயனம் ஆரம்பிக்கின்றோம். ஆனால் வியாசகருக்குத்தான் பூசை. இவருக்கு இல்லை

ஆடி மாத திருத்தொண்டர் திருநாள்

| | | |
|---|---|---|
| கார்த்திகை | - | மூர்த்தி நாயனார் |
| கார்த்திகை | - | புகழ்ச்சோழ நாயனார் |
| திருவாதிரை | - | கூற்றுவ நாயனார் |
| சித்திரை | - | பெருமிழலை குறும்ப நாயனார் |
| சுவாதி | - | சுந்தரமூர்த்தி நாயனார், சேரமான் பெருமான் நாயனார் |
| கேட்டை | - | கலிய நாயனார் |
| கேட்டை | - | கோற்புலி நாயனார் |

# ஆவணி மாத நினைவுகள்

காவணியாவது கனிமலரால் கலை காட்டுகின்ற
பாவணியாவது அநுபூதியால் அன்பு பற்றுகின்றேம்
நாவணியாவது நாமத்தினுல் அன்றே நாடும் என் முன்
ஆவணித் திங்களில் வந்தருள்வாய் என்னை ஆண்டவனே!

– அகத்தியர்

## விநாயக சதுர்த்தி

ஆவணி என்றதும் முதலில் நினைவுக்கு வருவது விநாயக சதுர்த்தியாகும். இந்துக்களுக்கு விநாயகர் பூசை எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியமானது ஆவணி மாதத்தில் சுக்கில பட்சத்தில் வரும் சதுர்த்தி தினம். தஞ்சை மாவட்டத்தில் பாபநாசம் தாலுக்காவில் கணபதி அக்கிரகாரம் என்றொரு கிராமம் இருக்கின்றது. அங்கு பல வருடங்களாக ஒரு சம்பிரதாயம் அநுஷ்டிக்கப்பட்டு வந்தது. விநாயக சதுர்த்தி அன்று அவ்வூரில் உள்ளவர்கள் ஆனை முகத்தோனின் முன்பு தங்களிடேயே உள்ள சண்டை சச்சரவுகளைப் பேசி சமரசம் செய்து கொண்டு விடவேண்டும். ஊரிலே நிலவி வந்த சலசலப்பு நீங்கி அனைவரும் ஒன்று பட்டு பகவானுக்கு ஆராதனைகள் செய்வர். அன்று ஊரிலே யாரும் தனியாக வீட்டில் பிள்ளையார் பூசை செய்வதில்லையாம்.

சித்தி விநாயக விரதம், சங்கடஹர சதுர்த்தி விரதம், தூர்வா கணபதி விரதம் என்ற மூன்றும் ஸ்காந்தம் முதலிய புராணங்களில் கூறப்படுகின்றன. சித்தி விநாயக விரதம் காரிய சித்தியைப் பெறுவதற்காகவும், அடாப்பழி நீங்கு வதற்காகவும், நோற்கப்பெறுவது. ஸ்ரீகிருஷ்ணர் இதனை நோற்று பிரசனசித்தைக் கொன்று சியமந்தக மணியை திருடிக்கொண்டதாக நேர்ந்த பழியினின்று விடுபட்டார்.

களிமண்ணுல் உருவம் செய்து பிராண பிரதிஷ்டை முதலியன செய்து 21 வகை இலைகளாலும், 21 வகை பூக்களாலும், ஒற்றைப்படை அலகுள்ள 21 அருகம்புற்களாலும் பூசித்து 21 கொழுக்கட்டையினை நிவேதனம் செய்வர். இரவில் சந்திரனுக்கு பூசையும் அர்க்கியமும் கொடுத்து விநாயகரின் அருளைப் பெறுவர்.

சங்கடஹர சதுர்த்தி விரதமானது சிறப்பாக நோய், கடன், சிறைவாசம் இவற்றின் அம்சங்களில் இருந்தும் வனவாசம் முதலிய துன்பங்களிலிருந்தும்

தம்மை காத்துக்கொள்ள வேண்டிய ஒருவர் நோற்கும் ஒரு விரதமாகும். இதனை ஸ்ரீகிருஷ்ணர் தருமருக்கு வனவாச காலத்தில் உபதேசித்ததாக பாரதம் கூறுகிறது. இப்பூசை கிருஷ்ண பட்ச சதுர்த்தி தினத்தன்று இரவில் சந்திரன் உதயமானவுடன் செய்யப்பெறும். ஆவணி மாத தேய்பிறைச் சதுர்த்தி இதற்கு மிகச்சிறந்ததாகையால் அன்றுவது பூசை செய்து வேண்டிய வரங்களைப் பெறுவர்.

தூர்வா கணபதி விரதம் வளர்பிறைச் சதுர்த்தியில் சிறப்பாக ஆவணி மாத சதுர்த்தியிலோ கார்த்திகை மாத சதுர்த்தியிலோ 3 அல்லது 5 ஆண்டுகள் அநுஷ்டிக்கப்பெறும். இதை சிறப்பாகச் சந்ததியை அடைவதற்காகவும், செல்வத்தை பெறுவதற்காகவும் நோற்பர்.

## ஓணவிழா

ஆவணி மாதத்து பூரணையுடன் கலந்த திருவோண நட்சத்திரம் பெரும்பாலும் இந்த விழாவின் நாளாக அமையும். மலையாள தேசத்தவர்களுக்கு இந்த நாளே ஆண்டின் மிக மிகச் சிறந்த நாள். இவ்விழா சாதி மத பேதமின்றிக் கொண்டாடப்பட்டு வருகின்றது. சிறுபோக அறுவடை விழாவாக இதனை கொண்டாடுவார்கள். சைவர் ஐப்பசி ஓணத்தில் இவவிழாவை கொண்டாடி னர்கள் என்பதை ஞானசம்பந்தப் பெருமான் கூறுகின்றார்.

மைப்பயந்த ஒண் கண் மட நல்லார் மாமயிலைக்
கைப்பயந்த நீற்றான் கபாலிச்சர மமர்ந்தான்
ஐப்பசி ஓண விழாவும் அருந்தவர்கள்
துய்ப்பனவும் காணாதே போதியே பூம்பாவாய்

ஓண நட்சத்திரம் திருமாலுக்குரிய விசேட நட்சத்திரமாயினும் எவ்வித பேதமுமின்றிச் சைவர்களே கொண்டாடியுள்ளார்கள். அறுவடையில் கிடைத்த பொருளைக் கொண்டு அரிய தவத்தோர் ஆகிய அடியார்கள் திருவமுது செய்த காட்சியும் குறிக்கப்பட்டன. ஓணத்தில் கொடியேற்றமும் கிருத்திகையில் தீர்த்த வாரியும் நடைபெறுமெனத் தலவரலாறு கூறுகின்றது.

திரிவிக்கிரமரான திருமால் மூன்றடி மண்கேட்டு மகாபலிச் சக்கரவர்த்தியை வென்று அடக்கிய போது அச் சக்கரவர்த்தி ஒவ்வொரு ஆண்டிலும் திருவோண நட்சத்திரத்தன்று ஒருநாளாவது இந்த நாட்டையும் மக்களையும் நான் காணவேண்டும் என்று திருமாலைக் கேட்டுக்கொண்டார். இதையொட்டி மகாபலிச் சக்கரவர்த்தியின் நினைவு நாளாகவும், அவர் மக்களைக் காண வரும் நாளாகவும் இவ்விழா நடைபெறுகின்றது என்றும் சொல்வர்.

அஸ்த நட்சத்திரத்தன்று சிறுவர் சிறுமியர் பலநிறப்பூக்களைப்பறித்து வந்து வீட்டின் முற்றத்தில் பசுவின் சாணம் கொண்டு வட்டமாக மெழுகிச் சுத்தம் செய்து சிறு சிறு வட்டமாக மலர்களை அமைத்து ஒரு பெரிய வட்டப் பூந்தரை அமைப்பார்கள். இவ்விதமாக ஒவ்வொருநாளும் ஒரு பூத்தரை வீதம் சேர்த்து உத்தரட்டாதி நட்சத்திரமான ஒன்பதாம் நாளில் ஒன்பது பூத்தரை வட்டங்கள் அமைப்பார்கள். சூரிய உதயத்திற்கு ஏழரை நாழிகைக்கு முன்பு திருவோண நட்சத்திரத்தில் வீட்டில் உள்ள வயது வந்த பிள்ளையாவது பெண்ணவது நீராடி முற்றத்தில் உள்ள முதல் பூத்தரையில் மகாதேவ பூசை செய்ய வேண்டும். தும்பைச்செடியால் மகாதேவருக்கு அர்ச்சித்து அடைப்பலகாரம், தேங்காய் முதலியவைகள் வைத்து வணங்குவர். இதற்குத் தான் ஓணம் கொள்ளல் என்று பெயர். இந் நாட்களில் எல்லாம் ஆண்களும் பெண்களும் பலவகையான ஆட்டங்களிலும் பொழுது போக்குகளிலும் கலந்து மகிழ்வார்கள். கைக்கொட்டி களி என்பது பெண்களாடும் முக்கிய ஆட்டம். ஓணத்தல்லு என்ற வீர விளையாட்டை ஆண்களாடுவார்கள். தலைமைப்பந்து, வாரோட்டம், கிளித்தட்டு ஆகிய விளையாட்டுக்களும் இந்த நாட்களில் நடைபெறும்.

ஓணம் என்ற சொல்லுக்கு ஆறு என்ற பொருளும் உண்டு. "கங்கை யாதி ஓண நீர்" என்று சேதுபுராணம் குறிக்கின்றது. இவ்வோண நன்நாளில் மக்கள் புனிதத் துறைகளில் நீராடி சிவனையோ திருமாலையோ வழிபட்டு வந்தார்கள். பெருஞ் செல்வர் இவ்விழாவை 25 நாட்கள் கொண்டாடுவர். ஆவணித் திருவோணத்துக்கு முன் 10 நாட்களிலும் பின் 15 நாட்களிலும் இவ்விழா நடைபெறும்.

இவ்விழாவில் மலையாளத்தவர் புத்தாடை புனைவர்கள். நேத்திரப் பாயசம் என்ற வகையில் அவர்கள் தன் நாட்டு தனிவிளைவின் உடைமையாகிய வாழைக்காயின் பயனைத் துய்ப்பார்கள். செல்வர்கள் ஏழைகளுக்கு உணவும் உடையும் கொடுத்து சிறப்புச் செய்வார்கள். மலையாள ஆண்டின் தொடக்க நாளே ஓண நாளாக அமைகின்றது.

## ஆவணி அவிட்டம்

இந்தியப் பண்டைக்கால கல்விமுறையில் ஒரு முக்கியமானதொரு திட்டம் ஆவணியும் புரட்டாதியும் கார்காலமாகும். ஆவணி தொடக்கம் நான்கு மாதம் வெளியில் செல்ல முடியாத குளிருடையதாய் இருக்கும். இந்தக் காலத்திலேதான் கற்ற வேதங்களை மனனம் செய்கிற காலமாகப் பயன்படுத்தி வந்தார்கள். இந்த ஓதல் தொடக்கத்தைச் சிரவணம் என்றும் ஆவணி அவிட்டம் என்றும் கூறுவர். தொடக்கம் என்னும் பொருளுடைய உபாகர்மம் என்னும்

சொல்லாலும் இதைக் குறிப்பதுண்டு. இந்த விழாவைத் தொடங்கும்போது வேதங்கள் முதலியவற்றுக்கு ஆதாரமான முனிவர்களின் பெயரைச்சொல்லித் தர்ப்பணம் செய்வார்கள். கல்வியின் தேவதைகளான மேதை, சிரத்தை முதலியவற்றைத் துதித்து ஓமம் செய்வார்கள். பூணூலைப் புதுப்பித்துக் கொள்வார்கள். இவ்விழாவிற்கு ரிக் வேதிகளுக்கு திருவோண நட்சத்திரம் முக்கியம். யஜுர் வேதிகளுக்கு பௌர்ணமித் திதி முக்கியம். சாமவேதிகள் புரட்டாதி நட்சத்திரத்தில் இதைச்செய்வார்கள்.

## ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி

ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா ஆவணி மாதத்தில் பிறந்தார் என்றுதான் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி கொண்டாடப்பட்டு வருகின்றது. ஓண நட்சத்திரத்திலேயே ஸ்ரீ கிருஷ்ணர் பிறந்தார் என்பது ஒரு சாராருடைய கொள்கை. அதனலே தான் ஓணத்துக்கும் சிறப்பு வந்தது என்பது அவர்களின் நம்பிக்கை.

பெரியாழ்வார் திருமால் பிறந்த நாளைக்குறித்து நீ பிறந்த திருவோணம் என்று பாடுகின்றுர். தேவாரத்திலும் திருமாலைக்குறிக்க ஓணப்பிரான் என்னும் தொடர் வருகின்றது. "ஓணப்பிரானும் ஒளிர் மாமலர் உத்தமனும்" என்பது தேவாரம். நாலாயிரத் திவ்விய பிரபந்தத்தில் திருமாலைக்குறித்து செய்யும் ஓணவிழாவில் பல்வேறு ஒலிகள் நிறைந்திருந்தன என்ற குறிப்பும் காணப்படுகின்றது. "ஓணவிழாவில் ஒலி அதிர" என்பது அப்பகுதியாகும்.

கோகுலாஷ்டமி தான் கண்ணன் பிறந்த தினம் என்பது பலருடைய நம்பிக்கை. கிருஷ்ணன் மதுராவில் அஷ்டமியில் தோன்றி உடனே கோகுலத்திற்கு கொண்டு போகப் பெற்று அங்கு பிறந்தவன் போன்று வளர்ந்ததால் அந்த நாள் கோகுலாஷ்டமி என்று பெயர் வந்தது. அதைக் கொண்டாட வேண்டிய நாள் ஆவணி மாத கிருஷ்ண பட்ச அஷ்டமியாகும். அன்று ரோகிணி நட்சத்திரமும் அநேகமாக இருக்கும். கண்ணன் நள்ளிரவில் தோன்றியதால் ஆவணி மாதத்தில் ரிஷப லக்கினத்தில் அஷ்டமிதிதி இருக்கும் நாள் தான் கண்ணன் பிறந்த நாளைக்கொண்டாட ஏற்றது. அஷ்டமிதிதி மட்டிலும் லக்கினம் வரை இருக்க வேண்டும். இதனல் தான் இதனை ஜென்மாஷ்டமி (பிறந்த அஷ்டமி) என்று வழங்குகின்றனர்.

ஆனல் ஜெயந்தி என்பது நட்சத்திரத்தை முக்கியமாக கொண்டது. பிறந்தநாள் கொண்டாட்ட திதியை விட நட்சத்திரமே சிறந்ததென்பது சிலர் கொள்கை. அதனல் இரவில் அஷ்டமிதிதி இல்லாதிருப்பினும் ரோகிணி நட்சத்திரம் இருந்தாற் போதுமென்று ஜெயந்தி கொண்டாடுபவர்கள் கூறுவர்.

ஜெயந்தி என்ற சொல்லுக்கு ஜெயத்தையும் புண்ணியத்தையும் தர வல்லது என்பது பொருள்.

திதியை முக்கியமாகக் கொண்டவர்கள் கோகுலாஷ்டமி ஜென்மாஷ்டமி என்றும் நட்சத்திரத்தை சிறப்பாகக் கொண்டாடுபவர்கள் ஸ்ரீ ஜெயந்தி என்றும் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி என்றும் கூறுவர். இதனல் தான் கண்ணன் பிறந்தநாள் பலரால் வெவ்வேறு நாட்களில் கொண்டாடப்படுகின்றது. காலைமுதல் விரதம் இருந்து நள்ளிரவில் லக்கினம் வந்ததும் கண்ணனுக்கு வழிபாடு செய்து பின் உணவருந்தி இரவு முழுவதும் கண்விழித்து பஜனை முதலியவைகளால் கொண்டாட வேண்டும். இவ்வாறு கொண்டாடினல் அசுவமேத யாகத்தின் பலன் கிடைக்கும்.

## ஆவணி மூலம்

குதிரை வாங்கச் சென்ற மணிவாசகப்பெருமானை சிவபெருமான் மானிட உருவில் குருமூர்த்தமாக எழுந்தருளி திருவடி தீட்சை வைத்து ஆட்கொண்டருளினர். குதிரை வாங்கக் கொண்டு சென்ற பணம் முழுவதும் கோயில் திருப்பணிக்காகச் செலவு செய்தார். பாண்டியன் ஒற்றரை அனுப்பி மணிவாசகரை அழைத்தபோது சிவபெருமான் ஆவணி மாத மூல நட்சத்திரத்தில் குதிரைகள் வரும் என்று சொல்லி அனுப்பினர்.

அவ்வாறே சிவபெருமான் காட்டிலுள்ள நரிகளையெல்லாம் பரிகளாக்கி ஆவணி மாத மூல நட்சத்திரத்தன்று மதுரை வீதியிலே கொண்டு வந்தருளினர். அன்றிரவு பரிகளெல்லாம் நரிகளாகி அட்டகாசம் செய்தன.

இத்தினத்தை இன்றும் மதுரையிலே மூலப்பெருவிழா என்று கொண்டாடி வருகின்றனர்.

## சனிப்பிரதோஷம்

பிரதோஷம் என்பது முற்பிறப்பில் செய்த குற்ற நீக்கமாகும். பிரதோஷ விரதம் சிவனுக்குரிய விரதங்களில் ஒன்று. மாதந்தோறும் உண்டாகின்ற சுக்கில பட்சம் என்னும் வளர்பிறை காலத்திலும், கிருஷ்ண பட்சம் எனப்படும் தேய்பிறைக்காலத்திலும் வரும் பதின்மூன்றும்நாளை பிரதோஷகாலம் என்பார்கள்.

தேவர்களும் அசுரர்களும் சேர்ந்து திருப்பாற்கடலை கடைந்தபோது முதன்முதலாக ஆலகாலவிஷம் தோன்றியது. விஷத்திற்கு பயந்த தேவர்கள் சிவபெருமானை சரண் அடைந்தார்கள். சிவபெருமான் தேவர்களுக்கு இரங்கி

நஞ்சை உண்டு "நீலகண்டன்" என்ற பெயரையும் பெற்ருர். சிவபெருமான் தேவர்களைக் காத்த தினம் ஏகாதசி எனப்படும். அடுத்தநாள் துவாதசியில் தேவர்களுக்கு அமுதம் கிடைத்தது. அன்றைய தினம் அமுதம் கிடைத்த மகிழ்சியில் இறைவனை மறந்தே களிப்பில் மூழ்கி இருந்தனர். அடுத்த நாளாகிய திரயோதசி தினத்தில் குற்றத்தை உணர்ந்து சிவபெருமானை வேண்டினர். சிவபெருமான் நந்தியம்பெருமானுடைய கொம்புகளுக்கூடாக காட்சி கொடுத்தருளினர். மாலை 4.30 மணி தொடக்கம் இரவு 7.30 மணி வரையுள்ள மூன்று மணித்தியாலங்களும் பிரதோஷ காலமாகும். பிரதோஷ காலத்திலே நியமமாக மெய்யன்போடு சிவ தரிசனம் செய்து கொண்டுவரின், கடன், வறுமை, நோ, பயம், கிலேசம், அவமிருத்து, மரணவேதனை, பாவம் என்னும் இவைகள் நீங்கும்.

பிரதோஷ விரதம் அநுஷ்டிப்போர் அன்று காலை நித்திரை விட்டு எழுந்து காலைக்கடன் கழித்து நீராடி தூய்மையாகச் சிவாலயத்திற்குச் சென்று வழிபட்டு, அன்று நல்ல வழியில் அருள் நூல்களையும் தேவார திருவாசகங்களையும் ஓதிக்கொண்டிருத்தல் நன்று. அன்று மாலை சிவாலயத்திற்குச் சென்று சிவ தரிசனம் செய்தல் வேண்டும். பின் கோயிலில் ஒரு பக்கத்தில் இருந்து பஞ்சாட்சர ஜெபம் 1008 முறையாவது செய்ய வேண்டும். அதன் பின்பு வீடு சென்று ஏதேனும் சிறிதளவு உட்கொண்டு அடுத்த நாள் காலை பாரணை செய்து கொள்ளவேண்டும்.

சிவபெருமான் தேவர்களின் குற்றத்தை மன்னித்தருளி அவர்களுக்குத் தம் திருநடனத் திருக்காட்சி கொடுத்தருளியமை சனிக்கிழமையோடு கூடிய பிரதோஷமாகையால் சனிப்பிரதோஷம் மிக மேலானது என்பர். எனவே தான் பிரதோஷ விரதம் அநுஷ்டிக்கத்தொடங்குவோர் ஒரு சனிப்பிரதோஷத்தில் ஆரம்பித்து ஒரு சனிப்பிரதோஷத்தில் நிறுத்திக்கொள்ளுதல் வழக்கமாயிருக்கிறது. அத்தகைய சனிப்பிரதோஷமும் சித்திரை, வைகாசி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய மாதங்களில் வருவதாயின் மிக மிக நன்ருகும்.

## ஆகஸ்ட் 15

இந்தியா சுதந்திரம் பெற்ற தினம் இதுவாகும். பகவான் அரவிந்தரிடம் இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்பு அவருடைய பக்தர்கள் அரவிந்தருடைய பிறந்த நாளைக்கொண்டாட உத்தரவு கேட்டார்கள். அவரது பிறந்த தினம் இதுவே ஆகும். பகவான் அரவிந்தருடைய பக்தர்கள் கேட்டதற்கு இந்தியா சுதந்திரம் அடையப்போகும் திகதியும் இதுவாக அமையப்போவதால் நீங்கள் கொண்டாடலாம் என்ருர்கள். அவருடைய தீர்க்க தரிசன வாக்கு பொய்த்துப் போகவில்லை. பகவான் அரவிந்தருடைய தேசியப்பற்றும் புகழ்

விரும்பாமையும் இதனல் தெளிவாகின்றன. இவ்விரு தினங்களும் ஒன்ருகி உள்ளமையால் தேசப்பற்ரேடு அரவிந்தருடைய தெய்வீகத்தையும் சேர்ந்து நினைவு கூர்வோமாக.

## ஆவணி ஞாயிறு

ஒவ்வொரு மாதத்திலும் ஒவ்வொரு நாட்களுக்கு தனித்தனிப் பெருமையுண்டு. அந்த முறையில் ஆவணி மாதத்தில் ஞாயிற்றுக்கிழமை சிறப்புடையது. சூரியனைக் குறித்து விரதம் அநுஷ்டிப்போர் ஆவணி மாத ஞாயிற்றுக்கிழமை விரதம் அநுஷ்டித்துக் கடைசி ஞாயிற்றுக்கிழமை சூரியனுக்கு பொங்கலிட்டு வழிபாடு செய்வர். ஆண்டு முழுவதிலும் உள்ள ஞாயிற்றுக்-கிழமைகளில் விரதம் அநுஷ்டிக்க முடியாதவர்கள் ஆவணி மாதத்திலுள்ள ஞாயிற்றுக்கிழமைகளில் விரதம் அநுஷ்டிப்பர். அதுவும் முடியாதவர்கள் ஆவணி மாதக்கடைசி ஞாயிற்றுக்கிழமை விரதம் அநுஷ்டிப்பர்.

"ஆயிரம் நாமத்தில் அர்ச்சனை செய்தேன் அடி பணிந்தேன்
தாயினும் அன்பு பொழிந்தென்னை தாங்கும் தமிழரசி
பேயும் பிணியும் வறுமையும் போக்கி விளக்கிடுவாய்
ஞாயிறு தோறும் வருவாய் சிவலோக நாயகியே"

_ அகத்தியர்

## காயத்திரி ஜபம்

உபாகர்ம விளக்கத்தில் மிக விரிவாக உள்ளது. நமது சகல பாவங்களும் அகன்று நாம் பதிதனகாமல் இருக்கவும், மந்திரம் வீரியம் உள்ளதாக இருக்கவும், 1008 முறை காயத்திரியைக்கூறி பலாசு சமித்தால் ஔபாசனக்கினியில் கிருஹஸ்தன் ஹோமம் செய்ய வேண்டும். பிரம்மச்சாரி லௌகிக அக்கினியில் காயத்திரி ஹோமம் செய்ய வேண்டும். ஹோமம் முடியாத போது ஜபமாவது செய்ய வேண்டும். பிராயச்சித்த கர்மா ஆனதால் நித்திய சந்தியா ஜப கர்மாவை முடித்து விட்டு சங்கவ காலத்தில் சுமார் எட்டரை மணி ஜபம் செய்ய வேண்டும். 5 இடங்களில் நிறுத்தி அங்கிங்கு பாராமல் ஏகாக்கிர சித்தனைச் செய்ய வேண்டும். ஆண்டுக்கோர்முறை வரும் காயததிரி ஜபத்தை பக்தி சிரத்தையுடன் விதிப்படி செய்ய வேண்டும். காயத்திரியை விடச் சிறந்த மந்திரம் இல்லை.

## சாம உபாகர்மம்

யஜூர் வேதத்தில் கூறியபடி சாம வேதத்திற்கு இடைப்பட்ட கர்மா இது. சாம வேதிகள் அன்று அதற்கு அங்கமாக கையில் ரக்ஷை கட்டிக் கொள்ளுவார்கள். மற்ற வேதிகளை விட சாம வேதிகளுக்கு ரிஷி பூஜை அதிகம்.

## ரிஷி பஞ்சமி

இது ருது பகிஷ்டைத்தீட்டு நின்று விட்ட பின் ஸ்திரீகள் செய்யும் விரதமாகும். அறிந்தோ அறியாமலோ அந்தத் தீட்டு வீட்டிற் கலந்தால் அது மகாபாவமாகும். வீட்டிலுள்ளோருக்கு நோய் ஏழ்மை முதலிய துன்பங்கள் உண்டாகும். ஆதலால் தொன்று தொட்டு நம் நாட்டுப்பெண்கள் அந்த சமயம் வீட்டை விட்டு விலகி நியமத்துடன் இருந்து நான்காம் நாள் ஸ்நானம் செய்து உள்ளே நுழைவார்கள். அவர்களுக்கு வழங்கி மிகுதியான உணவு வஸ்துக்களை எவரும் உண்ணார். அந்த ஸ்திரீயை வீட்டுக்காகாதவள், தூரமானவள், ரஜன்வலை, பகிஷ்டை, தீட்டுக்காரி, விலகினவள் என்ற பெயர்களால் அழைப்பார். குழந்தைகள் உண்டாவதற்காக இறைவன் யௌவனத்தில் பெண்களுக்கு ருதுவை அளித்து கிழத்தன்மையில் நிறுத்துகிறார். அச்சமயம் ஒருவர் அருகிலும் வராமலும் ஒரு வேலையும் செய்யாமலும் இருக்க வேண்டும். பகிஷ்டைக்குரல் கேட்டால் கூட பெரியோர் உண்ண மாட்டார்கள். பகிஷ்டையை திண்ணையில் ஒரு கோடியில் மறைவாக உட்கார வைப்பார்கள். கிரகணம் நேர்ந்தால் அல்லது நெருங்கிய பந்து இறந்தால் அப்பொழுது தான் மூன்று நாட்களுக்குள் அவர்கள் ஸ்நானம் செய்யலாம். எவரேனும் பாத்திரத்தில் ஜலத்தை எடுத்துக் கொட்ட வேண்டும். குளத்தில் ஸ்நானம் செய்யக்கூடாது. நான்காவது நாள் மண்ணால் உடலைச் சுத்தி செய்து 33 முறை நீரில் அமிழ்ந்து ஸ்நானம் செய்ய வேண்டும். ஸ்நானம் பண்ணிய தினத்தில் வீட்டில் நுழையலாம். நடமாடலாம். ஆனால் ஒரு வேலையும் செய்யக்கூடாது.

முக்கிய தத்துவமென்ன? அச்சமயம் உடலில் இருந்து அசுத்தம் வெளிக்கிளம்பும். அருகில் வருவோருக்கு நோய் வரும்படி செய்யும். அருகில் வருபவரின் உடலிலுள்ள ஆத்ம சக்திக்குறைவை உண்டு பண்ணும். துளசி, வில்வம் முதலிய தெய்வீகமான மரத்தினருகே பகிஷ்டைக்காரி சென்றால் அவை பட்டுப்போவதைக் காணலாம். ஏற்கனவே அபலைகளான அவர்களுக்கு அச்சமயம் மிகவும் பலவீனம் தோன்றும். ஒரு வேலையும் செய்யாமல் ஓய்விருந்தால் உடலில் பலம் உண்டாகும்.

பிரசவம் என்னும் பெரும் பணி அவர்களால் நடப்பதால் மெல்லியார் உடலையும் மூளையையும் புலன்களையும் துர்பலப்படுத்தக்கூடாது என்று நம் நாட்டுப் பெரியோர்கள் பொதுவாகக் கடின கல்வி, கடின உத்தியோகம் வேண்டாம் என்றனர். பகிஷ்டாக்காலத்தில் அவர்களைப் பல நியமங்களுடன் காப்பாற்றினார்கள். நியமம் இல்லாவிடில் அச்சமயம் நோயும் பேயும் சுலபமாக அவ்வுடலைப் பற்றிக் கொள்ளும். பிறக்கும் குழந்தைகளும் துர்ப்பலமாயும் அற்பாயுசாகவும் பிறக்கும்.

## ஸ்திரீகளிடம் வேதமாதாவின் கருணை

அபலைகள் நோய்வாய்ப்படாமல் பலிஷ்டைகளாக இருந்து தர்மத்தை ரட்சிக்க வேண்டும். நல்ல பிரஜைகளை உண்டு பண்ண வேண்டும் எனக்கருதிற்று வேதம். சிரமமில்லாத வீட்டு வேலைகளைக்கூட செய்யவேண்டாமென மாதாமாதம் மூன்று நாட்கள் ஓய்வளித்தது. அச்சமயம் மஹிஷ்டா நியமம் என்ற பெயரால் உண்பதும் உறங்குவதும் தவிர வேறொன்றும் செய்யாதே எனக் கட்டளையிட்டது.

ஜலத்தில் இறங்கி முழுகாதே. முழுகினால் உனது சிசு ஜலத்தில் விழுந்து இறக்கும். கயிறு திரிக்காதே. திரித்தால் உன் சிசு தூக்குப்போட்டுக் கொண்டு இறக்கும். எண்ணெய் தேய்த்துக்கொண்டால் குஷ்டரோகமுள்ள சிசுவும் கண்ணுக்கு மையிட்டுக் கொண்டால் குருட்டுப்பிள்ளையும், ஏதேனும் சித்திரம் எழுதினால் வழுக்கைத்தலை புத்திரனும், நகத்தைக்கிள்ளினால் சொத்தை நகம் உள்ள புத்திரனும் பிறப்பான். மற்றும் பல கூறி ஒன்றும் செய்யாமல் இருக்கும் படி கூறுகிறது.

இது சிறிது கஷ்டம்தான். தாய்மார்கள் தம் உடலைக் கவனியார். தமக்கு பிறக்கும் சிசு பற்றியே கண்ணும் கருத்துமாய் இருப்பர். ஆதலால் எச்சரிக்கை செய்கிறது வேதம். 2 காண்டம், 5 பிரஸ்நம், 1 அநுவாகம், 7 பஞ்சாதிகளால் தைத்திரிய சம்கிதை, ஒரு கதையும் கூறி நியமத்துடன் இருக்கச் சொல்கிறது.

## வேத கதை

விசுவருபன் என்பவன் துவஷ்டாவின்புத்திரன். ஒரு சமயம் சுக்கிரனுக்கு புரோகிதராக அமைந்தார். அவர் அசுரர்களின் சகோதரி புத்திரனவர். ஆதலால் இந்திரன் எதிரில் அமரர்க்கு நன்மையுண்டாகும்படி ஹோமம் செய்தார். இதையறிந்த இந்திரன் அவரைக் கொன்றான். அதனால் பிரம்மஹத்தி என்னும் தோஷம் அவனைச்சூழ்ந்தது. அது அகல இதை வாங்கிக் கொள்பவருக்கு

வேண்டிய வரம் தருவதாகக் கூறினர். பிரம்மஹத்தியின் ஒரு பாகத்தை பூமி ஏற்றுக்கொண்டது. அதுதான் ஊஷர பூமி எனும் ஒன்றும் முளைக்காத இடம். அதற்காகப் பூமிக்கு எங்கு எவர் தோண்டினாலும் அந்தக்குழி ஓர் ஆண்டில் தானே நிறைந்து விடும் என்று வரம் தந்தான்.

மற்றொரு பங்கை மரங்கள் ஏற்றுக்கொண்டு தங்களை வெட்டப் பட்டுப் போகாமல் வளரவேண்டும் என்ற வரம் பெற்றன. அந்தத் தோஷம் மரத்தில் உண்டாகும் பால் அல்லது பிசின் ஆகும். அதைச் சாதுக்கள் உண்ணக்கூடாது. மரத்தின் பாலே பெருங்காயமாகும். அதைச் சிரார்த்த முதலிய வைதீககாரியத்தில் பயன்படுத்தக் கூடாது. மற்றோர் பகுதியை பெண்கள் ஏற்றுக்கொண்டனர். கர்ப்பிணியாயினும் கூட ஸ்திரீ புருஷ சங்கம் வேண்டும். மற்றப் பிராணிகள் சங்கம் செய்வது இல்லை. செய்தால் கருவுக்கு தீங்கு வரும். அதனால் கருவுக்கு தீங்கு வரக்கூடாதென வரங்கேட்டனர். அந்தப் பிரம்மஹத்தியின் அடையாளமே தீட்டு எனப்படுவது. ஆதலால் புருஷர்கள் அவர்களுடன் 3நாட்கள் பேசவும் கூடாது. அவர்களும் நியமத்துடன் இருக்க வேண்டும் என்று கூறுகிறது.

இது எப்போது நடந்தது? சத்தியம் தானா? சத்தியமாயினும் அக்காலத்துப் பெண்கள் செய்து கொண்ட ஒப்பந்தம் இப்போது செல்லுமா? என்றெல்லாம் நாஸ்திகப் புத்தியில் தோன்றும். கதையின் நீதியை மட்டும் கவனிப்போம். களர் பூமி அசுத்தம், மரத்தின் பால் அல்லது பிசின் அசுத்தம், ஸ்திரீகளின் ருது காலமும் அசுத்தம் என்பதை எடுத்துக்கொள்வோம்.

## ரிஷி பஞ்சமி விரத ஸ்வரூபம்

ஆவணி சுக்கில பஞ்சமி அன்று நாயுருவியால் பல் துலக்கி ஸ்நானம் செய்து உபவாசத்துடன் இருந்து பகலில் ரிஷிகளுக்குரிய காலத்தில் காசியப்பர், அத்திரி, பரத்துவாசர், விசுவாமித்திரர், கௌதமர், ஜமதக்கினி, வசிஷ்டர் எனும் சப்தரிஷிகளை கலச தீர்த்தத்தில் ஆவாஹனம் செய்து சோடசோபசாரப்பூசை செய்ய வேண்டும். வசிஷ்டர் அருகில் அருந்ததியை தனியாகப் பூஜிக்க வேண்டும். இரவிலும் பூசை செய்து கண் விழித்து கதை கேட்டு காலையில் நித்திய கர்மா முடிந்த பிறகு புந: பூசை செய்து கலச ஜலத்தால் அபிஷேகம் செய்துகொள்ள வேண்டும். இப்படி ஏழாண்டுகள் செய்து முடிவில் தம்பதி பூசை செய்து விரதத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும். அதனால் ஸ்திரீகள் இந்திரனிடமிருந்து பெற்ற பிரம்மஹத்தித் தோஷம் அகலும் என்பது மறுகதையின் போக்கு. நியமத்தால் லட்சுமி கடாட்சம், சந்தானம் முதலியன உண்டாகும். தீட்டு வீட்டில் கலந்தால் நோய் கஷ்டம் ஏழ்மை முதலியன உண்டாகும்.

# ரிஷி பஞ்சமி விரதத்தின் மகிமை (கதை)

விதர்ப்ப தேசத்திலே உதங்கர் என ஒரு வேதியர் இருந்தார். சுசீலை என்னும் மனைவியிடம் அவருக்கு ஒரு புத்திரனும் புத்திரியும் உண்டானர்கள். மிக்க அழகும் குணமும் வாய்ந்த பெண்ணுக்கு தக்க வரனைத் திருமணம் செய்வித்தார். அவள் முன்வினைப்பயனால் அதி பால்யத்திலேயே விதவை யானாள். பால விதவையைக் கண்டு பெற்றோர் மனம் நொந்து கருமம் ஒழிய காசி சென்றார்கள். ஒருநாளிரவு பிதா பெண்ணின் உடலெல்லாம் துர்க்கந்தம் உள்ள புழுவாயிருக்கக் கண்டு கலங்கினர். அறிவில் சிறந்த ஒரு தபோதனிடம் இதைக் கூறிக் கதறினர். அவர் ஞானக்கண்ணால் இதற்கான காரணத்தைக் கண்டு கூறினர்.

"உதங்கரே!உமது பெண் முற்பிறவியில் வீட்டிற்கு வரக்கூடாத சமயத்தில் தீட்டை மறைத்து எல்லாப் பொருள்களையுந் தொட்டு உள்ளே புழங்கினாள். இறந்த பின் பல்லாண்டு பல நரகங்களில் பல்வகைத் துன்பங்களை அநுபவித்து அதற்கு முன் செய்த புண்ணியத்தால் உமது பெண்ணாகப் பிறந்தாள். தீட்டைக் கலந்த பாபசேஷத்தால் பால விதவையானாள். நித்தியமே அவள் உடல் துர்நாற்றமுள்ள புழுக்களால் நிறைந்திருந்தது. அவள் துக்கத்தினால் அதை அறிவதில்லை. ரிஷி பஞ்சமி விரதத்தை நன்கு அநுஷ்டித்தால் அந்தப் புண்ணியத்தால் புழுக்கள் அகலும். மறுபிறப்பில் சுமங்கலியாக புத்திர பௌத்திரர்களுடன் வாழ்வாள்" என்றார். உதங்கர் தன் பத்தினியுடன் தானும் அதைச் செய்து புண்ணிய பலனைத்தந்தார். அன்று முதல் துர்க்கந்தமும் புழுக்களும் அகன்றன. மறுபிறப்பில் சகல பாக்கியங்களுடன் தீர்க்க சுமங்கலியாய் வாழ்ந்தாள்.

# அநந்த (பத்மநாப) விரதம்

விஷ்ணு நாமாக்களில் மிகச்சிறந்தது அச்சுதானந்த, கோவிந்த என்பது. பகவான் அநந்தன் அல்லது ஆதிஷேசன் என்ற பெயருடன் பாதாள உலகத்தில் இருந்து தனது ஆயிரம் பண மண்டலங்களால் தாங்குகின்றார். காலச்சக்கரத்தை நடத்துகிறார். அங்ஙனம் அவர் ஒரு கல்பத்தில் பூமண்டலத்தை தலைகளால் தாங்க ஆரம்பித்த நாளே இது. அநந்த விரத பூஜாங்கமாக முதலில் யமுனைக்கு பூஜை செய்ய வேண்டும். விஷ்ணுவுக்கும் யமுனைக்கும் கிருஷ்ணவதாரத்தில் நெருங்கிய தொடர்பு உண்டு. ஆதலின் யமுனையை விதிப்படி பூசை செய்து தர்ப்பையினால் அநந்த உருவத்தை அமைத்து ஐந்து தலைகளுடன் கலசத்தில் வைத்து அதன் அருகே 14 ஆவரண தேவதைகளையும் ஆவாஹனம் செய்து 14 முடியுள்ள பட்டுக்கயிற்றையும் பூசை செய்யவேண்டும். பூஜை முடிந்த பின் அந்தக் கயிற்றை இடதுகையில் கட்டிக்கொண்டு பிராமணனுக்குத் தட்சணை

தாம்பூலம் அளிக்கவேண்டும். இங்ஙனம் 14 ஆண்டுகள் செய்து உத்தியாபனம் செய்ய வேண்டும். அநந்தன் அருளால் அநந்தமான பாக்கியம் பெறலாம்.

# இதன் பெருமையை விளக்கும் கதை

கிருத யுகத்தில் வசிஷ்டர் வம்சத்தில் உதித்த சுமந்து முனிவர் பிருகுவின் பெண்ணுன தீக்ஷா என்பவளை மணந்து இல்லறத்தில் ஈடு பட்டார். சீலா என்னும் புத்திரியை பெற்ற பின் தீக்ஷா இறந்தாள். ஒரு ஆச்சிரமும் இல்லாமல் ஒரு நிமிடம் கூட இருக்கக் கூடாதென கர்கசா என்பவளை மணந்தார். தக்க வயதில் சீலாவை கௌண்டன்ய ரிஷிக்கு மணம் செய்வித்தார். அவளது இளைய தாயார் ஸ்ரீ தனமாக ஒன்றும் அளிக்காமல் சாப்பிட்டு மிகுந்த சத்து மாவை வழிக்கு உணவாகக் கட்டிக்கொடுத்து பெண்ணையும் மாப்பிள்ளையையும் அனுப்பி விட்டார். இதைக்கண்டு வருந்தி சீலா தன் தாயை நினைத்து அழுதுகொண்டே சென்ருள். இடைவழியில் பெண்மக்கள் ஓரிடத்தில் கூட்டமாக இருக்கக் கண்டு அவர்களிடம் சென்று ஆங்கென்ன விசேடம் என விஞவினுள். இன்று அநந்த பத்மநாபனை பூஜிக்கும் விரதநாள் என்று அவர்கள் கூற தானும் அவர்களுடன் கூடி அவ்விரதத்தைச் செய்து பட்டுக்கயிற்றைக் கட்டிக்கொண்டாள். பசியுடன் ஊர் வந்து சேர்ந்தாள். விரத மகிமையால் கௌண்டன்யருக்கு நல்ல வருமானம் வந்தது. ஏழ்மை அகன்றது. ஆடை ஆபரணங்கள் அணிந்து இல்லறத்தை செவ்வனே செய்து வந்தாள். ஒரு நாள் ஏதோ கோபம் கொண்ட கௌண்டன்யர் இது எதற்காக என்று அவளது கையில் இருந்த கயிற்றை அறுத்துத் தீயில் எறிந்தார். அவள் ஓடோடி வந்து அத்தீயில் எரிவதற்குள் அதைப் பாலில் நனைத்தாள். அன்று முதல் செல்வம் குன்றி பலவகைத்துன்பம் தோன்றிற்று. அவர் குடும்பத்திலே பரம ஏழையான பின் அவர் இதற்கு என்ன காரணம் என மனைவிமூலம் அறிந்தார்.

தான் கோபத்தினில் அறுத்து எறிந்தது சாதாரண பட்டுக்கயிறு அல்ல. அது ஆதிசேஷ ஸ்வரூபம் என அறிந்தார். ஆதிசேஷனைத் தேடி அவர் அருள் பெற வேண்டும் என ஆரண்யம் சென்ருர். அலைந்தார். நோன்புக் கயிற்றில் ஆதிசேஷன் உளன் எனவுணர்ந்து சேஷனை எங்கு காண்பேன்? எப்படி அவனருளைப் பெறுவேன்? என ஏங்கினுர். இடையில் ஒரு மாமரத்தைக்கண்டு சேஷனைக் கண்டாயா? என்ருர். அது எனக்குத் தெரியாது என்றது. புல்லை மேயாமல் புல்தரையில் ஓடும் பசுவை, காளையை, தடாகத்தை, கழுதையை, யானையையும் பார்த்து பித்தன் போல் சேஷனைக்கண்டீர்களா? என்று விஞவினுர். அவைகள் நாங்கள் காணவில்லை என்றன. மேன்மேலும் இதே வேலையாகத் திரிந்தார். தற்செயலாக ஒரு கிழ வேதியரைக் கண்டார். அவர் இங்கே வாரும் என கௌண்டன்யரை அழைத்துச் சென்று தனது அரசமனைக்குள் நுழைந்தார்.

கிழப்பிராமணன் திடீரென சேஷஞக மாறினர் சிம்மாசனத்தில் அமர்ந்தார். அருகில் அஷ்ட மகா பூதிகள் அவரைச்சேவித்தன. சங்கு சக்கர கதாபாணியாக காட்சி தந்தார் கிழவர். கௌண்டன்யர் தன்னை ஆட்கொண்ட அவர் காலில் விழுந்து அவரே சேஷன் என தனது அபசாரத்தை மன்னிக்கும்படி வேண்டினர். கருணைக்கடலான கருடவாகனன் அவரை ஆசீர்வதித்தார்.

அவர் தான் கண்ட மாமரம் முதலியவை மனிதனைப்போல் பேசியது எதனல்? எனக் கேட்கப் பகவான் ஒன்றென்றுகக் கூறினர். வித்தையால் கர்வம் கொண்டு சீடனுக்கு பாடம் கூருத பண்டிதர் மாமரமானர். செல்வம் இருந்தும் அன்னம் அளிக்காத ஸ்திரீ பசுவாகப் பிறந்து அருகிலுள்ள புற்களை தின்னமல் அலைகிறள். காளையே மதங்கொண்டு விளையாத களர் பூமியைத் தானம் செய்த அரசன். கழுதை சதா பிறரை தூஷித்துக்கொண்டிருந்த மனிதன். யானையோ தர்ம சொத்தை விலைக்கு விற்று வாழ்ந்தவன். இரு தடாகங்கள் தர்மா தர்மங்கள். நீ நன்கு அநந்த விரதம் செய் என விளக்கினர். கௌண்டன்யர் அதைச்செய்து முன்னிலும் அதிக செல்வம், புத்திர பௌத்திரர் அனைத்தும் பெற்று இன்றைக்கும் ஆகாயத்தில் மனைவியுடன் நட்சத்திரமாக இருக்கிறர் என கிருஷ்ணன் தர்மராசாவுக்குக் கூறி அநந்த விரதத்தை அநுஷ்டிக்கச் செய்தார். அதனல் தான் சத்துருவை வென்று தருமர் ஜயம் பெற்றர்.

## உமா மகேஸ்வர விரதம்

பௌர்ணமித்திதி சிவ,விஷ்ணு தேவி பூஜைகளுக்கு மிகச்சிறந்த காலம். மாத்ரபத பௌர்ணமியில் உமையையும், மகேஸ்வரனையும் நாடி 15 கலசங்களில் 15 உமா, மகேஸ்வர பிரதிமை வைத்து 15 வகைப் பட்சணங்களை நிவேதனம் செய்து 15 முடியுள்ள கயிற்றைத் தரிக்க வேண்டும். 15 ஆண்டுகள் இவ்விதம் பூஜித்து உத்தியாபனம் செய்ய வேண்டும்.

அந்த விரதம் உமா மகேஸ்வர விரதம் இரண்டும் நீண்ட காலம் அநுஷ்டிக்க வேண்டியது. செலவும் அதிகம் உள்ளது. ஆதலால் செல்வமும் சிரத்தையும் உள்ள ஒரு சிலரே இவைகளை அநுஷ்டிக்கின்றனர்.

கோதுமைஅரிசி, கனிவர்க்கங்கள், பட்சணவர்க்கங்கள் எல்லாவற்றையும் தாம்பூல தட்சணையுடன் 15 பிராமணர்களுக்குத் தானம் செய்ய வேண்டும். இரவு கண் விழித்து சிவகதையைக் கேட்க வேண்டும். உத்தியாபநத்தன்று 15 கலசம் 15 பிரதிமை தம்பதிப்பூஜை தச தானம் முதலியவைகளைச் செய்து அன்னதானம் செய்ய வேண்டும். சகல போகங்களையும் தந்து முடிவில் முக்தியையும் அளிக்கும் இது.

# உமா மகேஸ்வர விரதக்கதை

ஒரு சமயம் மகரிஷிகள் எல்லோரும் ஒன்று கூடி உலகத்திற்கு காரணமான வஸ்த்து எது? எதை அறிந்தால் மோட்சானந்தம் பெறலாம்? என வாதம் செய்தனர். அதில் நிர்ணயம் ஏற்படாததால் அனைவரும் கடுந்தவம் புரிந்தனர். தவப்பயனாக முதலில் பிரம்ம வித்யாஸ்வரூபிணியான அம்பிகை ஞானக்கண்ணுக்கு புலப்பட்டாள். அவளை வணங்கித் துதிக்க மறுபடியும் அன்னை அருளால் சிவ தரிசனமும் கிடைத்தது. சக்தியும் சிவனுமே உலக காரணம். மோட்சஸ்வரூபம் என உணர்ந்தனர். ஆதலால் சர்வ வித்தைகளுக்கும் சர்வ மார்க்கங்களுக்கும் கர்த்தாவான அவர்களை சேர்த்து பூசிக்க வேண்டுமென முடிவு கட்டினர். அந்நாளே இந்த விரதநாளாகும்.

துர்வாசர் சிவாம்சமானவர். அவரே ஒரு சமயம் கடுந்தவம் புரிந்து நிதமும் கைலாசம் வந்து சிவ தரிசனம் செய்யவும் தான் சாபமளித்தால் அதனால் தனது தவம் குன்றாமல் இருக்க வேண்டுமென்றும் வரம் பெற்றார். பாவமும் தோஷமும் இல்லாதவரே சிவ நிர்மாலியத்திற்கு ஏற்ற பாத்திரம். ஆதலால் துர்வாசருக்கு சிவன் அளித்த வில்வ மாலை கிடைத்தது. அதைப் பெற்று வரும் வழியிலே கருடன் மீது ஏறிவரும் விஷ்ணுவைக் கண்டார். அவர் இதற்கு தக்க பாத்திரம் என அம்மாலையை அவருக்கு அளித்தார். அவர் அதைக் கண்ணில் ஒற்றி சிரசில் அணியாமல் கருடன் கழுத்தில் வைத்தார். அதனால் கோபம் கொண்ட துர்வாசர் "லட்சுமி உன்னை விட்டுப்பிரிவாள்" எனச்சபித்தார். அதனால் லட்சுமி பாற்கடலில் தங்கி நின்றாள். கருடனும் சக்தி இழந்து குகையில் வசித்தார். இதைச் சிவன் அறிந்து உமா மகேஸ்வர விரதத்தை அநுஷ்டிக்கும்படி விஷ்ணுவுக்குக் கூறினார். அதனால் அவர் கடலைக் கடைந்து வெளிவந்த லட்சுமியையும் பூரண சக்தியமைந்த கருடனையும் பெற்றார். கௌதமர் தேவ விரதன் என்ற அரசனுக்கு மேற்படி விரத மகிமையையும் சிவ நிர்மாலியப் பெருமையையும் கூறினர்.

### ஆவணி மாதத்துக் குரு பூசைத்தினங்கள்

| | |
|---|---|
| 1. குலச்சிறையார் | 2. குங்கிலியக்கலயநாயனார் |
| 3. செருத்துணையார் | 4. நீலகண்ட சிவாச்சாரியார் |
| 5. புகழ்த்துணையார் | 6. அதிபத்தர் |
| 7. இளையான் குடிமாறர் | 8. மறைஞானசம்பந்தர் |

# புரட்டாதி மாத நினைவுகள்

இருட்டாசையாம் குழிவீழாமல் காமுவிரண்டு பேய்கள்
வெருட்டாமல் காஎன்று வேண்டுகின்றேன் இந்தவீணையும்
பொருட்டாக எண்ணி அருட்கோல் அளித்தநீ புன்னகைத்து
புரட்டாசித் திங்களில் வந்தருள்வாய் அன்ன பூரணியே.

–அகத்தியர்

"கன்னித் திங்கள் வருகுதய்யா காசு பணம் சேர்க்க வேண்டும்." என்று பாடிக் கோலாட்டம் சிறிய வயதிலே வீடுதோறும் அடித்துப் பாடசாலைக்குப் பொருள் சேர்த்த செய்தி இன்றும் பசுமையாக நினைவில் இருக்கிறது. புரட்டாதி மாதத்தில் சூரியன் கன்னி ராசியில் வருகின்றபடியினல் புரட்டாதி மாதத்திற்குக் கன்னிமாதம் என்றெரு பெயருமுண்டு.

அக்காலத்தில் வழக்கில் இருந்த இராசி மண்டலம் இன்றுபோல் பன்னிரண்டு இராசிகளைக் கொண்டதல்ல; எட்டு இராசிகளைக் கொண்டதாய் இருந்தது. இந்த எட்டு இராசிகளுள் முக்கிய இடம் பெறுவது கன்னி ராசியாகும். இதனை வேதங்களுள் முதலாவதான இருக்கு வேதமே ஒப்புக் கொண்டுள்ளது.

## நவராத்திரி

தேவி வழிபாட்டின் தொன்மைக்கு கன்னி மாதத்தில் நடைபெறும் நவராத்திரி வழிபாடே சான்றுகும். வடநாட்டார் இதனைத் "தசரா" என்று அழைப்பர். இவ்வழிபாடு எப்பொழுது தோன்றியதென்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. மிக மிகத்தொன்மை வாய்ந்தது. வீடு தோறும் இவ் வழிபாடு மிகப் பண்டுதொட்டே நடைபெற்று வந்துள்ளது. இச்சக்தி வழிபாடு சிறிது பெயர் மாற்றங்களுடன் உலகம் முழுவதும் பரவியிருந்திருக்கின்றது.

புரட்டாதி மாதத்தில் அமாவாசையைத் தொடர்ந்து வருகின்ற ஒன்பது நாட்களும் நவராத்திரி எனப்படும். பத்தாவது நாள் விஜயதசமி எனப்படும். சக்திக்கு ஒன்பது இராத்திரி நவராத்திரி. சிவனுக்கு ஒரு இராத்திரி அது சிவராத்திரி. இதிலிருந்தே சக்தி வழிபாட்டின் மேன்மை விளங்குகின்றது. மைசூரிலும் வங்காளத்திலும் தசராக்கொண்டாட்டம் ஒரு தனிச் சோபையுடன் கொண்டாடப்பட்டு வருகின்றது. தமிழர் வளம்பெருக்கி விளைவளிக்கும் மண்ணை நிலமகள் என்றுர்கள். செல்வத்தைத் திருமகள் என்றுர்கள். கல்வியைக் கலைமகள் என்றுர்கள்.வீரத்தை வீரத்திருமகள் அல்லது துர்க்கை என்றுர்கள்.

மக்களுக்கு வீரம், செல்வம், கல்வி மூன்றும் தேவை என்பதற்காகவே முதல் மூன்று நாட்களும் துர்க்கா வழி பாடாகவும், அடுத்த மூன்று நாட்களையும் இலக்குமி வழி பாடாகவும், கடைசி மூன்று நாட்களையும் கலைமகள் வழி பாடாகவும் கொண்டாடி வருகின்றனர். பத்தாவதுநாள் விஜயதசமி அல்லது வெற்றித் திருநாள் எனப்படும். தேவி மகிடாசுரனை வதைத்த திருநாள். மகிடம் என்பது தாமச குணமாகும்.தாமச குணத்தைப் போக்கிச் சாத்வீக குணத்தைக் கொடுத்த திருநாள். அன்றைய தினம் எல்லா ஆயுதங்களுக்கும் ஓய்வுகொடுத்து ஆயுத பூஜை செய்யும் திருநாள். பள்ளியில் படிக்கும் பிள்ளைகளுக்கும் அன்றைய தினம் பெருங்கொண்டாட்ட தினமாகும். புதிய பிள்ளைகளுக்கு வித்தியாரம்பத்திற்கு ஏற்ற நாள்.

நவராத்திரியில் வரும் அஷ்டமி மஹாஷ்டமி என்றும் நவமி மஹாநவமி என்றும் பெயர் பெறும். ஆதலால் இதனை மஹா நோன்பு என்றும், மகர் நோன்பு என்றும் அழைப்பர். சரத் காலசம்பந்தம் பெற்ற ஆச்வின மாதத்தில் வருவதால் இதற்குச் சாரத நவராத்திரம் என்று பெயர். இதே போல சித்திரை மாதத்தில் வசந்த நவராத்திரம் கொண்டாடப்படுகின்றது. சரத்து, வசந்தம் என்று வருணிக்கப்படுகின்றது. இந்தக் காலங்களில் நோய்கள் மலிந்து மக்கள் பெருவாரியாக நாசம் அடைகின்றனர். இக்காலத்தில் நடைபெறும் தேவி பூஜையால் மக்கள் மலினமடைவதைத் தடுக்கலாம் என்று தேவிபுராணம் கூறுகின்றது.

கலையழகு வெளிப்படுத்தும் பண்டிகையே பொம்மைகளைக் கொலு வைக்கும் நவராத்திரிப் பண்டிகையாகும். இக் கொலு வைக்கும் வழக்கம் தொன்று தொட்டு வருகின்றது. தெய்வப் பிரார்த்தனை கலையார்வம் இவைகள் பிரதிபலிப்பதே இவ்விழாவின் முக்கியாம்சம். வங்காளத்தில் காளிபூசையும், உத்திரப்பிரதேசம், பஞ்சாப் ஆகிய இடங்களில் ராமலீலையும் மைசூரில் சாமுண்டீஸ்வரிப் பூசையும் முக்கிய இடம் பெறும். ஒன்பது இரவு சக்தியாக விளங்கியவள் பத்தாம் நாளன்று சிவத்துடன் சேர்ந்து கலந்து அர்த்தநாரி ஆகி விடுகிறாள்.

புராணக்கதைகளின்படி ராமபிரானின் மூதாதையர்களில் ஒருவரே இவ் விழாவை முதன் முதல் கொண்டாடியிருக்கவேண்டுமென்ற ஒரு ஐதீகம் உண்டு. அவர் அமாவாசை இரவு தொடங்கி பாரதப்புண்ணிய பூமியில் ஓடும் ஒன்பது நதிகளிலிருந்து ஜலத்தை ஒன்பது குடங்களில் கொண்டு வந்து அவைகளில் தேவியின் ஒன்பது அம்சங்களை ஆவாஹனம் செய்து ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கன்னிப்பெண்ணைத் தேவியாகப் பூஜித்து வந்தார்.

சரஸ் என்றுல் நீர் என்றும், ஒளி என்றும் அர்த்தம். சூரியன் ஒளியை அளிப்பதால் அவனுக்கு "சரஸ்வான்" என்று ஒரு பெயருண்டு. தங்கு தடையின்றி பிரவாகமாக வருவதற்கும் "சரஸ்" என்று கூறுவதுண்டு. வாக்தேவியின் அருள் இருந்தால் வார்த்தைகள் தங்குதடையின்றி பிரவாகமாக வெளி வருவதற்குச் சந்தேகம் என்ன?

விஜயதசமியன்று அரசகுடும்பத்தினர் வன்னிமரத்தடிக்குச் சென்று பூஜை செய்வர். இந்த வைபவத்தையொட்டியே அன்று கோயில்களில் அம்புபோடும் உற்சவம் நடைபெறுகின்றது. வன்னிமரம் பாவத்தையும், சத்துருக்களையும் அழிக்கக்கூடியதென்று சொல்வதுண்டு. துர்க்கையின் உருவமென்று வன்னிமரத்தை வருணிப்பதுண்டு. பாண்டவர்கள் அஞ்ஞான வாசத்தின் போது தங்கள் ஆயுதங்களை வன்னிமரத்தின் மேல் ஒளித்து வைத்திருந்து பின்னர் அங்கிருந்து எடுத்துச் சண்டைபோட்டு வெற்றி பெற்றனர்.

இராவணனைச் சம்ஹரிக்க ராமர் சக்தியைப் பூசை செய்தார். அதனைக் கொண்டாடுவதே நவராத்திரி என்று வங்கமொழியில் இராமாயணம் எழுதிய கிருத்திய வாய் என்ற கவி எழுதியிருக்கிறுர்.

## மகாளயம்

மகாளயம் என்ற சொல்லுக்குப் பெரிய இருப்பிடம் அல்லது சந்தோசமான காலம் என்று பொருள். மகான்களான நமது பித்ருக்கள் பூமியில் வந்து தங்கி 16 நாட்கள் நம்முடன் இருக்கின்றனர். அவர்களுக்கு இந்தக் காலம் இருப்பிடமானதால் மகாளயம் என்றும் அர்த்தம் பொருந்தும். சூரியன் கன்னிராசியில் புகுந்த போது ஆஷாடம் முதலான ஐந்தாவது அபர பக்ஷம் வரை யமதர்மராஜன் தன்னிடமுள்ள பித்ருக்களை பூமிக்குச் செல்லும்படி உத்தரவு இடுகிறுர். பித்ருக்கள் வந்த அந்த 16 நாட்களுமே மகாளய விதிப்படி அன்னசிரார்த்தம் செய்ய வேண்டும். அல்லது கிரண்ய சிரார்த்தமாவது செய்து ஒரு நாள் மாத்திரம் மகாளயம் செய்து மற்ற நாட்களில் தர்ப்பணம் செய்யலாம். இதுவும் முடியாதவர்கள் மாத்ரு, பித்ருதிதி அல்லது மகாபரணி விசதிபாதம், மத்யாஷ்டமி முதலிய புண்ணிய காலங்களிலாவது கிரண்யமாகச் செய்வது விஷேடமாகும். ஒவ்வொரு தனத்தர் பணத்தால் என்னென்ன வகையான நன்மை உண்டாகின்றதென தர்மசாஸ்திரம் விரிவாகக் கூறுகின்றது.

நாம் சௌக்கியமாக வாழவேண்டும் என்றுல் தேவர்களை ஆராதிக்க வேண்டும். பித்ருக்களை திருப்தி செய்ய வேண்டும். தேவர்களை பிரீதி செய்வதற்காக ஹோமங்கள் யக்ஞங்கள் செய்யப்படுகின்றன. பித்ருக்களை பிரீதி

செய்வதற்காக சிரார்த்தம், தார்ப்பணம் ஆகியன செய்கின்றோம். தெய்வ காரியங்களுக்கு பக்தி வேண்டும். பித்ரு காரியங்களுக்கு சிரத்தை வேண்டும். சிரத்தையாகச் செய்யப்படுவதால்தான் சிரார்த்தம் எனப்பட்டது. சிரத்தை யின்மை பெரும்பாவம். சிரத்தை பாவத்தை அகற்றும். சிரத்தையில்லாதவன் தேவர்களுக்கு நிவேதனம் அளிக்க தகுதியற்றவன். சிரத்தையுடன் அளிக்கும் அன்னம்தான் விருந்தாளி உண்ண வேண்டும். மனிதனே சிரத்தையின் உருவம் தான். எவனுக்கு எந்தவிதமான சிரத்தை இருக்கிறதோ அவ்விதம் அவன் உருவெடுக்கிறான்.

பீஷ்மர் தர்மருக்குச் செய்த உபதேசத்தில் சம புத்தியைக்கொண்டு சிரத்தையுடன் எந்தக் காரியம் செய்தாலும் அது வேள்விதான். அதுதான் தர்மம் என்று அறிவுறுத்தினர்.

பித்ருக்களுக்கு நமது ஒரு வருடம் ஒரு நாள் ஆதலால் நாம் அவர்களுக்குச் செய்யும் சிரார்த்தம் அவர்களுக்கு தினம் உணவு கொடுப்பது போலவே. அமாவாசையில் எள்ளும் தண்ணீரும் இறைத்துத் தர்ப்பணம் செய்வது அவர்கள் தாகத்திற்குத் தண்ணீர் தருவது போல. மாளய பட்சத்தில் எல்லாப் பித்ரு தேவதைகளையுமே திருப்தி செய்யவே மாளய சிரார்த்தம் செய்யப்படுகின்றது. சூரியன் சிம்ம கன்னி ராசிகளில் பிரவேசித்தவுடன் பித்ரு தேவதைகள் யமதர்மனிடம் விடை பெற்றுக் கொண்டு தத்தம் குடும்பத்தினருடன் தங்க வந்து விடுகிறார்களாம். மகாளயம் என்பதற்கு எல்லாப் பித்ருக்களும் ஒன்று கூடுவது என்பது பொருள்.

ஹிந்து மதம் ஐம்பெரும் வேள்விகளைப்பற்றிக் கூறுகின்றது. இந்த வேள்விகளில் பித்ரு வழிபாடும் ஒன்றாகும். பித்ருக்களை வள்ளுவர் "தென்புலத்தார்" என்ற சொல்லால் அழைக்கிறார்.

## நிறைபணி

புரட்டாதி பௌர்ணமியில் ஆலயங்களில் பலவித கறிகாய் வகைகளைக் கட்டித் தொங்க விட்டு நிறைபணி விழா கொண்டாடப்படுகின்றது. தாவர உலகில் நமக்காக இவ்வளவு காய்கறிகளை கடவுள் படைத்து நம் பசியை ஆற்றிக்கொள்ள வழிசெய்திருக்கிறார் என்பதை உணர்த்தவே இந்த விழா

எல்லாச்சத்துக்களும் உள்ள இவை இருக்கும் போது புலால் உணவு ஏன்? என்கின்ற கேள்வியையும் கேட்பதுபோல இந்தவிழாவின் நோக்கம் அமைந்துள்ளது.

எது அறம்? எனக்கேட்டு அதற்கு கொல்லாமை என்று பதில் அளிக்கிறார் வள்ளுவர் பெருமான். நெய்யை தீயில் சொரிந்து 1000 யாகம் செய்வதை விட ஒரு உயிரைக் கொன்று அதன் உடலை உண்ணாமை நன்று என்கிற கருத்தை

"அவி சொரிந்தாயிரம் வேட்டலில் ஒன்றென்
உயிர் செகுத்து உண்ணாமை நன்று"

என்கிற குறளில் அவர் வெளியிட்டிருக்கிறார். சித்த சுத்திக்கு தூய உணவு முக்கியம் என்பது குறித்து காஞ்சிகாமகோடிபெரியவர்கள் கூறியிருப்பதாவது:

"பல நற்பண்புகள் ஏற்படுவதற்கு தூய உணவு ஒரு முக்கிய காரணம் என பல மகரிஷிகள் உபதேசித்து உள்ளனர். உட்கொள்ளும் உணவுக்கும் மனநிலைக்கும் சம்பந்தம் இருக்கின்றது. மாமிச உணவை நீக்கி அகிம்சையான உணவை ஒவ்வொருவரும் உட்கொள்ள வேண்டும். நல்ல உணவைத் தயாரிக்கச் சரியான வழி அதை நாமே தயாரிப்பதாகும்."

மாமிச உணவில்லாமலேயே மனிதர்கள் ஆரோக்கியத்துடன் வாழ முடியும் என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. அதை உத்தேசித்துத் தான் இவ்விழா கொண்டாடப்படுகிறது.

# புரட்டாதிச்சனி

**மனக்கவலைக்கு இங்கு இடமில்லை தாழ்வில்லை வாட்டமில்லை**
**இனிக் கிரகங்கள் கொடும்பார்வை இல்லை இடரும் இல்லை**
**எனக்கும் இரங்கி என் பாடலை ஏற்றாய் பேரின்பம் ஈந்தாய்**
**சனிக்கிழமை கண் வருவாய் வசங்கரி சங்கரியே**

_ அகத்தியார்.

புரட்டாதி மாதத்திற்குரிய விசேட நாள் சனிக்கிழமையாகும். சனிபகவானை திருப்தி செய்ய விரும்புவோர் புரட்டாதி மாதத்தில் வரும் எல்லாச் சனிக்கிழமைகளிலும் நோன்பு நோற்று சனி பகவானுடைய வாகனமாகிய காகத்திற்கு உணவு படைத்து அது உண்ட பின்பே தாம் உண்பர். காகம் உண்ணவிட்டால் அது உண்ணும்வரை காத்து நிற்பார். சில வீடுகளில் படைக்கும் உணவுகளை காகங்கள் உண்பதில்லை. அங்ஙனம் உண்ணவிட்டால் தாம் சமைத்ததில் ஏதோ குறை உள்ளது என்று கருதி மீண்டும் புதிய பாத்திரங்களில் சமைத்து காகத்தை அழைப்பர். புரட்டாதி மாதத்து கடைசி சனிக்கிழமையில் அன்று சனி பகவானுக்கு எள் எண்ணை விளக்கெரித்து விரதத்தைப் பூர்த்தி செய்வர்.

## புரட்டாதி மாத குரு பூசைகள்

ஏனாதி நாதர்
நரசிங்க முனையரையர்
உருத்திர பசுபதியார்
திருநாளைப்போவார்
அருணந்தி சிவாச்சாரியார்
கடையிற் சுவாமிகள்

# ஐப்பசி மாத நினைவுகள்

மைப்படியுங் கயற்கண்ணி மதுரை மரகதத்தால்
கைப்படியா எழில்மான் என்று அரன் உன்னைக் கைப்பிடித்தான்
அப்படியே மணக்கோலங் கண்டு ஏழை அகம் மகிழ
ஐப்பசி மாதம் வருவாய் அடியேன் அடைக்கலமே.

_ அகத்தியர்

ஐப்பசி என்பது தமிழ்ப் பெயர். அது அசுவினியைக் குறிக்கும். இம் மாதப் பௌர்ணமி அசுவினி நட்சத்திரத்தோடு கூடி வருவதால் இம் மாதம் ஐப்பசி எனப்பட்டது. முற்காலத்தில் உள்ளவர்கள் கார்த்திகை முதலாக நட்சத்திரத்தைக் கணக்கிடுவது வழக்கம். தற்காலத்திலே அசுவினி நட்சத்திரத்தை முதலாவதாகக் கொண்டே நட்சத்திரத்தைக் கணக்கிடுகிறார்கள். முதலாவது நட்சத்திரத்துடன் இம்மாதப் பூரணை சேர்வதால் இம்மாதம் பெயரளவிலும் சிறந்தது.

இம்மாதத்தில் பூர்வம், அபரம் என்னும் வளர்பிறை தேய்பிறை நாட்களில் இன்ன செய்தல் வேண்டும் எனப் பெரியோர் விதித்துள்ளனர். அவர்கள் தேய்பிறையில் செய்தலிலும் வளர்பிறையில் செய்தலையே வற்புறுத்தினார்கள். தாமும் கைக்கொண்டனர். தேய் பிறையில் சிறந்த நாட்கள் துவாதசி, சதுர்தசி, அமாவாசை என்பன. வளர்பிறையில் பிரதமை, துதியை, திருதியை, சதுர்த்தி, பஞ்சமி, சட்டி என்பன.

## சட்டி நோன்பு

முருகப் பெருமான் சூரனைச் சங்கரித்த பெருமையைக் கொண்டாடுவதே கந்தசஷ்டி விழாவாகும். முருகன் கோயில் கொண்டுள்ள எல்லா ஆலயங்களிலுமே கந்தசஷ்டி விழா மிகச் சிறப்பாக ஆறுநாட்கள் கொண்டாடப்படுகின்றது. ஐப்பசி மாதத்தில் வரும் வளர்ப்பிறைச் சஷ்டி அன்றுதான் முருகப்பெருமான் சூரபத்மனை அழித்தநாள்.

ஐப்பசி மாதம் வளர்பிறைச் சஷ்டியைக் கடைசி நாளாகக் கொண்டு திருவிழாக்கள் நடைபெறுகின்றன. இந்த நாளில்தான் விழாவை நடத்த வேண்டும் என்பது ஸ்கந்தோத்ஸவ விதிபடலத்திலும், கௌசிகப்பிரச்சன குமாரதந்திரத்திலும் கூறப்பட்டுள்ளது.

இந்த ஆறு நாட்களும் விரதம் இருக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் விடியற்காலம் எழுந்து நீராடி நித்திய கடன் முடிந்த பின் பூரண கும்பம் வைத்து தருப்பையைப் பரப்பி அதன்மீது சந்தனம் வைத்து குங்குமம் அக்ஷதை இட்டு முருகனை அதில் ஆவாஹனம் செய்து மலர் தூவி தூபதீபம் காட்டி அர்ச்சித்து வழிபட வேண்டும். பகலிலும் இரவிலும் உறங்கக் கூடாது.

ஆறுகாலப்பூசை செய்ய வேண்டும். கந்தன் சரிதம் கேட்க வேண்டும். பாராயணம் செய்ய வேண்டும். தியானம் செய்ய வேண்டும். 7ம்நாட் காலையில் பாரணை செய்ய வேண்டும்.

வசிஷ்ட முனிவரின் உபதேசப்படி முசுகுந்தச் சக்கரவர்த்தி சட்டி நோன்பை அளவிறந்த காலம் செய்தான். முருகக் கடவுள் மயில் மீது வீரவாகு தேவர் இலக்கத்தெண்மர் முதலியோர் சூழ காட்சி கொடுத்தருளினர். முசுகுந்தன் மகிழ்ச்சி அடைந்து முருகக் கடவுளைப் போற்றினன். முருகக் கடவுள் முசுகுந்தனைப் பார்த்து "உனக்கு வேண்டிய மேன்மைகள் யாவை?" என்று கேட்டார். முசுகுந்தன் முருகக் கடவுளைப் பார்த்து "நிலவுலகம் முழுவதையும் அடியேன் ஆளும்படி வீரவாகு தேவர் முதலியோர் யாவரையும் துணையாகத் தந்தருளும்" என்று வேண்டிக்கொண்டான். முருகக்கடவுள் வீரவாகு தேவர் முதலியோரைப் பார்த்து "நீவீர் முசுகுந்தனுக்கு துணைவர்களாக இருக்கக் கடவீர்கள்" என்று திருவாய் மலர்ந்தருளினர். வீரவாகு தேவர் முதலியோர் அதை மறுத்தார்கள். ஆறுமுகக்கடவுள் வீரவாகு தேவர் முதலியோரைப்பார்த்து நீங்கள் நம் உரையை மறுத்தீர்கள். ஆகையால் மக்கள் யாக்கையை எடுத்து முசுகுந்தனுடைய படைகளாகப் பலகாலம் இருந்து பின்பு இங்கு வந்து சேரக் கடவீர்கள் என்று கட்டளையிட்டார். தாம் பூதப்படைகளோடு மறைந்தருளினர்.

முசுகுந்தச் சக்கரவர்த்தி கருவூர் என்னும் நகரத்தில் இருந்து அரசு புரிந்தான். அந்நகரில் பல மாடவீதிகளை இயற்றினன். அவைகளுள் வீரவாகு தேவர் முதலியோர்களை இருத்தினன். அவர்களுக்கு வளம்மிகுந்த நாடுகளையும். படைகளையும் கொடுத்து படைத்தலைவர்களாக்கினன். அனைவருக்கும் திருமணம் செய்து வைத்தான்.

ஒரு புலவரிடம் குடம், சட்டி இவைகளை வைத்து ஒரு பாடல் பாடச்சொன்னன். முருகபக்தரான அப்புலவர் "குக்குடத்தைப் பிடித்தவன் சட்டியை நோக்கக் குறைவில்லையே" என்று முடியும் செய்யுளைப் பாடினர். குக்குடம் என்பது கோழி. கோழிக்கொடியைப்பிடித்த முருகனின் சட்டியை அநுஷ்டித்தால் ஒரு குறையும் வராது என்பது இதன் பொருள். கேரளாவில் குமர சட்டி மிகவும் பிரபலமான விரதமாகும்.

திருக்குற்றுலக் குறவஞ்சி என்ற நூலில் கந்த சட்டி நோன்பைப் பற்றி பின்வரும் பாடல் மூலம் தெரிவிக்கின்றது.

மீறு மிலஞ்சிக் குறத்தியைக் கொண்டசெவ்
வேட்குற வன் முதல் வேட்டைக்கு போனநா
ளாறுநாட் கூடியொரு கொக்குப்பட்ட
தகப்பட்ட கொக்கை அவித்தொரு சட்டியிற்
சாறாக வைத்த பின் வேதப் பிராமணர்
தாமும் கொண்டார் சைவர் தாமும் கொண்டார் தவம்
போறுமுனிவரு மேற்றுக் கொண்டாரிதைப்
பிக்குச் சொல்லாமலே கொக்குப்படுக்கவே
கண்ணி கொண்டு வாடா குளுவா

இப்பாடல் சிலேடையாக அமைந்த கருத்தை உடையது. வள்ளி நாச்சியாரை மணம் முடித்த செவ்வேற் பெருமான் முதன்முதலில் சண்டைக்குப் போய் ஆறு நாள் சண்டை செய்தார். அதிலே மாமரமாக நின்ற சூரனை சட்டித் திதியிலே கொன்று அருளினர். இந்த சட்டித் திதியிலே சூரனை சம்ஹரித்த திருவிழாவை வேதப் பிராமணரும் சைவர்களும், முனிவர்களும் முறையாகக் கொண்டாடுகிறார்கள்.

## தீபாவளி

ஐப்பசி மாத அமாவாசைக்கு முன் வரும் திரயோதசி, சதுர்த்தசி, அமாவாசை அதனடுத்த கார்த்திகை சுக்கிலப்பிரதமை இந்த நான்கு நாட்களும் தீபாவளி சம்பந்தப்பட்ட நாட்களாகும். தீபாவளி என்னும் சொல்லுக்கு தீபங்களின் வரிசை என்பது பொருள். உலகில் உள்ள எல்லா இந்துக்களும் இத்தினத்தைக் கொண்டாடுகிறார்கள். இது மிக மிகப் பழங்காலத்திலிருந்தே இந்துக்களின் வாழ்க்கையோடு கலந்து போன கொண்டாட்டமாகும்.

மேலே கூறிய நான்கு நாட்களும் தீபங்களை வரிசையாக ஏற்றி மகிழ்தல் ஒரு வகை. திரயோதசியையும் சதுர்த்தசியையும் பிரதானமாகக் கொண்டு அதில் தீபாவளி கொண்டாடுவர் தமிழர் முதலிய தென்னாட்டவர். அமாவாசையையும் பிரதமையையும் பிரதானமாகக் கொண்டு குஜராத்தியர், மார்வாரியார் முதலியோர் தீபாவளி கொண்டாடுவர். இச் சதுர்த்தசி தினத்தை நரக சதுர்த்தசி என அழைப்பர். விடிய நான்கு நாழிகையில் சதுர்த்தசி இருக்கும் நாளில் அருணோதய காலத்தில் நரக சதுர்த்தசி ஸ்நானம் விதிக்கப்பெற்றுள்ளது. அருணோதய காலத்தில் எழுந்து தீபங்கள் ஏற்றி வைத்து அதில் லட்சுமியைத்

தியானிக்க வேண்டும். எண்ணெய், பழம், வெற்றிலை, பாக்கு, தின்பண்டங்கள் இவற்றை லட்சுமி நாராயணருக்கு நிவேதனம் செய்ய வேண்டும். லட்சுமி அருள் பெறுவதற்காக தாம்பூலம் தரித்து மனையாளின் கையால் அல்லது தாயாரின் கையால் தலையில் எண்ணெய் இட்டுக்கொள்ளவேண்டும்.

அந்த எண்ணெய்யில் லட்சுமி வசிப்பதாகவும் அன்று நீராடும் வெந்நீரில் கங்கை வசிப்பதாகவும் புராணங்கள் கூறும். அன்று அருணோதயத்தில் எண்ணெய் தேய்த்து நீராடுவோர் கங்கையில் நீராடிய பலனைப் பெறுவார். அன்று அருணோத காலத்தில் சந்திரன் உதித்த பிறகு நிற்கும் காலம் ஸ்நானத்திற்கு மிகச் சிறந்தது என்பர். விடிந்த பிறகு தீபாவளிப்பண்டிகை கொண்டாடப்படும். நண்பர் உறவினர் வீடுகளுக்குச் சென்று கங்கா ஸ்நானம் ஆயிற்று என்று விசாரிப்பதும் வேலைக்காரர்களுக்கு வெகுமதியளிப்பதும் அறுசுவையுடன் விருந்து உண்பதும் அன்று சாஸ்த்திரப்படி அவசியம் செய்யப்படவேண்டிய கருமங்கள் ஆகும். இரவில் திரயோதசி வரும் நாளில் யமனுடைய திருப்தியை உத்தேசித்து யம தீப தானமும் பகலில் சதுர்த்சதி வரும் நாளில் யமதர்ப்பணமும் செய்ய வேண்டுமென்று சாஸ்த்திரங்கள் கூறுகின்றன.

ஸ்ரீ கிருஷ்ண பகவான் நரகன் என்ற அசுரனை வதம் செய்தபோது அவனுடைய கடைசி வேண்டுகோளுக்கேற்ப தீபாவளிப்பண்டிகை கொண்டாடப்படுகிறது என்பது ஐதீகம். வட இந்தியாவில் சில இடங்களில் தீபாவளியன்று நரகாசுரனுடைய உருவங்களைக் கொளுத்தி கிருஷ்ண பகவானுடைய வெற்றியைக் கொண்டாடுவதுண்டு.

குஜராத்தியர், மார்பாரியர் அமாவாசையில் அன்று மாலையில் வணிகர்களாயிருப்பவர் சாரதா பூஜை என்று சொல்லி கணக்குப் புத்தகங்களைப் பூசை செய்வர். பழைய கணக்கை முடித்து புதுக்கணக்கைத் தொடங்கும் சடங்கு இது. கணக்குப் புத்தகத்தில் ஸ்ரீ என்ற எழுத்தை 5 அல்லது 7 அல்லது 9 தடவை முக்கோணவடிவம் வரும்படி எழுதுவர். அதிர்ஷ்டமுள்ளதாகக் கருதப்படும் பழைய நாணயத்தை வைத்து லட்சுமி பூசை செய்வர். தீபங்களால் வீட்டை அலங்கரிப்பார். அன்று இரவுக்கு சுகராத்திரி அல்லது பட்ச ராத்திரி என்று பெயர்.

மகாபலிச்சக்கரவர்த்தி முடிசூடிய தினமென்றும் விக்கிரமாதித்திய ராஜன் முடிசூடிய தினமென்றும் ஒரு சாரார் கொண்டாடுவர். ராமபிரான் இராவணனைத் தோற்கடித்து அயோத்தி வந்து சேர்ந்த பொழுது மக்கள் எல்லோரும் நகரத்தைஅணி செய்து இரவில் தீபம் ஏற்றி வைத்து தங்கள் மகிழ்ச்சிவிழாவைக் கொண்டாடினார்கள் என்றும் அதன் பொருட்டே தீபாவளி

விழா கொண்டாடப்படுகிறது என்றும் கூறுவதுண்டு. ஜைனர்களின் முக்கிய தீர்த்தங்கரரான மகாவீரர் பரிநிர்வாணம் எய்திய நாளே இது குறிக்கும் என்றும் ஞான ஜோதி உலகை விட்டு நீங்கியதற்கு சிறிதேனும் ஈடாகப் பூதசோதிகளாகி தீபங்கள் ஏற்றப் பெறுகின்றன என்றும் அவர்கள் கூறுகின்றார்கள்.

இத்திருநாளிலே எமது அக இருள் ஒழிந்து போக வேண்டுமென்றும் அக அழுக்கு இல்லாமல் போக வேண்டுமென்றும் தான் நமது முன்னோர் இக் கொண்டாட்டத்தைக் கொண்டாடினர். நரகாசுரன் கண்ணனால் ஆட் கொள்ளப்பட்ட போது தன்னைப் போல் எல்லோரும் கண்ணன் திருவடிகளை அடையவேண்டுமென்று தான் விரும்பினான். ஆனால் நம்மவரில் பெரும்பான்மை யோர் அன்றைய தினத்தில் தான் குடியும் புலாலும் உண்டு அசுரர்களாக மாறி விடுகிறார்கள். அந்த நிலை மாறி அகத்தில் விளக்கு ஏற்றுவோமாக.

# கேதார கௌரி நோன்பு

புரட்டாதி மாதம் சுக்கில பட்ச தசமி தொடங்கி ஐப்பசி மாதம் கிருஷ்ண பட்ச தீபாவளி அமாவாசை வரை 21 நாட்கள் தினமும் சிவபெருமானுக்கு வில்வத்திலை அர்ச்சனை செய்து 21 இழையிலே ஒரு கயிறு முறுக்கி அதைத் தினமும் ஒரு முடியாக 21 நாள் முடிந்து கடைசி நாளன்று அக்கயிற்றைக் கையில் அணிந்து விரதத்தை முடிக்க வேண்டும்.

சிவலிங்கம் எல்லோருடைய வீட்டிலும் இராது. ஆகவே அம்மியையும் குழவியையும் அலங்கரித்து அம்மி மீது குழவியை நிற்கும் படி அமைத்து கேதாரீஸ்வரரை ஆவாஹனம் செய்ய வேண்டும். 21 நாட்கள் இந்த நோன்பை நடத்த முடியாதவர்கள் கேதார கௌரி விரதத்தன்று 21 பழங்கள், 21 பட்சணவகைகள் செய்து நைவேத்தியம் செய்வதுண்டு. கணவன் மனைவி ஐக்கியத்திற்காக நடத்தப்படும் விரதம் இது.

# கேதார கௌரி விரத மகிமை

கைலாசத்தில் பரமேஸ்வரன் பார்வதிதேவியுடன் சபையில் கொலுவிருக்க பிரிங்கி முனிவர் நர்த்தனம் செய்தார். ஆனந்தத்திற்கு அறிகுறி நர்த்தனம். சிவனே நடராஜ மூர்த்தியாயிருக்கிறார். நடனம் செய்கிறார். நடனம் என்பது இக்காலத்தில் ஆடும் கூத்தாட்டம் அல்ல. உலகை உய்விக்கும் அபிநயம் அது. பிரிங்கி முனிவர் எல்லோரும் வியக்கும் படி நடனம் ஆடினார். எல்லோரும் ஆனந்த பரவசமானதைக் கண்டு சிவனும் பிரிங்கி முனிவருக்கு அநுக்கிரகம் செய்தார். சிவனருள் பெற்ற அவர் அன்னையை விலக்கிச் சிவனை

மாத்திரம் பிரதக்ஷணம் செய்தார். இதைக்கண்ட தேவி, பிரபோ! இது என்ன விந்தை! நாமிருவரும் ஒருவரேயன்றோ? என்னை அவர் விலக்கியது ஏன்? என்றாள். தேவி! நீ பிரகிருதி! நான் புருஷன்! நீ உடல்! நான் உயிர்: உயிருக்கு ஊட்டம் தேடும் முக்தர்கள் உடலைக் கவனியார்! ஆதலின் உன்னை விலக்கினர் என்றார்.

அப்படியானால் அவர் உடலிலுள்ள ரத்த மாமிச தேஜஸ் முதலியவைகளைச் சுருக்குகிறேன் என்று தேவிகூறி அவர் உயிருக்கு ஊட்டம் அளிப்பதைப் பார்க்கலாம் என அங்ஙனமே செய்தாள். நடமாடக்கூட சக்தியில்லாத ரிஷி தவத்தால் மூன்றாவது காலைப்பெற்று நடமாடினர். அப்போதும் பிரகிருதியை மதித்தாரில்லை. மனம் நொந்து தேவி 21 நாள் கேதாரேஸ்வரனை நாடி விரதம் இருந்தாள். சுவாமி அவள் விரும்பியபடி பாதி உடலைத் தேவிக்குத் தந்தார். அர்த்தநாரீஸ்வரரானர். அப்பொழுது பிரிங்கி வண்டு உருவெடுத்து அவர்கள் உடலைத் துளைத்துக் கொண்டு சுவாமியை மாத்திரம் பிரதக்ஷணம் செய்தார். தாயல்லவா தேவி? கோபிக்கவில்லை. கருணையுடன் பிரிங்கியை ஆசீர்வதித்து புத்திரனுக்கிக் கொண்டாள். இந்த விரதம் அநுஷ்டிப்போருக்கும் அருள் புரியும்படி பதியை வேண்டினள்.

தேவி விரதம் செய்யும் போது பணிவிடை செய்த சித்திராங்கதன் என்ற கந்தர்வன் அவனியில் உள்ளோருக்கும் இந்த விரதம் என்னும் வரத்தை அளிக்க வேண்டுமென அர்த்தநாரீஸ்வரரிடம் உத்தரவு பெற்றுச் சென்றான். உஜ்ஜயினியை ஆண்டு வந்த வச்சிரதந்தன் என்னும் வேந்தனுக்கு இதை உபதேசித்தான். அது நாடெல்லாம் பரவிற்று. புண்ணியவதி, பாக்கியவதி என்ற இரு வைசியக் கன்னியர்கள் தாங்களும் செய்ய வேண்டுமென தந்தையிடம் கூறினர்கள்.

அவர் நான் ஏழையல்லவா? எப்படி இதைச்செய்ய முடியுமென்றார்? நீங்கள் உத்தரவு கொடுங்கள் போதும் தேவி நடத்தி வைப்பாள் என நம்பிக்கையுடன் உத்தரவு பெற்று 21 முடியுள்ள நோன்புக்கயிற்றைக் கட்டிக்கொண்டு அதை ஆரம்பித்தார்கள். கருணமூர்த்தியான கைலாசநாதன் நோன்புக்கு வேண்டிய பொருட்களைத் தந்தருளினர். பக்தி சிரத்தையுடன் விரதத்தை செய்தார்கள். அந்தப்புண்ணியத்தால் உஜ்ஜயினியின் மன்னன் புண்ணியவதியை மணந்தான். சோழ தேசத்து அரசன் பாக்கியவதியை மணந்தான். இருவரும் இன்பமாக இல்லறம் நடத்தினர். செல்வம் செழித்தது.

பாக்கியவதி ஒரு புத்திரனையும் பெற்றுக்கொண்டாள். செல்வச்செருக்கு யாரையும் தருக்கும்படி செய்யுமல்லவா? அந்தக் கேதார விரதம் அநுஷ்டிப்பது ராணியின் மதிப்புக்கு ஏற்றது அல்ல! என எண்ணினள். புரோகிதரைக்கொண்டு

சிறிது காலம் செய்வித்தாள். பிறகு அதையும் மறந்தாள். சிவாபசாரம் சீறியது. ஏதோ காரணம் பற்றி மன்னன் அவளது புத்திரனுடன் அவளை ஆரண்யத்தில் கொண்டுபோய் விட்டான். உயர்வு வாழ்வு வாழ்ந்தவர்களுக்கு காட்டில் உள்ளவர்களைப்போல் வாழ்வது மிகக் கஷ்டமாக இருந்தது. தனது சகோதரியிடம் சென்று இதைக்கூறி பொருள் வாங்கி வா என்று புத்திரனை அனுப்பினள். சகோதரியும் இவளது நிலையைக் கேட்டு வருந்தினள். பொற்குடம் நிறைய பொன்னைத்தந்தாள். சிறுவன் வரும்போது கானகத்தே ஒருவன் இப் பொருளைக் கவர்ந்து சென்றன். இதைக்கேட்டு பாக்கியவதி நமக்கு பாக்கியமில்லை. மறுபடியும் இதைக்கூறு என்று சகோதரியிடம் அனுப்பினள். மறுபடியும் வழியில் ஒரு தேவ புருஷன் வந்து விரதம், தானம், தர்மம் செய்யாதவர்களுக்கு பொருள் எதற்காக? என்று கூறி அதையும் அபகரித்துச் சென்றன்.

ஐயோ! என் செய்வேன் என ராஜகுமாரன் அழுது கொண்டே தன் தாயிடம் இதைத் தெரிவித்தான். அப்பொழுதுதான் பாக்கியவதியின் உள்ளத்தில் விரதத்தை விட்டதால் வந்த வினையே இது என்ற எண்ணம் உதித்தது. இறைவன் அருளால் முன்போல் விரதத்திற்கு வேண்டிய பொருள் கிட்டுமென்று நம்பி விரதத்தை ஆரம்பித்தாள். களவு போன பொருளுடன் பதின்மடங்கு தங்கத்தைக்கொண்டு வந்து தந்தான் தேவ புருஷன்.

ராஜகுமாரனுக்குத் தகுந்த வயதும் வந்தது. இதைக்கேட்ட சகோதரி பேரானந்தம் பெற்றள். பொருளைக்கொண்டு சதுரங்க சேனையைத்தயார் செய்து காஞ்சி மாநகரம் சென்றன் அவன். இதை அறிந்த இவனது தந்தை இராஜோபசாரத்துடன் இவர்களை வரவேற்றன். முன்போலவே கேதார விரதத்தைச் செய்து மேன்மேலும் செல்வம், சந்ததி வளர்ந்தன.

## வெள்ளி விரதம்

கிழமைகளில் நான் வெள்ளிக்கிழமை என்று கீதையிலே கண்ணன் கூறுகின்றர். ஏழு கிழமை நோன்புகளுக்குள்ளே வெள்ளிக்கிழமை நோன்பானது முருகக் கடவுளுடைய நோன்பாகும். அதனைக் கடைப்பிடித்தவர்கள் உள்ளத்தில் எண்ணியவை எல்லாம் எண்ணியவாறே அடைவார்கள். இதைக் கந்த புராணம் பின்வரும் பாடலால் தெரிவிக்கின்றது.

எள்ளருஞ் சிறப்பின் மிக்க எழுவகை வாரம் தன்னுள்
வெள்ளி நாள் விரதம் தானே விண்ணவர் உலகம் காத்த
வள்ளல் தன் விரதமாகும் மற்றது புரிந்த மோலோர்
உள்ளமே இல் நினைந்த எல்லாம் ஒல்லையின் முடியுமன்றே.

எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் நோன்பு இருக்க மாட்டாதவர்கள் மாதந்தோறும் வரும் கடைசி வெள்ளிக்கிழமை நோன்பு இருப்பார்கள். அதுவும் இயலாதவர்கள் ஐப்பசி மாதத்தில் வரும் வெள்ளிக்கிழமைகளில் நோன்பு இருப்பார்கள்.

பகீரதன் என்னும் அரசன் வெள்ளிக்கிழமை நோன்பை மேற்கொண்டு சோரன் என்னும் அரக்கனை வென்று இழந்து போன தன்னுடைய அரசுரிமையை திரும்பப் பெற்றான்.

**துள்ளித்திரியும் மனம் உள்ளடங்க நின் தோத்திரங்கள்**
**அள்ளிக்குடித்தேன் உடலம் கூத்தாட அகக்கதவை**
**மெள்ளத்திறந்து தெளிந்து குளிர்ந்து விளக்கேற்றினேன்**
**வெள்ளிக்கிழமையில் வந்தருள்வாய் ஞான வித்தகியே.**

– அகத்தியர்.

### ஐப்பசி மாதக் குருபூசைகள்

1. திருமூலர்
2. திரு நெடுமாறர்
3. இடங்கழியார்
4. சாத்தியர்
5. மெய்கண்ட தேவர்
6. பூசலார்
7. ஐயடிகள் காடவர் கோனார்

# கார்த்திகை மாத நினைவுகள்

வார்த்தை குழறிட மெய் புலகிக்க மனம் உருகி
தீர்த்தமாம் கண்ணீரில் நின் தாள் அலம்பித் தினம் தொழுதேன்
பார்த்தவையாவும் நீ என்று உணரும் பரிபக்குவத்தால்
கார்த்திகை திங்கள் வருவாய் கருணைக் களஞ்சியமே.

– அகத்தியர்.

கார்த்திகை நட்சத்திரத்தன்று பூரணைகூடுவதால் கார்த்திகைமாதம் எனப்பட்டது. கார்த்திகை மாதத்தில் வரும் கார்த்திகை நட்சத்திரம் திருக்கார்த்திகை எனப்பட்டது.

## கார்த்திகை நோன்பு

நாரதமுனிவர் நோன்பினலே மேன்மையடைய எண்ணினர். ஏழுமுனிவர்களிலும் உயர்ந்த நிலைமையை அடைய விரும்பினர். ஆனைமுகக் கடவுளுடைய அடிகளை வணங்கி நின்று "நான் மேன்மையடையுமாறு அடியேனுக்கு ஒரு நோன்பைச் சொல்லி அருளும்" என்று வேண்டிக்கொண்டார்.

ஆனைமுகக் கடவுள் நாரதரைப் பார்த்து " நீ நம்முடைய இளவலாகிய முருகனை வழிபட்டுக் கார்த்திகை நாள் விரதத்தை 12 ஆண்டுகள் முயற்சியுடன் கடைப்பிடிக்கக் கடவாய். அவ்வாறு கடைப்பிடிப்பாயானல் நினைத்ததை அடைவது திண்ணம்" என்று திருவாய் மலர்ந்தருளினர். கார்த்திகை நோன்பை நாரதர் கடைப்பிடிக்க எண்ணினர். நிலவுலகத்தை அடைந்தார். பரணி நாளில் நண்பகலில் மட்டும் ஒருவேளை உண்டார். கார்த்திகை நாளில் விடியற்காலை நீராடினர். வெள்ளுடை அணிந்து நாடோறுஞ் செய்யும் கடன்களைச் செய்தார். ஐம்புலன்களை அடக்கினர். ஆறுமுகக் கடவுளை முறைப்படி வழிபட்டார். வெறும் தண்ணீரை மட்டும் உண்டார். நாணற்புல்லாகிய படுக்கையில் படுத்து முருகக் கடவுளுடைய திருவடிகளை எண்ணிக்கொண்டு அன்றிரவு முழுவதும் உறக்கமின்றி இருந்தார். ரோகிணி நாளில் நீராடல், முருக வழிபாடு முதலியவைகளை முடித்துக்கொண்டு வந்த முனிவர்களோடு உணவு உண்டார்.

நோன்பிருந்து உண்டவர்கள் அன்று பகற்பொழுதில் உறங்கினல் மிகுந்த தீவினை உண்டாகும் என்று உணர்ந்து அன்று பகல் முழுவதும் உறங்காமல் இருந்தார். இவ்வாறு 12 ஆண்டுகள் கார்த்திகை நோன்பைக் கடைப்பிடித்து ஏழுமுனிவர்களிலும் உயர்ந்த நிலைமையை அடைந்தார்.

கார்த்திகை நோன்பை நிலவுலகில் ஓர் அந்தணன் கடைப்பிடித்து முதல் மனுவாகி உலகம் முழுவதையும் ஆண்டான். வேறு ஓர் அந்தணன் கடைப்பிடித்து உள்ளத்தில் நினைத்தவைகளையெல்லாம் அடைந்தான். இறுதியில் திரிசங்கு மன்னனும் ஆனன். ஓர் அரசனும் வேடனும் கார்த்திகை விரதத்தைக் கடைப்பிடித்து சிறப்பை அடைந்தார்கள்.

முருகப்பெருமானை கார்த்திகைப் பெண்கள் வளர்த்தார்கள். ஆகையால் முருகப்பெருமானுக்கு கார்த்திகேயன் எனும் பெயருண்டு.

ஞான சம்பந்தப்பெருமான் ஒற்றியூர் வந்திருப்பதை திருமயிலையில் வாழ்ந்த சிவநேசச்செட்டியார் அறிந்தார். சிவநேசர் ஒற்றியூர் சென்று மயிலைக்கு எழுந்தருளவேண்டுமென்று ஞான சம்பந்தப்பெருமானை அழைத்தார். நான்கு மைல் தூரத்திற்கும் கமுகு, வாழை, தோரணம் கட்டிச் சிறப்புடன் வரவேற்புச்செய்தார். சிவநேசரின் ஒரே ஒரு மகள் பூம்பாவை. விடம் தீண்டி இறந்தாள். ஞான சம்பந்தருக்குத் தான் தன் மகளைக் கொடுப்பேன் என்று பலரறியச் சொல்லியிருந்தார் சிவநேசர். இறந்த பூம்பாவையை எரித்து குடம் ஒன்றினுள் எலும்புகளைப் போட்டு வீட்டின் நடுவே வைத்து பூசை செய்து வந்தார் சிவநேசர். இச் செய்தியை அடியார் மூலமறிந்த சம்பந்தர் கபாலீஸ்வரர் சந்நிதிக்கு அக்குடத்தைக் கொண்டு வரச்செய்து பதிகமொன்று பாடினர். ஒவ்வொரு பாட்டாகப் பாடி பதிகம் முடித்து எலும்பைப் பெண்ணுக்கினர். அப்பதிகத்தே மயிலையில் நடைபெறும் பல விழாக்களைக் காணது பூம்பாவைபோதல் சரியன்று என்று கூறி எழுந்து வரச் செய்தார். அதில் ஒரு பாடல் பின் வருமாறு:

**“வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகில்**
**துளக்கில் கபாலீச் சரத்தான்தொல் கார்த்திகைநாள்**
**தளத்தேந்து இளமுலையார் தையலார் கொண்டாடும்**
**விளக்கீடு காணதே போதியோ பூம்பாவாய்”**

மங்கைமார்கள் கொண்டாடும் இவ்விளக்கீட்டு விழாவினைக் கார்த்திகை நாள் விழா எனக்குறிக்கின்றுர் சம்பந்தர். அதுவும் மிக்க பழங்கால முதலே இவ்விழா போற்றப்பட்டு வந்ததென்பதை தொல் கார்த்திகை நாள் என்கின்றனர். எனவே கார்த்திகை விளக்கீட்டு விழா தமிழ் நாட்டின் பழம்பெருந் திருவிழாக்களுள் ஒன்று என்பது புலனுகும்.

அகநானூறு என்னும் பழம் பெரும் இலக்கிய நூலிலே இக்கார்த்திகை விளக்கீட்டைப் பற்றிப்பல குறிப்புகள் வருகின்றன. காட்டிலே இலவ மலர்கள் மரம் குலுங்கப்பூத்துள்ளன. இலைகள் இல்லை. பூக்கள் செந்நிறங்கொண்டவை.

அம்மரத்திற் சிவந்த பூக்கள் அடுக்கடுகாய் அமைந்துள்ள அந்த இயற்கைக் காட்சி சங்க கால மூதாட்டியான ஒளவையாரை கார்த்திகை விளக்கீட்டு விழாவிற்கு அழைத்துச் சென்றது. மகிழ்ச்சியால் திளேத்து ஆரவாரித்து விழாக்கொண்டாடும் மகளிர் கார்த்திகை நாளில் ஏற்றிவைத்த விளக்கு வரிசையைப்போன்று இலவ மலர்கள் அடுக்கடுக்காய் அமைந்துள்ளன என்று பாடுகிறுர் அவர்.

"வானம் ஊர்ந்த வளம்கொளி மண்டிலம்
நெருப்பு எனச்சிவந்து உருப்பு அவிர் அம் காட்டு
இலே இல மலர்ந்த முகை இல் இலவம்
கலிகொள் ஆயம் மலிபு தொகுபு எடுத்த
அம்சுடர் நெடுங்கொடி பொற்பத் தோன்றி."

தலேவனேப் பிரிந்து தளர்ந்த உள்ளத்தோடு இருந்த தலேவியைக் "கார்த்திகை விழாவிற் கலந்து மகிழ வா" என அழைக்கின்ருள் தோழி மழைக்காலம் நீங்கிய கார்த்திகையின் மாலேக்காலம் நிறைமதி கார்த்திகை நாளில் "குறு முயல் மறு நிறம்" கிளறத் தோன்றுகின்றது. தெருவுதோறும் மாலே தூக்கி மக்கள் விளக்குகளே வரிசை வரிசையாக வைக்கின்றனர். ஊரே விழாவில் சிறக்கின்றது. அவ்விழாவை "ஊருடன் கூடிக் கொண்டாட வருக" என்று கணவனேப் பிரிந்து கவன்றுநின்ற தலேவியின் சிந்தையை மாற்றும் வகையில் அழைக்கின்ருள் தோழி.

"மழைக்கால் நீங்கிய மாக விசும்பில்
குறு முயல் மறு நிறம் கிளற மதி நிறைந்து
அறு மீன் சேரும் அகல் இரு நடுநாள்
மறுகு விளக் குறுத்து மாலே தூக்கிப்
பழவிறல் மூதூர் பலருடன் துவன்றிய
விளகுடன் அயர வருகதில் லம்ம"

_என்பது நக்கீரர் வாக்கு

திருமால் பிரம யாகத்தை அழித்துத் தாமே தீப்பிழம்பான விழா கார்த்திகை விழா என்பர் சிலர். அட்டமங்கலங்களுள் ஒன்ருகிய இவ்விளக்கின் சிறப்பை இவ்விளக்கொளியோடு தொடர்பு படுத்திப் புகழ் பெற்ற திருமால் அம்சம் பெற்ற அரசர்களேப்பாடும் முகத்தான் புறப்பொருள் வெண்பாமாலே என்னும் நூல் "விளக்கீட்டு நிலே" என்னும் துறையால் பாராட்டுவதை அறிகிறேம்.

விளக்கில் இறைவனை இருத்தி வழிபடும் விழாவாக இதைச் சைவர்களும் கொண்டாடினர். கார்த்திகை என்பதற்கு அழல் என்றும் எரி என்றும் பெயர்கள் உண்டு. "அழல் சேர் குட்டம்" என சிலப்பதிகாரம் கார்த்திகையை அழல் என்கிறது. "எரிகடை எழில் வேழம்" என்னும் இடத்தில் பரிமேலழகர் எரி என்பதற்கு" அங்கியைத் தெய்வமாக உடைய கார்த்திகை என்று பொருள் கூறுகிறார்.

தமிழ் நாட்டில் கார்த்திகை விளக்கிடுதல் வழக்கமாக இருந்திருக்கிறது. சீவகசிந்தாமணியில் "கார்த்திகை விளக்கீட்டன்ன கடிகமிழ் குவளைப் பைந்தார்" என்று தொடர் வருகின்றது. கார் நாற்பது "நலமிகு கார்த்திகை நாட்டவர் இட்ட தலைநாள் விளக்கில்" என்று குறிப்பிடுகின்றது. இவ் விளக்கை மலைமேல் இடுவது வழக்கம். "குன்றத்துச் சுடர்" என்று சீவகசிந்தாமணி குறிப்பிடுகின்றது.

கார்த்திகைத் திங்கள் கூதிர் கால முடிவாக நிற்கின்றது. அடை மழையில் கதிரொளி காணமல் வாடி ஒடுங்கிக் கிடந்த மக்கள் நன்றுக உலவித் தங்கள் வாட்டத்தை நீக்கிக் கொள்ள கதிரவன் ஒளியைக் காண விரும்பி மலைமேல் விளக்கிட்டு மகிழ்வதைக் கார்த்திகை விளக்கு குறிக்கிறது எனலாம். இத்தினத்திலே சொக்கப்பனை கொளுத்துவதும் கருதத் தக்கது. திருவண்ணா மலை மீதும் வேறு சில மலைகளின் உச்சியிலும் விளக்கிடுவதும் அன்று விளக்கைக் கண்டு தொழுதபிறகே உணவு உண்பதும் தமிழர் விரத முறை. ஒளிப்பிழம்பான சிவபிரான் அருணகிரியாக நின்று கார்த்திகை திங்களில் கார்த்திகை நட்சத்திரத்திலே அம்மலை மீது காணும் விளக்கை வழிபடுவோர்க்கு நலம் அருள்வதாக பெரியோர் கூறுவர். திருவண்ணமலை உச்சியில் பெரிய அண்டா ஒன்றை வைத்து அது நிறைய நெய் ஊற்றி ஒரு கச்சு வெள்ளைக் கோடித்துணியை அதிலிட்டு பஞ்ச மூர்த்திகளையும் எழுந்தருளச் செய்து வீதி வலம் வந்து மலையைப் பார்த்த வண்ணம் பஞ்ச மூர்த்திகளும் நின்று கொண்டிருக்க ஒருவெடி தீர்க்கப்படும். அவ்வெடிச்சத்தம் கேட்ட உடனே அண்டாவில் உள்ள சீலைக்கு நெருப்பு மூட்டுவார்கள். அது சுவாலித்து எரியும் காட்சி 80 மைல் சுற்றுடலில் உள்ளவர்களுக்கும் தெரிவதாகக் கூறுகிறார்கள். மூன்று நாட்களுக்கு இரவு பகலாக எரிந்து கொண்டிருக்குமாம்.

இந்த நாளில் சிவபெருமான் திரிபுர அசுரரை எரித்த விழா கோயில்களில் நடத்தப்படுகிறது. திரிபுரர்களைக் குறிக்கும் சொக்கப்பனையைக் கொளுத்தி விடுகிறார்கள். சிறுவர்கள் தமது கையில் சுள்ளிக் கட்டுகளை வைத்துக்கொண்டு அதில் குங்குலியத்தைத் தூவித்தூவி எழும் தீயைப் பார்த்து மகிழ்வார்கள். அத்தருணத்தில் சிலர் உப்பை எறிவார்கள். அது பொருத்தமற்றது.

கார்த்திகை மாதம் முழுவதும் மாலையில் விளக்கேற்றும் ஒரு முறையும் உண்டு. காசியில் கங்கைக் கரையில் இவ்வழக்கம் இப்போதும் நடைபெற்று வருகின்றது. முடியாதவர்கள் துவாதசி, சதுர்த்தசி, பௌர்ணமி இந்த மூன்று தினங்களிலாவது தீபவரிசைகளை ஏற்றவேண்டும். நாகம், அரசமரம், சூரியன், தீபம், இவைகளையே பிரதானமாக முன்காலத்தவர் ஆராதித்து வந்திருக்கின்றனர். தீப வழிபாட்டுக்குச் சாதி சமய பேதம் எதுவும் கிடையாது. எல்லோருமே வணங்குகின்றனர்.

வீட்டு விளக்கீடு, சர்வாலய தீபம், குமராலய தீபம், என மூன்று பிரிவாகக் கொண்டாடுவர். வீட்டிலும் வீட்டைச்சுற்றியுள்ள எல்லா இடங்களிலும் தீபம் ஏற்றி வணங்குதல் வீட்டு விளக்கீடு எனப்படும். முருகன் கோயிலில் தீபம் ஏற்றி வழிபடுதலும் சொக்கப்பனை கொளுத்துவதும் குமராலய தீபம் எனப்படும். முருகன் ஆலயம் தவிர மற்றைய எல்லா ஆலயங்களிலும் தீபம் ஏற்றி சொக்கப்பனையைக் கொளுத்துவது சர்வாலய தீபம் எனப்படும்.

**"விளக்கொளியாகிய மின் கொடியாளை**
**விளக்கொளியாக விளங்கிடு நீயே**
**விளக்கிடு மெய்கின்ற ஞானப்பொருளை**
**விளங்கிடுவார்கள் விளங்கினர் தானே"**

என்பது திருமூலர் வாக்கு.

அகல், எண்ணெய், திரி, சுடர் இந்த நான்கும் சேர்ந்தாலே விளக்காகும். இவை நான்கும் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு பொருள்களை உணர்த்துகின்றன. மோட்ச விளக்கு ஏற்றுவதன் தத்துவமும் இதுவே. இது தான் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு சாதனைகள். அனைத்திலும் அரிது அறிவு. ஆதலால் அறிவொளியைத்தான் தீப தேவதையாக நாம் வழிபடுகின்றோம்.

வைஷ்ணவ ஆலயங்களில் விளக்கொளி பெருமாள் என்றே ஒரு தெய்வம் உள்ளது. இவருக்காக தீபப்பிரகாசர் திருக்கோயில் ஒன்றும் காஞ்சியில் உள்ளது. இங்குள்ள திருமாலின் பெயர் விளக்கொளிப் பெருமாள்.

விளக்கு ஏற்றக் கற்றுக்கொண்ட நாளிலிருந்து தான் மனிதன் நாகரீகப்பாதையில் அடியெடுத்து வைக்க ஆரம்பித்தான். அவன் முதன் முதல் பனையோலைகளையும், மரக்கட்டைகளையும் எரித்து விளக்காக உபயோகித்தான். அப்பால்தான் எண்ணெயைக் கண்டு பிடித்தான். தனது அறிவு முதிரவே கற்குழியிலும், சங்கிலும், கிளிஞ்சலிலும் எண்ணெய் ஊற்றி விளக்கேற்றினான்.

பண்டைத் தமிழர்கள் வழிபட்ட மும்மூர்த்திகள் ஞாயிறு, திங்கள், நெருப்பு இவை தான். இறைவனை வேதம் ஓம் என்கிற ஒலி வடிவாக வணங்கும். அதற்கடுத்தபடியாக ஒளி வடிவாக வணங்குகிறது. இக்கருத்தைத்தான்

**"ஒளியாய், உயிர்க்குயிராய் நீங்காதான் இன்ப நினைவு**
**உள்ளத்தான் ஓங்கும் உலகத்தான் பேரின்ப**
**வெள்ளத்தான் விண்ணின் விளக்கு"**

என்ற அடிகளில் விளக்கப்பட்டிருக்கின்றது.

**"சோதி அந்தம் ஆயினும்**
**சோதியுள் ஒரு சோதியானும்"** – சம்பந்தர்

**"தூண்டா விளக்கின் சுடரனையார்"** – சுந்தரர்

**"ஞானச்சுடர் விளக்காய் நின்றவன்"**
**"விறகில் தீயினன் பாலிற்படு நெய் போல்**
**மறையா நின்றுளன் மாமணிச் சோதியான்"** – அப்பர்

**"சுத்த நிர்க்குணமான பரதெய்வமே**
**பரஞ்சோதியே சுகவாரியே"** – தாயுமானவர்

ஒளியே சிவம் என்பது இராமலிங்க சுவாமிகளின் கருத்து. அவர் ஒளி விளக்குக்கே ஆலயம் அமைத்து அருட் பெருஞ்ஜோதி அகவல் பாடினர்.

**அருள் விளக்கே, அருட் சுடரே, அருட்சோதி சிவமே**
**அருளமுதே அருள் நிறைவே அருள் வடிவப்பொருளே**
**இருள் கடிந்தென் உளமுழுதும் இடங்கொண்டபதியே**
**என்னறிவே என்னுயிரே எனக்கினிய உறவே!**

என்று ஒளியைச் சிவமாக வணங்கினர்.

நாவுக்கரசர் "நல்லக விளக்கது நமசிவாயவே" என்றார்.

சிவபெருமான் ஜோதி உருவானவர். தீ தன்னை அடைந்தவர்களுடைய அழுக்கைப் போக்கி தன் மயமாக்கும் இறைவன் ஆன்மாக்களின் ஆணவ இருளை அகற்றி தன் மயமாக்குவான். அக்கினி அருவமாகவும், உருவமாகவும் விளங்குவது போல சிவனும் அருவமாகவும், உருவமாகவும் மிளிர்கிறார். அக்கினி ஒன்றே பல தீபங்களாக விளங்குவது போல சிவம் ஒன்றே பல மூர்த்தங்களாக விளங்கும்.

சிவ சோதியை யோக வழியால் காணமுடியாத மக்கள் சரியைத் தொண்டுகளால் காணமுயலவேண்டும் என்று சிவாகமங்கள் கூறுகின்றன. சரியைத்தொண்டுகளில் ஒன்று திருவிளக்கிடுதல். நமிநந்தி அடிகள், கலிய நாயனர், கணம் புல்ல நாயனர் என்ற அடியவர்கள் திரு விளக்குத்தொண்டால் முக்திப்பேறு பெற்றவர்கள்.

பனைமரத்தை வெட்டி நடுவில் வைத்து சுற்றிலும் பனை மடலை வெட்டிக் கட்டி வைத்துக் கொளுத்துவதால் சொக்கப்பனை என்னும் பெயர் வந்தது என்பர். சொக்கனுகிய சிவபெருமானைக் குறித்து இதனைச் செய்வதாலும் சொக்கப்பனை என்னும் பெயர் வந்திருக்கலாம். சுஷ்கப்பனை என்ற வார்த்தையே சொக்கப்பனை ஆகி விட்டது என்றும் சொல்கிருர்கள். இலக்கணத்தில் பனை மட்டையின் ஒலியைக் குறிக்கும் செய்யுள் அடியொன்று வருகின்றது. "சுஃறென்னும் தண்ணீடேட்டுப்பனை" என்பது அது. சொக்கப் பனைக்கும் இந்த ஒலிக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமென்று ஊகிக்க இடமுண்டு.

**"உடம்பெனு மனையகத்துள் உள்ளமே தகழியாக**
**மடம்படுமுணர் நெய்யெட்டி உயிரெனும் திரிமயக்கி**
**இடம்படு ஞானத் தீயாலெரி கொள இருந்து நோக்கில்**
**கடம்பமவர் காளைதாதை கடலடி காணலாமே"**

என்பது அப்பர் வாக்கு

உடம்பே வீடு. உள்ளமே தகளி. உணர்வே நெய். உயிரே திரி, ஞானமே தீ. உடலான வீட்டில் சிவமான பொருள் இருப்பது மடமான இருளால் தெரிந்திலது. விளக்கேற்றிப் பார்த்துணர்தல் வேண்டும். உள்ளமான அகலுள் பசு ஞானமான நெய் சேர்த்து உயிரான திரியிட்டுச் சிவ ஞானமான தீயால் எரிதலைக்கொள்ள அச்சிவஞான பிரகாசத்திலிருந்து நோக்கினல் சிவமான பொருளைக் காணலாம். மடம்படும் உணர்வு பசு ஞானம். மடம்படா உணர்வு சிவ ஞானம்.

இருக்கு வேதத்தில் அக்கினிக்கு மிக முக்கியமான பிரதான இடம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்திரனுக்கு அடுத்தபடியான ஸ்தானம் கொடுக்கப்பட்டுள்ளது. மனிதனுக்கும் கடவுளுக்குமிடையே உள்ள தூதனக அக்கினி வருணிக்கப்படுகிறது. தீபம் ஏற்பட்ட பின் மனித வாழ்க்கையிலே நாகரீகம் தலைக்காட்டலாயிற்று. ஆகவே இதை தீப யுகம் என்று சொல்லலாம். இராமயணத்திலும் மகாபாரதத்திலும் தங்கத்திலான விளக்குகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளன.

வால்மீகியின் சுந்தர காண்டத்தில் இலங்கை "இரத்தின தீபம்" என்று வருணிக்கப்பட்டுள்ளது. பகவத்கீதையில் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா விளக்கின் சுவாலை ஆடாமல் அசையாமல் எரிவது போல மனதைச் சஞ்சலப்படுத்தாமல் ஒரு நிலைப்படுத்த வேண்டும் என்று கூறுகின்றார். தீப தானங்களில் 16விதம் தென்னிந்தியாவில் இருந்து வந்ததாகத் தெரிகின்றது. குத்துவிளக்கில் ஐந்து முகங்கள் உண்டு. இந்த ஐந்தையும் ஏற்றி வைத்தால் லட்சுமிகரமாய் இருப்பதைக் காணலாம். இந்த ஐந்து முகங்கள் ஸ்திரீகளுக்கு இருக்க வேண்டிய அன்பு, மனஉறுதி, நிதானம், சமயோசிதபுத்தி, சகிப்புத்தன்மை ஆகிய ஐந்து குணங்களைக் காட்டுகின்றது.

விளக்கு என்பது இருளை விலக்கி பொருள்களை விளக்குவதால் ஏற்பட்ட காரணப்பெயராகும். அஞ்ஞானம் என்ற இருளை அகற்றுவதற்காக நம் முன்னோர்கள் ஜோதி வழிபாட்டைக் கடைப்பிடித்தனர். அவ்வழக்கத்தை ஒட்டியே நாம் ஒரு திருநாளைக் கொண்டாடுகிறோம். ஒளி கடவுளைப் போல எங்கும் நிறைந்தது. அது இல்லையேல் கனல் இல்லை. கனல் இன்றிக் கடல் ஆவி இல்லை. அதில்லாமல் மழையில்லை. மழையின்றி உயிர் இல்லை. இப்படி விளங்கும் தீப ஒளியை வணங்க ஏற்பட்டதே விளக்கீட்டுத்திருவிழா ஆகும். மணமான பெண்களுக்கு கொடுக்கப்படும் சீர்களில் குத்துவிளக்கு முதலிடம் பெறுவதற்கு இதுவே காரணம்.

## சோமவாரம்

சோமவாரம் என்பது திங்கட்கிழமையைக் குறிக்கும். கார்த்திகைமாத முதற் சோமவாரம் தொடக்கம் வாரந்தோறும் சிவபெருமானைக் குறித்து அநுஷ்டிக்கும் விரதம் சோமவாரம் எனப்படும். இவ் விரதத்தை உபவாசம் இருந்து அநுஷ்டித்தல் நலம். இது இயலாதவர்கள் இரவிலே ஒருபொழுது உண்டு சிவவழிபாட்டில் கழித்தல் விரும்பத்தக்கது. சோமவார விரதத்தினை வாழ்நாள் முழுவதுமாயினும், 12 வருடங்களாயினும், 3 வருட காலமாயினும், 1 வருட காலமாயினும் அநுஷ்டித்தல் வேண்டும். 12 வருடம் அநுஷ்டிக்க வாய்ப்பு இல்லாதவர்கள் ஆண்டு தோறும் கார்த்திகை சோமவாரங்களிலே முறைப்படி விரதம் அநுஷ்டிக்கலாம்.

## உமா மகேஸ்வர விரதம்

கார்த்திகை மாதத்துப் பௌர்ணமியிலே உமா தேவியார் சமேதராய் விளங்கும் மகேஸ்வர மூர்த்தியை வழிபட்டு ஒரு பொழுது பகலிலே உண்டு இரவிற் பணிகாரம், பழம் முதலிய உண்டு அநுஷ்டிக்கும் விரதம்.

## திங்கள்

சங்கப்புலவர் கவிக்கு ஒளியூட்டும் தனிப்பொருளே
இங்கிப் பணிக்கே என் அங்கத் தையிட்டேன் எனக்கிரங்கி
சிங்கக் குருஊ வடிவேல் முருகனும் சேர்ந்திருக்க
திங்கட் கிழமை வருவாய் அருள்வாய் சிவ சக்தியே.

– அகத்தியர்

## துவிதியை விரதம்

கார்த்திகை சுக்கில துவிதியையில் யமது விதியா விரதம் அநுஷ்டிக்கப் படும். யமுனை யமனைப் பூசித்தாள். இதனுல் இயம பயம் அகலும்.

## சோமவார விரதம்

கார்த்திகை சோமவாரம் நான்கிலும் உபவாசம் இருந்து இரவில் சிவனைப் பூஜிப்பது இந்த விரதம். சகலவிதமான நன்மையையும் உண்டு பண்ணும் இது. சோமன் என்ருல் சந்திரன் என்ருெரு பொருள். உமையுடன் கூடிய சிவன் என்றும் பொருள் உண்டு. கார்த்திகைமாத சுக்ல பட்ச அஷ்டமியில் சந்திரன் தோன்றினன். தனது க்ஷய ரோகம் அகல அவன் சிவனை ஆராதித்து நவக்கிரகத்தில் ஒருவனுனன். அவன் பெயரால் சோமவாரம் தோன்றிற்று. அவன் தோன்றியதும் பகவானை ஆராதித்ததும் கிருதயுகம் தோன்றியதும் அவன் சிவனது சிரசில் அமர்ந்ததும் கார்த்திகை சோம வாரங்களில் தான். அன்று விரதம் இருந்து சிவனை பூஜிப்போரது பிரம்மஹத்தி முதலிய சகல பாவங்களும் அகல வேண்டும். முக்தியும் பெற வேண்டும். க்ஷயம் முதலிய நோய்கள் வரக்கூடாது. என்பெயரால் என்வாரத்தில் இந்த விரதம் பிரசித்தமாக வேண்டும் என சோமன் சிவனை பிரார்த்தித்தான். அதனுல் சோமவாரமும் சிறந்தது.

## சோமவார உத்யாபன பூஜை

14 ஆண்டுகள் சோமவாரம் தோறும் பூஜை செய்து 12 கலசங்களில், பிரதிமைகளுடன், சிவன், ருத்திரன், பசுபதி, நீலகண்டன், மகேஸ்வரன், சர்வன், ஈசன், பிநாகி, விருஷபத்வயன், கங்காதரன், மகாதேவன், சோமேஸ்வரன் என்ற பெயர்களைக்கூறி இத் தியான ஆவாஹனதி சோடசோபசார பூஜை செய்து இரவெல்லாம் கண்விழித்துக் கதைகேட்டு காலையில் ஹோமம் செய்து கலச ஜலத்தில் அபிஷேகம் செய்து தம்பதி பூஜை செய்தல் வேண்டும். இதற்கு

எந்தெந்த பலன் வேண்டும் என சந்திரனே கேட்டு விட்டான். சந்திரனது மகாபாவங்களை நீக்கி சத்துரு பயத்தையும் அகற்றி அவனது க்ஷயரோகத்தையும் ஒழித்து அவனை ஆபரணமாகக் கொண்டார் சிவன். சந்திரசூடன் சந்திரமௌலி எனப்பெயர் பெற்றார். தான் மேலான கைலைமலைச்சிகரத்தில் சிவனது உத்தமாங்கத்தில் சடையில் ஸ்தானம் பெற்ற சந்திரன் சோம வார விரத மகிமையை உலகுக்குப்பறை சாற்றுகிறான்.

# சோமவார விரத மகிமையைக் கூறும் கதை

ஆரியாவர்த்தத்தில் சித்திரவர்மா என்றொரு வேந்தன் இருந்தான். அவனுக்கு சகல பாக்கியங்கள் இருந்தும் புத்திர பாக்கியம் மாத்திரம் கிட்டவில்லை. சிவனை நாடித் தவம் புரிந்தான். அவன் அருளால் ஒரு பெண் குழந்தை தோன்றியது. அதன் தலை மயிர் வகுடு எடுத்தது போல் இருந்தது. வகுட்டுக்குச் சீமந்தம் என்று பெயர். ஆதலால் அவளுக்குச் சீமந்தினி என்று பெயர் சூட்டிப் பெரு மகிழ்வு கொண்டான். சோதிடர்களை அழைத்துப் பிறந்த காலத்தைக் கொண்டு அப்பெண்ணின் வாழ்க்கை வரலாறை கூறும்படி கேட்டான். உண்மையை ஒளிக்கலாகாது என்றான். “வேந்தே இவள் 14 வயதில் விதவையாவாள்” எனப் பலரும் கூறினர். ஒருவர் மாத்திரம் “இவள் தீர்க்க சுமங்கலியாக இருந்து பல புத்திரர்களைப்பெறுவாள்” என்றார். இது மனதிற்கு சிறிது இன்பத்தைக் கொடுத்தது ஆயினும் பெரும்பாலானோர் சொன்ன சொல் மன்னனது மனதைத் துன்புறுத்தியது.

மகளின் அழகையும் லீலையையும், இனிய சொற்களையும் கொண்டு சந்தோஷமடைய விடாமல் மறித்தது சோதிடர் கூற்று. பதினான்காம் ஆண்டு நெருங்க நெருங்க கவலை மலைபோல் உயர்ந்தது. பெண்களுக்கு மணம் என்பது ஆண்களுக்குப் பூணூல் போடுவது போலாகும். அதை இரண்டாம் பிறவி என்பார். அதனாலாவது பெண்களுக்குப் பிறந்த காலத்தில் குறித்த தோஷம் வராமல் இருக்குமா என யோசித்தான். மணம் முடிக்க முயற்சித்தான்.

க்ஷத்திரிய முறைப்படி சுயம்வரம் அமைத்தான். இதனிடையில் பெற்றோர் தன்னிடம் கூறாமலிருந்தது. ஆனால் தன்னைக் காணும் போதெல்லாம் இன்பதுன்பமிரண்டுகளையும் சேர்ந்தாற்போல் அனுபவித்ததைக் கண்டாள் சீமந்தினி. தோழிகள் மூலம் இதன் காரணத்தை அறிந்தாள். யாக்ஞவல்கிய முனிவரின் தர்மபத்தினியான மைத்ரேயைச் சரண் அடைந்தாள். இந்தத் துக்கம் தனக்குத் தோன்றாதபடி ஒரு உபாயம் கூறவேண்டுமென வேண்டினாள். மைத்ரேயி சீமந்தினிக்கு சோமவார விரதப்பூஜை, தம்பதிப்பூஜைகளை உபதேசித்தாள்.

பக்தி சிரத்தையுடன் பெற்றோர் உத்தரவு பெற்று ஆசாரியாரைத் துணைகொண்டு விரதத்தைச் செய்து வந்தாள். அவளுக்கும் வயது ஏற ஏற கவலையும் அச்சமும் அதிகரித்தது. அதனல் சிரத்தையும் அதிகமாகி சோமவார விரதமும், பூஜையும் சிறந்த முறையில் நடத்தினள்.

சுயம்வரத்திற்கு பற்பல தேச ராஜகுமாரர்கள் வந்து சபையை அலங்கரித்தனர். பதினங்காம் ஆண்டும் ஜோசியர் சொல் நினைவும் அவளுடன் கூடவே சபையில் நுழைந்தது. நளன், தமயந்தி பிரசித்தமானவர்கள் அல்லவா! அவர்களுடைய புத்திரன் இந்திரசேனன் என்பவன் அவனது அருமைக் குமாரன் சித்திரவர்மா. பெயருக்கேற்ப நன்கு சித்திரம் தீட்டி அதில் உயிர் அமைந்தது போல் இருந்தது அவன் உருவம்.

அழகிலும் சிறந்த சீமந்தினி அவனை விட்டு வேறெவற்கு மாலையிடுவாள்? சிறந்த முறையில் மணம் நடந்தது. மன்னன், மனைவி, மகள் மனம் மாத்திரம் 14ஆவது ஆண்டு நல்லபடி செல்லுமா எனக் கவலை மிகுந்து புழுங்கிற்று. மணம் முடித்தாலும் சில நாட்கள் மருமகன் மகளுடன் இருக்க மன்னன் இந்திரசேனனை உத்தரவு கேட்டான். புத்திரன் இல்லாததால் அவன் விருப்பத்திற்கு இணங்கினன் நள புத்திரன் இந்திர சேனன்.

ஒருநாள் சித்திரவர்மா தோழர்களுடன் விளையாட்டாக யமுனையில் தோணி மீதமர்ந்து சென்றான். ஒரு சுழலில் திடீரெனத் தோணி சிக்கி எல்லோரையும் கவிழ்த்தது. சிலர் இறந்தனர். சிலர் தப்பினர். சித்திரவர்மாவின் கதியாது? என ஒருவரும் அறிய முடியவில்லை. இதனைக்கேட்டு மன்னனது குடும்பம் மாத்திரமல்ல மக்கள் அனைவரும் துக்கக் கடலில் மூழ்கினர். நீர் நிபுணர் பலர் பல நாள் தேடியும் சித்திரவர்மனின் உடல் கூடக் கிடைக்கவில்லை. அவனது பெற்றோர்கள் இது கேட்டு மூர்ச்சையாகி விழ்ந்தனர். இவன் தீர்காயுளாக இருப்பான் என்ற சோதிடர் சொல்லும் வீணாயிற்றே! நாங்கள் செய்த புண்ணியமும் எனது பெற்றோர் செய்த புண்ணியமும் பாழாயிற்றே! எனப்புலம்பினர். மாண்டவர் மீண்டாரில்லை எனப் பல தேறுதல் கூறி பரலோகக் காரியங்களைச் செவ்வனே செய்து ஒன்றிலும் பற்றில்லாமல் ஜீவன் இருப்பதற்கு மாத்திரம் வேண்டிய கடமைகளைச் செய்து ஜீவித்சவமாகக் காலம் கழித்தனர்.

நாகலோகம் என்பது பாதாளத்தின் ஒரு பகுதி. அங்குள்ளோர் யமுனைச்சுழல் மூலமாகப் பூமிக்கு வருவர் சித்திரவர்மா சுழலில் சிக்கி நாகலோகம் வந்து அடைந்ததைக் கண்டனர். நாககன்னிகைகள் உடனே இவனை நாகராஜனிடம் அழைத்துச் சென்றனர். மந்திரிகள் அந்நிய நாட்டவர் இங்கு வரக் காரணமென்ன? நீயார்? உன்பெயரென்ன? எங்கு வந்தாய் எனக் கேள்விகளை அடுக்கினர். அரசகுமாரன் அச்சமின்றி பதிலுரைத்தான். தனது

முன்னோர் நளதமயந்தி என்றவுடன் ஏற்கனவே தான் நளனுடன் சம்பந்தப்படுத்தப்பட்டிருப்பதால் மரியாதையுடன் இவனுக்கு ஆசனம் அளித்தான். நீ வணங்கும் தெய்வ மந்திரம் யாது? என்ற கேள்விக்கு சிவனே குல தெய்வம். பஞ்சாட்சரமே நாங்கள் ஜபிக்கும் மந்திரம் என்றுன். தான் வரநேர்ந்த விருத்தாந்தத்தையும் விரிவாகக் கூறினுன். நாகராஜன் பரிவுடன் அவரைப் புகழ்ந்து திவ்ய ஆடை ஆபரணம் அளித்து யமுனையில் அவன் வீழ்ந்த இடத்தில் கொண்டு வந்து விட்டான். தற்செயலாக அன்று சீமந்தினி சோமவாரப்பூஜையை அங்கு செய்யக்கண்டான். ஆண்டுகள் மூன்றுனதால் சீமந்தினிக்கு அவர் யார் எனத் தெரியவில்லை. தோழிகள் அவரை வணங்கி சீமந்தினியின் பர்த்தா சரிதத்தைக் கூறி அவர் பிழைத்திருக்கிருரா? எப்போது வருவார்? என வினவினர். ராஜகுமாரன் சித்திரவர்மாவைத்தானே கேட்கிறீர்கள்? அவன் பிழைத்திருக்கிருன் விரைவில் வருவான் எனக்கூறி விரைவாகப் பெற்றோரிடம் சென்றுன். நாட்டில் ஒரே கோலாகலம் ஆனந்தம். மாண்டவர் மீண்டனர்! ஆச்சரியம் அற்புதம்! சீமந்தினி சுமங்கலி! என்றெல்லாம் கிளம்பிய சொற்கள் வானளாவின. அலைபோன்ற கூட்டம் அரண்மனையை நாடிக்கிளம்பியது.

பெற்றோர் ஓடோடி வந்து கட்டியணைத்தனர். பேரானந்தப் பெருங் கடலில் மூழ்கினர். இது உண்மைதானு? சித்திரவர்மன்தானு நீ? என்றெல்லாம் பேசிச் சபைக்கு அழைத்துச் சென்று புரோகிதர் சொற்படி புனர் ஜீவித்தவனுக்கு வேண்டியதைச் செய்தானர். இந்த அற்புதச்செய்தி அவனியெல்லாம் பரவிற்று. ஆர்யாவர்த்த மக்களும், அரசனும், சீமந்தினியும் பேரானந்தம் அடைந்தனர். மைத்திரேயியைச் சிலரும், சோம வாரப் பூஜையைச் சிலரும், சோதிடரைச் சிலரும் கொண்டாடினர். இந்திரசேனன் நற்செய்தி கூறி தூதரை அனுப்பினுன். சித்திரவர்மா சீமந்தினியுடன் நிடத தேசம் வந்தான். தம்பதிகள் முன்னிலும் பக்தியுடன் சோம வார விரதம் அநுஷ்டித்தனர்.

## பக்தையின் பெருமை

பூஜை முடிவில் தம்பதி பூஜை உலகம் போற்றும்படி சிறந்த முறையில் நடத்தினர். இச்செய்தி நாடெல்லாம் பரவிற்று. சுமேதன், ஸாமவான் என்ற ரிஷி கள் குருகுலக்கல்வியை முடித்தனர். குரு தட்சணை கொடுக்க பொருள் வேண்டினே ஒரு அரசனிடம் கேட்டனர். அவர் நானும் தருகிறேன். ஸாமவான் பெண் போலிருப்பதால், நிபுருஷனுகவும், அவன் சதியாகவும் சென்று சீமந்தினி செய்யும் தம்பதி பூஜையை ஏற்று ஏராளமான பொருட்களைப் பெற்று வாருங்கள் என்றுன். தவாறுன காரியம் இது. சிவபக்தரிடம் அபசாரப்படமாட்டோம் என்றனர். அரசன் அவர்களை மிரட்டித் தம்பதி வேஷம் தரிக்கச்செய்து அனுப்பினுன்.

சீமந்தினி புதிதாக வந்த இளம் தம்பதிகளைப் பூஜிக்க ஆரம்பித்தாள். கௌரியை ஆவாஹனம் செய்யும்போது அவள் புருஷன் ஸ்திரீ அல்ல என அவளுக்கு தோன்றிற்று. ஆயினும் வேதியர் உடலில் சகல தேவரும் இருப்பதால் குற்றமல்ல என அறிந்தாள். அபரிமிதமாக செல்வம் தந்தாள். சந்தோஷத்துடன் திரும்பினர். அரசனும் பொருள் தந்தான். ஸாமவான் உண்மைப் பெண்ணனதைக் கண்டு அவள் தந்தை அபாரகோபங் கொண்டு அவ்வரசனைச் சபிக்க ஆரம்பித்தார். அவர் தன் குருவான பாரத்வாச முனிவரை வேண்ட அவர் சிஷ்யனுன அரசனுக்காக அம்பாளைப் பிரார்த்தித்தார். தேவி பிரத்தியட்சமாகி அதை மாற்ற முடியாது ரிஷிக்கு வேறு புத்திரன் பிறப்பான் எனக் கூறினள். சீமந்தினியின் பெருமைக்கு காரணம் சோம வார விரதமேயன்ருே?

## யாக்ஞவல்கிய ஜெயந்தி

இந்த மகரிஷி அவதரித்த நாளில் இது கொண்டாடப்பட்டு வருகின்றது. இது கார்த்திகை 22ம்திகதியாகும். இவர் சூரியனது அம்சாவதாரமாகும். ஒரு சமயம் இவரது குரு பிரம்மஹத்தித் தோஷம் அகல பிராயச்சித்தம் செய்து கொள்ள நேர்ந்தது. இவர் பிரம்மஹத்தி செய்யவில்லை. குறிப்பிட்ட காலத்தில் பிரம்ம சபைக்கு வராதவர் பிரம்மஹத்தி பாவத்திற்கு ஆளாவார் என எல்லா ரிஷிகளைப்போல் இவரும் பிரதிக்ஞை செய்தார். ஆனல் குறித்த காலத்தில் இவர் போகவில்லை. ஆதலால் பிரதிக்ஞை செய்தபடி பிராயச்சித்தம் செய்ய ஆரம்பித்தார். தனது சிஷ்யர்களைப்பார்த்து நீங்களும் எனக்காகப் பிராயச்சித்தம் செய்யுங்கள் என்ருர். இதைக்கேட்ட யாக்ஞவல்கியர் நான் ஒருவன் செய்தால் போதுமே எல்லோரும் செய்வதைவிட என்னுடைய தவத்தின் பலத்தாலும், ஆசாரத்தாலும் நான் செய்வது மிகச்சிறந்தது அல்லவா? என்ருர் யாக்ஞவல்கியர்.

இதைக்கேட்ட குரு இது உண்மையானலும் இவர் கூறுவது ஆத்மஸ்துதியும் பிராமண நிந்தையுமாகும். இங்ஙனம் மற்றவரும் செய்யாதபடி மாணவர்க்குப் பாடம் கற்பிக்கவும் இவர் மூலமாக சூரியனிடம் இருந்து அரிய வேத பாகத்தைப் பூமியில் பரப்பவேண்டும் என்றும் எண்ணினர். இவரது குரு யாக்ஞ வல்கியர். பிறரை அவமதித்த நீ எனது சிஷ்யனுக இருக்கத் தகுதியில்லை என்ருர்.

குருவின் உள்ளத்தை உள்ளபடி அறிந்த இவர் இதோ தங்களிடம் கற்ற வித்தையைத் தங்களிடமே அளிக்கின்றேன் என்ருர். உடனே அவரிடமிருந்து நெருப்புத் தணல் போல் வித்தைகள் வெளிவந்தன. இந்த விந்தையைக் கண்டார் குரு. சிஷ்யர்களை அழைத்து தித்திரி என்னும் பட்சி உருவம் கொண்டு அந்த வேத மந்திரங்களை எடுத்துக்கொள்ளுங்கள் என்ருர். அதனல் தைத்திரியம் எனப்பெயர் வழங்கிற்று அதற்கு.

யாக்ஞவல்கியர் தபோ வலிமையால் சூரியனிடம் சென்று அவர்க்கு எதிர்முகமாக நின்று அவர் சுற்றுமிடமெல்லாம் சுற்றி சுக்ல யஜுர்வேதம் என்பதைக் கற்றுக்கொண்டு வந்து உலகில் அதைப் பிரச்சாரப்படுத்தினர். அவர் கார்க்கி, மைத்திரேயி என்னும் இரு மனைவிகளை மணந்தார். ஜனக மகாராஜனது சபையிற் சென்று யார் எந்தக்கேள்வி கேட்டாலும் பதில் கூறி ஒப்பற்ற வித்துவான் எனக்கொண்டாடப்பட்டு ஜனகனது குருவானர். சுக்ல யஜுர் வேதிகள் இவர் தோன்றிய தினத்தைக் கொண்டாடிப் பூஜிப்பர். அவர் இயற்றிய ஸ்மிருதி யாக்ஞ வல்கிய ஸ்மிருதி என மிகப் பிரசித்தமானது. இவரது சரிதம் புராணங்களிலும் உபநிஷதத்திலும் வருணிக்கப்படுகிறது. எல்லோரும் பூஜிக்கத்தக்க உத்தம ரிஷி இவர். உயர்ந்த அனுபவ வேதாந்தி.

## துளசி விவாகம்

துளசி தேவி ஸ்ரீ மகாவிஷ்ணுவை மணந்து கொண்ட நாள் ஐப்பசி வெள்ளியாகும். துளசி தேவி சரிதம் தேவி பாகவதம் முதலிய புராணங்களில் கூறப்படுகின்றது. அவளுக்கு பிருந்தா என வேறு ஒரு பெயர் உண்டு. அது மாத்திரமல்ல. கோலோகத்தில் கிருஷ்ணனுக்கு மகிஷியாக இருந்து அவருடன் பூலோகத்தில் அவதரித்தவள். பகவான் நெல்லி மரமாகத் தோன்றியதால் நெல்லிக் கிளையைக் கொண்டு வந்து துளசிச் செடியுடன் வைத்துக் கல்பங் கூறுகின்றபடி விவாக பூஜை செய்ய வேண்டும். பிருந்தை அல்லது துளசி விவாகம் துவாதசியில் நடந்தது. ஆதலால் அதை பிருந்தாவன துவாதசி என்பர். பிருந்தாவனத்தில் உள்ளோர் அதை மிக விஷேடமாகக் கொண்டாடியதாலும் அப் பெயர் தோன்றிற்று.

## அன்னபிஷேகம்

வீட்டுப்பூஜைகளிலும் கோயில்களிலும் அன்று அன்னத்தால் பகவானுக்கு அபிஷேகம் செய்ய வேண்டும். மூட்டைக்கணக்காக அரிசியை வடித்து அன்னபிஷேகம் செய்து அன்னத்தை ஏழைகளுக்கு அளிப்பர். அதைத் தரிசித்தால் ஓர் ஆண்டு வரை அன்னத்திற்குக் கஷ்டப்பட மாட்டார்கள். அன்னம் பிரும்ம என்ற உபநிஷத் கூறும் மந்திரம் வெளிப்படையாகும்.

**தத்துவம் எது?** பூர்ணிமா தினத்தில் சந்திரன் பூரண கலைகளுடன் இருக்கிறன். அவனது கலை அமிருத கலையாகும். அதை முறையே தேவர் அருந்துகின்றனர். அந்தச் சந்திரன் சிவனது சிரசில் இருக்கிறர். ஐப்பசியில் விளைந்து அறுவடையான புது நெல்லைக் கொண்டு அன்னமாக்கி பெருமளவில் பகவானுக்கு சிரஸ் முதல் பீடம் வரை அபிஷேகமாக அளிக்க வேண்டும். மற்ற நாட்களில் உணவு மாத்திரமுண்ண அன்னம் அளிப்பதாக நிவேதனம் செய்ய

வேண்டும். பூரணமான தினத்தில் பூரணமான சிவனுக்கு உள்ளும் புறமும் ஒரே அன்ன மயமாகச் செய்ய வேண்டும். அவர் பிம்ப ரூபி. ஜீவர்கள் பிரதிபிம்ப ரூபிகள். பிம்பம் திருப்தி அடைந்தால் பிரதி பிம்பம் திருப்தி அடையும். நமது உடல் அழகாக இருந்தால் நமது போட்டோ அழகாக இருக்கும்.

சில ஆலயங்களில் சுவாமிக்குப் பின்னல் மூலஸ்தானத்தில் ஒரு கமல தீபம் ஏற்றப்படும். இடையே வட்டமாகக் கண்ணடியும் அதைச் சுற்றி தாமரை தளம் போல் கண்ணடிகளும் அமைக்கப்பட்டிருக்கும். வட்டமான நடுக்கண்ணடி அருகே ஒரு தீபம் இருக்கும். அது சுற்றியுள்ள கமல தளங்களில் எல்லாம் பல தீபங்களாகக் காணப்படும். மூலஸ்தான தீபம் பிரகாசமாக இருந்தால் மற்றவைகள் பிரகாசமாக இருக்கும். அது மங்கலாகஇருந்தால் மற்றவைகளும் மங்கலாக இருக்கும். அதே போல் இறைவன் உள்ளும் புறமும் அன்ன அபிஷேகத்தால் நிறைந்திருந்தால் உலகெல்லாம் அன்னம் நிறைந்திருக்கும். புதிதாக விளைந்ததை முதலில் சிவார்ப்பணம் செய்தே நாம் உண்ண வேண்டும்.

ஆதி ஆலயமான சிதம்பரத்தில் ஸ்படிக லிங்கத்திற்கு நித்தியம் அன்னபிஷேகம் நடக்கும். ஆதலால் அதை அர்ச்சிப்போருக்கும் தரிசிப்போருக்கும் மற்ளேருக்கும் அன்னம் நிறையக் கிடைக்கின்றது. அந்த க்ஷேத்திரத்திற்கே அன்னம் பாலிக்கும் ஊர் எனப் பெயர் வழங்குகிறது.

## நாக பஞ்சமி

சிராவண சுக்கில பஞ்சமியில் ஆரம்பித்து ஒவ்வொரு மாதமும் செய்து உத்தியாபனம் செய்ய வேண்டும். வாசற் படிக்கு அருகில் நாகம் போல இரு பக்கங்களிலும் கோமயத்தால் எழுதவேண்டும்.

அனந்தன், வாசுகி, ஷேசன், பத்மன், கம்பளன், கார்க்கோடன், நாகன், புஜங்கன், அஸ்வதரன், திருதிராஷ்டரன், சங்கபாலன், காளியன், தக்ஷகன், பிங்கலன், மகாநாகன் ஆகியவர்களே மாதம் தோறும் பூஜிக்க வேண்டும். இந்தத் தினத்தில் பாம்பு கடித்து இறந்தவர் நற்கதி பெறுவதற்காகவும் நாகநஷ்ட விரதம் என்பதைச் செய்ய வேண்டும்.

## கருட பஞ்சமி

சிராவண சுக்கில பஞ்சமியில் இந்த விரதம் செய்ய வேண்டும். ஸ்வர்ணம் அல்லது சக்திக்கேற்றபடி மற்ற லோகத்தால் பாம்பின் படம் செய்து அதைக் கலசத்தில் வைத்து பணி கௌரி பூஜை செய்ய வேண்டும். 10 முடியுள்ள

நோன்புக் கயிற்றைக் கட்டிக் கொள்ள வேண்டும். இங்ஙனம் 10 ஆண்டுகள் செய்து உத்யாபனம் செய்தால் ஸ்திரீகள் தீர்க்க சுமங்கலிகளாக இருப்பார்கள். சர்ப்ப பயம் தோன்ருது.

காசியப்பருக்கு பல பத்தினிகள் உண்டு. கத்ரு, சுபர்ணீ என்ற சகோதரிகளும் அவரது பத்தினிகளே ஆவார். கத்ரு சர்ப்பங்களின் தாய். சுபர்ணீ அருணனையும் கருடனையும் பெற்ருள். இந்த சகோதரிகள் ஒரு பரீட்சையில் ஜெயித்தவருக்குக் தோற்றவர் அடிமையாகவேண்டுமென ஏற்பாடு செய்து கொண்டனர். சுபர்ணே தோற்ருள். கத்ருக்கு அடிமையானுள். அடிமையின் பிள்ளேயும் அடிமைதானே! கருடன் பாம்புகளேயும் கத்ருவையும் நித்தியம் சுமந்து செல்வது வழக்கம். தாயை அடிமையிலிருந்து விடுவிக்க விரும்பினன் கருடன். இந்திரனிடமுள்ள அமிர்தத்தைக் கொண்டு வந்தால் விடுபடலாம் என்ருள் கத்ரு. கருடன் பெற்ருேரை வணங்கி ஆசீர்வாதம் பெற்று தேவலோகம் சென்ருன். காவலாளிகளுடன் கடும் போர் செய்து அமிர்தத்தைக் கொண்டு வந்து தந்தார். அடிமையாவது நீங்கிற்று.

அந்தக் கருடன் பிறந்தது இந்தப் பஞ்சமியிலே தான். ஆதலால் கருட பஞ்சமி என்னும் பெயர் வழங்கிற்று.

## காலாஷ்டமி

பிரம்மாவும் முன்பு ஐந்து முகங்களுடன் இருந்தார். சிவனது முடியைக் கண்டேன் என்ருர். பொய் கூறியதால் சிவன் கோபங்கொண்டார். அவரது புருவத்திலிருந்து கால பைரவர் தோன்றினர். அவர் சிவனேப் போலவே சகல வேடங்களும் உள்ளவர். அவர் பிரம்மாவினது பொய் கூறிய தலேயை வெட்டினர். அது பிரம்மஹத்தியானதால் அந்தத் தோஷம் அகல ஆங்காங்கு பிட்சை வாங்கி தீர்த்த யாத்திரை செய்தார். காசி நகரில் அவர் பிரம்மஹத்தி அகன்றது. ஆதலால் காசிக்கு தலேவஞக அவரை அமர்த்தினர் சிவன். பாவம் செய்தவர் கூட இங்கு இறந்தால் மறுபிறவி எடுப்பதில்லே. ஆனல் அந்தப் பாவிகளேச் சிட்சிக்கும் படி காலபைரவருக்கே பகவான் அதிகாரம் தந்திருக்கிருர். ஆதலால் காசி செல்வோர் பைரவர் கோயிலுக்குச் சென்று பைரவ தண்டனே அடைவது போல் ஆங்குள்ள பூசாரிகளால் மயில்தோகை கொண்டு அடிக்கப்படுவர். காசி பைரவர் கயிற்றைக் கட்டிக்கொள்வது வழக்கம். காலபைரவாஷ்டகம் பிரசித்தமானது.

# கால பைரவ பூஜை விரதம்

கார்த்திகை மாத அஷ்டமியில் அவர் அவதரித்ததால் இம்மாதம் அந்த விரதத்தைச் செய்து ஒவ்வொரு மாதமும் பூஜை செய்து உத்யாபனம் செய்ய வேண்டும். கலசத்தில் பைரவ பிரதிமையை வைத்துச் சிவபூஜை செய்வது போல் சோடசோபசாரபூஜை, அஷ்டோத்தர நாமார்ச்சனை, அர்க்கியம், வாயநம் முதலியன செய்தல் வேண்டும். இதை அனுஷ்டிப்பவர் மிகச் சிலரே ஆவார்.

# திரி புரோத்சவம்

தாரகாசுரனுடைய புத்திரர்களான வித்தியுன்மாலி, தாரகாக்ஷன், மகாராஜன் என்ற மூன்று அரக்கர்களும் தவம் செய்து தங்கம், வெள்ளி, இரும்பு, இவைகளால் ஆன பட்டணமாய் இருக்கும்படி வரம் பெற்றனர். அந்த மூன்று நகரங்களும் தனித்தனி வெவ்வேறு இடத்தில் இருக்கவேண்டுமென்றும், ஆயிரம் ஆண்டுக்கோர் முறை ஒரு நிமிஷம் மூவரும் ஒன்று சேரும்பொழுது பிறப்பு இறப்பில்லாத ஒரு திவ்விய புருஷன், இதுவரை உலகில் இல்லாத அரிய தேர், குதிரை, சாரதி, வில், அம்பு முதலியவைகளைக்கொண்டு அடித்தால் தான் தங்களுக்கு மரணம் ஏற்பட வேண்டுமென்றும் வரம் பெற்றனர்.

அன்றியும் தினந்தோறும் தவருமல் சிவபூஜையும் செய்து வந்தனர். ஆனுலும் அரக்கரது குணமான பிறரை ஹிம்சிக்கும் செயல் அவர்களை விட்டு அகலவில்லை. அவர்கள் நகரத்தோடு பறந்து வந்து பலரை அழித்து வந்தனர். வரத்தின் பலனல் அவர்களைஒருவரும் ஒன்றும் செய்ய முடியவில்லை. வழக்கப்படி மஹாவிஷ்ணுவிடம் தேவர் வேண்ட அவர் யுக்தியினல்தான் இவர்களை ஜயிக்கவேண்டும் என்று கருதி பத்தாவதாரம் செய்து அவர்கள் செய்து வந்த வேள்வி, வேதமோதல், சிவபூஜை முதலியவைகளை விடும்படி செய்தார்.

பரமசிவன் கைலாசத்தைத் தேராகவும், வேதங்களைக் குதிரையாகவும், பிரம்மாவைச் சாரதியாகவும், காயத்திரியைக் கடிவாளமாகவும், ஓங்காரத்தைச் சாட்டையாகவும், மேருமலையை வில்லாகவும், ஆதிசேஷனை நாணகவும், அச்சுதனை அம்பாகவுங் கொண்டு அவர்கள் கூடும் நிமிஷத்தில் வந்து அவர்களை எரித்தார். இக்கதை வேதத்தில் உள்ளது.

# சொக்கப்பானை கொளுத்துவது

இங்ஙனம் செய்த தினம் கார்த்திகைத் தினமாதலால் பகவான் அவர்களை எரித்த பாவனையைக் காட்ட கோவிலுக்கெதிரில் ஓலைகளால் ஒரு

கூண்டு கட்டி அதற்குத் தீயிடுவது சொக்கப்பானை என்று கூறப்படும். சொர்க்கத்திலுள்ள அரக்கர்களை எரித்த பாவனையே சொக்கப்பாவனை என்று மாறியிருக்க வேண்டும். திருவதிகை என்னும் க்ஷேத்திரத்தில் திரிபுரசம்ஹாரம் நடந்ததாக ஐதீகம் செய்து காட்டப்படுகிறது. இன்னும் இந்த வையத்தில் விஷ்ணு கார்த்திகை என்பது மறுநாள் நடைபெறும்.

அன்று மஹாபலிச் சக்கரவர்த்தி தீபவரிசைகளால் பகவானை ஆராதித்து அவருடைய அருளால் மூவுலகையும் அவருக்கே தானம் செய்து அவர் திருவடி தன்முடியில்பட பாதாளம் சென்றான். அவன் இருந்த சொர்க்கம் அசுரர்களால் அசுத்தமானதால் அதையும் எரிக்க நேர்ந்தது. அந்த சொக்கப்பாவனை விஷ்ணு ஆலயங்களில் சொக்கப்பானையாக ஆகி இருக்கலாம். பலியின் வேண்டுகோளுக்கு இணங்க அவன் செய்தது போல் நாடெல்லாம் தீபமேற்றி அந்தநாளை மஹாபலியின் ஞாபக நாளாக கொண்டாடும்படி பகவான் கட்டளை இட்டார். அதைத்தழுவி இரவில் சிறுவர்கள் எங்கும் பொரி பொரியாக விழும்படி தீயால் விளையாடுவர். அச்சமயம் "கார்த்தியே கார்த்தி" "மாவலியோ மாவலி" என்பர். மாவலி என்பது மஹாபலியின் பெயர் மாறி வந்ததாகும். எதுவும் உலகில் மூன்று மூன்றாகவே அமைந்துள்ளது. மருந்தும் விருந்தும் மூன்று நாள் என்பார். ஆதலால் சிவகார்த்தி விஷ்ணுகார்த்திகளுடன் மறுநாளும் கார்த்திகை கொண்டாடப்படும். கார்த்திகையில் நெற்பொரியே நிவேதனம் செய்யப்படும். நெல்லை வறுத்தால் அது பொரியாகும். பொரி வெண்மை நிறமுள்ளது. சாந்தமான உணவாகும். இவை மஹாபலிக்கும் முக்தி பெற்றவருக்கும் மறுபிறவி இல்லை என்பதைக் காட்டுகிறது.

"பண்டி முளைப்பது அரிசியேயானாலும் விண்டுமி போனால் முளையாதாம்" என்றபடி இவர்களது கர்மக்ஞானம் தீயிலிடப்பட்டதால் மறுபிறப்பு அவர்களுக்கு இல்லை என்ற பொருள் சூட்சுமமாகும். ஆதலால் ஜோதிர் வடிவமான பகவானை இந்த நாளில் விதிப்படி பூஜித்தால் நாமும் ஜனன. மரண. துன்பமகன்று பேரின்பம் பெறலாம்.

# தத்தாத்திரேய ஜெயந்தி

இவர் மஹாவிஷ்ணுவின் அவதாரமாகும். அவதூத ஆச்சிரமத்திற்கும் சம்பிரதாயத்திற்கும் இவர் வழிகாட்டி ஆவர். கார்த்தவீரியார்ச்சுனன் அசுரனுக்கு ஆயிரம் கைகளைச் கொடுத்தவர். அத்திரி மஹரிஷிக்கும் அநசூயை என்ற உத்தமிக்கும் புத்திரனாகத் தோன்றியவர். அவரது சரிதம் மிக்க விசித்திரமானது. தென்னாட்டைவிட வடநாட்டிலேதான் தத்தாத்திரேயருடைய பூஜையும் உபாசனையும் அதிகம். சேலத்தின் அருகிலுள்ள சேந்தமங்கலம் என்ற ஊரில்

அவருக்கு ஓர் ஆலயம் அமைத்து பூஜைநடக்கின்றது. சாதாரணமான ஜனங்கள் அதைக் கொண்டாடுவதில்லை தரிசனம் மாத்திரம் செய்வார். யோகிகளும், துறவிகளும் விசேடமாகக் கொண்டாடுவார்கள்.

### கார்த்திகை மாதக் குருபூஜைத் தினங்கள்

1. கணம்புல்லர்
2. மெய்ப்பொருளார்
3. ஆனயர்
4. மூர்க்கர்
5. சிறப்புலியார்
6. ஆறுமுகநாவலர்

# மார்கழி மாத நினைவுகள்

சேர்சிறுகாலை துயில்நீத் தெழுந்தருட் செல்வருடன்
நீர்துழைந்தாடி மலர்கொய்து சன்னிதிநின்று நின்றன்
பேர்பலபாடி வணங்குகின்றேம் எம்பிழை தவிர்க்க
மார்கழி மாதம் வருவாய் அம்மா ஞானமாணிக்கமே

— அகத்தியர்

"மாதங்களில் நான் மார்கழி" என்று கண்ணன் கீதையிலே கூறுகின்றார். "மார்கழித் திங்களில் மதிநிறைந்த நன்னாளால் நீராடப் போதுவீர்" என்பது ஆண்டாள் வாக்கு. மார்கழி மாதத்தைத் தேவர் மாதம் என்றே குறிப்பிடுவர். மிகப் பழைய காலம் தொட்டே மார்கழி மாதத்தை கடவுளை வழிபடுவதற்கான சிறந்த மாதமாகக் கருதிவந்திருக்கிறார்கள். இறைவனை வழிபடவே இம் மாதம் ஒதுக்கப்படுவதால் தான் எவ்வித மங்கள நிகழ்ச்சிகளும் இம்மாதம் நடத்தப்படுவதில்லை.

ஒரு மனித வருடம் ஒரு தேவ நாள். அத்தேவ நாளில் பகற்காலம் உத்தராயணம் எனவும், இராக்காலம் தட்சணாயணம் எனவும் பெயர் பெறும். தை மாதம் முதல் ஆனி மாதம் முடிய உள்ள காலப்பகுதி உத்தராயணம் எனவும், ஆடி மாதம் முதல் மாதம் மார்கழி முடிய உள்ள காலப்பகுதி தட்சணாயணம் எனவும் கூறப்படும். மனிதர்களுக்கு ஒருமாதம் தேவர்களுக்கு ஐந்து நாழிகை. எனவே சாதாரண இராக்காலத்தின் கடைசி முகூர்த்தம் எமக்கு விடியற்காலம். அது பிரம்ம முகூர்த்தம் எனப்படும். அது போலத் தேவர்களுக்குப் பிரம்ம முகூர்த்தம் மார்கழி மாதமாகும். பிரம்ம முகூர்த்தம் கடவுள் வழிபாட்டிற்கு ஏற்ற காலமாகும்.

மார்கழி மாதம் முழுவதும் மாதரும் ஆடவரும் விடிய ஐந்து நாழிகைக்கு முன் நித்திரை விட்டு எழுந்து நித்திய கடன்களை முடித்துத் தத்தம் இல்லங்களை சுத்தி செய்து விட்டு, முற்றத்தின் நடுஇடத்தைச் சாணத்தினால் மெழுகிப் பச்சரிசி மாவினால் கோலமிட்டுச் சாணத்தினால் பிள்ளையார் பிடித்து வைத்து பூக்களைச் சாத்தி, "விக்னேசுவரப்பெருமானே! எங்கள் இல்லங்களில் அசுர பூத பைசாசங்களால் விக்கினங்கள் நேரா வண்ணம் காத்தருள வேண்டும்" எனப் பிரார்த்தித்தல் முறை.

அவமிருத்துக்களினாலும் வேறு ஏதுக்களாலும் இறந்து மலினம் அடைந்திருக்கும் பைசாசு வடிவில் இருக்கும் உயிர்கள் தங்களுக்குத் தொடர்புடையார் வசிக்கும் வீடுகளில் செல்லும்போது விநாயகரின் காவலினால்

வீட்டின் உட்புக முடியாது எறும்பாகவும் பிற ஊர்வனவாகவும் கோலமிட்ட அரிசி மாவை உண்டு மீள்கின்றன எனும் கொள்கை இருப்பதினலேயே பச்சரிசி மாவினல் கோலமிட வேண்டுமென்பர். செங்கட்டி சுண்ணம்பு முதலியவற்றினற் கோலமிடுவதால் பைசாச பாவம் உண்டாகும் என்றும், தரித்திரம் அதிகரிக்கும் என்றும் பெரியோர் கூறுகின்றனர். எந்த வீடு மெழுகிக் கோலமிடப்பட்டிருக்கிறதோ அந்த வீட்டைத் தேவர்கள் அடைந்து ஆசீர்வாதம் செய்கின்ருர்கள்.

இங்ஙனம் மார்கழி மாதம் முழுவதும் வைத்துப் பூசித்த விநாயக மூர்த்தங்களைத் தைப்பொங்கலுக்குப்பின் ஒரு தினம் ஒருங்கு வைத்து மோதகம் முதலியவற்றை நிவேதித்துப் பூசித்து இதற்கென இயற்றிய இரதத்தில் வைத்து மங்கலவாத்திய கோஷத்துடன் எழுந்தருளச் செய்து சமுத்திரத்திலேனும், ஆற்றிலேனும், குளத்திலேனும், சுத்த நீர் நிலையிலேனும் இடுதல் வேண்டும்.

மார்கழிப் பிள்ளையார் பிடித்து வைக்கும் கருமம் பெரும்பாலும் பெண்கள் கடமையே எனினும் ஆடவர்களும் அதற்கு உதவியாய் இருந்து திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவைப்பாடல்களை ஓதப் பெண்மணிகள் பக்தி சிரத்தையுடன் அதனைச் செய்து வரல் நன்று. மார்கழிப் பிள்ளையார் பிடித்து வைத்துப் பூசிப்பதால், பிணி வறுமை என்பவற்றில் நீக்கமும் செல்வ விருத்தியும், மற்றும் பேறுகளும் உண்டாதல் பிரத்தியட்சம்.

## பாவை நோன்பு

மார்கழி மாதத்தில் மங்கையர் நோன்பினை மேற்கொள்வர். அதற்குப் பாவை நோன்பு என்பது பெயர். மார்கழி நோன்பு என்றும் அதைக் கூறுவர். மணமான பெண்கள் இத்திங்களை மங்களத்திங்களாகக் கொண்டு நீராடி மகிழ்ந்து, நல்லறங்களைப் புரிவர். மணமாகாத கன்னிப்பெண்களே இத்திங்களில் தாம் தாம் வழிபடும் கடவுளரைத் தமக்கு நல்ல கணவரை நல்குமாறு வேண்டுவர். இந்நோன்பு தமிழ் நாட்டில் மிக்க பழங்காலம் தொட்டு நடைபெற்று வந்த ஒன்ருகும். சைவரும், வைணவரும் இவ் விழாவைக் கொண்டாடி வந்தனர் என்பது உறுதி. மணிவாசகர் பாடிய திருவெம்பாவையும் ஆண்டாள் பாடிய திருப்பாவையும் இவ்விழாவை வலியுறுத்துவன.

இவ் விரதம் சேரநாடான கேரள தேசத்தில், சகல கன்னிகைகளாலும் அநுஷ்டிக்கப்பட்டு வருகிறது. அவர்கள் விடியற்காலத்திற்கு முன்பே துயிலெழுந்து ஒவ்வொரு வீடாகச் சென்று தம் சகாக்களை எழுப்பி அழைத்துக்கொண்டு நீராடச்சென்று இறைவனை வழிபட்டு உதயத்திற்கு முன்பே வீடு திரும்புவர். இவ்விரதமே ஆண்டாள், மணிவாசகர் ஆகியோருடைய

காலத்தில் சோழ பாண்டிய நாடுகளிலும் அநுஷ்டிக்கப்பட்டு வந்தது. இதைத்தான் ஆண்டாள் தன் திருப்பாவையிலும் மணிவாசகர் தம் திருவெம்பாவையிலும் குறிப்பிட்டு இருக்கிறார்கள். நல்ல மழை பெய்து, நாடு செழிக்கவும் நல்ல கணவர்களை அடையவும், மணமானவர்களுக்கு தங்கள் கணவன் தீர்க்காயுளுடன் இருக்கவும் இதைச் செய்வது வழக்கம்.

மார்கழி நீராடல் சங்க நூல்களில் தைந்நீராடல் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. துயில் எழுந்த பெண்கள் மற்றைய பெண்களின் இல்லத்திற்குச் சென்று அவர்களைத் துயில் எழுப்புவது ஆண்டாள் திருப்பாவையிலும் மாணிக்கவாசகர் திருவெம்பாவையிலும் காணப்படும் ஒற்றுமையான அம்சம்.

பிங்கலத்தை என்னும் நூலில் "பனி நீர் தோயலும், பாவை பாடலும்" என்றுமார்கழி நீராட்டமும் பாவை நோன்பும் குறிப்பிடப்பட்டுள்ளன. கோகுலத்தில் மக்கள் மார்கழி மாதத்தில் விடியற் காலையில் நீராடிவிட்டு கார்த்தியாயினி பூஜை செய்ததாக மகாபாரதத்தில் கூறப்பட்டுள்ளது. குழந்தைகளுக்குப் பாட்டு, முதியவர்களுக்கு ஞானம், அன்பர்களுக்குப் பக்தி இவையெல்லாம் பொருத்தமாக திருப்பாவை, திருவெம்பாவையில் கலந்திருக்கின்றன.

பௌர்ணமியுடன் மிருகசீரிடம் என்ற நட்சத்திரம் கலக்கும் நாளையே மார்க்கசீரிஷம் என்றும் மார்கழி என்றும் அழைக்கிறார்கள். கேசவ, நாராயண என்கின்ற விஷ்ணுவின் 12 நாமங்கள் 12 மாதங்களுக்கு வைக்கப்பட்டுள்ளன. இதில் கேசவ என்கின்ற முதல் நாமம் மார்கழிக்குரியது. கேசவன் அறிவுதரும் கடவுள். அதனல் இம்மாதம் மனிதனுக்கு தூய அறிவு தரும் மாதமாக ஆகிறது.

இந்தமாதம் வெப்பம், தட்பம் சமமாக இருக்கும். பயிர்களுக்கும் மனிதர்களுக்கும் ஜீவாதாரமான ஜலம் கர்ப்பம் தரிக்கும் மாதம் இதுவே. பயிரில் நெற்பால் தோன்றி பழுக்க வைக்கும் பனிமுடப்பெய்யும் மாதம். மனிதன் உடல் வளர்ச்சிக்குத் தேவையான "ஓசோன்" என்கிற புதுக்காற்று அதிகாலையில் வீசும் மாதம். இந்த மார்கழியில் நீரில் உள்ளத்தையும் உடலையும் தூய்மைப்படுத்தும். ஒருவித வெப்பமானது நிலவும் என்று மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர். இம்மாதத்தை சிவபெருமானும், காத்தியாயினியும், தத்தாத்திரேயரும் விரும்பி உள்ளனர்.

# திருவெம்பாவை

திருவெம்பாவை என்பது திருவாதவூரர் என்னும் மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்துள்ள திருவாசகத்தில் அதன் நடுநாயகமாய்த் திகழும் ஒரு பகுதியாகும். ஒவ்வொரு பாடலும் "ஏலோரெம்பாவாய்" எனமுடியும் 20 பாடல்கள் கொண்டது. சைவ மரபினர் அனைவர் வீடுகளிலும் ஒவ்வொரு ஆண்டிலும் மார்கழி வைகறைப்பொழுதில் ஓதப் பெறுவது. சீயம் போன்ற அயல் நாடுகளிலும் ஓதப் பெறுவதும் திருவிழாக்கொண்டாடப் பெறுவதும் ஆகிய சிறப்புடையது.

சைவ மரபினருக்குத் திருவெம்பாவைபோல வைணவ மரபினருக்கு ஸ்ரீ ஆண்டாள் அருளிச் செய்த திருப்பாவை உரியது. சமண மரபினருக்கும் "பாவை" நூல் ஒன்று இருந்தது என யாப்பருங்கல விருத்தியுரையால் தெரிகின்றது. இப் பாவை நூல்களில் வரும் சொல் ஆட்சி கருத்தாட்சி ஒப்புமை கொண்டு. வேறுபட்ட மரபினரை ஒன்று படுத்தும் நோக்கத்தோடே இவை எழுந்தன என்று கருத இடமுண்டு.

சைவர் மரபில் இந்த நோன்பு மார்கழித்திங்களில் திருவாதிரைக்கு 10 நாட்களுக்கு முன் தொடங்கி திருவாதிரை அன்று முடிவு பெறும். ஐந்தாம் வயது முதல் பன்னிரெண்டாம் வயது ஈறுக உள்ள கன்னிப்பெண்கள் இந்த நோன்புக்குரியவர். இவர்கள் ஒருவரை ஒருவர் துயிலுணர்த்த வைகறைப் பொழுதில் வீடு தோறும் செல்வர். அனைவரும் துயிலுணர்ந்தவுடன் ஒன்று சேர்ந்து நீர் நிலைக்குச்செல்வர்.

அம்மையப்பர் புகழ் பாடிக்கொண்டே நீராடுவர். பிறகு இறைவனுடைய சக்தி எனவும் திருவடி எனவும் சாத்திரங்கள் கூறும் திருவருளைக் கௌரி என்ற பெயரிட்டு நுண்மணலால் அக்கௌரியின் உரு அமைத்து வழிபடுவர். இவ்வாறு 10 நாட்கள் தொடர்ந்து வழிபடும் வழிபாட்டால் தாம் விரும்பும் நற்கணவரைப் பெறுவர். உலகுய்ய மழை பெறுவர்.

இறைவன் உயிர்த்தலைவர். சத்தினி பாதம் பெற்ற பக்குவம் உள்ள மக்கள் உயிர்களெல்லாம் கன்னிப்பெண்கள். அவை ஆணவ இருளிற் பிணிப்புண்டிருக்கும் நிலையே உறக்கம். மலத்தின் ஆற்றல் ஒழியப்பெறும் நிலையே துயிலுணர்ந்து எழுதல். மலபரிபாகமுடைய உயிர்களே முன்பாகதுயிலுணர்ந்து எழும் கன்னிப் பெண்கள். மலபரிபாகம் எய்தாத உயிர்களை அவர்கள் உணர்த்தி மலபரிபாகப்படுத்தி எழச்செய்து, அன்புநெறி செலுத்தி இறைஅருளில் தோய்வித்தலே நீராடலும் நோன்பு நோற்றலும் ஆகும். நீராடி நோற்றுப்பெறும்

பயன் ஆதிரை நாள் விழாவில் கூத்தப்பிரான் ஆடல் கண்டு களித்தலும், அவனுடைய திருவருளின் துணையால் ஆன்மநாயகனைிய அவனோடு கலத்தலும் ஆகும். இது பற்றியே கன்னிப்பெண்களே அன்றி மற்றப்பெண்டிரும் ஆண்களும் திருவெம்பாவையை ஓதும் நெறியைக் கடைப்பிடிப்பர்.

"சக்தியை வியந்தது" என்பது திருவெம்பாவைக்கு உள்ளுறை பொருள் என்று சான்றோர் கூறுவர். மனோன்மணி முதல் வாமை ஈறுக கூறப்படும் நவசக்திகளும் உலகப்படைப்பின் நிமித்தம் முறையே முன்னது பின்னதைப் பிரேரித்து உணர்த்திய குறிப்பே திருவெம்பாவையின் முதல் எட்டுப்பாடல்களில் உள்ளதெனவும், இச்சக்திகளின் இயக்கத்தால் மாயை காரியப்பட்டுப் பிருதுவி முடிவான பிரபஞ்ச காரியம் நடைபெறுவதையே ஏனைய பாடல்கள் குறிக்கின்றன எனவும் கூறுவர்.

"ஏலோரெம்பாவாய்" என்பதில் ஏல் ஓர் என்பன அசைகள். எம்பாவாய் என்பது அம்பிகையாம் கௌரியை விளிக்கும் விளி. எனவே "ஏலோரெம்பாவாய்"என்பது இன்னொளியோடு கௌரியை நினைவு படுத்தும் மந்திரமாகக் கொள்வதே பொருத்தமாகும்.

திருவெம்பாவையில் முதல் 8பாடல்கள், கன்னிப்பெண்கள் தம்முள் ஒருவரை ஒருவர் துயில்எழுப்புதலை உணர்த்துவன. ஒன்பதாம் பாடல், தனக்குரிய நற்கணவர் இயல்புகளைக்கூறி, அத்தகையவரைத் தமக்கு அருளவேண்டும் என்று வேண்டுதலை உணர்த்துவது. 10ஆம் பாடல், இறைவன் புகழ் அறுதியிட்டுக் கூறும்தகையது அல்ல என உரைப்பது. 11ஆம் பாடல், பெண்கள் நீராடத் தொடங்குதலையும், இறைவன் தம்மை உடனிருந்து காக்க வேண்டுமென அவர்கள் வேண்டுதலையும் கூறுவது. 12ஆம் பாடல் பொய்கையிலோ அன்றிச் சுனையிலோ நீராடுதலைக் காட்டுவது. 13ஆம் பாடல் பொய்கை அம்மை அப்பராய்க் காட்சி அளித்தலைக் குறிப்பது, 14ஆம் பாடல் கௌரி நோன்பிற்கியையச்சோதி நிறம் கூறி, இறுதியில் சக்தியின் சிறந்த கருணை திறத்தை இயம்புவது. 15ஆம் பாடல் இறைவன் அருட் குணங்களில் ஈடுபடுவார்க்கு உண்டாகும் மெய்ப்பாடுகளை உணர்த்தி, அத்தகைய இறையன்பினைத் தாமும் பெற அவன் அருளுவான் என இயம்பிக் கன்னிகள் நீராடுதலைக் கூறுவது. 16ஆம் பாடல் உலகர் அனைவர்க்கும் பயன்படும் மழை வேண்டுதலை மொழிவது. 17ஆம் பாடல் தன்னை அடைந்து வழிபடும் அன்பர்க்கேயன்றி அன்பர் ஆயினர் அனைவருக்கும் தானே சென்று அருளும் இறைவன் அருள் எளிமையை அறிவிப்பது. 18ஆம் பாடல் சூரியோதயத்தை உவமை நயந்தோன்றக்கூறி, இறைவன் இலக்கணங்களைச் சாத்திரக் கருத்திற்கியைய எடுத்தியம்புவது. 19ஆம் பாடல் பெண்கள் தங்கள்

கற்புடைமைக்குரிய உறுதியான கொள்கைகளை எடுத்தோதி, அவற்றைத் தாங்கள் நன்கு கடைப்பிடித்தற்கு அவன் அருள் புரியவேண்டுமென இரப்பதைக் கூறுவது. 20ஆம் பாடல் ஐந்தொழில் இயற்றும் இறைவன் இயல்பை உணர்த்தி, அவன் திருவடியாம் கௌரிதம்மை ஆட்கொள்ளும் திறம் இயம்பி, மார்கழி நீராடலின் முடிவைக்கூறுவது.

## திருவாதிரை நோன்பு

இது மார்கழியில் வரும் திருவாதிரை நட்சத்திரம் கூடிய நிறைமதி நன்நாளில் மேற்கொள்ளப்படுவது. இந்த விரதம் சிவபெருமானுக்கு மிகவும் உகந்தது. அதனால் சிவபெருமான் ஆதிரையின் முதல்வன் என்றும் ஆதிரையான் என்றும் கூறப்படுவான். மார்கழித்திங்கள் திருவாதிரை நாளன்று நடராஜப்பெருமானுக்குச் சிறப்புகள் நடைபெறும். அவற்றுள் தில்லையில் நடப்பது மிகச்சிறப்புடையது. ஏராளமான மக்கள் ஆருத்திரா தரிசனம் செய்வதற்காகத் தில்லைக்குச் செல்வர். ஆருத்திரா என்பது ஆதிரை.

சங்கரசங்கிதை என்னும் சமஸ்கிருத நூல் ஏழு காண்டங்களை உடையது. அதன் ஏழாம் காண்டம் உபதேச காண்டம் எனப்படும். அதில் திருவாதிரை விரதத்தின் மகிமை கூறப்பட்டுள்ளது. நடராஜர் தன் நடனத்தை பதஞ்சலிக்கும் வியாக்கிரபாதருக்கும் ஆடிக்காட்டியது இந்த திருவாதிரை நட்சத்திரத்தன்று தான். நடராஜருடைய ஆட்டம் உலகம் இயங்குவதையே குறிக்கிறது. அணுக்கள் முதல் அண்டங்கள் வரை எல்லாம் ஒழுங்குமுறை தவறாது ஆடுகின்றன. இந்த நடனத்தில் தான் வேதங்கள், ஆகமங்கள் கீதங்கள், கலைகள் முதலான சகலமும் உதயமாகின்றன.

நம்மையெல்லாம் ஆட்டிவைக்கிறவன் தானும் ஆடிக்கொண்டு இருக்கிறன். அவன் ஆடுவதால்தான் உலகம் ஆடிக்கொண்டிருக்கிறது. அவனுடைய அற்புதக் கூத்தே உலக சிருஷ்டி. இந்த நடனக்கோலத்தை பல பக்திமான்கள் பலவிதமாகக் கண்டு ஆனந்தித்திருக்கிறார்கள். திருநாவுக்கரசர் கண்ட கோலத்தைக் கீழ்வரும் பாடல் விளக்குகிறது.

**குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமின் சிரிப்பும்**
**பனித்த சடையும் பவளம் போல் மேனியில் பால்வெண்ணீறும்**
**இனித்த முடைய எடுத்த பொற் பாதமுங் காணப்பெற்றால்**
**மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே!**

நடராஜர் நடனத்தை திருமூலர், காரைக்காலம்மையார், கல்லாடர், பகிலர், பதஞ்சலி, வியாக்கிரபாதர் ஆகிய அடியார்கள் பல கோணங்களில் கண்டு பரவசமடைந்திருக்கின்றனர். திருமூலர் தான் இருந்த இடத்திலிருந்தே இதை அனுபவித்தார். ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் அன்பர்களே, ஈசன் திருநடனங் காணுங்கள் காணுங்கள் எனக்கூவி அழைக்கின்றார்.

கூற்றிருக்கும் மடலாழிக் குரிசின் முதலோர்
இறைஞ்சக் கொழுந்தேன் பில்கி
ஊற்றிருக்கும் தில்லைவனத் தசும்பிருக்கும்
பசும் பொன் மன்றத்து ஒரு தாள் ஊன்றி
வண்டு பாடச் சுடர் மகுடமாப் பிறைத் துண்டமாடப்
புலித்தோலுமாடப் பகிரண்டமாடக் குலைந்து அகிலாடக்
கருங்கொண்டலோடும் குழற்கோதையோடும் கறைக்
கண்டனுடந் திறன்காண்மினே.

# திருப்பாவை

திருமாலடியார்களான ஆழ்வார்கள் பன்னிருவருள் ஆண்டாள் என்னும் பெண்மணியும் ஒருவர். அவருக்குக் கோதை என்றும், சூடிக்கொடுத்த நாச்சியார் என்றும் பெயர்களுண்டு. கி.பி. எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த இவரியற்றிய பாமாலைகளுள் ஒன்று திருப்பாவை. இது முப்பது திருப்பாசுரங்களைக் கொண்டது.

நெய்யும் பாலுமுண்ணாராகி, நாட்காலே நீராடிக் கண்ணுக்கு மை எழுதாது, குழலுக்கு மலரிட்டு முடியாது, செய்யத்தகாதன செய்யாது, கோள் கூறாது, ஆந்தனையும் ஐயமும் பிச்சையும் இட்டு, விரதநெறி நின்று தாயைக் குடல் விளக்கஞ் செய்த தாமோதரனை, தூயோராய்த் தொழுது, வள்ளற் பெரும் பசுக்கள் நீங்காத செல்வமும் உலகுவாழப் பெய்திடும் மழையும் வேண்டிப் போய பிழையும் புகுதருவான் நின்றனவும், தீயினில் தூசாகும் வண்ணம் ஆயர் மகளிர்கோகுலத்தில் கண்ணனை அடைய நோற்ற நோன்பு என்று குறிப்பிடப்படுகின்றது.

திருப்பாவையில் கூறப்படும் பாவை நோன்பு சங்க காலத் தமிழ் இலக்கியங்களில் தைந்நீராடல்என்று பேசப்படுகின்றது. சந்திரனை அளவையாகக்கொண்டு மாதங்களை எண்ணிய மிகப்பழைய காலந்தொட்டே இந் நோன்பு முறையிருந்து வந்ததென்பது தைந்நீராடல் என்ற பெயரால் அறியப்படும்.

பண்டைக்காலத்தில் தமிழ்நாட்டுப் பெண்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்பதற்குத் திருப்பாவை ஒரு எடுத்துக்காட்டு. இந்நூலின் முதல் ஐந்து பாசுரங்களும் பாயிரம், செல்வம், செயல், குணங்களில் 10வகைப்பட்ட ஆயர் பாடிப்பெண்களை அஞ்ஞானத்துயிலிலிருந்து ஞான விழிப்புக்குக் கொணர்வது இரண்டாம் பகுதி. அம்மகளிரை இறைவன் பணிக்குத் தகுதியுடையாவராகச் செய்வது மூன்றும் பகுதி.

## வைகுண்ட ஏகாதசி

மார்கழி மாதம் சுக்கில பட்ச ஏகாதசிக்கு மோட்ச ஏகாதசி என்று பெயர். இதுவே வைகுண்டஏகாதசி என்றும் சொல்லப்படும். வைகுண்ட நாதன் திருமால். வைகுண்டம் அவர் இருப்பிடம். எல்லா ஏகாதசிகளும் விஷ்ணுவின் பூஜைக்குச் சிறந்ததாகக் கருதப்படினும், இந்த ஏகாதசிக்குச் சிறப்பாக விஷ்ணுவின் சம்பந்தம் கூறப்பெறுவதால் இதற்கு இப்பெயர்வந்தது. ஆகமங்களில் மகாவிஷ்ணுவின் மாத உற்சவங்கள் செய்ய விதித்திருக்கும் பஞ்ச பருவங்களில் ஏகாதசியும் ஒன்று.

மேலும் பாஞ்ராத்திர ஆகமத்திலுள்ள ஈசுவர சங்கிதையில் மார்கழி மாதம் மகாவிஷ்ணுவிற்கு அத்தியயன உற்சவம் நடத்தி அதில் தினந்தோறும் நைவேத்தியம் செய்த பிறகு, வைஷ்ணவர்களைக் கொண்டு தொன்மை பொருந்தியதும், தமிழில் அமைந்ததுமான நாலாயிரப்பிரவந்தம் கானம் செய்விக்க வேண்டும் என்று கூறியிருப்பதாலும், வைகுண்டஏகாதசியையை இடையில் வைத்து அதிலிருந்து பகலில் பத்து நாட்களும், அதற்கு முன்னிரவில் பத்து நாட்களும், ஆகமுறையே 20 நாட்கள், அத்தியயன உற்சவம் நடத்தப்பெறும்.

இதன் மரபு ஆழ்வார் திருநகரியில் நம்மாழ்வார் பகவானைச் சிம்மாசனத்தில் அமர்த்தித் தாம் இயற்றிய திருவாய் மொழியென்ற ஆயிரம் பாக்களை மார்கழி மாத ஏகாதசி முதல் பத்து நாட்களில் தினம் நூறுகக் கேட்கச்செய்துபத்தாம் நாள் பரமன் திருவடி சேர்ந்தார். இதன் பின் ஆண்டுதோறும் அந்தத் தலத்தில் பகவானை சிம்மாசனத்தில் எழுந்தருளச்செய்து, எதிரில் நம்மாழ்வாரை எழுந்தருளப் பண்ணி, இருபுறமும் இருந்து கொண்டு அரையர்கள் திருவாய்மொழி ஓதப் பத்தாம் நாள் ஆழ்வாரைப் பரமன் திருவடியில் சேர்ப்பது சம்பிரதாயம். பின்னர் திருமங்கை ஆழ்வார் திருவரங்கத்தில் இவ்வுற்சவத்தை நடத்தி வைக்க விரும்பி, ஆழ்வார் திருநகரிலிருந்து நம்மாழ்வாரின் விக்கிரகத்தை ஆண்டுதோறும் ஸ்ரீரங்கத்திற்குக் கொண்டு வந்து உற்சவம் நடத்தி வந்தார்.

பிறகு இராமனுஜர் காலம் வரை இவ்வாறு நடந்து வந்தது. அவர் காலத்தில் ஆழ்வார் விக்கிரகத்தை ஸ்ரீரங்கம் கொண்டு வருவது அபாயம் என்று தோன்றியதால் ஸ்ரீரங்கத்திலேயே ஆழ்வார் விக்கிரகம் அமைத்து, அதைக்கொண்டு உற்சவம் நடத்தி வரலாயினர். இவ்வாறே ஏகாதசிக்கு முன் பத்துநாட்களில் திருமங்கை மன்னன் திருமொழி முதலிய மூவாயிரம் பாட்டுக்களையும் ஓதி முடிக்கும் வழக்கு ஏற்பட்டது. கோயில் என்று சிறப்பாகக் கூறப்பெறும் திருவரங்கத்திலிருந்து இச்சம்பிரதாயம் மற்றக் கோயில்களுக்கும் பரவியது.

வைகுண்ட ஏகாதசிக்கு முதல் நாளிரவு, பகவான் அசுரர்களை மயக்க மோகனைவதாரம் எடுத்தது கொண்டாடப்படும். ஏகாதசியன்றுசுவர்க்க வாசல் என்ற வாயில் புதிதாகத் திறக்கப்பெற்று, அதன் வழியே பரமன் திருவுருவம் எடுத்துச் செல்லப்பெற, மக்கள் உடன் சென்று வாயிலைக் கடந்து, பாவனையாகச் சுவர்க்கம் சேர்வர்.

காயத்திரிக்கு ஈடான மந்திரம் இல்லை; தாயுக்குச் சமமான தெய்வம் இல்லை; காசிக்கு மேற்பட்ட தீர்த்தம் இல்லை; ஏகாதசிக்கு சமமான விரதம் இல்லை; என்று அக்கினி புராணம் கூறுகிறது. "விரதம் உபவாசம் நியமம் அவற்றால் உடல் கஷ்டத்தை அனுபவித்தால் கரும்பைக் கசக்கி அதன் சாற்றை உண்பது போல் இன்பம் உண்டாகும்" என்று வியாசர் கூறுகிறார். ஏகாதசி அன்று நியமமாக சுத்த உபவாசம் இருப்பவனுக்கு ஒரு வியாதியும் வராது. இரண்டு வேளையும் உபவாசம் இருக்க இயலாதவர் ஒருவேளையேனும் உண்ணாதிருத்தல் வேண்டும்.

ஏகாதசி என்பது ஒரு சக்தி. அவள் விஷ்ணுவின் திருமேனியில் விளங்குகிறாள். அசுர சக்தியை அழிப்பது இந்த விஷ்ணு சக்திதான். இந்த சக்தி விஷ்ணுவிடம் கேட்ட வரம் "ஏகாதசி அன்று தங்களை நினைத்து உண்மை மனத்துடனும், திடமான சித்தத்துடனும், விரதம் இருப்பவர்களை காத்தருள வேண்டும்."

அன்று முதல் ஏகாதசி விரதத்தை எல்லோரும் கைக்கொண்டனர். முனிவர்களும், தபோதனர்களும் "இது அவசியமான பகவானின் விருப்பம்; கட்டளை" என்று நியமத்துடன் அதை ஏற்றுக்கொண்டனர். ஏகாதசி அன்று உபவாசம் இருப்பது, முழுநாளும் பட்டினி இருப்பது, மூன்று வேளைகளிலும் ஸ்நானம், சுத்த மனத்துடன் ஜபம், கீர்த்தனம், ஹரியின் கதைகளைக்கேட்பது, படிப்பது, இரவெல்லாம் தூங்காமல் தெய்வ சிந்தனையில் தன்னை ஈடுபடுத்துவது, மறுநாள் காலையில் ஹரி நாமத்தை சொல்லிக்கொண்டு துளசி தீர்த்தம் அருந்திய பின் உணவு ஏற்றுக்கொள்வது இவைகள் நியதியாகும்.

மனித ஜன்மத்திற்குத்தான் இத்தனை விரதங்களும், நோன்புகளும் வைக்கப்பட்டன. இந்த ஜன்மத்தை அடைந்தவன் தன் செய்கைகளால் உயரவும் உயரலாம்; தாழ்ந்து அழியவும் முடியும். தாழாமல் காப்பதென்பதால் தானமென்றும், அவனைத் தரித்து இருக்கச்செய்வதால் தருமம் என்றும் அழைக்கப்பட்டன. வருடத்தில் வரும் 25 ஏகாதசிகளிலும் வைகுண்ட ஏகாதசியே சிறப்புடையது.

## விநாயக சட்டி விரதம்

கார்த்திகை மாதத்துக் கிருஷ்ண பக்ஷப் பிரதமை தொடக்கம் மார்கழி மாதத்துச் சுக்கில பக்ஷ சட்டி ஈறாக உள்ள 21 நாட்கள் இவ்விரதம் அனுட்டிக்கப்படுதல் முறையாகும். இவ்விரதம் அனுட்டிக்கும்போது ஆண்கள் 21 இழையோடு கூடிய காப்பை வலக்கையிலும் பெண்கள் இடக்கையிலும் கட்டிய வண்ணம் முதல் 20 நாட்களும் ஒவ்வொரு பொழுதுண்டு இறுதிநாளில் உபவாசம் இருத்தல் வேண்டும். வித்தியுன்மாலி என்னும் ஓர் அரசன் இதனை நோற்று வச்சிர யாக்கை பெற்றுத் திலோத்தமையை மணந்து மகிழ்ச்சியுடன் வாழ்ந்தான். 21 நாட்களும் விநாயகர் புராணம் படிப்பதும், விநாயகர் திருவிளையாடல்களை பேசக்கேட்டலும் உண்டு.

## ஹநுமந்த் ஜெயந்தி

வாயுவினுடைய அம்சத்தினால் அஞ்சனா தேவியிடம் அவதரித்தவர் ஆஞ்சநேயர். இவரது சரிதம் ஸ்ரீமத் ராமாயணத்திலும் பற்பல புராணங்களிலும் விஸ்தாரமாகக் கூறப்பட்டிருக்கிறது. அவர் நித்திய பிரம்மச்சாரி. ஏழு சிரஞ்சீவிகளில் இவர் ஒருவர். வரப்போகும் கல்பத்தில் பிரம்மாவாக வரப்போகின்றவர். அவரது உபாசனையால் பேய், பிசாசுகள் நீங்குவதுடன், புத்தி, பலம், தைரியம், ஆரோக்கியம், வாக்கு வன்மை முதலியவை உண்டாகும். ஸ்மார்த்தர்களும், வைஷ்ணவர்களும் இவரை உபாசிப்பார்கள். மத்துவர் மிக விஷேடமாகக் கொண்டாடி பிரதி தினம் வாயுவையும், வாயுபுத்திரனையும் துதிப்பார்கள். பெரும்பாலானோர் அவர் அவதார தினத்தை விரதமாகக் கொண்டாடுவதில்லை.

## மார்கழி மாத குரு பூஜைத்தினங்கள்

**1. வாயிலர் 2. சடையனர் 3. இயற்பகையார்**
**4. மானக் கஞ்சாறர் 5. சாக்கியர்**

# தை மாத நினைவுகள்

கைத்தும் கறுத்தும் ஒறுக்கும் கசடரைக் கால் பணிந்து
பொய்த்துன்ப மேனியைப் போற்றுகின்றீர் இருள்போக உள்ளே
வைத்தாள் வரம் தருவாள் எங்கள் தாய் என்று வாக்குரைத்தேன்
தைத்திங்கள் வந்தெண்ணம் ஈடேற்ற வேண்டும் தயாநிதியே.

– அகத்தியர்

## உத்தராயணம்

மகர ராசியில் சூரியன் புகும் காலம் மகர ரவி எனபபடும். அதுவே உத்தராயண புண்ணியக்காலம். உத்தர அயனம் என்றல் வடக்குபபுறமான வழி என்று பொருள். சூரியன் நேர் கிழக்கே தோன்றி மேற்கே செல்வது என்றாலும் தக்ஷிணயணத்தில் சிறிது தென்புறமும், உத்தராயணத்தில் சிறிது வடபுறமாகவும் ரதம் செல்லும். தை முதல் ஆனி முடிவு வரையில் உத்தராயணம் என்னும் தேவர்களது பகற்காலமாகும். மற்ற மாதங்கள் இரவுக்காலமாகும். சுப காரியங்களைச் செய்ய உத்தராயணமே சிறந்த காலமாகும். இறபபது கூட உத்தராயணத்தில் இறந்தால் நற்கதி கிடைக்குமென தக்ஷிணயணத்தில் அடிபட்ட பீஷ்மர் தான் இறக்க உத்தராயண காலத்தை எதிர்பார்த்து அதில் இறந்தார்.

## சங்கிராந்தி பூஜை

வருஷப்பிறப்புப்போல் சங்கிராந்தியில் தைமாதப்பிறப்பும் விஷேடமாக மதிக்கப்பட்டு பலன் கூறப்படும். சங்கிராந்தி புருஷனது சொருபம், வாகனம், உணவு, ஆபரணம் முதலியவைகளைக்கூறி அதனல் ஏற்படும் பலனையும் பஞ்சாங்கம் விரிவாகக் கூறும்.அதனல் மகர சங்கிராந்தியை சங்கிராந்தி என சிறப்புப் பெயரால் அழைப்பார்கள். தானம், தர்மம், தர்ப்பணம் முதலியவைகள் செய்ய மிகச்சிறந்த புண்ணிய காலமாகும். 12 சங்கரமணமும், தர்ப்பணமும் செய்யாதவர் கூட அன்று அவசியம் தர்ப்பணம் செய்ய வேண்டும். அன்று சூரிய பூஜையே மிகச் சிறந்ததாம். இந்திரன் தான் செய்த அபச்சாரத்தை மன்னித்து பகவானே அன்று பூஜிக்கப்பட வேண்டும் என்று வேண்டியதால் சூரியனை நாராயணைக் கருதிஇந்திரனையும் உபேந்திரனையும் சேர்த்து சங்கிராந்தி பூஜை செய்ய வேண்டும். விஷ்ணு இந்திரனுக்குச் சகோதரனைப் பிறந்து உபேந்திரன், வாமனன், திரிவிக்கிரமன் என்ற பெயர்களைப் பெற்றார். ஆதலால் இந்திரோபேந்திர சகித சூரிய நாராயணம் பூஜையாமி என்று அவருக்குப் பூஜை செய்ய வேண்டும்.

அச்சமயம் புதிதாக விளையும் மஞ்சள், இஞ்சி, கரும்பு மற்றவைகளையும் அவருக்கு அர்ப்பணம் செய்யும் வகையில் பொங்கற்பானைக்கே மஞ்சள் கொத்தைக் கட்டுவர்.

பொங்கல் என்பது "ஆனந்த வெள்ளம் பொங்கித் ததும்பி" என்று பக்தர் பாடும் வண்ணம் ஆனந்தம் பொங்க வேண்டும். அன்னம் பொங்கும்போது பொங்கலோ பொங்கல்!! எனச் சந்தோஷக்குரல் தோன்றும். சக்கரைப்பொங்கல் விஷேடமாகச் செய்து சூரியனுக்கு நிவேதனம் செய்வர். அதைப் பொங்கலோ பொங்கல்!! எனக்கூறி கூரை மீது எறிவர்.

அன்று ஓர் ஆண்டுப் பிறப்புப் போல் புது வஸ்திரமணிந்து பெரியோர்களைத் தரிசித்து நமஸ்கரிப்பார்கள். ஆச்சாரி, கருமான், குயவன் பயிரிடுவோன் ஆகிய தொழிலாளிகளும் மற்றவர்களும் தத்தம் தொழிலுக்கேற்ப பொருட்களை அளிப்பார்கள். அதைப் பெற்றவர்களும் மான்யமாகக் கொடுத்தது போக ஏதேனும் சிறிது தான்யமோ, பொருளோ அளிப்பார்கள். அன்று பகலில் பெரியோர்களைப் போய்த் தரிசித்து, நமஸ்கரித்து தாம்பூலம் வாங்கி வருவது வழக்கம். பால் பொங்கிற்று? என்று ஒருவரை ஒருவர் கேட்பது வழக்கம்.

பூச நட்சத்திரத்தை வடமொழியில் திஷ்யம் என அழைப்பர். திஷ்யம் என்பது தைசம் என வரும். தைசம் என்பது தை என மருவி நின்றது.

## தைப்பூசம்

பூசம் அல்லது புஷ்யம் என்பது நமது சோதிடர்கள் கூறும் 27 நட்சத்திர மண்டலங்களுள் எட்டாவதாகும். தைத்திங்களில் பூச நட்சத்திரம் வரும் நாள் புண்ணிய நாளாக இந்துக்களால் கொண்டாடப்படுகிறது. தைப்பூச நாள் பெரும்பாலும் நிறைமதி நாளாக இருக்கும். தேவர்களின் குருவாகிய பிரகஸ்பதி பூச நட்சத்திரத்தின் தேவதை என்பர். பிரகஸ்பதி அறிவின் தேவதை என இந்துக்கள் நம்புவதால் பூச நட்சத்திரத்தை வணங்கிறல் பிரகஸ்பதியின் அருள் கிடைக்கும் என்பர். தைப்பூச நன்ளில் புண்ணிய நதியில் நீராடிறல் மிகுந்த புண்ணியம் உண்டாகும்.

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள திருவிடைமருதூர் இத் தைப்பூச விழாவிற்குப் பேர் போன தலம். அங்கு கோயிலில் உள்ள சித்த தீர்த்தத்தில் முழுகுவதும், வில்வமரத்தைச் சுற்றி வருவதும், சுவாமி தரிசனம் செய்வதும் பாவங்களைப் போக்கும் என்பர்.

திருநெல்வேலி மாவட்டத்தில் திருநெல்வேலி தாமிரபருணியில் தைப்பூசத்தன்று தீர்த்தம் ஆடுவதும், அம்பாசமுத்திரத்தருகிலுள்ள திருப்புடைமருதூரில் சுவாமி தரிசனம் செய்வதும் புண்ணியம் தரும் என்பர். முருக பக்தர்கள் வைத்தீசுவரன் கோயிலுக்கும் பழனிக்கும் செல்வர்.

மைப்பூசு மொண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பூசு நீற்றுன் கபாலீச் சரமமர்ந்தான்
நெய்ப்பூசு மொண்புழுக்க னேரிழையார் கொண்டாடும்
தைப்பூசங் காணுதே போதியோ பூம்பாவாய்.

என்பது சம்பந்தர் தேவாரம்.

## போகிப் பண்டிகை

மார்கழி மாதத்தின் இறுதி நாள் போகி நாளாகும். மக்கள் அம் மார்கழியில் தங்கள் இல்லங்களைத் துப்பரவு செய்து வெள்ளை அடித்துவண்ணம் பூசி ஒளிபெறச்செய்வர். தம் உள்ளங்களையும் விடியலில் எழுந்து வழிபாடு ஆற்றுவதன் மூலம் தூய்மை செய்வர்.

எனவே துப்புரவின் இறுதிப்பணியே "போகி". வீட்டிலும் உள்ளத்திலும் நாட்டிலும் உள்ள மாசுக்களைப் போக்குவதே போகி. ஒன்றுன இறைவனை உள்ளம் ஒன்றி வழிபடுவதற்கு உள்ளத் தூய்மை வேண்டுவதன்றே? தூய உள்ளத்தில் தானே " நாடெங்கும் வாழ வேண்டும்" என்ற நல்லெண்ணம் உண்டாகும். ஆகவே, போகி உள்ளத்தை தூய்மை ஆக்குகிறது.

வடநாட்டிலும் இப்போகி விழாவினைக் கொண்டாடுகிறுர்கள். ஆனல் அவர்கள் இந்திரனுக்கு வழிபாடு ஆற்றும் கேளிக்கை விழாவாகக் கொண்டாடுகிறுர்கள். போகி என்பது இந்திரன் பெயர்களுள் ஒன்று. எனவே அப்பெயர் கொண்ட இந்திரனை வழிபட்டு மகிழ்வர் வடநாட்டு மக்கள். தமிழர் தம் விவசாய முறை வழிபாட்டிற்கும் இந்திர வணக்கம் ஏற்றது.

இந்திரன் மேகங்களுக்குத் தலைவன் எனவும், அவனைப் போற்றி மழையைப் பெறலாம் எனவும் புராணங்கள் கூறுகின்றன. ஆகவே மழை அளித்து விளைவைப் பெருக்க வைத்த இந்திரனுக்கு உரிய விழாவாகப் போகிப் பண்டிகையைக் கொண்டாடுவதும் பொருத்தமானதே.

ஆயர்கள் ஆண்டுதோறும் தேவேந்திரனுக்குப் பூஜை செய்து வந்தார்கள். இந்திரன் மழைக்கடவுள் ஆனதால் அவன் அருளால் மழை பெய்து சுபீட்சம் அடைய வேண்டும் என்பதே இவ்விழாவின் நோக்கம்.

இந்திரனுக்குப் பூஜை போடாவிட்டால் இந்திர கோபம் ஏற்பட்டு மழைபெய்யாமல் பஞ்சம் ஏற்பட்டுவிடும் என்று பயந்தார்கள். காலகதியில் ஆயர்கள்இந்திரனுக்கு எடுக்கும் விழாவை கண்ணனுக்கு எடுத்தார்கள். ஆயர்கள் இந்திரனை அவமதித்ததால் ஏழு நாட்கள் தொடர்ந்து மழைபெய்யச் செய்தான். கண்ணன் கோவர்த்தனகிரியைக் குடையாகப் பிடித்து ஆயர்களைக் காப்பாற்றினன்.

## சூரிய பொங்கல்

நெல் விளைவுக்கு முதற் காரணம் மழை. மழைக்கு முதற் காரணம் சூரியன். சூரியனைச் சூரியநாராயணன் என்றே வழிபடுவர் வைஷ்ணவர்கள். சிவ சூரியாய நம: என்று வணக்கம் செய்வர் சைவர்கள். அறுவகைச் சமயத்துள் சௌரமும் ஒன்று. சௌரர்களுக்கு சூரியனே முழுமுதற் தெய்வம். ஒளியை எல்லாச் சமயத்தவரும் வணங்குகின்றனர். ஆடி முதல் மார்கழி வரையில் நெல் பயிரிடுங்காலம். உழவர்கள் மழையின் உதவியால் வயலில் இரவும் பகலும் இடைவிடாது உழைத்து சேர்த்த நெல்லை மார்கழி இறுதியில் வீட்டுக்கு கொண்டு வருகிறார்கள். அதனைச் சுற்றமும் நட்பும் சூழ, மனைவி மக்களுடன் தம் வீட்டில் நிறைந்த மகிழ்ச்சியுடன் இவ்விழாவை நடத்துகின்றனர்.

ஏதாவது தொழில் ஆரம்பிக்கலாமா? என்று பெரியவர்களைக் கேட்டால் "தை பிறக்கட்டும் ஆரம்பிக்கலாம்" என்பார்கள். "தை பிறந்தால் வழி பிறக்கும்" என்கின்ற பழமொழியும் எல்லோரும் அறிந்ததே. உழவுக்கும் தொழிலுக்கும் மதிப்புத்தரும் பண்பு தமிழனிடத்தில் எப்பொழுதும் இருந்து வந்தது. "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்ற பாரதி வாக்கு தமிழகத்தின் பழைய பண்பாட்டை நினைவு படுத்துவதாகும்.

தை மாதம் முதல்நாள் பொங்கல் நாள். உழவன் உழைப்பின் பயனை நுகரத் தொடங்கும் நாள். தனது முதற்பயனை இறைவனுக்குக் கொடுத்து அதன் பின் இறைவன் அடியார்களுக்கும் சுற்றத்தவர்களுக்கும் கொடுப்பது பண்டு தொட்டு வந்த தமிழர்களுடைய பண்பாடு ஆகும். அன்று யாவும் புதியனவாகவே இருக்கும். புத்தாடை அணிந்து, புதிய பானைகளில், புதிய நெல்லைக்குற்றி எடுத்த அரிசியை புதிய அடுப்பு மூட்டி முற்றத்தில் வைத்துப் பொங்குவர். புதிய பானைகளுக்குப் புதிய மஞ்சளைப் புதியநூலிற் காப்பாக அணிவார்கள். புதிய மஞ்சள் கொத்தையும்,புதிய கரும்பையும், புதிய வள்ளிக்கிழங்கையும், புதிய பூசணிக்காயையும், கோலமிட்டு செம்மண் தீட்டிய தம் இல்லத்தில் வாசலில் பிள்ளையார் பிடித்து வைத்து விளக்கேற்றி வைத்தும் கதிரவனை வழிபட்டு பொங்கலிடத்தொடங்குவர். பொங்கலிடும் பானை பொங்கி வரும்போது

உழவர்கள், மனைவி மக்களுடன் பொங்கலோ பொங்கல் என்று ஆரவாரித்து மகிழ்வார்கள்.

தமிழகத்தில் ஆதிஉழவன் தான் பாடுபட்டு உற்பத்தி செய்த உணவுப்பொருட்களைத் தனக்காக மட்டும் வைத்துக் கொள்ளவில்லை. அந்தத் தானியத்தை ஆறு பங்காகப் பிரித்து ஒரு பங்கை அரசனுக்கு நாட்டின் நிர்வாகத்தை நடத்த வரியாகவும், ஒரு பங்கை இறந்து போன தன் முன்னோர்களுக்கு ஒதுக்கியும், ஒரு பங்கை தெய்வத்திற்கும், ஒரு பங்கை விருந்தினருக்கும், ஒரு பங்கை தன் உறவினர்களுக்கும், ஆறுவது பங்கை தன் குடும்பத்திற்கும் உபயோகித்து வந்தான். இதனை வள்ளுவர்

"தென்புலத்தார், தெய்வம் விருந்து ஒக்கல்தான்
என்றுங்கு ஐம்புலத்தார் ஓம்பல் தலை."

என்ற குறள் மூலம் விளக்குகிறார்.

## ஆன்மீகப்பொங்கல்

ஒவ்வொரு விழாவிலும், ஒவ்வொரு கிரியைகளிலும், ஒவ்வொரு புராணத்திலும் ஏதாவது ஒரு தத்துவம் மறைபொருளாக இருக்கும். சர்க்கரைக்குள் வைத்த மருந்து போல அந்த உள்ளுறை தான் மிக முக்கியமானது. நமது உடம்பு ஒரு சிறிய குடிசை. அதனுள் ஆத்மா வாழ்கிறது. நமது வீட்டில் ஐவர் இலவசமாக வாழ்வதோடு நம்மை அடக்கி ஆளவும் பார்க்கிறார்கள். இவர்களை நாம் வென்று மதுரச் சோறு தினம் பொங்கிப் பகிர்ந்து உண்டு வாழ வேண்டும்.

இதுவே அன்றாடம் நிகழும் ஆன்மீகப்பொங்கல். அகம் – அடுப்பு; அடுப்புக்கு மூன்று கற்கள். அவை: அன்பு, பொறுமை, அவா அறுத்தல் என மூன்றும். ஞானக்கனல் எரியும் விறகு; உயிர் கலசம்; அருள் கருப்பஞ்சாறு; சிவானந்தம்– பொங்கி எழும் மதுரச் சோறு. இக்கருத்தமைந்த பாடல் சிதம்பர சுவாமிகள் அருள்வாக்காகத் திகழுகிறது.

அடியார் நிமலத் திருவகத்துள் அன்பு பொறுமை அவா அறுத்தல்
அடுப்பு ஆங்கு அமைத்து, மலக்காட்டத்ததிக ஞானக்கனல் மூட்டி
மடியாதிருந்த உயிர் கலசம் வழிய, அருள்பேருலை வார்த்து
மாறுப் பெருமைச் சிவானந்த மதுரச் சோறு தினம் பொங்கி

விடியாச் சீவபோத இருள் வீய, மவுனச்சுடர் விளக்கு
விளக்கி இருந்தபடி இருந்து மேலாம் சிற்றில் விளையாடும்
செடிதீரகத்தோர் புகழ்வாலை சிறுவா, சிற்றில் சிதையேலே
தேரூர் வீதிப்போரூரா, சிறியேஞ் சிற்றில் சிதையேலே.

# மாட்டுப்பொங்கல்

மாடு என்ற சொல்லுக்குச் செல்வம் என்பதே பொருள். தமிழர் மாடுகளைச் செல்வத்துட் செல்வமாகப் போற்றி வந்தனர்.

உழவர் கலப்பை தாங்கித் தம்முடன் வயலில் உழுதவற்றை எல்லாம் நினைக்கின்றனர். உடனே அவைகளுக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகின்றனர். அவ்விருப்பத்தால் உண்டான விழாவே மாட்டுப்பொங்கல்.

மாட்டுப்பொங்கலன்று மாடுகளை நன்றுகத் தேய்த்துக் குளிப்பாட்டி ஒட்டி வந்து அழகுறப் புனைந்து, மாலையில் மாட்டுக்கொட்டிலில் கட்டிப் பொங்கற்சோறு படைத்து வழிபடுவார்கள். சிலஇடங்களில் மாலையில் எருதுகளை வண்டிகளிற் பூட்டிப் பொங்கலோ பொங்கல் என ஆரவாரித்து ஓட்டிக்கொண்டு ஊர்வலம் வருவார்கள். அன்று மாடுகளை வேலை வாங்க மாட்டார்கள். மாட்டுப்பொங்கல் அன்று வைகறையில், முதல் நாட்பொங்கலன்று அரிசி கழுவிய கழுநீரை எடுத்துச்சென்று கழனிகளில் தெளித்துப் பொங்கலோ பொங்கல் எனக் கூவும் ஓசை கழனிகளில் எங்கும் இனிமையாக ஒலிக்கும்.

இப் பொங்கலைச் சில இடங்களில் "பட்டிப்பொங்கல்" என்றும், "பட்டிஆவுடையார்" பொங்கல் என்றும் கூறுவதுண்டு. பெற்ற தாயைவிட பல விதங்களில் நமக்குப் பயன்படும் பசுவை தமிழர்கள் தெய்வமாகவே கருதி வழிபட்டனர். வேதகாலத்தில் பசுக்கொலை மகாபாதகமான செயலாகவும் பிராயச்சித்தமற்ற கொடூரச் செயலாகவும் மதிக்கப்பட்டது. மனு பசுக்கொலையை உபபாதகம் என்று தம் தர்ம சாஸ்திரத்தில் குறிப்பிட்டிருக்கிறுர். அர்த்த சாஸ்திரத்தை இயற்றிய கௌடில்யர் பசு திருடுபவனுக்கே கொலைத்தண்டனை விதித்தார். ஒரு பசுவைக்கொல்வது பல மக்களைக் கொல்வதற்குச் சமம் என்று நினைக்கப்பட்டு வந்தது. கோ என்ற வார்த்தைக்கே மோட்சம், சுடர், பூமி என்ற அர்த்தங்கள் உண்டு. கோலோகம் என்ற உலகம் இருப்பதாகவும் கருதப்பட்டு வருகிறது.

றெவெறன்ட் டாக்டர் ஜோன் மாரிசன் என்பவர் பசுக்கொலை பெரும் நஷ்டம் என்பதை வற்புறுத்தி எழுதியுள்ளார். ஒரு பசு குறைந்தது 14 அல்லது 15

வருடங்கள் உயிர் வாழலாம். இப்பசு தரும் பால் 15440 பேர்களுக்கு ஒரு தினத்திற்கான பால் கொடுக்கக் கூடியவை. ஆகவே பசுக்களைக் கொல்வது பாவம் மாத்திரம் அல்ல, பெரிய பொருளாதாரநஷ்டமுமாகும். பசுவைக் கொல்பவனும், அதனிறைச்சியை விற்பவனும், உண்பவனும் கருணையற்றவர்கள் என்றே கூறவேண்டும்.

## காணும் பொங்கல்

தம்மைப் போன்று தரணியில் உள்ள மற்றவர்களும் வாழ்கின்றார்களா? என்று அறிய விரும்பினர் உழவர். அதன் பயனாகவே எழுந்ததே காணும் பொங்கல். இது மாட்டுப்பொங்கலுக்கு அடுத்தநாள் நிகழ்ச்சி. தங்கள் வீடுகளிலிருந்து வெளிப்போந்து உற்றார்க்கு மட்டுமின்றி அற்றார்க்கும் அலந்தார்க்கும் உதவும் காட்சியே காணும் பொங்கல்விழா. உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற வேறுபாடின்றி அனைவரும் ஒருவரை ஒருவர் கண்டு அளந்து அளவளாவும் அருமை நாளே காணும் பொங்கல். " நாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்ற தமிழ்ப் பண்பாட்டிலே காணும் ஒவ்வொருவரையும் "உங்கள் வீட்டில் பால் பொங்கிற்று" என்று பண்போடு விசாரிப்பார்கள். தம்மை நாடி வரும் பணியாளர்களுக்குப் பொன்னும் ஆடையும் கொடுத்து மகிழ்விப்பர். உற்றார் உறவினரை வீட்டுக்கு அழைத்து உணவிட்டு சிறப்புச் செய்து வழி அனுப்புவர். மணமான புதுமணமக்களுக்கு நல் விருந்தும் ஆடைகளும் அணிகளும் தரப்பெறும்.

தைத்திங்கள் முதல் நாளன்று ஞாயிறு மகர ராசியில் வந்து உத்தராயணம் தொடங்குவதால் வைதீக முறையில் இதனை மகரசங்கிராந்தி பண்டிகை என்பர். இதனால் உழவர்களே அன்றி எல்லோரும் இந்நாளைக் கொண்டாடுவர்.

காணும் பொங்கலைக் கன்னிப்பொங்கல் என்று சிலர் அழைப்பர். கன்னிப்பொங்கல் அன்று சிற்றிளம் பெண்கள் கூட்டமாகக் கூடி கும்மி அடித்துக் கொண்டு ஆற்றங்கரைக்குச் செல்கின்றனர். அங்கேயே மனம் போனபடி கும்மி அடித்து விளையாடி விட்டு, கூட்டுப்பொங்கல் செய்து (கூட்டாஞ்சோறு ஆக்கி) ஆற்றுக்குப் படைத்துச் சாப்பிட்டு விட்டு சாயங்காலமாக வீடுதிரும்புகின்றனர். இதைப் பூப்பொங்கலென்றும் கூறுவதுண்டு.

ஆற்றுக்குக் கன்னி என்றும் பெயருண்டு. ஆற்றைக் கன்னியம்மனாகவே கருதி வழிபாடுகள் செய்வர். மழை பொய்த்த காலத்தில் ஆறுதானே நீரை வழங்க வேண்டும். கங்கை, யமுனா, சரசுவதி, கோதாவரி, கிருஷ்ணா, காவேரி, நர்மதை, துங்கபத்திரி, சரயு இந்த ஒன்பதும் நவகன்னிகள் அழைக்கப்படும்.

பொங்கல் செய்து படையல் போடும்போது ஐந்து படையல் போடுகிறார்கள். அதாவது ஒன்று சூரியனுக்கு, மற்றொன்று அக்கினிக்கு, மற்றொன்று இந்திரனுக்கு, மற்றொன்று தீபத்துக்கு, மற்றொன்று பிள்ளையாருக்கு. இவ்விதம் படைத்து ஆராதனை நடைபெறுகிறது.

## வீர விளையாட்டு ஜல்லிக்கட்டு

தமிழர்களின் வீர விளையாட்டுகளில் ஒன்று ஜல்லிக்கட்டு. இதற்கு "மஞ்சி விரட்டு" என்றும் "கொல்லேறு தழுவுதல்" என்றும் பெயர்களுண்டு. கொழுத்து வளர்ந்த காளையை எந்த இளைஞன் அடக்குகிறானோ அவனுக்குத்தான் தமிழ் மகள் மாலையிடுவாள். ஒவ்வொரு பெண்ணும் தனக்கு விபரம் தெரிந்த நாள் முதல் ஒரு காளைக் கன்றை செல்லமாக வளர்ப்பாள். அவளுக்கு விவாகப் பருவம் வரும்போது அக் கன்று மாடு ஆக வளர்ந்து இருக்கும். இக் காளையை அடக்கிக் கடிமணம் புரிவதை

"தூநிற வெள்ளை அடர்ந்தாற்கு உரியள்
இப்பூவைப் புதுமலராள்"

என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது.

பளபளவென்று சீவித் தைலம் தடவிய கொம்புகளுடன் கழுத்து நிறைய புஷ்பமாலைகளும், உருமாலும் ஏராளமாக அணிந்து கம்பீரமான நடையும், பயங்கரமான பார்வையுங் கொண்டு, கண்டோர் ரிஷபராஜர்கள் என்று சொல்லும்படி உயர்ந்த ஜாதி மாடுகள் தொழுவிலிருந்து ஒவ்வொன்றாக அரங்கிற்குள் விடப்படும். காளை வாலிபர்கள் தங்கள் உயிரைத் திரணமாக மதித்து அவைகள் மீது பாய்ந்து அவைகளின் கழுத்திலுள்ள உருமாலைக் கழற்ற முயன்று அவைகளை அடக்க பிரம்மப்பிரயத்தனம் செய்வார்கள். காளைகள் அப்படிப் பாய்பவர்களை கொம்பினால் தூக்கிப்போட்டு விட்டு அலட்சியமாக ஓடும். எவனொருவன் காளையை அடக்கி அதன்மேலேறி வருவானோ அவனுக்கு அக்காளைக்குரிய பெண் மாலையிட்டு அழைத்துச் செல்வாள்.

## வயிரவ விரதம்

தை மாதம் முதல் செவ்வாய் தொடங்கி ஒவ்வொரு செவ்வாயும் வயிரவப்பெருமானைக் குறித்து அனுட்டிப்பது. செவ்வாய்க் கிழமைக்கு மங்கள வாரம் என்றும் பெயருண்டு. செந்நிற ஒளியை வீசுவதால் இக்கிரகத்திற்குச் செவ்வாய் என்னும் பெயர் அமைந்தது. சித்திரை மாதப் பரணி நட்சத்திரமும் ஐப்பசி மாதப் பரணி நட்சத்திரமும் வயிரவ விரதத்திற்குரிய தினங்களாகும்.

கபாலம், காளாமுகம், என்னும் மதக்கொள்கை உடையாரே வயிரவ வணக்கம் செய்து வந்தனர். அது மிகப்பயங்கரமான வழிபாடு. தற்காலம் அது அழிந்து போயிற்று. காவற் கடவுளாகவே சிலர் தற்காலம் வயிரவ மூர்த்தியை வழிபட்டு வருகின்றனர்.

## வீரபத்திர விரதம்

மங்கள வாரமாகிய செவ்வாய்க் கிழமைஒவ்வொரு வாரமும் அனுட்டிப்பது. வருடம் முழுவதும் அனுட்டிக்க முடியாதவர்கள் தை மாதத்தில் வரும் மங்கள வாரத்தில் அனுட்டிப்பர்.

பங்கஜ பாதம் பணிந்தறியேன் பக்தர் பாடுகையில்
அங்கம் சிலிர்க்க அழுதறியேன் ஏழை ஆயினும் என்
சங்கடம் தீர்த்தருள்வாய் என்றுனயே சரண புகுந்தேன்
மங்கள வாரம் வருவாய் அம்மா ஜீவமாணிக்கமே.

_ அகத்தியர்

## சூல விரதம்

தை மாத அமாவாசையில் அனுட்டிப்பது. அது இச்சை, ஞானம், கிரியை வடிவான சக்தியைக் குறிப்பது. அம்மூன்றும் சிவபெருமானுடை சக்தி.

### தை மாத குரு பூஜைத்தினங்கள்

1. கண்ணப்பர்
2. அரிவாட்டாயர்
3. சண்டேசுவரர்
4. நீலகண்டர்
5. அப்பூதியடிகள்
6. கலிக்கம்பர்
7. தாயுமான சுவாமிகள்

# மாசி மாத நினைவுகள்

காசியைக் கயிலையைக் கண்டும் கருத்திற் களங்கம் என்னும்
பாசியை நீக்கார் பயன்பெறுவாரோ பரிந்து நன்மை
பேசி அன்புப் பணிசெய்வார் பெரியோர் மெய்ப்பேறளிக்க
மாசியில் ஆசி தருவாய் மாசில்லாத மாணிக்கமே.

—அகத்தியர்.

## மாசி மகம்

மாசி மாசத்தில் மக நட்சத்திரம் பூரணையோடு கூடிவருவதால் அத்தினம் மிக விசேடமுடையது. அன்றய தினம் கடலாடும் விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. ஆடி அமாவாசை, தை அமாவாசை, அர்த்தோதயம், மகோதயம், மாசி மகம் ஆகிய புண்ணிய தினங்களில் கடலில் ஸ்நானம் செய்வதுமாக விசேடமாகக் கருதப்படுகிறது. ஞானசம்பந்தப்பெருமான் அருளிய தேவாரப்பாடல் இதனை வலியுறுத்துகின்றது.

"மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
கடலாட்டுக் கண்டான் கபலிச் சரமமர்ந்தான்
அடல் ஆனேறு ஊரும் அடிகள் அடிபரவி
நடமாடல் காணுதே போதியோ பூம்பாவாய்"

"மாமாங்கமாடி மதுரைக்கடலாடி ஸ்ரீரங்கமாடி திருப்பாற்கடலாடி" என்பது தாலாட்டுப்பாடல் ஒன்றின் ஒரு பகுதி. கடலில் சென்று நீராடுதல் உடல் நலத்திற்கும் உயிர் நலத்திற்கும் நன்மை பயப்பதொன்றுகத் தமிழ்மக்கள் நன்கினிது அறிந்திருந்தனர்.

தமிழ் நாட்டில் 12 ஆண்டுகளுக்கொருமுறை கும்பகோணத்தில் மகாமகம் என்ற விழா மிக விஷேடமாக கொண்டாடப்படுகிறது. இங்கே யமுனை, சரஸ்வதி, கோதாவரி நர்மதை, சிந்து, காவேரி, வைகவதி முதலான நதிகள் தங்கள் பாவங்களைப் போக்க இந்த மகாமகத்தீர்த்தத்தை வந்தடைகின்றனர். குரு சிம்ம ராசியில் வரும் மாசி மாதத்தில் எல்லோரும் நீராடி பேறு பெறும் காரணத்தால் மகா மகம் என்கிற சிறப்புப் பெயர் ஏற்பட்டுள்ளது.

ஒரு முறை கங்கையும் யமுனையும் சிவபெருமானிடம் சென்று "சுவாமி! எங்களில் முழுகுகின்றவர்களுடைய பாவங்களை நாங்கள் ஏற்கிறோமே, அதை

நாங்கள் எங்கு போய்த்தீர்ப்பது" என்று கேட்டார்கள். அதற்குச் சிவ பெருமான் அவர்களை கும்பகோணம் மகா மகக்குளத்தில் போய்த் தங்குமாறு கூறினர். மகம் என்னும் நட்சத்திரக்கூட்டம் வெட்டரிவாள் போன்று வளைந்து கரை போலவும், அவற்றின் இடைப்பட்ட முழுநிலா கடல் போலவும் தோன்றும் ஒரு இயைபும் இதற்குப் பொருத்தமாக உள்ளது. மதியும் மகவெண்மீனும், கோயிலும், பொய்கையும் போன்றன என்று நச்சினர்க்கினியர் விளக்கம் தருகிருர்.

பிறவிக்கடலில் வீழ்ந்து துன்பக்கடலில் அமிழ்ந்தி வருந்தும் உலக மக்களை, இறைவன் அவற்றினின்று எடுத்து அருட்கடலில் இன்பவெள்ளத்தில் அமிழ்த்தித் திளைக்கச்செய்யும் திருவருட்குறிப்பையே கடலாட்டுவிழா அல்லது தீர்த்தவாரி என்னும் சிறப்பு நிகழ்ச்சி உணர்த்துகின்றது எனலாம்.

இறைவனையே ஒரு வகையில் கடல் என்றும், தீர்த்தம் என்றும், உருவகம் செய்து பெரியோர்கள் போற்றுவர். "உருகிப் பெருகி உளம் குளிரமுகந்து கொண்டு பருகற்கினிய பரங்கருணைத் தடங்கல்" என்றும் "மரணம் பிறப்பென்று இவையிரண்டின் மயக்கறுத்த கருணைக்கடலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ" என்றும் மணிவாசகர் பாடிமகிழ்தல் காணலாம். இறைவனைத் தீர்த்தம் எனவும் தீர்த்தன் போற்றிக் குறிப்பிட்டு.

**"ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்து ஆடும் தீர்த்தன் தில்லை**
**சிற்றம்பலத்தே தீயாடும் கூத்தன்"**

என்றும் பாடியிருக்கிருர்.

உயிர்கள் இறைவனின் திருவருட்கடலில் திளைத்து மகிழும் பேறு பெறுதல் வேண்டும் என்னும் சிறந்த ஒரு தத்துவ நுட்பத்தினை, யாவரும் இனிது உணரும்படி நிகழ்த்திக்காட்டுவதே "கடலாட்டு விழா" எனவும் கூறலாம்.

விக்கிரமசோழன் என்னும் அரசன் மாசி மாதத்தில் மக நட்சத்திரத்தில் வரும் பௌர்ணமி தினத்தன்று கடலாட்டு விழா நிகழ்த்தி கடற்கரை ஒரு மண்டபத்தில் இறைவனை எழுந்தருளுவித்து வழிபட்டு மகிழ்ந்தான் என்ற செய்தியை பின்வரும் கல்வெட்டுப்பாடல் நமக்கு உணர்த்துகிறது.

**"மாசிக் கடலாடி வீற்றிருக்க மண்டபமும்**
**பேசுற்ற அற்றைப் பெருவழியும் - ஈசற்குத்**
**தென்புலியூர்க்கே அமைத் தான் கூத்தன் திசையனைத்தும்**
**மன்புலி ஆணை நடக்க வைத்து."**

மகாமகத் தீர்த்தத்திற்கு "மகா தீர்த்தம்" என்று பெயர். "அகம் என்றால் பயம்" "மா" என்றால் தொடாது. மகாமகத்தன்று இக்குளத்தில் ஸ்நானம் செய்தால் கங்கா தீரத்தில் நூறுவருஷம் வசித்து மூன்று காலம் கங்கா ஸ்நானம் செய்த பலன் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது.

மகாமக ஸ்நானத்திற்குப்பின் காசி விஸ்வேஸ்வரர் கோவிலிலுள்ள ஒன்பது கன்னிகைகளை வழிபடவேண்டும். ஒன்பது முறங்களில் புஷ்பம், குங்குமம், பழம், தேங்காய், வஸ்திரம் இவற்றை வைத்து அவற்றின் மீது மற்றொரு முறத்தால் மூடி ஒன்பது சுமங்கலிகளுக்கு கொடுக்க வேண்டும்.

## சிவராத்திரி

சக்திக்கு ஒன்பது ராத்திரி. அது நவராத்திரி. சிவனுக்கு ஒரு ராத்திரி. அது சிவராத்திரி. சிவராத்திரி என்ற சொல் சிவனுடைய ராத்திரி, சிவமான ராத்திரி, சிவனை அர்ச்சிக்கும் ராத்திரி, சிவனுக்கு இன்பமான ராத்திரி என்று பலவகைப் பொருளைத்தரும். சிவமான ராத்திரி என்பதே இவைகளில் மிகப்பொருத்தமானது.

இது நித்திய சிவராத்திரி, பட்ச சிவராத்திரி, மாத சிவராத்திரி, யோக சிவராத்திரி, மகாசிவராத்திரி என்று ஐந்து வகைப்படும். ஆண்டிலுள்ள 24 சதுர்த்தசிகளிலும் சிவபூஜை நித்திய சிவராத்திரியாகும். தை மாதம் கிருஷ்ண பட்சம் பிரதமை முதல் 13நாள் பூஜை பட்சசிவராத்திரி. மாசி கிருஷ்ண சதுர்த்தசி, பங்குனி முதல் திருதியை, சித்திரை கிருஷ்ணஅஷ்டகம் முதலியவை மாத சிவராத்திரி. திங்கட்கிழமை முழுவதும் அமாவாசையாக வந்தால் அது யோக சிவராத்திரி.

மாசி மாதம் கிருஷ்ண சதுர்த்தசியில் நள்ளிரவில் சிவபெருமான் லிங்கத்தில் தோன்றினார். அன்றே மகாசிவராத்திரி. ஆதலால் இப்பொழுதும் அந்த இரவில் உலகிலுள்ள எல்லா லிங்கங்களிலும் சிவன் தோன்றுகின்றார். அன்று சிவபூஜை எல்லோருக்கும் விருப்பத்தைக் கொடுக்கக் கூடியது. அன்று காலை குளித்துக் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு சிவாலயம் சென்று பஞ்சாட்சரம் அல்லது சிவ நாமத்தை ஜபிக்க வேண்டும்.

இரவில் சிவனுக்கு விளக்கிட்டு நல்லெண்ணெய், பஞ்சாமிர்தம்,நெய், பால், தயிர், தேன், கருப்பஞ்சாறு, இளநீர், பழச்சாறு முதலியவைகளால் அபிஷேகம் செய்து பலவிதமான தின்பண்டங்கள், பழங்கள் முதலியவைகளைப் படைக்க வேண்டும். சிவனடியார்க்கு நம்மால் இயன்ற அளவு நன்மை செய்ய

வேண்டும். இவ்விதம் 14 ஆண்டுகள் சிவராத்திரி விரதம் இருந்து, கடைசி ஆண்டில் பூர்த்தியும் செய்ய வேண்டும். அன்று தங்கத்தாலோ, வெள்ளியாலோ சிவ உருவம் செய்வித்து அதில் அர்ச்சனை செய்து அதைத் தானம்செய்ய வேண்டும். மற்ற தானங்களும் செய்ய வேண்டும். அவ்வாறு சிவபூஜை செய்வோருக்கு சிவபெருமான் முக்தியைக் கொடுக்கிறார் என்பது நம்பிக்கை.

கருணைவடிவான தேவி நமக்காக சிவபூசை செய்த நாள் சிவராத்திரி ஆகும். "சிவம்" என்ற சொல்லுக்கே துன்பத்தை துடைக்க வல்லது என்று அர்த்தம். ஒரு சமயம் உமாதேவி விளையாட்டாக ஈசுவரனது கண்களை அவருக்குப் பின் புறமாக வந்து பொத்திவிடுகிறாள். எங்கும் பேரிருள் பரவுகிறது. இந்நிலையில் தேவர்கள் சிவபூஜை செய்த இரவே சிவராத்திரி என்றும் கூறப்படுகின்றது.

உலக முடிவாகிய ஊழிக்காலத்திலே பிரம்மாபுரம் இறுதியுற்றார். எங்கும் உள்ள உயிர்கள் ஒடுங்கி உலகங்களும் அழிந்தன. அந்த இரவுப்பொழுதிலே உமாதேவியார் இறைவரை நோக்கிப் பிரார்த்தனைசெய்து இறையருள் பெற்றார். இறைவரிடம் "இவ்விரவிலே விரதம் இருப்போர் யாவராயினும் அவர் மோட்சத்தை அடைய அருள்க" என்று வேண்டினர். எனவே, சிவராத்திரி விரதம் சைவ மக்களுக்கு மிகவும் சிறந்த முக்கியமான விரததினம் என்பது சொல்லாமலே விளங்கும்.

சிவபூஜை விதி தவறாமல், நான்கு சாமத்தும், சாமத்திற்கு ஒரு முறையாக பூஜை செய்ய வேண்டும்.

**முதல் ஜாமம்:** பால், தயிர், நெய், கோசலம், கோமயம் என்னும் இவ்வைந்தும் கலந்த பஞ்ச கவ்யத்தில் அபிஷேகம் செய்து வில்வமும் சாத்தி, தாமரை மலரால் அர்ச்சிக்க வேண்டும். அச்சமயம் பயத்தம்பருப்பு சேர்த்த பொங்கல் நிவேதித்து தூப தீப ஆராதனைகள் செய்து, இருக் வேதம் ஓதி இருகை கூப்பி அர்க்கியம் கொடுத்து அஷ்டாங்கமாக வணங்கி வழிபடல் வேண்டும்.

**இரண்டாம் ஜாமம்:** பஞ்சாம்மிருதத்தால் அபிஷேகம் செய்து சந்தனத்துடன் தாமரை மலரும் சாத்தி, துளசியால் அர்ச்சித்து பாயசம் நிவேதித்து யஜுர் வேதம் ஓதிவணங்க வேண்டும்.

**மூன்றாம் ஜாமம்:** தேனால் அபிஷேகம் செய்து, அரைத்த பச்சைக் கற்பூரத்துடன் சாதிமுல்லை மலர் சாத்தி, முக்கிளை கூடிய வில்வ தளத்தால் அர்ச்சித்து எள் அன்னம் நிவேதித்து சாம வேதம் ஓதி வழிபடல் வேண்டும்.

**நான்காம் ஜாமம்:** கருப்பஞ் சாற்றினல் அபிஷேகித்து, அரைத்த குங்குமப் பூவுடன், நந்தியாவட்டை மலரும் சாத்தி, நீலோற்பவ மலரால் அர்ச்சித்து சுத்த அன்னம் நிவேதித்து அதர்வண வேதம் ஓதி வழிபடல் வேண்டும்.

இவ்வாறு நான்கு ஜாமத்தும் நித்திரை நீங்கிப் பூசித்து மறுநாள் அதிகாலையில் புனித நீராடி அனுஷ்டானம் இயற்றி தமது தீட்சாகுருவைத் தியானித்து தக்கவாறு தானம் தந்து சூரியன் உதித்து ஆறு நாழிகைக்குள் பாரணை செய்ய வேண்டும். இவ்வாறு 24 வருடம் இவ்விரதம் நோற்றுப் பின் கோதானம், பூதானம், சுவர்ணதானம், முதலியன தந்து விரதத்தைப் பூர்த்தி செய்வோர் சிவகதி சேர்வர்.

சிவராத்திரி சிவபூசை வழிபாடு நடத்துவதற்கும், சிவதீட்சையேற்றுச் சிவலிங்க வழிபாடு செய்வதற்கும் ஒரு சிறந்த நன்னாள்.

இறைவழிபாட்டிற்குத் தடையாய் இருப்பன ஊணும் உறக்கமுமாகும் அத் தடைகள் நீங்குவதற்குப் பல பயிற்சிகளை நாம் கையாண்டு வருகின்றோம். குறித்த பல நாட்களில் நாம் பட்டினி நோன்பிருந்து ஊணைத் துறக்கின்றோம். அது போல் உறக்கத்தை துறப்பதற்குச் சிவராத்திரி உகந்தநாளாய் நமக்குக் கிடைத்திருக்கிறது. கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காமல் கண்ணுக்கினிய கண்ணுதற் கடவுளைக் கைதொழுதேத்த நண்ணி வருகிறது நல்ல சிவராத்திரி நாள். வைணவர்கள் வைகுண்ட ஏகாதசியன்று பசித்திருந்து இரவு விழித்திருக்கிறார்கள். சைவர்கள் சிவராத்திரியன்று நோன்புவிரதங் கொண்டு விழித்திருந்து பரமனைப் பயில்கிறார்கள்.

அறிந்தோ அறியாமலோ கூட, ஒருவன் சிவராத்திரியன்று விழித்திருந்தால் புண்ணியம் கிட்டிவிடும். ஒரு வேடனைப் புலியொன்று காட்டில் விரட்டிச் சென்றது. உயிர் பிழைக்க வேண்டி அவன் ஓடிப்போய் ஒரு வில்வமரத்தில் ஏறிக்கொண்டான். புலியும் அவனை விட்டுப் போகாமல் மரத்தடியிலேயே பதுங்கிக் கிடந்தது. புலிக்குப் பயந்து கிலிபிடித்துப் போய் இரவு முழுவதும் அவன் உறங்கவே இல்லை. இன்னது செய்கிறோம் என்று அறியாமலே, இராப்பொழுதை போக்க வேண்டி, அவன் அம்மரத்து இலையை ஒவ்வொன்றாக கிள்ளி கீழே போட்டுக் கொண்டிருந்தான்.

அன்று சிவராத்திரிநாள் என்று அவனுக்குத் தெரியாது. காலையில் புலியிருந்த இடத்திலே ஒரு சிவலிங்கம் காட்சியளித்தது. வேடன் கிள்ளியெறிந்த வில்வபத்திரமெல்லாம் சிவலிங்க அர்ச்சனையாக முடிந்தது. வேடன் செய்தது அறியாமற் செய்ததாய் இருந்தாலும் அவன் செய்தது வில்வ

தளத்தின் அர்ச்சனையாதலாலும், அவன் விழித்திருந்து தூவிக் கொண்டிருந்தமையாலும், அவ்வர்ச்சனை சிவலிங்க வழிபாடாக வாய்த்ததாலும், அன்று ஏற்கனவே சிவராத்திரியாக விருந்ததாலும், அவன் முக்திபெற்றான். இது நிகழ்ந்தவிடம் திருவைகாவூர் என்னும் புனிதத்தலமாகும். அங்கு இன்றும் சிவராத்திரிப் பூசைக்கு ஒரு தனிச்சிறப்புண்டு.

சுகுமாறன் என்பவன் ஒரு வேதியன். அவன் பிறனில் விழைத்தல் முதலிய தீய காமச் செயல்களும் பல புரிந்தவன். அவன் தற்செயலாக ஒரு சிவராத்திரி அன்று நாககன்னிகையர் நடத்தும் சிவராத்திரி வழிபாட்டைக் கண்ணுற்றான். அது பெருஞ் சிவபுண்ணியமாக மாறிக் காலதூதர் கையினின்றும் சிவகணங்களால் மீட்கப்பெற்றான் என்று புராணங்கள் கூறுகின்றன. ஆதலால் சிவராத்திரி பூசையைக் கோயில்களிற் கண்டு சேவித்தல் பெரும் புண்ணியமாகும்.

சிவராத்திரி விழிப்பிருக்க வேண்டியது தானே முக்கியம் என்று நினைத்து சிலர் திரைப்படங்களுக்கும் நாடகக் கொட்டைகளுக்கும் சென்று அப்படியும் இப்படியுமாய் அவ்விராப் பொழுதைக் கழித்து விடுகிறார்கள். சிவராத்திரியின் போது தூங்காமல் இருந்தால் புண்ணியம் உண்டு என்பது சரிதான். ஆனால் சிவராத்திரியின் நோக்கம் அதுவல்ல. சிவராத்திரிநாள் இரவில் நான்கு சாமத்திலும் சிவலிங்க வழிபாடுகளைத் தரிசித்தும், நாம் வழிபாடு நடத்தியும், சிவபெருமானைச் சிந்தித்து நற்பேறு பெறவேண்டும் என்பதே உண்மை, சிவராத்திரியன்று சிவன்கோயில்களில் எல்லாம் நான்கு சாமமும் பூசை நடக்கும், அப்பூசைகளைக் கண்டும், நடத்தியும், தானதருமங்கள் செய்தும், சிவபெருமானின் பொருள்சேர் புகழைப் புகன்றும் புகலக்கேட்டும் சிவபுண்ணியம் அடையலாம்.

இருட்டிலே நல்லவை எல்லாம் நடுங்கி நலிவுறும். தீயவை எல்லாம் திளைத்துத் திரிவுறும், புறத்துள்ள இருளே நம்மை அச்சுறுத்தி அல்லற் படுத்துமானால், அகத்திலுள்ள இருளின் கொடுமையைப் பற்றிக் கூறவே வேண்டாம். நம் அறியாமை, அஞ்ஞானம், மருள், மயக்கம் எனும் இவையும் கொடிய இருளேயாகும். இருளைப் போக்கி ஒளியைக் கொடுப்பதற்கும் அறியாமையைப்போக்கி சிவஞானச் செல்வத்தை அளிப்பதற்கும் சிவன் ஒருவனே வல்லவன். அவனை வழிபட்டு அவன் திருவருளின் திறத்தாலேயே நாம் நம் அகவிருளையும் போக்கும் சிவஞான ஒளியைப் பெறுதல் கூடும்.

சிவனே ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ்சோதி. அவனே தனிப் பெரும் கருணை வடிவான அருட்பெருஞ்சோதி, அவனே அருள் ஒளி, அண்டமாரிருளோடு நடத்தும்பர் உண்டாயிருக்கிற சிவப்பொருள் என்று வேதங்களும் சிறந்த சிவாகமங்களும் கூறுகின்றன. ஆகவே அவனுடைய

அருவுருவ விளக்கமாகிய சிவலிங்கத்தை சிவராத்திரியன்று வழிபடுதல் சிறப்பாயிற்று

ஒரு காலத்தில் பிரம்மனும் திருமாலும் தான் தான் பெரியவன் என்று தம்முள் போர் புரிந்தனர். அவர்கள் அகம் இருண்டது போல் சகலமும் இருளத் தொடங்கி விட்டது. அதுவே சிவராத்திரிக் காலம். தேவர்கள் எல்லோரும் அஞ்சி நடுங்கினர். அப்பொழுது விதிக்கும் மாலுக்கும் அறிவு கொளுத்த வேண்டிச் சிவபெருமான் அவர்களிடேயே லிங்கமாய் முளைத்துச் சுடர் விட்டு விளங்கினர். அவ்வேளையிலும் சிவனை வணங்கும் சிந்தையிலராய் அவ்விருவரும் சிவ லிங்கத்தின் அடியையும் முடியையும் அளவிட்டு மிக்குச் சோதிக்கத் தொடங்கினர். பின்னர் அவ்வாறு அளக்க முடியாது தோல்வியுற்றுத் தம் செருக்கெல்லாம் ஒழித்து, சிவனைச் சரண் புகுந்து வழிபட்டு உய்வு தேடினர்.

ஆதலால் திருவண்ணமலையில் சிவராத்திரி வழிபாடும் சிறப்புறுவதாயிற்று. இவ்வரலாற்றை உள்ளடக்கியே திருநாவுக்கரசு நாயனர் லிங்க புராணத் திருக்குறுந்தொகையைப் பாடியுள்ளார். இதில் இவர் சிவலிங்கம் ஒளிவடிவம் என்பதைச் சொக்கணைந்த சுடரொளி வண்ணன் என்றும் உலகமூர்த்தி ஒளிநிற வண்ணன் என்றும், ஏறுகந்தேறெரி வண்ணம் என்றும் கூறி அண்டமூர்த்தி காமனைக் காய்ந்தவன். புண்ணிய மூர்த்தியாகிய அவனே மெய்ப்பொருள் என்றும் அழகுறக் குறிப்பிடுகிறர். சிவலிங்கத்தை எவ்வாறு வழிபடவேண்டும் என்றும் விரித்துக் கூறியுள்ளார்.

செங்கணனும் பிரமனுந்தம்முளே
எங்கும் தேடித் திரிந்தவர் காண்கிலார்
இங்குற் றேனென் றிலிங்கத்தே தோன்றினன்
பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே.

என்பது அப்பர் வாக்கு.

சிவராத்திரியைப்பற்றி ஆகமங்கள் பலப்பலவாறு கூறுகின்றன. ஓர் ஊழியின் இறுதியிலே அண்டங்களை எல்லாம் வாரியுண்ணும் இருள் வந்து மூடிக்கொண்டது. அவ்விருளைப் போக்க வேண்டி உருத்திரமூர்த்தி சிவலிங்கத்தை வைத்து வழிபட்டார். அதுவே சிவராத்திரியாயிற்று என்பர். ஆலம் உண்ட சிவனுக்கு அந்த நஞ்சு ஏதும் கெடுதல் விளையாதிருக்க வேண்டித் தேவர்கள் இராமுழுவதும் பூசை செய்திருந்தனர் என்றும், அவ்வேளைப்பொழுதே சிவராத்திரியாயிற்று என்றும் கூறுவர்.

அந்தக் காலத்தில் சிவலிங்கத்தைச் சைவர் மாத்திரமன்றி எல்லோரும் வழிபட்டனர். அதில் சிவம் இருக்கின்றது. விஷ்ணு இருக்கிறர். பிரம்மன் இருக்கிறர். எல்லாக் கடவுளரையும் ஒன்று சேர்த்தே லிங்கம் விளங்குகின்றது. லிங்கத்தின் பீடம் ஆவுடையார் எனப்படுவது. சக்தி ரூபம். பாணம் சிவ ரூபம். பீடம் கிரியா சக்தி வடிவம். லிங்கம் ஞான சக்தி வடிவம். பீடத்தின் அடிப்பாகம் பிரம்ம ரூபம். நடுப்பாகம் விஷ்ணு ரூபம். இதைத்தான் திருமூலர்

"மலர்ந்த அயன் மாலுருத்திரன் மகேசன்
பலந்தரு ஐம்முகன் பரவிந்து நாதம்
நலந்தரு சக்திசிவன் வடிவாகிப்
பலந்தரு லிங்கம் பராநந்தியாமே."

என்று அருளியுள்ளார்.

மாலின் கொப்பூழில் தோன்றிய அயனும் அம்மாலாகிய அரியும், அரனும், ஆண்டானும், பயனருளும் அருளோனுகிய ஐம்முகனும், மேலாம் விந்து நாதங்களும், நன்மை அருளும் சத்திசிவன் வடிவங்களும் நிறைந்த குறைவிலா இன்பப் பயனுக்கு வாயிலாகிய பாடிப்பரவிப் பணியும் பணியாம் நற்றவத்தைத் தந்தருளும் நந்தியெம்பெருமானே: அவனே சிவலிங்கமும் ஆவன்.

சிவராத்திரி தினத்தில் சிவாயநம என்று சிந்தித்திருப்போமாக!

மாசி மாதக் குரு பூஜைத் திருநாட்கள்

1. கச்சியப்ப சிவாச்சாரியார்
2. திருவள்ளுவர்
3. எறிபத்தர்
4. காரியார்
5. கோச் செங்கட் சோழர்>

# பங்குனி மாத நினைவுகள்

எங்கும் நின்கண்ணுண்டெதையும் நீ கேட்பாய் எலாமுனக்கும்
தங்கும் நீயே தேவ தேவாதிகட்கும் தலைவி அன்பால்
பொங்கும் மனத்தே முளைத்துத் தழைக்கின்ற பொற்கொடி நீ
பங்குனித் திங்களில் வந்தருள் செய்வாய் பராசக்தியே.

– அகத்தியர்.

பங்குனியில் உத்திர நட்சத்திரம் பூரணையில் கூடுவதால் பங்குனி உத்தரம் விசேடமாயிற்று. உத்தரம், சிம்ம கன்னி ராசிகளுள் உள்ள இரண்டு நட்சத்திரங்கள் உள்ள மண்டலம். அச்சுவினி முதல் எண்ணிய நட்சத்திரங்களுள் பன்னிரண்டாவது. இவ்விரண்டு நட்சத்திரங்களும் பூரத்தில் உள்ளஇரண்டு நட்சத்திரங்களும் சேர்ந்து கட்டில் கால் போல் அமையும்.

## உத்திர விழா

மலிவிழா வீதி மடநல்லார் மாமயிலைக்
கலிவிழாக் கண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
பலிவிழாப் பாடல் செய்பங்குனியுத்திரநாள்
ஒலிவிழாக் காணுதே போதியோ பூம்பாவாய்

– சம்பந்தர்

இறைவனுடைய மோன நிலையினை மன்மதன் கலைக்க. அந் நிலை வந்த தேவர்களுக்கு, "மங்கையை மணந்து நுந்தம், வருத்தம் நீங்கும்" என்று வாக்களித்துப்பின் பார்வதியை மணக்க ஏற்பாடு செய்தான். இமயமலை அரசனுகிய இமவான் வேண்டுகோளின் படி, இறைவன் அப்பங்குனி உத்தர நாளில் இமயமலைக்குச் சென்று பார்வதியை மணந்து கொள்ளுகின்றுன். அவன் மணம் செய்து கொண்டபின் உலகில் இருமை நீங்கி ஒருமை உற்றது. துன்பம் அகன்று இன்பம் செழித்தது. கண்டவர் "மூலமாம் வினைகட்கு இன்றே முடிவு ஒருங்கு உற்றது" என்றுர். விழா என்பது மக்கள் துன்ப நீக்கம்தானே! அந்த இன்பினை ஆண்டவன் சக்தியோடு கலந்து இப் பங்குனியில் உத்தர நாளில் உலகுக்கு அளித்தான்.

அன்பினர்க் கெளிவந் துள்ள ஆதியம் பரமன் மாது
தன்புடையாகச் சீயத் தவிசின் வீற்றிருத்த லோடும்
துன்பகன்று இருபாலாகித் துவன்றிய உயிர்களெல்லாம்
இன்பொடு போகமாற்றி இனிதமர்வுற்றதன்றே."

என்பது கந்த புராணம். இந்தப் பழமையில் புதுமையும் செழிக்கின்றது. ஆண்டுதோறும் பங்குனியில் இப் பங்குனியில் உத்தரப் பெருவிழா காஞ்சியிலும் கபாலீச்சரத்திலும் நடைபெறுவதைக் காணுகின்ற மக்கள் மிகப்பலர். ஆண்டுதோறும் ஆண்டவனுக்கு மணமா? என்று பரிகசிப்பவர் ஒருபுறம் இருப்பினும், அம்மண நிகழ்ச்சியின் உட்பொருள் அறிந்து ஒன்றிய இன்ப வாழ்வுக்கு வழிகோலும் அடியவர் இந்நாட்டில், இன்றுமட்டுமன்றி, இன்றைக்கு ஆயிரத்து முன்னூறு ஆண்டுகளுக்கும் முன்னும் இருந்தனர். மயிலையிலே இப்பங்குனி விழா சிறப்புற நடைபெற்று வந்தது ஏழாம் நூற்றுண்டிலே. இன்றைக்கும் மக்கள் பல்லாயிரக்கணக்கில் இவ்விழாவினைக் கண்டு மகிழ்வதை நாம் பார்க்கிறோம். இதனைச் சம்பந்தப்பெருமானுடைய தேவாரமூலம் அறிந்தோம்.

"பலிவிழாப் பாடல் செய் பங்குனி உத்தரநாள் ஒலிவிழா" என்கிறார்.

பலி என்ற சொல்லுக்குப் பல பொருள் உண்டு. பயன் விளைத்தல், செழித்தல், மிகுத்தல், கொடுத்தல் என்று பல பொருள்கள் உள்ளன. சோறு, திருநீறு என்ற பொருள்களும் உள்ளன.விழா என்றால் அந்நாடு செழிக்க அமையவேண்டும். பசியும், பிணியும், பகையும் நீங்கி, வசியும், வளனும் சுரக்க வருவதே விழா. எனவே மக்கள் செல்வச் செழிப்புற்று பெற்ற பயனை மற்றவர்களுக்கும் கொடுக்கும் விழா பலி விழா எனப்பட்டது.

அனைவரையும் ஒன்று படுத்தி எல்லோரும் இன்புற்றிருக்கப் பணியாற்றி, அனைவருக்கும் சோறிட்டுப் பசியாற்றிப், பிணிபோக்கி வாழவைக்கும் விழா பங்குனி விழா. ஒலி என்ற சொல்லுக்கு தழைத்தல், ஆரவரித்தல் என்ற பொருள்கள் உள்ளன. மக்கள் உள்ளம் தழைத்து, இன்பத்தில் இயங்கி "வையகமுந் துயர் தீர்க" என்று ஆரவாரித்துக் கொண்டாடும் விழா இப் பங்குனிப் பெருவிழா.

வாடைக்காற்றும் நடுங்கும் குளிரும் வருத்தும் பனியும் நீங்கி வசந்தகாலம் அரும்புவதைக் காட்டும் திங்கள் பங்குனியாகும். முந்திய வாடையால் இலை உதிர்ந்து பட்டன போலக்காணும் மரங்களும், செடிகளும் புதுத்தளிரைக்கொண்டு பூத்துக்குலுங்கும் மாதம் பங்குனி மாதம்.

தென்திசைக்கோடியில் சென்ற சூரியன் வடதிசை திரும்பி நில நடுக்கோடு தாண்டி, நம்மை நோக்கி வரும் திங்கள் (மார்ச் 21) பங்குனியேயாகும். இந்தப் பங்குனி, வரப்போகும் வசந்த காலமாகிய இளவேனிலை வருக! என வரவேற்று நிற்பதாகும். காதல் வாழ்வில் மற்றெவரினும் மிக்கும் சிறந்தும் விளங்கிய தமிழ் மக்கள், அக்காதல் வாழ்வு சிறக்க வசந்தத்தை எதிர்நோக்கி நிற்பர்.

"மாசில் வீணையும், மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கு இளவேனிலும்" இயைந்த நிலையை எண்ணும் அவர் தம் உள்ளம். அந்த உள்ள உணர்வைத் தூண்டுவது இப் பங்குனியேயாகும். இப் பங்குனியைப் பங்குனிப் பருவம் என்பார் திருத்தக்க தேவர்.

**"காசறு துறவின் மிக்க கடவுளர் சிந்தை போல**
**மாசறு விசும்பின் வெய்யோன் வடதிசை அயனமுன்னி**
**ஆசற நடக்கும் நாளில் ஐங்கணைக் கிழவன் வைகிப்**
**பாசறை பரிவு தீர்க்கும் பங்குனிப் பருவம் செய்தான்."**

என்பது சீவக சிந்தாமணி. உருவிலியாகிய ஒரு பெருங்காமக் கடவுளாம் மன்மதன் மகிழ்ந்து விளையாடும் பருவம். அந்தப்பருவம் வருமுன் வாடையிலும், பனியிலும் வருந்திய மக்கள் அப்பருவத்தை வரவேற்று மகிழ்வர். பின் பெருங் கோடையும் கார் காலமும் தொடருமுன் பங்குனி தொடங்கி இளவேனில் முடியவுள்ள வசந்தகாலத்தே இன்புற்ற அவர்கள் இன்னல் நீங்கி இனிது வாழ்வர்.

தமிழர்கள் தெய்வ நம்பிக்கை உடையவர்கள். தம்செயலையெல்லாம் கடவுள் மேல் ஏற்றிக் கண்டுகளிக்கும் நல்லுள்ளம் பெற்றவர்கள். கடவுளும் நம்போல வாழ்கிறான் என்ற இலக்கியம் இயற்றிய அந்த நிலையிலே அவனை வழிபடுபவர்கள். அப்பாலுக்கப்பாலாய் இருக்கின்ற ஆண்டவனைத் தம் அருகிலே இருத்திக் காண அவர்கள் கையாண்ட வழி அது. எனவே தான் தாம் இளவேனிற் பருவத்தே பெறும் இன்பச் சிறப்பினை இறைவன் சார்பில் ஏற்றினர்.

இறைவன் இறைவியை மணம் செய்து கொள்ளும் சிறந்த நாளாக இப் பங்குனி உத்தர நாளை அமைத்தனர். இறைவன் தனிமை நீங்கிச் சக்தியொடு சேரின் உலகில் காதல் வாழ்க்கை நன்கு சிறக்கும் என்பதைக் கண்டார்கள் அவர்கள். காதல் வாழ்வு சிறக்க, சிவனும் சக்தியும் இயைந்து வாழ வேண்டும் என எண்ணினர். எனவே தான் உத்தரத் திருவிழா உண்டாயிற்று.

தலைமகன் பொருள் தேடுதற் பொருட்டுத் தன்னை விட்டுச் சில காலம் அயல்நாடுகளுக்குப் பிரிந்து செல்லுதல் கூடும் என்று தலைமகள் கருதுகின்றாள். அதனால் அவள் பெரிதும் மனம் வருந்துகின்றாள். அந்நிலையில் தலைமகள் பால் உற்ற வேறுபாடுகளைத் தோழி காண்கின்றாள்.

தலைவியே! நமது தலைவர் நின்னைப் பிரிந்து ஒரு பொழுதும் செல்லார். அங்ஙனமாகவும் நீ எதற்காக மனம் கவல்கின்றாய்? சோழர்களுடைய

உறையூரின் கண் பங்குனிவிழாக் கழிந்து மறுநாளில், பொலிவிழந்து நிற்கும் விழாக்களம் போல, நினது அழகிய நெற்றி ஏன் பொலிவற்று ஒளியிழந்து இருக்கிறது? என்று வினவி, தலைமகளுக்குத் தோழி ஆறுதல் கூறுகின்றாள். இக்கருத்து அமைய.

“பங்குனி முயக்கம் கழிந்த வழிநாள்
வீஇலை அமன்ற மரம்பயில் இறும்பில்
தீயில் அடுப்பின் அரங்கம் போல
பெரும்பாழ் கொண்டன்று நுதலே.”

எனவரும் அக நானூற்றுப்பாடல் பகுதி பங்குனி உத்திர விழாப்பற்றிய பழைய இலக்கியச் சான்றாகத் திகழ்தல் காணலாம். இறையனார் அகப்பொருள் உரையில் நக்கீரனார் "மதுரை ஆவணி அவிட்டமே, உறையூர்ப்பங்குனி உத்திரமே, கருவூர் உள்ளி விழாவே" என்ற் சொற்றொடரால் பழமையை விளக்குகிறார்.

திருவாரூரில் வாழ்ந்து வந்தவர் நமிநந்தி அடிகள் நாயனார். அவர் இறைவன் திருவருளாலே நாடெல்லாம் அறியும்படி நீரினை வார்த்து ஆரூர் அறநெறியப்பருக்கு திருவிளக்கு எரித்த பெருமை உடையவர். சோழமன்னன் அவர்தம் அருமையும் பெருமையும் உணர்ந்து போற்றினான்.

திருவாரூர்ப் புற்றிடங் கொண்ட பெருமானுக்கு நித்த நிவேதனத்திற்குரிய திருவமுது படி முதலான நிபந்தங்கள் பலவற்றையும் ஒருங்கே அமைத்து அவற்றை வேதாகம விதிப்படி செல்வனே நடத்தி வருமாறு சோழ மன்னன் நமி நந்தி அடிகளையே தலைவராக நியமித்து வேண்டுக்கொண்டான். இதனைப் பெரியபுராணம் பின்வரும் செய்யுள்கள் மூலம் தெரிவிக்கின்றது

“நாதமறைதேர் நமி நந்தி அடிகளார் நற்றொண்டாகப்
பூதநாதர் புற்றிடங் கொள் புனிதர்க்கு அமுது படிமுதலா
நீதி வளவன் தான் வேண்டும் நிபந்தம் பலவும் அரியாணையின்
மீது திகழ இருந்தமைத்தான் வேதாகம நூல் விதி விளங்க!”

வென்றி விடையார் மதிச்சடையார் வீதிவிடங்கப்பெருமாள் தாம்
என்றும் திருவாரூர் ஆளும் இயல்பின் முறைமைத் திருவிளையாட்டு
ஒன்றும் செயலும் பங்குனியுத்திரமாம் திருநாள் உயர்சிறப்பும்
நின்று விண்ணப்பம் செய்தபடி செய்தருளும் நிலை பெற்றார்.”

இச்செய்தியை திருநாவுக்கரசு நாயனர் பின்வரும் தேவாரத்தால் விளங்க வைக்கின்ருர்.

"ஆராய்ந்து அடித்தொண்டர் ஆணிப்
பொன் ஆரூர் அகத்தடக்கிப்
பாரூர் பரிப்பத்தம் பங்குனி
யுத்திரம் பாற்படுத்தான்;
ஆரூர் நறுமலர் நாதன்
அடித்தொண்டன் நம்பிநந்தி
நீரால் திருவிளக்கு இட்டமை
நீள்நாடு அறியும் அன்றே!"

பங்குனி மாதத்தில் பன்னிரண்டாவது உத்தரம் நட்சத்திரத்தில் பன்னிரண்டாவது. இரண்டும் ஒன்றிச்சேரும் நாளோ. பால் ஒளி வீசும் நிறைமதி நாள். தென்றல் தவழும் திருநாள்! இன்பம் கொழிக்கும் இனிய நாள்.

இறைவனும், இறைவியும் திருமணம் கொண்ட இப்பங்குனிஉத்தர நாளிலே இரதிதேவி வந்து இறைஞ்சி நிற்க, இறைவன் அவள் பொருட்டு இரக்கம் கொண்டு தாம் முன்னர் தம் நெற்றிக்கண்ணிஞல் நோக்கி எரித்த காமதேவனே மன்னித்து, அவனே உயிர்த்தெழச் செய்து அருள் புரிந்தார். "எளியேனின் பிழையைப் பொறுத்தருள்க" என்று அவன் பணிந்து வேண்டிக்கொள்ள, "யாம் உனே முனியின் அன்ருே பின்பு அது தணிவது? உள்ளம் பேதுறல் மைந்த" என்று கூறிக் காமதேவனுக்கு தண்ணளி புரிந்தருளினர்.

இராமபிரானும் சீதாபிராட்டியும் திருமணம் செய்து கொண்ட சிறப்புடையதும் அருச்சுனன் பிறந்த பெருமை பெற்றதும் இப்பங்குனி உத்திரநாளேயாகும்.

## காமன் பண்டிகை

சிவபிரானது திருமணத்தின்போது காமன் உயிர் பெற்றெழுந்தான். அவன் இரதிதேவிக்கு உருவமுடையவனுகவும், மற்றையோருக்கு உருவிலியாகவும் இருப்பான். வசந்த காலத்தில் தலைவன் தலைவியர் காதல் வசப்படுவர் என்ற இயற்கையே இப்படி வருணிக்கப்படுகின்றது. உயிர்களுக்குக் காமத்தை உண்டாக்குந் தெய்வம் என்றும், அழகின் தேவன் என்றும் காரணங்கள் கூறும். இவனுக்குக் காமவேள், மன்மதன், வேனிலான் முதலான பலபெயர்களுண்டு. மன்மதனுடைய போருக்குரிய படைஞர் மங்கையர்; தேர் தென்றல்; கொடி மீன்;

குதிரை கிளி; காளாஞ்சி மல்லிகை மலர்; வாள் தாழைமடல்; வில்,நாண் கரும்பு; அம்புகள்; தாமரை, அசோகு, மா, முல்லை, நீலம் என்னும் ஐந்து மலர்கள்.

பாசறை – மலர்ப்பொழில் தாமரை – காம நினைவையும், மா – பசலையையும், அசோகு – உணவு வெறுத்தலையும், முல்லை – படுக்கையிற் கிடத்தலையும், நீலம் – மரணத்தையும் உண்டாக்கும்.

காமன் எரிந்த கட்சி என்றும், எரியாத கட்சி என்றும் இருபிரிவாகப் பிரித்து சொற்போரிடுவதுண்டு. காமனுடைய தம்பி சாமன். திருமால் கிருஷ்ணனை அவதரித்த போது காமன் பிரத்தியும்னனைப் பிறந்தான். காமன் பண்டிகை ஏழு நாட்கள் நடைபெறும். சிறந்த காதலனைத் தனக்கு அருள வேண்டும் என்றும், தம் காதலர் தம்மிடத்தே அன்புடன் பிரியாமல் இருக்க வேண்டும் எனவும் பெண்கள் காமனை வழிபடுதல் வழக்கம்.

வட இந்தியாவில் இந்தக் காமன் பண்டிகையை ஹோலிப்பண்டிகை என்ற பெயரோடு கொண்டாடுகிறார்கள். இந்தத் தினத்தில் அங்கு வர்ணப்பொடிகளையும், சாயம் கலந்த தண்ணீரையும், யார் வேண்டுமானலும், யார் மீது வேண்டுமானலும் வீசலாம். யாரும் கோபித்துக்கொள்ள மாட்டார்கள். ஒருமுறை ஜவஹர்லால் நேருவினுடைய மோட்டாரை மறித்து அவருக்குச் சாய நீரை ஊற்றியிருக்கிறார்கள். ஊற்றிய பின் தான் அந்த இளைஞர்களுக்கு நாட்டின் பிரதமர் ஜவஹர் என்று தெரிந்தது. மன்னிப்புக்கேட்டார்கள் இளைஞர்கள். மன்னிப்பதற்கு ஒன்றும் இல்லையென்று சிரித்துக்கொண்டே சென்று விட்டார் ஜவகர்.

ஹோலி என்றால் ஹோமம், யக்ஞம் என்று பொருள். அறியாமை என்ற கெட்ட அம்சங்கள் எல்லாம் ஹோம குண்டத்திலிடப்பட்டு பஸ்மமாகிறது என்பதே இதற்குப்பொருள். இந்தப் பண்டிகையில் இப்போது இடம்பெறும் குதூகலச்செயல்கள் எல்லாம் அக்காலத்தில் கிருஷ்ணபரமாத்மா பிருந்தா வனத்தில் நடத்தியவையாகும். முக்கியமாகக் கிருஷ்ணனிடத்தில் பக்தியைச் செலுத்தத் தூண்டும் பண்டிகையாகவே இது அங்கு கொண்டாடப்படுகிறது.

காமன் எரிக்கப்பட்ட இடம் தமிழ் நாட்டில் அஷ்ட வீரட்டானங்களுள் ஒன்றான திருக்குறுங்கையாகும். இங்கு இந்த உற்சவம் மிக விஷேசமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த ஊரில் உள்ள தடாகத்தில் எவ்வளவு தோண்டினாலும் விபூதி சாம்பலாகவே கிடைக்கிறது. இது மன்மதன் எரிக்கப்பட்ட சாம்பல் என்று சொல்லப்படுகின்றது.

## கல்யாண சுந்தர விரதம்

பங்குனிமாத உத்திரத்தில் அனுஷ்டிப்பது. பகலில் ஒன்றும் உட்கொள்ளாது இரவில் பாயாசம், பால், பழம் ஏதும் ஒன்று உட்கொள்ளலாம். இது சிவ விரதங்களுக்குள் ஒன்ருகும். இது கல்யாண சுந்தர மூர்த்தியைக் குறித்து அனுஷ்டிக்கப்படுவதால் இப்பெயர் பெற்றது.

## காரடை நோன்பு

மாசி மாதத்தில் உபநயனம் செய்வதும். நோன்புக்கயிறு கட்டிக் கொள்வதும், சகல பாக்கியத்தையும் கொடுப்பதாகும். மாசிக் கயிறு பாசி படரும் (விருத்தியாகும்) என்பது பழமொழி.

பார்வதிதேவி ஒரு சமயம் ஏகாம்பர நாதனை நாடி காஞ்சியில் கடுந்தவம் இருந்தாள். அதனல் பரமசிவன் பார்வதிதேவியை ஒரு நிமிடமும் விட்டுப் பிரியாமல் கூடியிருக்கிருர். அதனல் அந்தத் தினத்தை காரடை நோன்பு அல்லது காமாட்சி நோன்பு எனக் கொண்டாடுகின்ரேம்.

கார் அரிசியைக்கொண்டு மாவாக்கிப் புதிதாக விளையும் துவரையுடன் அடைதட்டி காமாட்சிக்கே நிவேதனம் செய்து நோன்பு சரடு கட்டிக் கொள்ள வேண்டும். கலசத்தில் காமாட்சி ஆவாஹனம் செய்து நோன்புக் கயிற்றை அதன் மீது வைத்துப் பூஜித்து வேதியருக்குத் தானம் தந்து கழுத்தில் கட்டிக்கொள்ள வேண்டும்.

## அமாசோம வாரம்

அமாசோம வாரம் அல்லது அஸ்வத்த பிரதட்சணம் என்ற விரதம் சோம வாரத்தன்று காலையில் அமாவாசை வந்தால் அன்று அஸ்வத்த பிரதட்சணம் செய்ய வேண்டும். 108 முறை பிரதட்சணம் செய்து அதைக் கணக்கிடும் வகையில் பழங்களையோ, பட்சணங்களையோ, சீப்பு, கண்ணுடி முதலியவை களையோ, 108 போட வேண்டும். ஒரு சோமவாரத்தில் போட்டதை அடுத்து வரும் சோம வார அமாவாசையில் போடாமல் புதிது புதிதாகப் போட்டு சாதுக்களுக்கு அவைகளைத் தானம் செய்ய வேண்டும். இதற்கு உத்யாபனம் விசேடமாகச் செய்ய வேண்டும். அது சௌமங்கல்யம் சந்ததி முதலிய சகல பாக்கியங்களையும் தரும்.

பகவானே எல்லா மரங்களுக்குள் தான் அரச மரமாக இருப்பதாகக் கூறுகிறுர். அதில் பிரம்மா, விஷ்ணு சிவன் என்ற மூவரும் முறையே அடியிலும், நடுவிலும் முடிவிலும் தங்கி இருப்பதால் அதைப் பிரதட்சணம் செய்வது சர்வ பாவங்களேயும் அகற்றி சர்வ பாக்கியங்களேயுந் தரும்.

## வேத வர்ணனை

எல்லாத் தேவர்களுக்காகவும் உணவை ஏற்றுத் தானே அவர்களிடம் கொண்டு சேர்ப்பவர் அக்கினிதேவதை. ஒரு சமயம் இந்த வேலே வேண்டாமென்று அவர் வெறுப்புக்கொண்டார். அதற்கு வேறு எவரும் இல்லாததால் தேவர்கள் அவரை விட்டுவிடச் சம்மதிக்கவில்லே. ஆதலால் அக்கினி அஸ்வரூபம் கொண்டு ஒரு மரத்தில் தங்கி விட்டார். அஸ்வம் தங்கியதால் அதற்கு அஸ்வத்த என்ற பெயர் வந்தது. அந்த மரத்தின் கிளேயைக் காய வைத்து அதிலிருந்து அக்கினியைக் கடைந்து எடுத்து யாகம் செய்வர். அதற்கு அரணி என்று பெயர். அதிலிருந்து உண்டானவர் சுகாஸ்சாரியார் ஆரணேயர் எனப்படுவர். தேவ விருட்சமான அரச மரத்தை வைத்து வளர்ப்பது மிகப் புண்ணியமாம். குழந்தை விரும்புவோர் அங்ஙனம் அரசமரம் வைத்து அதில் ஆயிரம் இலே உண்டான பின் விதிப்படி அதற்கு உபநயன விவாகம் செய்விக்க வேண்டும். அங்ஙனமே செய்த விருட்சமே பிரதக்ஷணத்திற்கு ஏற்றதாம். காலே வேளேயில் தான் அதைப் பிரதக்ஷணம் செய்யவேண்டும். சனிக்கிழமைதான் அதனேத் தொடலாம். சமுத்திரத்தை அமாவாசை பௌர்ணமியில் தான் தொடலாம்; முழுகலாம். மற்ற நாட்களில் தொடக்கூடாது; ஸ்நானம் செய்யக்கூடாது என்பது போல சனிக்கிழமைதான் அஸ்வத்த மரத்தைத் தீண்டலாம். அன்று லக்ஷ்மி நாராயணன் பிரசன்னமாக இருக்கிறுர். மற்ற நாட்களில் தொட்டால் மூதேவி நம்மைப் பீடிப்பாள்.

## ஸ்ரீ ராம நவமி

தர்மத்தைதானே அநுஷ்டித்துக் காட்டுவதற்காக ஸ்ரீ வைகுண்ட நாதன் ஸ்ரீ தசரத ராஜ குமாரனுகத் தோன்றிய நாளிது. அன்று உபவாசமிருந்து சக்திக்கேற்றபடி ஸ்வர்ணம், வெள்ளி, தாமரம், முதலியவைகளில் ஒரு லோகத்தால் செய்த ஸ்ரீ ராம விக்கிரகத்தைத் தானம் செய்ய வேண்டும். மறுநாள் பாரணே செய்யவும்.

பிரதமை முதல் நவமி வரையில் 9 நாளில் ஸ்ரீராமாயண பாராயணம் செய்து ராம பூஜை செய்வது கர்போத்சவம். நவமி முதல் ஆரம்பித்துச் செய்வது ஜன்மோத்சவம். இதை வியாஜமாகக் கொண்டு பல இடங்களில் கச்சேரி ஆடல்

பாடல் தற்சமயம் நடைபெறுகின்றது. ராமாயண பாராயணம் ராம பூஜை பிரதி மாதாந்தம் உபவாசம் இவைகளையும் சேர்த்துச் செய்தால் நன்மையுண்டு. மிகச்சிறந்த தாரக மந்திரமான ராம நாம ஜபம். நவமியில் அவதாரசர்க்க பாராயணம் மிக மிக முக்கியமானது.

தனிகர் பாநக பூசையும் விரை தானமும் செய்யலாம். அன்று அன்னம் புஜிப்பவர் நரகம் செல்வர் என சாஸ்திரம் கூறுகிறது. இது நித்திய விரதமாயினும் உத்யாபநம் செய்ய வேண்டும். ஜபம் செய்வதும், ராம நாமம் எழுதுவதும் மிகப் புண்ணியகரமானது. இவைகளுக்கு உத்யாபநம் முக்கியமாகும்.

## பங்குனி மாத குரு பூஜைத் தினங்கள்

1. கணநாதர்
2. முனையடுவார்
3. காரைக்காலம்மையார்
4. தண்டியடிகள்
5. நேசர்
6. யோகர் சுவாமி
7. பரமகுருசாமி
8. குழந்தைவேற் சுவாமி
9. செல்லப்பா சுவாமி

# பொதுக் குறிப்புகள்

கல்பம், மன்வந்திரம், யுகம், வருஷம், அயநம், ரிது, மாசம், பக்ஷம், திதி, வாரம், யாமம், முகூர்த்தம், என்பவை காலத்தின் பிரிவுகளாகும். பொதுவாகத் தென் தேசத்தில் சித்திரை மாதமே வருஷ ஆரம்பமாகும்.

விரதம் என்றுல் சங்கல்பத்துடனும் உபவாசாதி நியமங்களுடனும் கூடச்செய்யும் சத்கர்மா என்று பொருள். உபநயனத்தில் பிரம்மசாரிக்கு வேதமே விரதத்தைக் கூறுகின்றது. யக்ஞத்தில் ஈடுபட்டவருக்குச் சில விரதம் உண்டு. இவை வேத விரதம் எனப்படும்.

நாம் ஆண்டு தோறும் அனுட்டிப்பது புராண விரதமாகும். பண்டிகை என்றுல் அதிக நியமமின்றி உத்சவமுமுண்டு. சங்கிராந்தி போன்ற சில பண்டிகைகளில் சூரிய பூஜை, தர்ப்பணம் முதலிய சில விரத நியமங்களுண்டு.

அவசியம் செய்தே ஆகவேண்டும் என்பது நித்திய விரதமாம். ஒரு பலனை நாடிச்செய்வது காம்ய விரதமாகும். சில நித்தியமும் காம்யமுமாகும். காம்யம் என்றுல் இத்தனை முறை விடாமல் செய்து முடிக்க வேண்டுமென்ற நியதி உள்ளது.

# சௌர மானமும் சாந்திர மானமும்

மானம் என்றுல் அளவு என்று பொருள். சூரியன் மேடம் முதலிய இராசிகளில் புகுவதைக் கொண்டு மாசக்கணக்கிடுவது சௌரமான மெனப்படும். சந்திரன் பூரணமாகும் பௌர்ணமி முதல் அடுத்த பௌர்ணமி வரை அல்லது அமாவாசை முதல் அடுத்த அமாவாசை வரை கணக்கிடுவது சாந்திர மாசமாகும். உபநயனம் விவாகம் முதலியவைகளுக்கு சௌரமானம் சிறந்தது. விரதங்கள் சாந்திரமான ரீதியாகவே அமையும். சற்றேறக்குறைய பௌர்ணமி அன்று வருகின்ற நட்சத்திரத்தைக் கொண்டே சைத்திரம், வைசாகம் என மாசங்களின் பெயர்கள் அமைந்தன. சௌரமான கணக்கின் படி சித்திரை மாதம் முதல் திகதி புது வருடப்பிறப்பாகும். ஆனல் பங்குனி மாத அமாவாசைக்கு அடுத்த நாளே யுகாதி என்னுந் தினத்தில் சாந்திரமான வருஷப்பிறப்பாகிவிடும். ஆந்திரர் சாந்திரமானிகள் ஆதலால் யுகதியை தெலுங்கு வருஷப்பிறப்பு என்பர். சாந்திரமான அநுஷ்டானமும் அமாவாசை முதல் அமாவாசை என்றும் பௌர்ணமியிலிருந்து பௌர்ணமி வரை இருவகை அநுஷ்டானமும் உண்டு.

சாந்திரமான ரீதியில் வரும் வரும் விரதங்கள் இந்த மாதத்தில் தான் வரும் என நிச்சயிப்பதற்கில்லை. பங்குனி மாதத்தில் சில சமயம் சித்திரை மாதத்தில் சில சமயம் வரும். ஸ்ரீ ராமநவமியும், வசந்த நவராத்திரியும் அதே போல் மற்றும் சில விநாயக சதுர்த்தி போன்றதும் ஒரே மாதத்தில் தான் வரும் என்பதில்லை. மாறி மாறி வரும். அதற்குக் காரணம் அமாவாசை அல்லது பௌர்ணமி சௌரமான கடைசியில் வருவதாகும். ஸ்தூலமாக சில மாதத்தில் வருமென வழுதப்படும் விரதம் முன்னும் பின்னும் வரலாம்.

## சங்கிராந்தி

ஒவ்வொரு மாதமும் மேடம் முதலிய 12 இராசிகளில் சூரியன் பிரவேசிக்கும் சமயம் மேட ரவி, ரிஷப ரவி இத்தனை மணிக்கு மாசப் பிரவேசம் என்று பஞ்சாங்கம் எழுதும். 12 மாச சங்கிராந்தியும் சிறந்த புண்ணிய காலமாகும். அமாவாசை போல் அதிலும் ஸ்நானம், தானம், பித்ரு தர்ப்பணம் முதலியவைகளைச் செய்ய வேண்டும். பித்ரு தேவஸ்வருபத்தை அடைந்த நம் முன்னோர்களுக்கு சிரார்த்தத்திற்கு மறுநாள் செய்ய வேண்டியது பரேஹணி தர்ப்பணம். கிரஹணத்தில் செய்வது ஒரு தர்ப்பணம். இவ்விரண்டையுந் தவிர ஒவ்வோராண்டிலும் 96 தர்ப்பணஞ் செய்தல் வேண்டும். அவ்வளவையுஞ் செய்ய முடியாவிடினும் 12 அமாவாசை, 12 சங்கிராந்தி, 16 மஹாளயம் இவைகளையேனும் செய்ய வேண்டும். சங்கிராந்தியில் சித்திரை விஷு, தக்ஷிணயனம் ஆடி, துலா விஷு ஐப்பசி, தை உத்தராயணம் என்ற 4 மாதத் தர்ப்பணமும் மிக முக்கியமானவை. தை மாதப்பிறப்பு ஒன்றே சங்கிராந்தி என்று பிரசித்தமாயிற்று.

## நித்திய விரதமும் நியமமும்

8 வயது முதல் 80 வயது வரை ஒவ்வொரு மாதத்திலும் வரும் சுக்கில பக்ஷ, கிருஷ்ண பக்ஷ, ஏகாதசிகளிலும் சுத்த உபவாசம் இருக்க வேண்டும். தசமி அன்று ஒரு வேளை உணவு. ஏகாதசியில் சுத்த உபவாசம். துவாதசியில் ஒரே வேளை போஜனம் செய்ய வேண்டும் என்பது விதி. காம்ய கர்மாவினுல் சொன்னபடி அனுஷ்டித்தால்தான் பலனைப் பெறலாம். நித்ய விரதங்களிற் சக்தியில்லாதவர் பழ ஆகாரம் ஏற்கலாம். அதுதான் பலகாரமானது. அதையும் அடிக்கடி சாப்பிடக் கூடாது. அதுவும் முடியாதவர் ஒரு பொழுது உண்ணலாம் என சில ரிஷிகள் அருள் புரிந்தனர். பௌர்ணமியிலும், அமாவாசையிலும் பாநுவாராத்திலும் இரவில் சாப்பிடக்கூடாது என்பதும் நித்ய விரதமாகும். விரத தினங்களில் சந்தனம், மாலை, பகல் நித்திரை, தாம்பூலம், சரவம், எண்ணெய், சிருங்காரம், வழி நடத்தல், கோபம், நிந்திப்பது, பொய் கூறுவது முதலியன கூடாது.

## மாச தானங்கள்

| | |
|---|---|
| சித்திரை மாதம் | – ஐந்துவகை பட்சணங்கள் |
| வைகாசி மாதம் | – வெல்லம் |
| ஆனி மாதம் | – தேன் |
| ஆடி மாதம் | – வெண்ணெய் |
| ஆவணி மாதம் | – தயிர் |
| புரட்டாதி மாதம் | – சர்க்கரை |
| ஐப்பசி மாதம் | – பாயசம் |
| கார்த்திகை மாதம் | – பால் |
| மார்கழி மாதம் | – அரிய தரம் என்னும் பணிகாரம் |
| தை மாதம் | – தயிரேடு |
| மாசி மாதம் | – நெய் |
| பங்குனி மாதம் | – தேங்காய் |

இவை மாச தானங்கள் எனப்படும். ஒவ்வொரு வருஷத்திலும் அந்தந்த மாசங்களில் பிரதி தினம் சக்தியுள்ளவர் தானம் செய்யலாம். சக்தியில்லாதவர் ஒரு வருஷம் ஒரு மாதத்தில் ஒரு நாளாவது அந்தத் தானத்தைச் செய்யலாம்.

## திதி பூஜா தான பலன்

| | | |
|---|---|---|
| பிரதமை | நெய் | நோய் அகலும் |
| துதியை | சர்க்கரை | ஆயுள் விருத்தி |
| திருதியை | பால் | துக்கங்கள் அகலும் |
| சதுர்த்தி | பக்ஷணம் | விக்கினம் அகலும் |
| பஞ்சமி | வாழைப்பழம் | புத்திக்கூர்மை உண்டாகும் |
| ஷஷ்டி | தேன் | உடல்காந்தி |
| சப்தமி | வெல்லம் | சோகம் அகலும் |
| அஷ்டமி | தேங்காய் | பாபங்கள் அகலும் |
| நவமி | பொரி | இம்மை சுகம் |
| தசமி | எள்ளு | யம பயம் நீங்கும் |
| ஏகாதசி | தயிர் | தெய்வ பக்தி உண்டாகும் |
| துவாதசி | அவல் | பிரேமை பக்தி உண்டாகும் |
| திரயோதசி | கடலை | சந்ததி உண்டாகும் |
| சதுர்த்தசி | சத்துமாவு | சிவானுக்கிரகம் கிடைக்கும் |
| பௌர்ணமி அல்லது அமாவாசை | பாயசம் | பித்ருக்களுக்கு நற்கதி |

சக்தியுள்ளவர் ஆயுளுள்ளவரை ஒவ்வொரு ஆண்டுகளிலும் சுக்கில பட்சம், கிருஷ்ணபட்சம் திதிகளிலும் தானம் செய்யலாம். சக்தியில்லாதவர் ஏதேனும் ஒரு மாதம் ஒரு பட்ச திதிகளில் செய்யலாம்.

## வார தான பலன்

| | | |
|---|---|---|
| ஞாயிறு | பாயசம் | ஆரோக்கியம் |
| திங்கள் | பால் | சந்ததி வளரும் |
| செவ்வாய் | வாழைப்பழம் | செல்வம் |
| புதன் | வெண்ணெய் | மனச்சாந்தி |
| வியாழன் | சர்க்கரை | ஞானம் |
| வெள்ளி | வெள்ளைச் சர்க்கரை | பக்தி |
| சனி | பசு நெய் | ஆயுள் |

## தச தானங்கள்

1. கோதானம்
2. பூமி தானம்
3. எள்ளு தானம்
4. சுவர்ண தானம்
5. நெய் தானம்
6. வஸ்திரதானம்
7. தானிய தானம்
8. வெல்ல தானம்
9. வெள்ளி தானம்
10. உப்புதானம்

இவைகள் கர்மாவிற்கு அங்கமாகச் செய்ய வேண்டியவை. தானத்திலை தான் சுகமுண்டாகும். மறுபிறவியிலும் செல்வம் கிடைக்கும். தானம் செய்யாதவர் ஏழையாகப் பிறப்பா. ஏழ்மையிலை தானம் செய்ய முடியாமல் போகும். அதனை பாவம் ஏற்படும். ஆதலால் சக்திக்கு ஏற்றவாறு தானம் செய்ய வேண்டும்.

## அர்த்தோதய - மஹோதய காலம்

தை அல்லது மாசி மாதத்தில் ஞாயிற்றுக்கிழமை தினம் சூரியோதய காலத்தில் அமாவாசையின் பின் பூர்வ பாகமும், திருவோண நட்சத்திரத்தின் மத்ய பாகமும்

வ்யாதீ பாதத்தின் கடைசி பாகமும் சேருகிற மையத்திற்கு அர்த்தோதயம் என்று பெயர். மிகச்சிறந்த புண்ணிய காலம். இப்படி நேரிடுவது திங்கட் கிழமையின் சூரியோதமாய் இருந்தால் அந்தக்காலத்திற்கு மஹோதயம் என்று பெயர். இந்த அர்த்தோதயம் மஹோதயம்இரண்டும் மஹா புண்ணிய காலம் என்பர். இந்த இரண்டு புண்ணிய காலங்களிலும் முற் கூறிய திதி நட்சத்திரம் யோகங்களின் பூர்வம், மத்யம், அந்தம் என்கின்ற பாகம் இல்லாமலே கொஞ்சம் சம்பந்தம் நேரிட்ட போதிலும் புண்ணிய காலமாகவே பாவிக்கப்படும்.

அந்தக் காலத்தில் செய்யும் ஸ்நானம், தானம், ஜபம், தர்ப்பணம் முதலிய புண்ணிய காரியங்களைச் சக்திக்குத் தகுந்தபடி செய்யாவிட்டால் பாவம். நன்கு செய்தால் அவைகள் விசேட பலனையும் சுகத்தையும் கொடுக்கும்.

## கிரஹண புண்ணிய காலம்

சந்திர சூரிய கிரஹணம் ஒரு சிறந்த புண்ணிய காலம். அச்சமயம் செய்யும் ஸ்நானம், தானம், ஜபம் முதலியன பல மடங்கு புண்ணியத்தைத் தரும். விசேஷமாக விஷத்தை அகற்றும் காருட, நீலகண்ட மந்திரங்களை ஜபிக்க வேண்டும். முஹம்மதியர் கூட மந்திர சித்திக்காக ஜபம் செய்வர். சூரிய கிரஹணம் அமாவாசையின் முடிவிலும் சந்திர கிரஹணம் பௌர்ணமியின் முடிவிலும் வரும். அச் சமயம் எந்த ஜலமும் கங்கா ஜலம். எந்தப் பிராம்மணனும் வசிட்டருக்குச் சமமாவார். கிரஹண ஸ்நானம் பற்பல பாவங்களை அகற்றும். ஆனதால் தீட்டுள்ளவர் கூட ஸ்நான தர்ப்பணம் செய்ய வேண்டும். சூரிய கிரஹணத்திற்கு 4 யாமம் முன்பும் சந்திர கிரஹணத்திற்கு 3 யாமம் முன்பும் உண்ணக்கூடாது. அச்சமயம் வயிறு காலியாக இருந்தால் தான் நோய் வராது. கிரஹணகாலத்தில் ராகு சந்திர சூரியரது கிரஹணங்கள் நம்மீது பட முடியாமல் தடுப்பதால் நம்துள்ளே உள்ள ஜீரணக்கருவிகள் நன்கு வேலை செய்யாது. கிரஹணம் புண்ணிய காலமாயினும் அது தீட்டுப் போல் ஆகும். சந்திர சூரிய கிரஹணங்கள் நம்மிடம் பூரணமாக வராததால் அச்சமயம் சமையல் செய்திருந்த பொருட்களை விலக்க வேண்டும். விலக்க முடியாத ஊறுகாய் போன்ற வஸ்துக்கள் மீது தர்ப்பையைப் போட்டிருந்தால் அது அசுத்தியைத் தடுக்கும். சூரிய கிரஹணம் பிடிக்க ஆரம்பித்த போதும், சந்திர கிரஹணம் விட ஆரம்பித்த போதும் தர்ப்பணம் செய்ய வேண்டும். கிரஹண தினத்தில் சிரார்த்தம் வந்தால் கிரஹணம் விட்ட பின் சிரார்த்தம் செய்ய காலமில்லாவிடில் மறுநாளே செய்ய வேண்டும்.

# கிரஹண தத்துவமும் கதையும்

நவக்கிரகங்கள் ஒன்பதும் ஒவ்வொரு மண்டலமாக இருந்து அதனுள்ளே தேவ வடிவமாகவும் இருக்கின்றது. ராகு அல்லது கேது சந்திரன் அல்லது சூரிய மண்டலத்திற்கும் பூ மண்டலத்திற்கும் இடையே நின்று நமக்கு அவைகள் தெரியாமல் மறைத்திருப்பதே கிரஹணத்தின் ஸ்வருபமாகும்.

இது ஒரு கதை வடிவமாகப் புராணங்களில் காணப்படுகிறது. இறவாமலிருக்கப் பாற்கடலிலிருந்து உண்டாகும் அம்ருதமே தக்க மருந்தென, மிகக் கஷ்டப்பட்டு அம்ருதத்தைக் கடைந்தனர் தேவரும் அசுரரும். அதை அசுரர் பலாத்காரமாகப் பிடுக்கிக் கொண்ட போது விஷ்ணு மோகினி ரூபமெடுத்து தேவர்களைத் தனித் தனிவரிசையில் அமர்த்தி முதலில் தேவருக்குப் பரிமாறினர். ஸிம்ஹிகா புத்திரன் தேவ வடிவமெடுத்து சந்திர சூரியர்களினிடையே அமர்ந்தான். அவனுக்கு மோகினி அமிர்தளித்த போது அவர்கள் இவர் அரக்கன் என காட்டினர்கள். விஷ்ணு கறண்டியால் அவன் கழுத்தை வெட்ட அமிருதத்தின் சேர்க்கையால் தலை ராகுவாகவும் உடல் கேதுவாகவும் ஆயிற்று. தபோபலத்தினல் அவர்களும் நவக்கிரக கோஷ்டியில் சேர்ந்தனர்.

முதலில் உள்ள ஏழு கிரகங்கள் பெயரால் ஏழு வாரங்களே தோன்றின. தன்னை அசுரனெனக் காட்டியதால் சந்திர சூரியர்களை அவர்கள் பாம்பாக வந்து விழுங்குகிறார்கள் என்ற கதையை பஞ்சாங்கத்தில் படம்போட்டும் காண்பிப்பர். ராகு அவைகளை விழுங்குவது என்பது மறைப்பதேயாகும். தற்கால விஞ்ஞான சாதனங்கள் ஒன்றுமில்லாமலே மெஞ்ஞான வேதத்தில் சாஸ்திரங்களைக் கொண்டு சோதிடர் கிரஹணகாலத்தைக் குறிக்கின்றனர். அங்ஙனமே கிரகணம் நேருவதையும் கண்கூடாகக் காண்கிறோம். இதிலுருந்தே வேதமும் வேதத்தை மூலமாகக்கொண்ட நமது சாஸ்திரங்களும் சதாசாரங்களும் சத்தியம் என்பதை நாஸ்திகரும் ஏற்றுதான் ஆகவேண்டும்.

கிரஹண காலங்களில் சூரிய சந்திரரைப் பார்க்காதே! கர்ப்பிணிகள் வெளியில் வரக்கூடாது! என்பதெல்லாம் நற்கருத்துள்ள சொற்களை என அனுபவத்தில் காண்கிறோம். அச்சமயம் பார்த்தவருத்துக்குக் கண்ணில் கேடு ஏற்படும். கர்ப்பம் சிறிது மூளியாகவும் இருக்கும்.

# மாத வாரப் பதிகம்

## காப்பு

வேதராகத்தில் விளங்கும் விமலை விழைந்து தூக்கும்
பாதர் ஆகத்தில் கலந்தாள் பவானி பராபரைக்கும்
மாதவாரத்துப் பதிகம் விளம்ப வரந்தருவாய்
நாதயோகத்தின் அநுபவமாம் கண நாயகனே.

## சித்திரை

முத்தமிழ்போல் முக்கடல்சூழ் குமரிமுனை வளரும்
உத்தமியே ஸ்ரீசக்கரந்தன்னில் உதித்தவளே
எத்தருணத்திலும் எனைப்பிரியாமல் எனக்கிரங்கிச்
சித்திரைத் திங்களில் வந்தருள் செய்வாய் சிவக்கொழுந்தே.

## வைகாசி

கைகால் நுடங்கியும் கண்பஞ்சடைந்தும் ஈ காகம் கொத்தி
மெய்தான் அழுகியும் மாள்வோரைக்கண்டு மிகவும் நொந்தேன்
உய்கேனே ஓவென்று உழலுகின்றேன் நீ உளமிரங்கி
வைகாசி எல்லாம் வருவாய் மதுரை மனோன்மணியே.

## ஆனி

ஊனில் உளத்தில் உணர்வில் உயிரில் உயிர்க்குயிராம்
வானில் மொழியில் கலந்து நின்றுலும் மலர்க்கொடியே
ஞானிகள் தேடும் பரஞ்சுடரே உன்னை நான் பணிந்தேன்
ஆனிமாதத்தில் அருள்புரிவாய் ஜகதாம்பிகையே.

## ஆடி

வாடி வருந்தும் மனம் தண்மையாக மழைபொழிவாய்
கோடி மார்த்தாண்ட சமசோதி வீசும் குளிர்நிலவே
பாடிவந்தேன்இன்னும் பாடுகின்றேன் எங்கள் பாக்கியத்தால்
ஆடியில் ஆடி வருவாய் சிவன்கொஞ்சும் அஞ்சுகமே

## ஆவணி

சாவணியாவது கனிமாலால் கலைகாட்டுகின்ற
பாவணியாவது அநுபூதியால் அன்பு பற்றுகின்றோம்
நாவணியாவது நாமத்தினல் அன்றோ நாடும் என்முன்
ஆவணித் திங்களில் வந்தருள்வாய் என்னை ஆண்டவளே.

### புரட்டாதி

இருட்டாசையாம் குழிவிழாமல் காமுவிரண்டு பேய்கள்
வெருட்டாமல் காஎன்று வேண்டுகின்றேன் இந்த வீணனையும்
பொருட்டாக எண்ணி அருட்கோல் அளித்த நீ புன்னகைத்து
புரட்டாசித் திங்களில் வந்தருள்வாய் அன்னபூரணியே.

### ஐப்பசி

மைப்படியுங் கயற்கண்ணி மதுரை மரகதத்தாள்
கைப்படியா எழில்மான் என்று அரன் உன்னைக் கைப்பிடித்தான்
அப்படியே மணக்கோலங்கண்டு ஏழை அகம்மகிழ
ஐப்பசிமாதம் வருவாய் அடியேன் அடைக்கலமே.

### கார்த்திகை

வார்த்தை குழறிட மெய்புளகிக்க மனம் உருகி
தீர்த்தமாம் கண்ணீரில் நின்தாள் அலம்பித்தினம் தொழுதேன்
பார்த்தவை யாவும் நீ என்றுணரும் பரிபக்குவத்தால்
கார்த்திகைத் திங்கள் வருவாய் கருணைக் களஞ்சியமே.

### மார்கழி

சேர்சிறுகாலை துயில்நீத் தெழுந்தருட் செல்வருடன்
நீர்துழைந்தாடி மலர்கொய்து சன்னிதி நின்று நின்றன்
பேர்பலபாடி வணங்குகின்றோம் எம்பிழைதவிர்க்க
மார்கழிமாதம் வருவாய் அம்மா ஞான மாணிக்கமே.

### தை

கைத்தும் கறுத்தும் ஒறுக்கும் கசடரைக் கால்பணிந்து
பொய்த்துன்ப மேனியைப் போற்றுகின்றீர் இருள்போக உள்ளே
வைத்தால் வரம்தருவாள் எங்கள் தாய் என்றுவாக்குரைத்தேன்
தைத்திங்கள் வந்தெண்ணம் ஈடேற்ற வேண்டும் தயாநிதியே.

### மாசி

காசியைக் கயிலையைக் கண்டும் கருத்திற் களங்கம் என்னும்
பாசியை நீக்கார் பயன்பெறுவாரோ பரிந்து நன்மை
பேசி அன்புப் பணிசெய்வார் பெரியோர் மெய்ப்பேறளிக்க
மாசியில் ஆசிதருவாய் மாசில்லாத மாணிக்கமே.

## பங்குனி

எங்கும் நின்கண்ணுண்டெதையும் நீ கேட்பாய் எலாமுனக்குள்
தங்கும் நீயே தேவதேவாதிகட்கும் தலைவி அன்பால்
பொங்கும் மனத்தே முளைத்துத் தழைக்கின்ற பொற்கோடி நீ
பங்குனித் திங்களில் வந்தருள் செய்வாய் பராசக்தியே .

## ஞாயிறு

ஆயிரம் நாமத்தில் அருச்சனை செய்தேன் அடிபணிந்தேன்
தாயினும் அன்பு பொழிந்தென்னைத் தாங்கும் தமிழரசி
பேயும் பிணியும் வறுமையும் போக்கி விளக்கிடுவாய்
ஞாயிறுதோறும் வருவாய் சிவலோக நாயகியே.

## திங்கள்

சங்கப் புலவர் கவிக்கு ஒளியூட்டும் தனிப்பொருளே
இங்கிப்பணிக்கே என் அங்கத்தை இட்டேன் எனக்கிரங்கி
சிங்கக் குருளை வடிவேல் முருகனும் சேர்ந்திருக்க
திங்கட்கிழமை வருவாய் அருள்வாய் சிவசக்தியே.

## செவ்வாய்

பங்கஜ பாதம் பணிந்தறியேன் பக்தர் பாடுகையில்
அங்கம் சிலிர்க்க அழுதறியேன் ஏழை ஆயினும் என்
சங்கடம் தீர்த்தருள்வாய் என்றுனையே சரண்புகுந்தேன்
மங்களவாரம் வருவாய் அம்மா ஜீவமாணிக்கமே.

## புதன்

மதமாயைச் சேற்றில் உழன்றேன் சிவாமுத வாரிதியை
இதமாகக் காட்டி நீராடி உள்ளத்தின் இழுக்ககற்றிப்
பதமானயோக சம்பத்தெல்லாந் தந்தென்னைப் பாடவைத்தாய்
புதவாரந் தோன்றி அருள்புரிவாய் தெய்வப் பூங்குயிலே.

## வியாழன்

ஒருவாய் அமுதை முருகனுக்கு ஊட்டி மற்றென்றை முன்னேன்
பெருவாயில் ஊட்டி மகிழ்கின்றபோது பிதிரும் அன்னம்
தருவாய் எனக் காத்துநிற்கும் இவ்வேளை தவப்பயன்போல்
குருவாரம் தன்னில் வருவாய் சிவயோக கோகிலமே.

## வெள்ளி

துள்ளித் திரியும் மனம் உள்ளடங்க நின்தோத்திரங்கள்
அள்ளிக்குடித்தேன் உடலம் கூத்தாட அகக்கதவை
மெள்ளத் திறந்து தெளிந்து குளிர்ந்து விளக்கேற்றினேன்
வெள்ளிக்கிழமையில் வந்தருள்வாய் ஞான வித்தகியே.

## சனி

மனக்கவலைக்கு இங்கிடமில்லை தாழ்வில்லை வாட்டமில்லை
இனிக்கிரகங்கள் கொடும்பார்வை இல்லை இடருமில்லை
எனக்கும் இரங்கி என்பாடலை ஏற்றுப் பேரின்பம் ஈந்தாய்
சனிக்கிழமை கண்வருவாய் வசங்கரி சங்கரியே.

## பயன்

திங்கள் ஈராறும் தினங்கள் ஒரேழும் திருப்பெயரை
எங்கிருந்தாலும் புகல்வேன் நான்செல்லும் இடங்கள் எல்லாம்
மங்களம் பொங்கி மரபோங்கி வாழவரம் தருவாய்
நங்கை சிவகாமி அம்மா அகிலாண்ட நாயகியே.

# பஞ்சபுராணப் பாடல்கள்

## ஞாயிற்றுக்கிழமை

**1. தேவாரம்:** திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர்
பண்-சீகாமரம் 2ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினே டுள்ளநினைவு
ஆயினவே வரம்பெறுவார் ஐயுறவேண்டா வொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாம் தீவினையே.

**2. திருவாசகம்** மணிவாசகப்பெருமான்
8ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

**3. திருவிசைப்பா** கருவூர்த்தேவர்
9ம் திருமுறை

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயா நீ உலாப்போந்த அன்று முதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாவோ அருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

3. திருப்பல்லாண்டு

9ம் திருமுறை

சேந்தனர்

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்தும் குடிகுடி
ஈசற்காட் செய்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருளள
வில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றுமென்றும் உள்ளபொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே.

5. பெரியபுராணம்

12ம் திருமுறை

சேக்கிழார் பெருமான்

ஆதியாய் நடுவு மாகி அளவிலா வளவு மாகிச்
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளு மாகிப்
பேதியா வேக மாகிப் பெண்ணுமா யாணு மாகிப்
போதியா நிற்கும் தில்லை பொதுநடம் போற்றி போற்றி.

## திங்கட்கிழமை

1. தேவாரம்
பண்-கொல்லி

3ம் திருமுறை

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர்

திருச்சிற்றம்பலம்

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகிதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணில்நல் ல·.துறுங் கழுமலவளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

உ. திருவாசகம்

8ம் திருமுறை

மணிவாசகப்பெருமான்

நானேயோ தவஞ்செய்தேன் சிவாய
நமவெனப் பெற்றேன்
தேனுயின் னமுதமுமாய்த் தித்திக்குஞ்
சிவபெருமான்
தானெவந் தெனதுள்ளம் புகுந்தடியேற்
கருள்செய்தான்
ஊனுரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே
வெறுத்திடவே.

3. திருவிசைப்பா

9ம் திருமுறை

பூந்துருத்தி நம்பி காடநம்பி

எம்பந்த வல்வினைநோய் தீர்த்திட் டெமையாளும்
சம்பந்தன் காழியர்கோன் தன்னையுமாட் கொண்டருளி
அம்புந்து கண்ணாளுந் தானும் அணிதில்லைச்
செம்பொன்செய் அம்பலமே சேர்ந்திருக்கை ஆயிற்றே.

4. திருப்பல்லாண்டு

9ம் திருமுறை

சேந்தனர்

சொல்லாண் டசுரு திப்பொருள்
சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண் டிற்சிதை யுஞ்சில
தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண் டகன கத்திரள்
மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

5. பெரியபுராணம்

12ம் திருமுறை

சேக்கிழார் பெருமான்

தூயவெண் ணீறு துதைந்தபொன் மேனியுந் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவருஞ் சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர் பொழி கண்ணும் பதிகச்செஞ்சொல்
மேயசெவ்வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே.

திருச்சிற்றம்பலம்

## செவ்வாய்க்கிழமை

1.தேவாரம்

திருவிருத்தம் 4ம் திருமுறை

திருநாவுக்கரசுநாயனர்

திருச்சிற்றம்பலம்

ஈன்றுளு மாயெனக் கெந்தையு மாயுடன் தோன்றினராய்
மூன்று யுலகம் படைத்துகந்தான் மனத்துள்ளிருக்க
ஏன்று நிமையவர்க் கன்பன் திருப்பா திரிப்பூலியூர்த்
தோன்று துணையா யிருந்தனன் தன்னடி யோங்களுக்கே.

உ. திருவாசகம்

8ம் திருமுறை

மணிவாசகப்பெருமான்

காலமுன் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞாலமுண் டானெடு நான் முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றுன்வந்து முந்துமினே.

3. திருவிசைப்பா

9ம் திருமுறை

பூந்துருத்தி நம்பி காடநம்பி

களையா உடலொடு சேரமான் ஆரூரன்
விளையா மதமாறு வெள்ளானை மேற்கொள்ள
முளையா மதிசூடி மூவா யிரவரோடும்
அளையா விளையாடும் அம்பலம்நின் ஆடரங்கே.

4.திருப்பல்லாண்டு

9ம் திருமுறை

சேந்தனர்

சீருந் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெருத அறிவு
பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற
உழறி உமைமண வாளனுக்காள்
பாரும் விசும்பும் அறியும்
பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

5. பெரியபுராணம்

12ம் திருமுறை

சேக்கிழார் பெருமான்

ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள
அளப்பெருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத்து விகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடுமானந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

திருசிற்றம்பலம்

# புதன்கிழமை

1.திருத்தாண்டகம் திருநாவுக்கரசுநாயனர்

6ம் திருமுறை

திருநாமம் அஞ்செழுத்துஞ் செப்பா ராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசா ராகில்
ஒருகாலும் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணு ராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்
அளியற்றுர் பிறந்தவா றேதோ வென்னில்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்தும் செத்தும்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின் றுரே.

உ. திருவாசகம் மணிவாசகப்பெருமான்

8ம் திருமுறை

வேண்டத் தக்க தறிவோய் நீ
வேண்ட முழுதுந் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற் கரியோய் நீ
வேண்டி யென்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே.

3. திருவிசைப்பா சேந்தனர்

9ம் திருமுறை

ஏக நாயகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போகநா யகனை புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த

மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றென்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

4. திருப்பல்லாண்டு சேந்தனர்

9ம் திருமுறை

பாலுக்கு பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள்
செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

5. பெரியபுராணம் சேக்கிழார் பெருமான்

12ம் திருமுறை

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினிலோங் கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்.

திருசிற்றம்பலம்

## வியாழக்கிழமை

1.தேவாரம் சுந்தரமூர்த்தி நாயனர்
பண்-கொல்லி 7ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

தம்மையேபுகழ்ந் திச்சைபேசினும் சார்வினும்
தொண்டர் தருகிலாப்
பொய்மையாளரைப் பாடாதே எந்தைபுகலூர்
பாடுமின் புலவீர்கள்
இம்மையே தரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர்கெடலுமாம்
அம்மையேசிவ லோகமாள் வதற்கு
யாதுமையுற வில்லையே.

2. திருவாசகம் மணிவாசகப்பெருமான்

8ம் திருமுறை

அன்றே யென்றன் ஆவியும்
உடலும் உடைமை யெல்லாமும்
குன்றே யனையாய் எனையாட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோ ரிடையூ றெனக் குண்டோ
எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே.

3. திருவிசைப்பா கருவூர்த்தேவர்

9ம் திருமுறை

தந்தையங் கனையார் தங்கள் மேல் வைத்த
தயாவைநூ றுயிரங் கூறிட்டு
அத்திலங் கொருகூறு உன்கண்வைத் தவருக்கு
அமருல களிக்கும்நின் பெருமை

பித்தனென் றெருகால் பேசுவ ரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யும்
கைத்தலம் அடியேன் சென்னிவைத்த கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே.

4. திருப்பல்லாண்டு சேந்தனர்

9ம் திருமுறை

தாதையைத்தாளர வீசிய
சண்டிக்கிவ் அண்டத்தொடு முடனே
பூதலத் தோரும் வணங்கப் பொற்
கோயிலும் போனகமும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும்
நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

5. பெரியபுராணம் சேக்கிழார் பெருமான்

12ம் திருமுறை

ஞானத்தின் திருவுருவை நான்மறையின்
தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர்
மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார்
சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக்கண்களிப்பக்
கண்டார்கள்.

## வெள்ளிக்கிழமை

1.தேவாரம் சுந்தரமூர்த்தி நாயனர்
பண்-தக்கேசி 7ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

பொன்னும் மெய்ப்பொருளுந் தருவானைப்
போகமும் திருவும் புணர்ப்பானைப்
பின்னையென் பிழையைப் பொறுப்பானைப்
பிழையெலாந் தவிரப் பணிப்பானை
இன்ன தன்மையனென் றறியொண்ணு
எம்மானை யெளிவந்த பிரானை
அன்னம்வைகும் வயற் பழனத்
தணியாரு ரானை மறக்கலுமாமே.

2. திருவாசகம் மணிவாசகப்பெருமான்
8ம் திருமுறை

மெய்தா னரும்பி விதிர்விதிர்த்
துன்விரை யார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி யுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி
சயசய போற்றி யென்னுங்
கைதான் நெகிழ விடேனுடை
யானென்னைக் கண்டு கொள்ளே.

3. திருவிசைப்பாதிருவாலியமுதனர்

9ம் திருமுறை

அன்ன நடையார் அமுத
மொழியார் அவர்கள் பயில்தில்லைத்
தென்னன் தமிழும் இசையும்
கலந்த சிற்றம் பலந்தன்னுள்
பொன்னும் மணியும் நிரந்த
தலத்துப் புலித்தோல் பியற்கிட்டு
மின்னின்இடையாள் உமையாள்
காண விகிர் தன் ஆடுமே.

4. திருப்பல்லாண்டு சேந்தனர்

9ம் திருமுறை

குழலொலி யாழொலி கூத்தொலி
ஏத்தொலி எங்கும் குழாம் பெருகி
விழாவொலி விண்ணளவும் சென்று
விம்மிமிகு திரு வாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி
யாளாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழ அடி யாரொடும் கூடி
எம்மானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

5. பெரியபுராணம் சேக்கிழார் பெருமான்

12ம் திருமுறை

மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை யமுதுசெய் வித்தல்
கண்ணினல் அவர்நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மையா மெனின் உலகர் முன் வருகென உரைப்பார்

திருசிற்றம்பலம்

# சனிக்கிழமை

1.தேவாரம் திருநாவுக்கரசுநாயனர்

திருவிருத்தம் 4ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

கருவுற்ற நாள்முதலாக உன்பாதமே காண்பதற்கு
உருகிற்றென்னுள்ளமும் நானும் கிடந்தலந் தெய்த்தொழிந்தேன்
திருவொற்றியூரா திருவாலவாயா திருவாரூரா
ஒருபற் றிலாமையும் கண்டிரங்காய் கச்சியேகம்பனே.

உ. திருவாசகம் மணிவாசகப் பெருமான்

8ம் திருமுறை

இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிதுமற் றின்மை
சென்று சென்றணுவாய்த்தேய்ந்து தேய்ந்தொன்றுந்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்று நீ யல்லை யன்றியொன்
றில்லை யாருன்னை யறியகிற் பாரே.

3. திருவிசைப்பா கண்டராதித்தர்

9ம் திருமுறை

முத்தீயாளர் நான்மறையர் மூவாயிர வர்நின்னேடு
ஒத்தேவாழும் தன்மையாளர் ஓதிய நான்மறையைத்
தெத்தேயென்று வண்டுபாடும் தென் தில்லை அம்பலத்துள்
அத்தாவுன்றன் ஆடல்காண அணைவதும் என்றுகொலோ.

4. திருப்பல்லாண்டு    சேந்தனர்

9ம் திருமுறை

நிட்டையி லாவுடல் நீத்தென்னை
ஆண்ட நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடி யாரைச்
சீராட்டுந் திறங்களுமே சிந்தித்து
அட்ட மூர்த்திக்கென் அகம்நெக
ஊறும் அமிர்தினுக் காலநிழல்
பட்டனுக் கென்னைத்தன் பாற்படுத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

5. பெரியபுராணம்    சேக்கிழார் பெருமான்

7ம் திருமுறை

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின்
வேண்டுகின்ருர்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டே
லுன்னையென்றும்
மறவாமை வேண்டுமின்னும் வேண்டும்நான்
மகிழ்ந்துபாடி
அறவாநீ யாடும்போதுன் னடியின்கீ
ழிருக்கவென்ருர்.

திருச்சிற்றம்பலம்.

# வாழ்க்கையில் திருமுறைகள்

## திருச்சிற்றம்பலம்

காலையில் படுக்கையிலிருந்து எழுந்திருக்கும் பொழுது இறைவன் திருநிமத்தை “சிவ சிவ” என்று உச்சரித்துக் கொண்டு கீழ்க்காணும் திருப்பாடலை ஓதுக!

மேலைவிதியே! வினையின் பயனே! விரவார் புரம்மூன்று எரிசெய்தாய்!
காலையெழுந்து தொழுவார் தங்கள் கவலை களைவாய் கறைக்கண்டா!
மாலைமதியே! மலைமேல் மருந்தே! மறவேன் அடியேன் வயல்சூழ்ந்த
ஆலைக்கழனிப் பழனக்கச்சூர் ஆலக்கோயில் அம்மானே!

### நீரடும் பொழுது

களித்துக் கலந்ததொர் காதற் கசிவொடு காவிரிவாய்க்
குளித்துத் தொழுமுன் நின்ற இப்பத்தாரைக் கோதில் செந்தேன்
தெளித்துச் சுவையமுது ஊட்டி அமரர்கள் சூழிருப்ப
அளித்துப் பெருஞ்செல்வ மாக்கும் ஐயாறன் அடித்தலமே.

ஆறு, குளம் முதலிய இடங்களில் நீண்ட நேரம் நீராடும் பொழுது உயிர்கள் அனைத்தும் பெண்ணகவும் இறைவன் ஒருவனே ஆணகவும் அமைத்துப் பாடியுள்ளபடியால் அனைவரும் பாடலாம்.

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடுந்
தீர்த்தன் நற்றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடுங்
கூத்தன்இவ் வானுங் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல் மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீர் ஆடலோர் எம்பாவாய்.

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தாற் பின்னும் அரவத்தால்
தங்கண் மலங்கழுவுவார்ந்து சார்தலினல்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்று இசைந்த

பொங்குமடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ்சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்

காதார் குழையாடப் பைம்பூண்கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழமாடச்
சீதப்புனல் ஆடிச் சிற்றம்பலம்பாடி
வேதப்பொருள்பாடி அப்பொருளாமாபாடிச்
சோதிதிறம்பாடிச் சூழ்கொன்றைத்தார்பாடி
ஆதிதிறம்பாடி அந்தமா மாபாடிப்
போதித்துநம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்.

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாய்ஓவாள் சித்தங்களிகூர
நீரொருகால் ஓவாநெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற்கு இங்ஙனே பித்தொருவ ராமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர்! வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்.

செங்கணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாதது ஓர் இன்பம் நம்பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட்கு ஆரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்.

அண்ணாமலையான் அடிக்கமலஞ் சென்று இறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறு அற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்துகார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்

பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும்வேறாகி
கண்ணாரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்

(இப்பாடலை எல்லா மாதங்களிலும் நாள்தோறும் ஓதலாம்)

போற்றி அருளுக! நின் ஆதியாம்பாதமலர்
போற்றி அருளுக! நின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறும் இணை அடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்ய ஆட்கொண்டு அருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழி நீராடேலோர் எம்பாவாய்

## நீராடிய பின்னர் நீறு அணியும் பொழுது

கருவாய்க் கிடந்துன் கழலே நினையும் கருத்து உடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம் பயின்றேன் உனதருளால்
திருவாய் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீ பாதிரிப்புலியூர் அரனே.

**திருநீற்றை** நெற்றியில் அணிந்து பிறகு திருநீற்றை தண்ணீர் விட்டுக் குழைத்து மீண்டும் நெற்றி, மார்பு, தொப்புள் இரு முழங்கால் முட்டிகள், இரு புஜங்கள், இரு முழங்கை முன்புற முட்டிகள், இரு கை மணிக்கட்டுகள், முதுகு, கழுத்து முதலிய இடங்களில் **அணியும்பொழுது கீழ்க்காணும்** திருப்பதிகத்தை ஓதுக.
(சிவபூசை உடையவர்கள் நீங்கலாக)

பண்- காந்தாரம் திருசிற்றம்பலம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்க படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆலவாயான் திருநீறே.

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையில் உள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திரு ஆல வாயான் திருநீறே.

முக்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருஆல வாயான் திருநீறே.

காண இனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி அணிபவர்க்குஎல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருஆல வாயான் திருநீறே.

பூச இனியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருஆல வாயான் திருநீறே.

அருத்தம் தாவது நீறு அவலம் அறுப்பது நீறு
வருத்தம் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்ததிரு ஆலவாயான் திருநீறே.

எயிலது அட்டது நீறு இருமைக்கும் உள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத்து ஆலவாயான் திருநீறே.

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவம் அறுப்பது நீறு
தராவணம் ஆவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனிஆலவாயான் திருநீறே.

மாலொடு அயன் அறியாத வண்ணமும் உள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏலஉடம்பிடர் தீர்க்கும் இன்பந் தருவது நீறு
ஆலமது உண்ட மிடற்றுஎம் ஆலவாயான் திருநீறே.

குண்டிகைக் கையர்களோடு சாக்கியர் கூட்டமும் கூடக்
கண்திகைப் பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளார் ஏத்துந் தகையது நீறு
அண்டத் தவர் பணிந்து ஏத்தும் ஆலவாயான் திருநீறே.

ஆற்றல் அடல்விடையேறும் ஆலவாயான் திருநீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம்பந்தன்
தேற்றித் தென்னன் உடல் உற்ற தீப்பிணியாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.

திருசிற்றம்பலம்

## பூசை செய்யும் பொழுதும், திருவுருவங்களுக்குத் திருமுழுக்காட்டும் பொழுதும்

வான நாடனே! வழித்துணை மருந்தே! மாசிலா மணியே! மறைப்பொருளே!
ஏனமாஎயிறு ஆமையும் எலும்பும் ஈடுதாங்கிய மார்புடையானே!
தேன் நெய் பால் தயிர் ஆட்டுகட்டுந்தானே! தேவனே திருஆவடுதுறையுள்
ஆனையே! எனை அஞ்சல் என்றுஅருளாய்! யார் எனக்கு
உறவு அமரர்கள் ஏறே!

நெய்யும் பாலும் தயிருங் கொண்டு நித்தல் பூசனை செய்யலுற்றார்
கையில் ஒன்றுங் காணம் இல்லைக் கழலடி தொழுது உய்யினல்லால்
ஐவர்கொண்டு இங்கு ஆட்டவாடி ஆழ்குழிப்பட்டழுத்து வேனுக்கு
உய்யுமாறு ஒன்று அருளிச் செய்யீர்! ஓணகாந்தன் தளியுளீரே!

## பூசை முடிந்ததும் திருமுறை அர்ச்சனை செய்வதற்கு

கற்றவர் உண்ணுங் கனியே போற்றி!
கழலடைந்தார் செல்லுங் கதியே போற்றி!
அற்றவர்கட்கு ஆரமுதம் ஆனாய் போற்றி!
அல்லல் அறுத்து அடியேனை ஆண்டாய் போற்றி!

மற்று ஒருவர் ஒப்பில்லா மைந்தா போற்றி!
வானவர்கள் போற்றும் மருந்தே போற்றி!
செற்றவர்தம் புரம் எரித்த சிவனே போற்றி!
திருமூலட்டானனே போற்றி! போற்றி!

வங்கமலி கடல் நஞ்சும் உண்டாய் போற்றி!
மதயானை யீரிருவை போர்த்தாய் போற்றி!
கொங்கலருங் நறுங்கொன்றைத் தாராய் போற்றி!
கொல்புலித்தோல் ஆடைக் குழகா போற்றி!
அங்கணனே அமரர்கள் தம் இறைவா போற்றி!
ஆலமர நீழல் அறஞ்சொன்னய் போற்றி!
செங்கனகத் தனிக் குன்றே சிவனே போற்றி!
திருமூலட்டானனே போற்றி! போற்றி!

மலையான் மடந்தை மணாளா போற்றி!
மழைவிடையா நின் பாதம் போற்றி! போற்றி!
நிலையாக என் நெஞ்சில் நின்றாய் போற்றி!
நெற்றிமேல் ஒற்றைக்கண் உடையாய் போற்றி!
இலையார்ந்த மூவிலைமேல் ஏந்தீ போற்றி!
ஏழ்கடலும் ஏழ்பொழிலும் ஆனாய் போற்றி!
சிலையால் அன்று எயிலெரித்த சிவனே போற்றி!
திருமூலட்டானனே போற்றி! போற்றி!

பொன்னியலும் மேனியனே போற்றி! போற்றி!
பூதப் படையுடையாய் போற்றி! போற்றி!
மன்னியசீர் மறை நான்கும் ஆனாய் போற்றி!
மறியேந்து கையானே போற்றி! போற்றி!
உன்னுமவர்க்கு உண்மையனே போற்றி! போற்றி!
உலகுக்கு ஒருவனே போற்றி! போற்றி!
சென்னிமிசை வெண்பிறையாய் போற்றி! போற்றி!
திருமூலட்டானனே போற்றி! போற்றி!

நஞ்சுடைய கண்டனே போற்றி! போற்றி!
நற்றவனே நின்பாதம் போற்றி! போற்றி!
வெஞ்சுடரோன் பல்லிறுத்த வேந்தே போற்றி!
வெண்மதியங்கண்ணி விகிர்தா போற்றி!

துஞ்சிருளில் ஆடல் உகந்தாய் போற்றி!
தூநீறு மெய்க்கணித்த சோதீ போற்றி!
செஞ்சடையாய் நின்பாதம் போற்றி! போற்றி!
திருமூலட்டானனே போற்றி! போற்றி!

சங்கரனே நின்பாதம் போற்றி! போற்றி!
சதாசிவனே நின்பாதம் போற்றி! போற்றி!
பொங்கரவா நின்பாதம் போற்றி! போற்றி!
புண்ணியனே நின்பாதம் போற்றி! போற்றி!
அங்கமலத்து அயனேடு மாலுங்காண
அனலுருவாம் நின்பாதம் போற்றி! போற்றி!
செங்கமலத் திருப்பாதம் போற்றி! போற்றி!
திருமூலட்டானனே போற்றி! போற்றி!

வம்புலவு கொன்றைச் சடையாய் போற்றி!
வன்பிறையும் வாளரவும் வைத்தாய் போற்றி!
கொம்பனைய நுண்ணிடையாள் கூறு போற்றி!
குரை கழலால் கூற்றுதைத்த கோவே போற்றி!
நம்புவார்க்கு அரும்பொருளே போற்றி! போற்றி!
நால் வேதம் ஆறங்கம் ஆனாய் போற்றி!
செம்பொனே மரகதமே! மணியே போற்றி!
திருமூலட்டானனே போற்றி! போற்றி!

உள்ளமாய் உள்ளத்தே நின்றாய் போற்றி!
உகப்பார் மனத்து என்றும் நீங்காய் போற்றி!
வள்ளலே போற்றி! மணாளா போற்றி!
வானவர்கோன் தோள் துணித்த மைந்தா போற்றி!
வெள்ளையேறு ஊரும் விகிர்தா போற்றி!
மேலோர்க்கும் மேலோர்க்கும் மேலாய் போற்றி!
தெள்ளு நீர் கங்கைச் சடையாய் போற்றி!
திருமூலட்டானனே போற்றி! போற்றி!

பூவார்ந்த சென்னிப் புனிதா போற்றி!
புத்தேளிர் போற்றும் பொருளே போற்றி!
தேவார்ந்த தேவர்க்குந் தேவே போற்றி!
திருமாலுக்கு ஆழி அளித்தாய் போற்றி!

சாவாமே காத்தென்னை யாண்டாய் போற்றி!
சங்கொத்த நீற்றெஞ் சதுரா போற்றி!
சேவார்ந்த வெல்கொடியாய் போற்றி!
திருமூலட்டானனே போற்றி! போற்றி!

பிரமன்தான் சிரமரிந்த பெரியோய் போற்றி!
பெண்உறுவோடு ஆண்உறுவாய் நின்றுப் போற்றி!
கரநான்கும் முக்கண்ணும்உடையாய் போற்றி!
காதலிப்பார்க்கு ஆற்ற எளியாய் போற்றி!
அருமந்த தேவர்க்கு அரசே போற்றி!
அன்று அரக்கன் ஐந்நான்கு தோளுந்தாளுஞ்
சிரம் நெரித்த சேவடியாய் போற்றி! போற்றி!
திருமூலட்டானனே போற்றி! போற்றி!

மேற்படி அருச்சனையில் சரியாக 198 போற்றிகள் உள்ளன. ஆதலால் எல்லாத் திருஉருவங்களுக்கும் இறைவன் ஒருவனே என்ற உயர்ந்த கருத்தில் மேற்படி போற்றித் திருத்தாண்டக அருச்சனையைக் கொள்வது பொருத்தம் உடையது:

## அருச்சனை செய்தபின் ஆராதனை செய்யும்பொழுது:

பெரும்புலர்காலை மூழ்கிப் பித்தர்க்குப் பத்தராகி
அரும்பொடு மலர்கள் கொண்டு ஆங்கு ஆர்வத்தை யுள்ளேவைத்து
விரும்பி நல்விளக்குத் தூபம் விதியினால் இடவல்லார்க்கு
கரும்பினில் கட்டிபோல்வார் கடவூர் வீரட்டனாரே!

## ஆராதனை செய்தபின் நின்று வணக்கம் செய்யும்பொழுது

1.தேவாரம்

பற்றி நின்ற பாவங்கள்பாற்ற வேண்டில்
பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில்
சுற்றி நின்ற சூழ்வினைகள் வீழ்க்க வேண்டில்
சொல்லுகேன் கேள் நெஞ்சே துஞ்சா வண்ணம்
உற்றவரும் உறுதுணையும் நீயேயென்றும் உன்னை
அல்லால் ஒரு தெய்வம் உள்கேன் என்றும்
புற்றரவக் கச்சார்த்தபுனிதா! என்றும்
பொழில் ஆரூரா என்றே போற்று நில்லே.

2. திருவாசகம்

விண்ணுளுந் தேவர்க்கு மேலாய வேதியனே
மண்ணுலும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றுனைத்
தண்ணுர் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணுலும் பாகனே பேணு பெருந்துறையிற்
கண்ணுர் கழல்காட்டி நாயேனே ஆட்கோண்ட
அண்ணு மலையானைப் பாடுதுங்காண் அம்மானய்.

3. திருவிசைப்பா

தனதன் நற் றேழா! சங்கரா! சூல
பாணியே! தாணுவே! சிவனே!
கனகநற்றூணே! கற்பகக் கொழுந்தே!
கண்கள்மூன் றுடையதோர் கரும்பே!
அனகனே: குமர விநாயக சனக
அம்பலத் தமரசே சரனே!
உனகழல் இணையென் நெஞ்சினுள்
இனிதாத்தொண்டனேன் நுகருமா நுகரே!

4. திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள் வஞ்சகர் போயகல.
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து புவனியெல்லாம் விளங்க
அன்ன நடைமடவாள் உமைகோன் அடியோர்க்கு அருள்புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த பித்தர்க்குப் பல்லாண்டு கூறுதுமே.

5. பெரிய புராணம்

கற்பனை கடந்தசோதி கருணையே யுருவமாகி
அற்புதக் கோலநீடி யருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பரவி யோமமாகுந் திருச்சிற்றம் பலத்துள்நின்று
பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றி! போற்றி

திருச்சிற்றம்பலம்





## இந்து சமயப் பேரவை வெளியீடுகள்

| | |
|---|---|
| தரிசனம் | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| அர்ச்சனை மாலை | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| என்னை எனக்கறிவித்த எங்கள் குருநாதா் | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| திருமுறைக் கதைகள் | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| முத்தான தொண்டர் | கவிஞர் வி. கந்தவனம் |
| புதிய சைவ வினாவிடை | கவிஞர் வி. கந்தவனம் |
| தங்கம்மா நான்மணிமாலை | கவிஞர் வி. கந்தவனம் |
| சிவயோக சுவாமிகளின் அருள்மொழிகள் | |
| ஒலியிழை நாடாக்கள்<br>சமய வாழ்க்கை<br>சைவத்தின் பெருமை | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |

## இந்நூல்பற்றி.....

பன்னிரு மாத நினைவுகள் என்ற தலைப்பில் வெளிவரும் இந்நூல் பொதுமக்களுக்குச் சமய சமபந்தமான கருத்துக்களை அறியத்தரவல்லது. இந்நூல் சைவ சமய வாழ்வு வாழ்பவர்களுக்கு அரும் வழிகாட்டியாக சிறந்த கைச்சுவடியாக விளங்குகிறது.

- பேராசிரியர், கலாநிதி கா. கைலாசநாதக்குருக்கள்

ஆத்மஜோதி என்ற பெயருக்கேற்ப அவர் பாற பதிந்திருக்கும் ஆத்மீக கலாச்சார அடிச்சுவடுகள் நூல் முழுவதும் நறுமணங்கமழ்கின்றன.

- கலாநிதி, பண்டிதர் மு. கந்தையா.

இந்நூல் விரதங்களின் மகிமையையும் ஒவ்வொரு மாதமும் அனுட்டிக்கப்பட வேண்டிய விரதங்கள் பற்றிய விபரங்களையும் விளக்குகின்றது...... பிள்ளைகள் எமது சமயம் பற்றிக் கேட்கும் கேள்விகளுக்குப் பல பெற்றோர்கள் தகுந்த விளக்கங்களை அளிக்க முடியாதவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்களுக்கு இந்நூல் பெரிதும் உதவும். அவர்களது கரங்களில் இந்நூல் அவசியம் இருத்தல் வேண்டும்.

- கவிஞர் வி. கந்தவனம்.

அச்சுப் பதிப்பு : விவேகா அச்சகம் - கனடா